வரு.76 இல. 35 ★
www.vaaramanjari.lk
/Thinakaran.lk /ThinakaranLK
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# தினகரன் வாரமஞ்சரி

THINAKARAN VAARAMANJARI
28 பக்கங்கள் 100/-
2024 செப்டெம்பர் 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை
September 08 Sunday, 2024
















# விவசாயக் கடன்கள் தள்ளுபடியானது

## அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு

விவசாய நடவடிக்கைகளுக்காக விவசாயிகள் பெற்ற அனைத்து விவசாயக் கடன்களையும் உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் தள்ளுபடி செய்வதற்கான யோசனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவையில் சமர்ப்பித்துள்ளார்.

விவசாயத் திணைக்களத்தின் கீழ் இயங்கும் விவசாய வங்கிகள் மூலம் விவசாயிகளுக்கு வழங்கப்படும் விவசாயக் கடன்கள், சுழல் கடன்கள் மற்றும் விவசாய ஓய்வூதிய காப்புறுதி கடன்களிலிருந்து இவ்வாண்டு 2024 செப்டெம்பர் 03 ஆம் திகதி வரை நிலுவையிலுள்ள மொத்த கடன் தொகையையும் தள்ளுபடி செய்ய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, கொள்கை ரீதியான தீர்மானமொன்றை எடுப்பதற்காக கடந்த 3 ஆம் திகதி அமைச்சரவையில் பிரேரணையை சமர்ப்பித்துள்ளார்.

இவ்வாறு தள்ளுபடி செய்யப்பட்ட கடனை ஈடுசெய்வதற்கு தேவையான ஒதுக்கீடுகளை திறைசேரியிலிருந்து விவசாயத்திணைக்களத்தினூடாக விவசாய வங்கிகள் மற்றும் விவசாயிகள் சங்கங்களுக்கு 2025 ஆம் ஆண்டிற்குள் விடுவிக்கப்படுவதற்கும், 2025 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் தேவையான ஏற்பாடுகளை உள்ளடக்குவதற்கும் ஜனாதிபதி அமைச்சரவை பத்திரத்தில் முன்மொழிந்துள்ளார்.

ஜனாதிபதியின் பிரேரணைக்கு அடுத்த வாரம் அமைச்சரவையில் அங்கீகாரம் வழங்கப்படும் என திறைசேரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது, 46,933 விவசாயிகளிடமிருந்து 165,46,75,093 ரூபா (165 கோடியே 46 இலட்சத்து 75 ஆயிரத்து 93 ரூபா) நிலுவைத் தொகையாக விவசாய வங்கி 06

தமிழ் மக்களை அச்சுறுத்தியமைக்காக

# வடக்கு தமிழ் மக்களிடம் அநுர குமார உடனடியாக மன்னிப்பு கோர வேண்டும்

## சிங்கள மக்களையும் அவமானப்படுத்தியுள்ளார்; ஜனாதிபதி ரணில் யாழ். நகரில் தெரிவிப்பு



**யாழ். நல்லூரிலிருந்து லோரன்ஸ் செல்வநாயகம்**

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திசாநாயக்க வடக்குக்கு வந்து வடக்கு மக்களை அச்சுறுத்தும் வகையில் பேசியமைக்காக அவர் வடக்கு மக்களிடம் உடனடியாக மன்னிப்புக் கோரவேண்டுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று (07) யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

தமிழ் மக்களை அச்சுறுத்தியமைக்காகவே தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார 06

ஜனாதிபதியின் தேசிய பொருளாதார கொள்கை குறித்து

# பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சஜித், அநுரவுக்கு அழைப்பு

பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேசிய பொருளாதாரக் கொள்கைக்கு தங்களது கொள்கை பிரகடனங்களுடன் பகிரங்க விவாதங்களுக்கு வருமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்கவுக்கும் தான் அழைப்பு விடுப்பதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார். பிரதான ஜனாதிபதி வேட்பாளர்கள் இந்த விவாதங்களில் பங்குபற்ற முடியாத பட்சத்தில் அதற்கு பதிலாக பிரதிநிதி ஒருவரை 06



06 புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு
கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா

# யாழ். சென்ற ஜனாதிபதி மாவையுடன் சந்திப்பு





யாழ்ப்பாணம் சென்றிருந்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் மாவை சேனாதிராஜாவை தெல்லிப்பளையில் உள்ள இல்லத்தில் நேற்று சந்தித்தபோது...

ஜனாதிபதி வேட்பாளர் சஜித்துக்கு ஆதரவு

# தமிழரசு கட்சி எடுத்த முடிவு தமிழ் மக்களின் முடிவல்ல

## டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



ஜனாதிபதித் தேர்தலில் இலங்கை தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக எடுத்த முடிவு மக்களின் முடிவல்ல எனவும் அது கட்சி சார்ந்த முடிவெனவும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில், தமிழரசு கட்சியின் பாராளுமன்ற 06

ஜனாதிபதி ரணிலின் ஆட்சியின் கீழ்

# முஸ்லிம்கள் ஒரு போதும் அச்சத்துடன் வாழ்ந்ததில்லை

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**



இந்த நாட்டில் பொருளாதாரம் அதல பாதாளத்துக்குச் சென்றபோது, எவருமே நாட்டைப் பொறுப்பேற்காமல் மக்களைப் புறக்கணித்தபோது, துணிவோடு மக்களின் சுமைகளைப் பொறுப்பேற்றவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே என வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட் 06

02 ஆவது உலக இந்து மாநாட்டை நடத்தி

# இந்துக்களுக்கு பெருமை சேர்த்த ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு

## இந்துக்கள் வழங்குவரென பாபு சர்மா தெரிவிப்பு



இரண்டாவது உலக இந்து மாநாட்டை தலைமை தாங்கி நடத்தி இந்துக்களுக்கு பெருமை சேர்த்த ஜனாதிபதி ரணிலுக்கே இந்து மக்களின் ஆதரவென சர்வதேச இந்து மத பீட செயலாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் முன்னாள் இந்து கலாசார அமைச்சர் அமரர் தியாகராஜா மகேஸ்வரன் 06

## எங்கள் கருத்து...

# ஜனநாயக பாரம்பரியம் சீர்குலைக்கப்படலாகாது!

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் பதின்மூன்று நாட்களே இருக்கின்றன. நாட்டின் அரசியல் களம் ஒவ்வொரு கணமும் பரபரப்பாகிக் கொண்டிருக்கின்றது. இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் பிரசார வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மறுபுறத்தில் ஊடகங்களும் மக்களைப் பரபரப்பாக்கிக் கொண்டிருக்கின்றன.

சமூக ஊடகங்களில் பயனாளர்களின் செயற்பாடுகள் ஆரோக்கியமானதாக இல்லையென்று தேர்தல்கள் ஆணையாளர் அதிருப்தி தெரிவித்திருக்கின்றார். அதேவேளை ஒருசில தொலைக்காட்சிகள் பக்கச்சார்பான முறையில் செயற்பட்டு வருவதையும் இன்றைய தேர்தல் காலத்தில் அவதானிக்க முடிகின்றது.

சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவதென்பது இலகுவான காரியமல்ல. சமூக ஊடகங்களை 'கடிவாளம் இடப்படாத குதிரை' என்று கூறுவர். ஊடகத்துறையில் பின்பற்றப்பட வேண்டிய வழுக்களை 06



06 சஜித் வடக்கு, கிழக்கு மக்களுக்கு
13 ஆவதை தருவாரா? மாட்டாரா? இல்லை தேர்தல் வெற்றுவேட்டா?



06 13 ஆவதை அமுல்படுத்த இணக்கம்
சஜித்துடன் கூட்டணி அமைத்துள்ள ஹக்கீம், ரிஷாத் பதிலளிக்க வேண்டும்

# ஐக்கிய மக்கள் கூட்டணியின் மலையக அரசியல் சாசனம்

## அடுத்த வாரத்தில் வெளியிடப்படும்; மனோ கணேசன்



ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட உடன்படிக்கைக்கு அமைவான மலையக அரசியல் சாசனம் எதிர்வரும் வாரத்தில் வெளியிடப்படுமென, தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் (06) நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார். இதன் போது, மலையக அரசியல் சாசனத்துக்கமைய 06

# சுமந்திரன் சஜித்துக்கு ஆதரவெனினும் மக்கள் அரியநேத்திரனுக்கே ஆதரவு

## சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவிப்பு



ஜனாதிபதி தேர்தலில் தமிழர் தரப்பு பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு மக்களின் ஆதரவு உள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

சங்குச் சின்னத்தில் போட்டியிடும் தமிழ்ப் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து நேற்று முன்தினம் 06

# புதிய முக மூடிகளுடன் வரும் சிவப்பு சகோதரர்கள்

## வரலாற்றை திரும்பிப் பார்க்க வேண்டும்; ஹக்கீம்



சிவப்புச் சகோதரர்களைப் பற்றி அவர்களின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்து சிந்திக்க வேண்டும் எனவும் அவர்கள் தற்போது புதிய முக மூடிகளுடன் பிரசன்னமாகியுள்ளார்கள் எனவும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

இந்த சிவப்புச் சகோதரர்கள் நாட்டிலுள்ள ஊழலை ஒழிக்கப்போவதாகவும் கூறுவதாக அவர் தெரிவித்தார். 06

# நினைவுகளில் நிறைந்த தலைவர்

## முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் பாக்கீர் மாக்கார்



எமது வரலாற்றில் இடம் பிடித்த தலைவர்களில் ஒருவரான மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் வாழ்க்கை மற்றும் அவரது அரும்பணிகள் பற்றி நினைவுகூர கிடைத்ததையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன். கௌரவமும் செல்வாக்கும் நிறைந்த முக்கிய பதவியான சபாநாயகர் பதவியானது பாராளுமன்றமுறைமை நிலவுகின்ற நாடுகளில் ஒரு முக்கிய பதவியாக காணப்படுகின்றது .

1377ஆம் ஆண்டு பிரித்தானியாவைச் சேர்ந்த "சேர் தோமஸ் ஹங்கர்போர்ட்" என்பவரின் நியமனத்துடன் இச் சபாநாயகர் பதவி தோற்றம் பெறுவதாக ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர். இலங்கை அரசியல் நிர்வாகக் கட்டமைப்பில் மூன்றாம் நிலையில் காணப்படும் பதவியே சபாநாயகர் பதவியாகும்.

இத்தகைய பின்னணியில் தோற்றம் பெற்ற சபாநாயகர் பதவியை அலங்கரித்தவர்களில் ஒருவர் தான் மர்ஹூம் பாக்கீர் மாக்கார். மர்ஹூம் பாக்கீர் மாக்கார், பல்வேறு அரசியல் பதவிகளில் சேவையாற்றிய போதிலும் சபாநாயகர் என்ற பதவியைக் கொண்டே பிரபலம் அடைந்தவராக காணப்படுகின்றார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார் இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றத் தலங்களில் ஒன்றாகக் காணப்படுகின்ற, மாணிக்கக் கல் வியாபாரத்தில் பெயர்பெற்று, தனக்கேயான கலாசாரங்களையும் பாரம்பரியங்களையும் கொண்ட பேருவளை நகரத்தில் 1917ஆம் ஆண்டு மே மாதம் 12ஆம் திகதி பிறந்தார்.

அவரின் தந்தை 'ஹகீம் அலியா மாக்கார்' சிறந்த வியாபாரியாகவும், ஆயுர்வேத மருத்துவராகவும் பன்முகத் திறமைகளை கொண்டவராகவராகவுமிருந்தார். இவரது தாயார் ரஹிலா உம்மா மாக்கார், கணவரின் பணிகள் மற்றும் மரபுகளைக் காப்பாற்றும் சிறந்த பெண்மணியாகத் திகழ்ந்தார்.

இவர்கள் இலங்கைக்கான அரேபியர் குடியேற்றத்தின் முன்னோடியாகத் திகழ்ந்த ஷேக் ஜமாலுதீன் அல்மக்தூமியின் வம்சத்தைச் சேர்ந்தவராகளாக இருக்கின்றார்கள். அக்காலத்திலேயே நன்கு கல்வி கற்ற குடும்பமாக இக்குடும்பம் காணப்பட்டது.

இக்குடும்பத்தில் பிறந்த மர்ஹூம் பாக்கீர் மாக்கார் இளம் வயதிலிருந்தே கல்வியில் அக்கறையுடன் இருந்தார். தனது ஆரம்பக்கல்வியை பேருவளையில் உள்ள அல்பாஸியத்துல் நஸ்ரியா பாடசாலையில் கற்றார். பின்பு 1924ஆம் ஆண்டு, தனது 7ஆவது வயதில், கொழும்பு 12இல் உள்ள சென் செபாஸ்டியன்ஸ் கல்லூரியில் தனது கல்வியை ஆரம்பித்தார். பின்னர் மேன்நிலைக் கல்விக்காக அவர் கொழும்பு ஸாஹிரா கல்லூரியில் இணைந்தார்

மர்ஹூம் பாக்கீர் மாக்காருடைய அரசியல் வாழ்கைக்கும், அத்துறையிலான சாதனைகளுக்கும், அத்திவாரமும், அடிப்படைப் பயிற்சியும் அவர் பயின்ற கொழும்பு ஸாஹிராக் கல்லூரியிலேயே இடப்பட்டது. இங்கு, அவர் கல்லூரி இதழின் ஆசிரியராகவும், முஸ்லிம் மஜ்லிஸ் தலைவராகவும், தமிழ் இலக்கிய சங்கத்தின் தலைவராகவும் செயற்பட்டு தனது திறமையை வளர்த்துக் கொண்டார்.

மர்ஹூம் டி. பி. ஜாயா ஸாஹிரா கல்லூரியின் அதிபராக இருந்த காலத்தில் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் அதே கல்லூரியில் மாணவராகவும், ஆசிரியராகவும் கடமையாற்றியமை அவருக்கு கிடைத்த மிகப்பெரிய பாக்கியமாகும்.

1940ஆம் ஆண்டில் சீனியர் கேம்பிரிஜ் (Senior Cambridge) தேர்வுகளை முடித்த பாக்கீர் மாக்கார் , இலங்கை சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். ஆனால், இரண்டாம் உலகப் போர் தொடங்கியதால், அவர் 1942ஆம் ஆண்டு சிவில் பாதுகாப்புச் சேவையில் பணியாற்றத் தொடங்கினார். போருக்குப் பிறகு, மீண்டும் சட்டக் கல்லூரியில் இணைந்து, 1950 ஆம் ஆண்டில் சட்டத்தரணியாக தேர்ச்சி பெற்று களுத்துறை மாவட்டத்தில் சட்ட சேவையை தொடங்கினார். 1951ஆம் ஆண்டில், களுத்துறை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மர்ஹூம் பாக்கீர் மாக்காரின் அரசியல் பயணம் பேருவளை நகரசபையிலிருந்து ஆரம்பமாகின்றது. இவர் 1950ஆம் ஆண்டு, பேருவளை நகரசபை உறுப்பினராகப் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டு, பின்னர் நகர சபைத் தலைவராகவும் பதவியேற்றார்.

மேலும் பேருவளை நகராட்சி மாநகராட்சியாக மாறிய போது நகராதிபதியாகவும், 1960ஆம் ஆண்டுவரை செயற்பட்டார்.

1960ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற பொதுத் தோ்தலில் பேருவளைத் தேர்தல் தொகுதியில் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றிபெற்றார். ஆனால், சில மாதங்களிலேயே பாராளுமன்றம் கலைக்கப்பட்டதால், அவர் மீண்டும் 1960ஆம் ஆண்டு ஜூலை மாதம் இடம் பெற்ற தேர்தலில் போட்டியிட்டுத் தோல்வி அடைந்தாலும், 1965ஆம் ஆண்டுத் தேர்தலில் மீண்டும் வெற்றி பெற்றார்.

1977ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு பேருவளைத் தொகுதியில் அமோக வாக்குகளால் வெற்றி பெற்றார்.

அதுமாத்திரமன்றி அப்போதைய தேசிய அரச பேரவையின் துணை சபாநாயகராகவும் தெரிவு செய்யப்பட்டர். அப்போது சபாநாயகராகத் தெரிவு செய்யப்பட்ட கலாநிதி ஆனந்ததிஸ்ஸ டி அல்விஸ் தனது சபாநாயகர் பதவியை இராஜிநாமா செய்தபோது 1978ஆம் ஆண்டு இலங்கைப் பாராளுமன்றத்தின் சபாநாயகராக மர்ஹூம் பாக்கீர் மாக்கார் தெரிவு செய்யப்பட்டு 1983 ஆம் ஆண்டுவரை பதவிவகித்தார். இவர், இலங்கை பாராளுமன்றக் கட்டடம் ஸ்ரீஜெயவர்தனபுர கோட்டைக்கு இடம் மாற்றம் செய்யப்பட்டபோது, அதன் முதல் சபாநாயகராகவும் திகழ்ந்தார்.

தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளில் பேச்சாற்றலும், எழுத்தாற்றலும் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் பெற்றிருந்தமையால் பாராளுமன்ற அமர்வுகளை சிறப்பாக வழிநடத்திச் சென்றதோடு பாராளுமன்றத்தின் ஒழுங்கையும் பாரம்பரியத்தினையும் காக்க முக்கிய பங்காற்றினார்,

இவர் பாராளுமன்றத்தில் அனைத்து உறுப்பினர்களினதும் நன்மதிப்பை பெற்றிருந்தார். ஆளும் கட்சியினது பாராட்டை மட்டுமன்றி எதிர்க்கட்சியினதும் பாராட்டைப் பெற்ற ஒரு நேர்மையான சபாநாகராக விளங்கினார்.

இக்காலப்பகுதியில் இவருடைய உத்தியோகபூர்வ வாசஸ்தலமான மும்தாஜ் மஹால் மக்களின் நலன் பேணும் அலுவலகம் போன்று செயற்பட்டதாகக் குறிப்பிடுவர். தினமும் நாட்டின் பல பகுதிகளிலும் இருந்த மக்கள் வந்து தங்கள் பிரச்சினைகள் பற்றி சபாநாயகருடன் கலந்துரையாடி அவற்றுக்கு தீர்வும் பெற்றுச் சென்றதாக குறிப்பிடப்படுகின்றது.

பேருவளைத் தொகுதி, அதிகமாக பெரும்பான்மை சமூகத்தினர் வாழுமிடம் என்றபோதிலும், அங்கு முஸ்லிம்கள் அரசியலில் செல்வாக்குள்ளவர்களாக, இன்றுவரை இருக்க, மர்ஹூம் பாக்கீர் மாக்காரே காரணம் என்றால் அது மிகையாகாது.

1983ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம், மர்ஹூம் பாக்கீர் மாக்கார் சபாநாயகர் பதவியில் இருந்து விலகி, அமைச்சராகப் பதவியேற்றார். பின்னர், 1988 ஆம் ஆண்டு, அவர் பாராளுமன்றத்தில் இருந்து விலகி, தென் மாகாணத்தின் ஆளுநராக நியமிக்கப்பட்டார். மாகாண சபை முறை இந்நாட்டில் ஏற்படுத்தப்பட்ட பின்னர் முதலாவது முஸ்லிம் ஆளுநராக நியமிக்கப்பட்டவரும் இவராவார்.

சமூக சேவையாளரான மர்ஹூம் பாக்கீர் மாக்கார் முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்தில் பெரும் அக்கறையுள்ளவராகக் காணப்பட்டார்.

இவர் இலங்கை முஸ்லிம் லீக்கின் உப தலைவராக இருந்த காலத்தில் கலாநிதி எம். சீ.எம். கலீல் உடன் இணைந்து முஸ்லிம் சமூகத்தின் முன்னேற்றத்திற்கான முயற்சிகளில் பாடுபட்டு வந்தார். முஸ்லிம் சமூகம் ஏனைய சமூகங்களுக்கு இணையாக கல்வியிலும், பொருளாதாரத்திலும், அரசியலிலும் முன்னேற்றம் காண்பதில் வாலிபர்களின் பங்களிப்பு முக்கியத்துவமானது என்பதை நன்குணர்ந்த அவர் அரசியலில் முஸ்லிம்களின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டுமென்பதற்காக முஸ்லிம் லீக் வாலிப முன்னணி என்ற அமைப்பை உருவாக்கினார்.

இந்த இயக்கத்தின் மூலம் மர்ஹூம் பாக்கீர் மாக்கார் முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் சமூக உணர்ச்சியையும், நாட்டுப் பற்றையும் ஏற்படுத்தி அவர்களுக்குப் புதுத் தெளிவையும், புதுத்தெம்பையும் ஊட்டி இளைய தலைமுறையை உருவாக்குவதில் வெற்றிகண்டார். கிராமப் புற முஸ்லிம் இளைஞர்களை ஒன்றுதிரட்டி அவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சியையும் வழிகாட்டல்களையும் வழங்கி தேசிய தலைவர்களாக வாலிபர்களை உருவாக்கிய ஒரே இயக்கம் இதுவாகும்.

மேலும் முஸ்லிம்களின் உரிமைக் குரல் பொதுமக்களை எய்தவேண்டுமாயின் அவர் தம் பிரச்சினைகளை நாடறியச் செய்ய வேண்டுமென்பதை நன்கறிந்த பாக்கீர் மாக்கார் பத்திரிகைத் துறையிலும் எமக்கு வழிகாட்டிச் சென்றுள்ளார். "தோன்" என்ற ஆங்கில இதழையும், "உதயம்" என்ற தமிழ் இதழையும் பல வருடங்களாக நடத்தி வந்தார். அவர் தம் அயராத உழைப்பையும், தனது வருமானத்தில் கணிசமான பகுதியையும் முஸ்லிம் வாலிப முன்னணிக்கும், "தோன்" மற்றும் "உதயம்" பத்திரிகைகளுக்குமாக வழங்கியமை இங்கு குறிப்பிடத்தக்க செயலாகும்.

இது போன்ற பணிகளில் எப்பொழுதும் முன்னின்று உழைக்கும் பண்பினால் இவர் அனைவரது அபிமானத்திற்குமுரியவராகத் திகழ்ந்தார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்கார் நாட்டின் அனைத்து மக்களுக்கும் சேவை செய்த ஒரு திறமையான தலைவராக விளங்கியமையால் 1992 ஆம் ஆண்டு, இலங்கை அரசாங்கம் அவருக்கு "தேசமான்யா" விருது வழங்கிக் கௌரவித்தது.

தேசமான்ய மர்ஹூம் பாக்கீர் மாக்கார் 1997ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 10ஆம் திகதி தனது 81ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்.

மர்ஹூம் பாக்கீர் மாக்காரின், அரசியல் வாழ்வை, இவரது மகன் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி இம்தியாஸ் பாகிர் மாக்கார் தொடர்வது குறிப்பிடத்தக்கது.

இலங்கை முஸ்லிம்களிடையே தோன்றிய அருந்தலைவர்களுள் ஒருவராகவும், இனங்களுக்கிடையே ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட்ட ஒருவராகவும் திகழ்ந்த மர்ஹூம் பாக்கீர் மாக்காரை நினைவுகூரும் இவ்வேளையில் அவர் தமது கோட்பாடுகளினுள் சிறப்பம்சமாக வற்புறுத்திச் சென்ற "இனங்களுக்கிடையேயான ஒற்றுமை" என்ற பண்பினை எமது வாழ்விலும் பேணிப் பாதுகாப்போம்.

*எஸ்.எல்.சியாத் அஹமட்*
*பாராளுமன்ற நூலகர்*

# மக்களின் கருத்தே வலிமையானது

## தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க



**ஜனாதிபதி தேர்தல் களம் மிகவும் சூடுபிடித்துள்ளது. இந்தப் போராட்டத்தில் உங்களால் வெற்றி பெற முடியும் என்று நினைக்கிறீர்களா?**

ஆம். நிச்சயமாக வெற்றி பெறுவேன். இந்த ஜனாதிபதித் தேர்தலில் எம்மால் வெற்றிபெற முடியும். தற்போது எமது தேர்தல் செயற்பாடுகள் பொது மக்களால் முன்னே கொண்டு செல்லப்படுகின்றது. சமீப கால வரலாற்றில் ஒரு அரசியல் முகாமை வெல்ல வைப்பதற்காக பொது மக்கள் திரண்டிருப்பதை நம் நாட்டில் முதன்முறையாகப் பார்க்கின்றோம். அளிக்கப்பட்டுள்ள தபால் மூல வாக்களிப்பில் பாரிய வெற்றி கிடைத்துள்ளதாக எமக்கு தெரிய வருகின்றது. அதனைக் கருத்தில் கொண்டால் இந்த தேர்தலை எம்மால் வெற்றி பெறலாம். எனவே நாம் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்று சொல்ல முடியும்.

**நீங்கள் ஜனாதிபதியானால், புதிய அரசாங்கத்தின் கீழ் அமைச்சரவையின் அமைப்பு மற்றும் எண்ணிக்கை எவ்வாறிருக்கும்?**

பொதுத் தேர்தலுக்குப் பிறகு நாம் அமைக்கும் அரசாங்கத்தில், அதிகபட்சமாக 25 அமைச்சரவை அமைச்சர்களையும் அதற்குரிய எண்ணிக்கையிலான பிரதி அமைச்சர்களையும் மாத்திரமே நாங்கள் நியமிக்க எதிர்பார்க்கின்றோம். இராஜாங்க அமைச்சர் எனப்படும் பதவிகள் இருக்காது. அமைச்சுப் பதவிகளுக்கு அரசியலமைப்பில் வரம்பு இருப்பதால், அந்த வரம்பை மீறும் வகையில் இந்த இராஜாங்க அமைச்சுப் பதவிகள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அமைச்சரவையில் பங்கேற்பதைத் தவிர மற்ற அனைத்து சலுகைகளும் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. எமது அரசாங்கத்தின் கீழ் அந்த அமைச்சுப் பதவிகள் நீக்கப்படும்.

**நீங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டால் பாராளுமன்றம் கலைக்கப்படும் எனக் கூறப்பட்டுள்ளது. அவ்வாறாயின் அமைச்சரவை தொடர்பில் என்ன நடவடிக்கை எடுக்கப்படும்? அமைச்சரவை அமைப்பதில் சிக்கல் ஏற்படும்தானே?**

ஜனாதிபதியாக பதவிப் பிரமாணம் செய்து கொண்டவுடன் இந்த அமைச்சரவை உடனடியாக கலைக்கப்பட வேண்டும். பாராளுமன்றம் கலைக்கப்பட வேண்டும். அமைச்சரவை தொடர்பில் எந்தப் பிரச்சினையும் எழப்போவதில்லை. பொதுத் தேர்தல் நடக்கும் வரையான இடைக்காலத்திற்கு அரசியலமைப்பின் பிரகாரம் பின்பற்றப்படக் கூடிய மூன்று நடவடிக்கைகள் உள்ளன. எனது வெற்றியின் பின்னர் வெற்றிடமாகும் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு ஒருவரை நியமித்து நான்கு பேர் கொண்ட அமைச்சரவை அரசியலமைப்பின் பிரகாரம் அமைக்கப்படும். அவ்வாறில்லாவிட்டால் அனைத்து துறைகளையும் ஜனாதிபதியின் கீழ் வைத்துக் கொண்டு குறுகிய காலத்திற்கு அரசாங்கத்தை முன்னோக்கி கொண்டு செல்வது. அது அரசியலமைப்புக்கு உட்பட்டது. அல்லது, தேர்தல் முடியும் வரை மற்ற கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் காபந்து அரசாங்கம் தொடரலாம். இந்த மூன்றில் ஏதாவது ஒன்றில் ஒன்றைக் கொண்டு நாட்டை நடத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன.

**தற்போது, பொதுத் தேர்தலுக்கான நிதி ஒதுக்கீடு க ள் எதுவுமில்லை. இவ்வாறான நிலை யி ல், பாராளுமன்றம் கலைக்கப்பட்டால் , பொதுத் தேர்தலுக்கான பணத்தை எவ்வாறு விரைவாக ஏற்பாடு செய்ய முடியும்?**

தேர்தல் தொடர்பான நிதி ஒதுக்கீடுகள் தொடர்பில் எந்தப் பிரச்சினையும் ஒரு போதும் எழப்போவதில்லை. பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நேரத்திலும், பாராளுமன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு உண்டு.

**பாராளுமன்ற தேர்தல் முறை மாற்றப்படும் என ஏற்கனவே அறிவித்துள்ளீர்கள். எவ்வாறான தேர்தல் முறையை கொண்டு வர எதிர்பார்க்கிறீர்கள்?**

பாராளுமன்ற தேர்தல் முறைமையை மாற்றுவது தொடர்பில் கடந்த காலங்களில் நீண்ட கலந்துரையாடல்கள் இடம்பெற்றன. எனினும், தற்போதுள்ள பாராளுமன்றத் தேர்தல் முறையில் சில சித்தாந்தங்கள் உள்ளன. சிறிய மக்கள் பலத்தைக் கொண்டவர்களும் கூட தமது கருத்துக்களைப் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளன. அதுபோலவே, நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும், தேசியம் சார்ந்த அரசியல் இயக்கங்கள் இன்னும் உள்ளன. இந்த முறையின் கீழ் பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வாய்ப்பும் அவர்களுக்கும் உள்ளது. எனவே, புதிய தேர்தல் முறையைத் தயாரிக்கும் போது எங்களுடைய அடிப்படை விடயமாக இருப்பது அனைத்துக் கருத்துக்களையும் கொண்ட மக்களின் விருப்பத்தை நியாயமான முறையில் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கான இடத்தை ஏற்படுத்திக் கொடுப்பதாகும்.

**நீங்கள் ஜனாதிபதியானால் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளதல்லவா? இதற்கு முன்னர் பல ஜனாதிபதி வேட்பாளர்களால் இந்த வாக்குறுதி வழங்கப்பட்டது. எனினும் ஆட்சிக்கு வந்த பிறகு அது நிறைவேற்றப்படவில்லை. இவ்விடயத்தில் நாங்கள் உங்களை எவ்வாறு நம்புவது?**

ஆம். நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறை நீக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே நாம் அது ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்தே இருந்து வருகின்றோம். இந்த யோசனையை எமது தேர்தல் விஞ்ஞாபனத்திலும் உள்ளடக்கியிருக்கின்றோம். எவ்வாறாயினும், நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை நீக்குவது தேர்தல் முறையுடன் பிணைக்கப்பட்டுள்ளது. நிறைவேற்று ஜனாதிபதி முறைமையை இல்லாதொழிப்பதற்கு பல கட்சிகள் இணக்கம் தெரிவித்திருப்பதனால் அதனை ஒழிக்க முடியும் என்றாலும், நாம் எதிர்நோக்கும் சவால் என்னவென்றால் அதனுடன் இணைந்திருக்கும் தேர்தல் முறை தொடர்பான பிரச்சினையாகும். எனவே அது தொடர்பில் இணக்கப்பாட்டிற்கு வர முடிந்த முதலாவது சந்தர்ப்பத்திலேயே நாம் நிறைவேற்று ஜனாதிபதி முறையை நீக்குவோம்._

**தேசிய மக்கள் சக்தியின் கொள்கைப் பிரகடனத்தில் கூறப்பட்டுள்ளவாறு சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தில் சில சில விடயங்களில் மாற்றம் செய்ய முற்பட்டால் ஒட்டுமொத்த வேலைத்திட்டமும் தகர்ந்துவிடும் என சிலர் குற்றம் சுமத்துகின்றனர். இதில் உங்கள் கருத்து என்ன?**

இந்தக் கருத்து ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தின் கருத்தே தவிர, சர்வதேச நாணய நிதியத்தின் கருத்து அல்ல. சர்வதேச நாணய நிதியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் பல சந்தர்ப்பங்களில் மாற்றப்பட்டுள்ளமைக்கான உதாரணங்கள் உலக நாடுகளில் ஏராளமாக உள்ளன. அதே போன்று, சர்வதேச நாணய நிதியத்துடன் இணக்கம் காணப்பட்டுள்ள பல அளவுருக்கள் நாட்டிற்கு சாதகமானவை என்றாலும், அந்த அளவுருக்கள் வழியாக செல்லும் பாதை மக்களுக்கு துன்பத்தை வழங்குகின்றது என்றால் அந்த துன்பத்தைக் குறைத்துக் கொண்டு பயணிக்க வேண்டிய பாதை எது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

எனவே நாம் ஒருபோதும் சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டங்களிலிருந்து தன்னிச்சையாக விலகப்போவதில்லை. அதேபோன்று ஜனாதிபதி உள்ளிட்ட அரசாங்கத்தின் நிலைப்பாட்டை சர்வதேச நாணய நிதியம் கொண்டிருக்கவில்லை. சர்வதேச நாணய நிதியம் தொடர்பான இவை அனைத்தும் அரசாங்கத்தால் உருவாக்கப்பட்டவை. உண்மையில், சர்வதேச நாணய நிதியத்துடன் வருங்காலங்களில் இணைந்து செயற்படப் போவது மக்கள் ஆணையைக் கொண்ட அரசாங்கமேயாகும். சர்வதேச நாணய நிதியம் மாறி வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப மாற விரும்புகிறது.

**சர்வதேச நாணய நிதியத்துடன் கைச்சாத்திடப்பட்டுள்ள உடன்படிக்கையின் விதிமுறைகளை மாற்ற முடியாது எனவும், அது தொடர்பான ஐந்து சட்டமூலங்கள் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் உங்கள் கருத்து என்ன?**

தாம் போட்ட முடிச்சுகள் என்றென்றும் நிலைத்திருக்கும் என அரசு நினைக்கிறது. அது தவறு. என்றென்றும் ஆட்சியில் நிரந்தரமாக இருக்க முடியாது. இந்த இரு தரப்பினரின் பொய்களையும் மக்கள் தற்போது புரிந்து கொண்டுள்ளனர். எனவே சட்டமூலங்கள் எவ்வாறு மீண்டும் மீண்டும் மாற்றங்களுக்கு உட்பட்டன என்பது பற்றி உலகில் தேவையான உதாரணங்கள் உள்ளன. உலகில் எதுவும் நிலையானது இல்லை. ஒவ்வொரு நிபந்தனையும் சூழ்நிலைக்கு ஏற்ப மாற்றியமைக்கப்பட முடியும். இந்த ஜனாதிபதி மற்றும் தற்போதுள்ள அரசாங்கத்தின் கருத்தை விட மக்களின் ஆணை மிகவும் வலுவானது. மக்கள் ஆணை குறித்து அனைவரும் கவனம் செலுத்த வேண்டும் என்றே நாம் கூறி வருகிறோம்.

**ஓய்வு பெற்ற ஜனாதிபதிகள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய சலுகைகள் அனைத்தும் இரத்து செய்யப்படும் என நீங்கள் அறிவித்துள்ளீர்கள். ஏன் இந்த முடிவு எடுக்கப்பட்டது?**

நமது நாட்டின் அரசியல்வாதிகள் மற்றும் அரசியலைப் பற்றி மக்கள் கொண்டுள்ள மிகக் கேவலமான, மோசமான எண்ணத்தின் காரணமாகவே இவ்வாறான நடவடிக்கை தேவை. நாடு பெரும் பாதாளத்தில் விழுந்திருக்கும் போது அரசியல்வாதிகள் எந்த தியாகத்தையும் செய்ய தயாராக இல்லை. அவர்கள் செய்வதெல்லாம் அவர்களின் சலுகைகளை மேலும் அதிகரித்துக் கொள்வதேதான். தற்போது வாகன இறக்குமதி முற்றாக இடைநிறுத்தப்பட்டுள்ளதை நீங்கள் அறிவீர்கள். ஆனால், பாராளுமன்ற உறுப்பினர்கள் மட்டும் தங்களின் சிறப்புரிமைகளை பெற போராடுகின்றனர். அது எவ்வளவு அசிங்கமானது? அதேபோன்று கடந்த காலங்களில் எரிபொருட்களின் விலைகள் அதிகரிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பத்திலேயே எம்.பி.க்களின் எரிபொருள் கொடுப்பனவு ஒரு இலட்சத்தினால் அதிகரிக்கப்பட்டது. அந்த உதவித் தொகையை எடுக்காத ஒரே நாடாளுமன்றக் குழு தேசிய மக்கள் சக்தி நாடாளுமன்றக் குழு மட்டுமேயாகும். நாம் மக்களுக்காக தொடர்ந்தும் தியாகங்களைச் செய்ய தயாராகவே உள்ளோம்.

*எம். எஸ். முஸப்பிர்*

# கூட்டங்களுக்கு வந்த அனைவரும் வாக்களித்திருந்தால் நான் என்றோ இந்நாட்டின் ஜனாதிபதியாகியிருப்பேன்

## மக்கள் விடுதலை முன்னணியின் முன்னாள் ஜனாதிபதி வேட்பாளரான நந்தன குணதிலக

* எரிவாயு வரிசைகள், எரிபொருள் இல்லாமல் தாம் அனுபவித்த துயரம் மக்களுக்கு நன்றாக நினைவிருக்கிறது.
* மக்கள் மீண்டும் அந்த யுகத்திற்குச் செல்ல விரும்பமாட்டார்கள்.



ஜே.வி.பியின் திருகோணமலை மாவட்ட செயலாளரும், 1999ஆம் ஆண்டு ஜே.வி.பியின் ஜனாதிபதி வேட்பாளராகவும் பணியாற்றிய நந்தன குணதிலக்க, தற்போதைய ஜே.வி.பியின் (தேசிய மக்கள் சக்தி) பயணம் மற்றும் நாடு செல்ல வேண்டிய அரசியல் திசை குறித்து தினகரன் வாசகர்களுடன் கருத்துகளைப் பகிர்ந்து கொண்டார்.

**நீங்கள் மக்கள் விடுதலை முன்னணியின் 1999ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளராகப் போட்டியிட்டீர்கள். கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சுப் பதவியையும் வகித்தீர்கள். அவ்வாறான நிலையிலிருந்து நீங்கள் பின்னர் ஏன் கட்சியிலிருந்து விலகினீர்கள்?**

இதற்கு குறுகிய பதிலைக் கூற முடியாது. இந்த நாட்டில் ஏகாதிபத்தியத்தை தோற்கடிப்பதற்கு விடுதலைப் புலிகளின் போராட்டம் தோற்கடிக்கப்பட வேண்டும் என்ற நிலைப்பாட்டில் மக்கள் விடுதலை முன்னணி இருந்தது. அரச அதிகாரத்தைப் பெறுவதே எமது இலக்காக இருந்தது. விடுதலைப் புலிகள் போன்ற கெரில்லா அமைப்பை ஜே.வி.பியால் தோற்கடிக்க முடியாத காரணத்தினால்தான் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்காவுடன் இணைந்து கூட்டணி ஆட்சிக்குச் சென்றோம். அங்கும் மக்களுக்குச் சுமை ஏற்படாத வகையில் அரசின் ஆட்சிக் கட்டமைப்பை மாற்றியமைக்க வேண்டும் என்று கூறினோம். எனினும் ஜனாதிபதி சந்திரிக்கா அதை இடைநடுவில் காட்டிக் கொடுத்து விட்டார். பின்னர், மகிந்த ராஜபக்ஷ வேட்பாளராகக் கொண்டு வருவதற்கு நாம் தீவிரமாகச் செயல்பட்டோம்.

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர், அவருடன் இணைந்து முன்னைய ஜனாதிபதியுடன் இருந்த அதேமனப்பான்மையுடன் புலிகளை தோற்கடிக்கும் பணியில் ஈடுபடுவதே எமது நோக்கமாக இருந்தது.

ஆனால் அப்போது பல்கலைக்கழகங்களில் இருந்து வெளியே வந்த அல்லது பல்கலைக்கழகங்களில் இருந்த ஜே.வி.பி மாணவர்கள் மாறுபட்ட கருத்தைக் கொண்டிருந்தனர். அந்த மாணவர்கள்தான் புதியவர்களை கட்சியில் இணைத்தனர்.

'முழுமையான மார்க்சிச இயக்கமாக' கட்சியின் நடவடிக்கைகள் இடம்பெற வேண்டும் என்பதே அவர்களது நிலைப்பாடாகும். அந்தக் கருத்தில் அவர்கள் உறுதியாக இருந்தனர். மத்திய செயற்குழுவின் கருத்துக்கும் அரசியல் சபையின் கருத்துக்களுக்கும் இடையில் முரண்பாடு தோன்றியது.

'அவசரமாக வந்த இளைஞர் குழுக்கள்' இந்தப் பின்னணியை இடதுசாரிப் பிரச்சினைகளிலிருந்து விலகி முதலாளித்துவ வர்க்கத்துடனான இணைவாகவே கண்டனர். நாங்கள் பல தடவைகள் அக்கருத்தை கொண்டு வந்தாலும் பெரும்பான்மையினர் அதற்கு உடன்படாததால் நீண்ட கடிதம் ஒன்றை எழுதி ஒப்படைத்து விட்டு நான் கட்சியை விட்டு வெளியேறினேன்.

**பின்னர் விமல் வீரவன்சவும் கட்சியிலிருந்து வெளியேறினார்தானே?**

ஆம். அவர் கட்சிக்குள்ளிலிருந்து அந்தக் கருத்தைச் செயற்படுத்த முயற்சித்தார். நான் வெளியே சென்று முயற்சித்தேன். அதனைச் செய்ய முடியாத நிலையில்தான் அவரும் கட்சியிலிருந்து வெளியேறினார்.

**அன்று நீங்கள் எடுத்த தீர்மானம் தொடர்பில் இன்று என்ன நினைக்கிறீர்கள்?**

மிகவும் சரியான தீர்மானத்தை எடுத்திருக்கின்றேன் என தெளிவாகவே எனக்கு விளங்குகின்றது.

**மக்கள் விடுதலை முன்னணி என்பது சோசலிசத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சியாகும். ஆனால், பின்னர் முதலாளித்துவக் கட்சியாகக் கருதப்படும் ஐக்கிய தேசியக் கட்சியுடனான உங்கள் உறவு தலைகீழானது அல்லவா?**

நான் மக்கள் விடுதலை முன்னணியிலிருந்து விலகி ஐக்கிய தேசிய கட்சியில் இணையவில்லை. நாம் ஒன்று சேர்ந்து தேசிய சுதந்திர முன்னணியை உருவாக்கினோம்.

அக்கட்சியின் செயலாளராக நான் செயற்பட்டேன். விமல் வீரவன்ச அதன் தலைவராகும்.

**அக்கட்சியிலிருந்தும் விலகி ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்தீர்கள் தானே?**

மக்கள் விடுதலை முன்னணி ஒழுக்கத்துடன் ஆரம்பிக்கப்பட்ட கட்சி. அதிலிருந்து உடைந்த தேசிய சுதந்திர முன்னணியின் கட்சிக் கொள்கைகளும் அப்படியே இருக்க வேண்டும். அப்படித்தான் கட்சியின் செயற்பாடுகள் இருந்தன. எனினும் அங்கிருந்தவர்கள் ஒழுக்கத்தை மீறும் செயல்களைச் செய்யும்போதும் அந்தக் கட்சியில் இருப்பது ஏற்புடையதல்ல.

**இன்று மக்கள் விடுதலை முன்னணியின் பயணத்தை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

மக்கள் விடுதலை முன்னணி என்பது சோசலிசத்தை முன்னிலைப்படுத்தி ஆரம்பிக்கப்பட்ட கட்சியாகும். அதேபோன்று சிக்கனம் மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றின் அடிப்படையில் நிறுவப்பட்ட கட்சியாகும். ஆனால், இன்று முதலாளித்துவக் கட்சிகளை விட இந்தக் கட்சி வீண் விரயங்களைச் செய்யும் கட்சியாகவும், ஒழுக்கமற்றதாகவும் மாறி இருக்கிறது.

**இந்தக் குற்றச்சாட்டை நீங்கள் முன்**

> **எமது நாட்டு மக்கள் அதிர்ஷ்டசாலிகள் என்பதால் நாட்டைப் பொறுப்பேற்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார்.**

**வைப்பது நீங்கள் இப்போது கட்சியில் இல்லை என்பதாலா? அதனை நிரூபிக்க சாட்சிகள் உள்ளனவா?**

நான் கட்சியினுள் இருந்து கொண்டுதானே உண்மையைப் பேசினேன். சரியான திசையில் கட்சி பயணிக்காத தன் காரணமாகவே நான் அங்கிருந்து வெளியேறினேன்.

நாம் சலுகைகளுக்காக, தனிப்பட்ட விருப்பங்களுக்காக, அரசியல் செய்யவில்லை. அதனால்தான் அமைச்சரவை அமைச்சையும் கூட விட்டுவிட்டு வெளியேறினேன்.

மக்கள் விடுதலை முன்னணி முன்னர் எவ்வாறு பணம் சேகரித்தது? சிவப்பு தொப்பி அணிந்து கொண்டு முட்டிகளைச் சுமந்தே பணம் வசூல் செய்யப்பட்டது. அத்துடன், கட்சிக்கு விசுவாசமான செயற்பாட்டாளர்கள் தங்களது சம்பளத்தில் இருந்து சிறிது பணத்தை கட்சிக்கு வழங்கினர். அதன் மூலம்தான் கட்சிக்கு நிதி சேகரிக்கப்பட்டது. முன்னைய கட்சியின் மேடைகளைக் கண்டிருப்பீர்கள். அமர்ந்திருப்பதற்கு கதிரைகள் இருக்கவில்லை. மேடைகளில் மாத்திரம் 5, 6 கதிரைகள் இருக்கும். கட்சி ஆதரவாளர்கள், கட்சியினர் கூட்டத்தைப் பார்ப்பது, உரைகளைக் கேட்பது வெயிலில் காய்ந்து கொண்டும், மழையில் நனைந்து கொண்டுமாகும்.

இன்று நிலை எவ்வாறு இருக்கின்றது. இன்று மற்றைய கட்சிகளையும் தாண்டிச் சென்று மக்கள் விடுதலை முன்னணியின் மேடைகள் நிர்மாணிக்கப்படுகின்றன.

இன்னும் முட்டிகளை எடுத்துக் சென்று நிதி சேகரிப்பவர்களை நீங்கள் கண்டிருக்கின்றீர்களா? இவர்களுக்கு எங்கிருந்து இவ்வளவு பெருந்தொகை நிதி கிடைக்கின்றது? வெளிநாடுகளிலிருந்தே அவர்களுக்கு நிதி கிடைக்கின்றது

**மக்கள் விடுதலை முன்னணிக்கு எந்த நாட்டிலிருந்து நிதி வருகின்றது?**

**நாட்டை வெளிப்படுத்துவது நல்லதல்லவே?**

**இன்று மக்கள் விடுதலை முன்னணியின் கூட்டங்களுக்கு வரும் மக்கள் வெள்ளத்தைப் பார்க்கும் போது ஆச்சரியமாக இருக்கின்றதே..**

நான் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது மக்கள் கூட்டங்களுக்கு வந்ததும் இதே போன்றுதான். ஆனால் அவ்வாறு கூட்டங்களுக்கு வந்த அனைவரும் வாக்களித்திருந்தால் நான் நிச்சயமாக ஜனாதிபதியாகியிருப்பேன்.

**21ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது. என்ன நடக்கும் என நினைக்கிறீர்கள்?**

இந்நாட்டு மக்கள் நன்றியுள்ளவர்கள். 2022இல் நாடு இருந்த நிலைமை அவர்களுக்கு தெரியும். அந்தளவுக்கு நாடு மிகவும் வங்குரோத்து நிலையை அடைந்திருந்த போதும், நாட்டைப் பொறுப்பேற்கச் சொன்ன போதும் யாரும் முன்வரவில்லை.

குறைந்த பட்சம் அநுரகுமார திஸாநாயக்க நாட்டைப் பற்றிச் சிந்தித்திருக்கலாம். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான திறமை அவரிடம் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

அதேநேரம் சஜித் பிரேமதாசவிடமும் 53 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்தனர். அவரும் நாட்டைப் பொறுப்பேற்காமல் தப்பிச் சென்றார். வங்குரோத்தடைந்த நாட்டைப் பொறுப்பேற்றால் தமது அரசியல் பயணத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்பதைப் பற்றியே அவர்கள் அனைவரும் சிந்தித்தார்களே தவிர, எதையாவது செய்து நாட்டைக் கட்டியெழுப்ப அவர்கள் நினைக்கவில்லை. அதனால்தான் அவர்கள் தவிர்ந்து கொண்டார்கள்.

**எனினும் இப்போது நாட்டைப் பொறுப்பேற்க அவர்கள் ஆயத்தமாக இருக்கின்றார்கள்?**

ஆம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைக் கட்டியெழுப்பி, எரிவாயு, மின்சாரம், எரிபொருள் போன்றவற்றை தடைகளின்றி மக்களுக்கு வழங்கி நாட்டை வழமைக்குக் கொண்டு வந்ததன் பின்னர்தான் அவர்கள் நாட்டைப் பொறுப்பேற்க வருகின்றார்கள். அன்று பொறுப்பேற்கச் சொன்ன போது ஒருவருமில்லை. எமது நாட்டு மக்களின் அதிர்ஷ்டமாக நாட்டைப் பொறுப்பேற்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்வந்தார்.

**எமது நாட்டில் பொருளாதார நெருக்கடி கடுமையாக இருந்தது, நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உருவாக்கக்கூடிய ஜனாதிபதி வேட்பாளர்களாக நீங்கள் பார்க்கும் நபர்களைப் பற்றி கூறுங்களேன்....**

ஒரே வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாத்திரம்தான். நான் ஏற்கனவே கூறியதைப் போன்று, எரிவாயு வரிசைகள், எரிபொருள் இல்லாமல் மக்கள் அனுபவித்த துயரம் மக்களுக்கு நன்றாக நினைவிருக்கிறது. மக்கள் மீண்டும் அந்த யுகத்திற்குச் செல்ல விரும்ப மாட்டார்கள். அது மட்டுமன்றி சர்வதேச நாணய நிதியம் எமக்கு ஆதரவளிக்காது எனவும் சிலர் கூறினர்.

எனினும் இன்று ஜனாதிபதி நாட்டை பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு கொண்டு வந்துள்ளார். அது மட்டுமின்றி அரசு ஊழியர்களின் சம்பளமும் உயர்த்தப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் அரசு ஊழியர்களின் சம்பளம் பணம் அச்சிடப்பட்டே அதிகரிக்கப்பட்டது. ஆனால் பணம் அச்சிடாமல் சம்பளத்தை அதிகரித்ததுள்ளது மட்டுமல்லாமல், கொடுப்பனவுக் கணக்கு மீதியும் நேர்மறையான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அந்த பொருளாதார நோக்கின்படியே நாடு முன்னேறி வருகிறது.

**எனினும் நாம் இன்னமும் வெளிநாட்டுக் கடன்களைச் செலுத்தத் தொடங்கவில்லையே?**

ஆம். நாடு வீழ்ந்துள்ள பொருளாதார வீழ்ச்சி காரணமாக சர்வதேச நிதியத்துடன் இணைந்து பொருளாதாரத்தை நிர்வகிப்பதற்கான முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. அந்த முறையின் பிரகாரமே இந்த நிதிக் கட்டுப்பாடுகள் இடம்பெறுகின்றன. எதிர்காலத்தில் பொருளாதார நடவடிக்கைகளும் அவ்வாறே இடம்பெறும்.

**தற்போது தேர்தல் பிரசார செயற்பாடுகளில் தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளரோ அல்லது திசைகாட்டியோ முதலிடத்தில் இருப்பதாக நான் கூறினால் ஏற்றுக் கொள்வீர்களா?**

ஆம். நான் ஏற்கனவே கூறியதைப் போல் அனைத்தும் வெளிநாடுகளில் இருந்து கிடைக்கும் ஆலோசனைகள், சமூக ஊடகங்கள் மற்றும் இணையம் முழுவதும் பிரசாரங்கள் மிக உயர்ந்த அளவில் இடம்பெறுகின்றன. அது சரி, அதற்குத் தேவையான பண பலம் மட்டுமின்றி, அதுதொடர்பான பிரசார நடவடிக்கைகளைச் செய்ய வேண்டிய முறைகள் தொடர்பில் நிபுணத்துவ ஆலோசனைகளும் கூட வெளிநாடுகளிலிருந்து திசைகாட்டிக்கு கிடைத்திருக்கின்றது.

மக்கள் விடுதலை முன்னணி என்பதும், தேசிய மக்கள் சக்தி என்ற இரண்டும் ஒன்றுதான்.

எவ்வாறாயினும், இந்த நாட்டிலுள்ள கீழ்மட்ட ஊழியர் முதல் உயர்மட்ட அரச உத்தியோகத்தர் வரையானவர்களிடம் கேட்ட போது, ஜனாதிபதிக்கு மௌனமான விருப்பத்தை வெளிப்படுத்துவதாக அவர்கள் கூறுகின்றனர்.

எனவே, ஜனாதிபதிக்கு அதிக விளம்பரம் தேவையில்லை. அவர் செய்த சேவைகள், செய்து கொண்டிருக்கும் சேவைகள், எதிர்காலத்தில் அவர் செய்ய எதிர்பார்க்கும் சேவைகளை மக்கள் மிக நன்றாக அறிவார்கள்.

*அரசியல் எழுத்தாளர்*
*தமிழில் எம். எஸ். முஸப்பிர்*



சர்வதேச ரீதியில் மனித உரிமைகள் மற்றும் சமாதான முன்னெடுப்புகள் தொடர்பான செயற்பாட்டாளர்களை பாராட்டி விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பத்தரமுல்லயில் சபாநாயகரின் உத்தியோகபூர்வ வதிவிடத்தில் நேற்று நடைபெற்றது. சர்வதேச மனித உரிமைகள் அமைப்பின் குளோபல் மிஷன் சார்பாக ஏற்பாடு செய்யப்படிருந்த இந்நிகழ்வில் மனித உரிமைகள் மற்றும் பெண்ணுரிமைகள் தொடர்பாக இந்தியாவிலும் சர்வதேச ரீதியிலுமாகவும் செயலாற்றி வரும் இந்திய உச்ச நீதிமன்ற வழக்கறிஞர் முனைவர் சீமாட்டி எஸ். வேலஸ்ரீக்கு சபாநாயகர் மகிந்த யாபா அபேவர்தன விருதினை வழங்கினார். இந்நிகழ்வில் மலையக மக்கள் முன்னணியின் சிரேஷ்ட உபதலைவர் முனைவர் சதீஷ் சிவலிங்கம், மனித உரிமைகள் குளோபல் மிஷனின் பணிப்பாளர்களான ஏ.ஆர்.என் அமீர்கான், ஏ.எஸ்.எம் நிசாம், எம். குபேரலிங்கம் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.





பொதுஜன பெரமுன ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவை ஆதரித்து நேற்று (07) அளுத்கமை நகரில் மாபெரும் போதுக்கூட்டம் நடைபெற்றது. பிரசன்ன சஞ்சீவ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ வரவேற்கப்படுவதையும் பாராளுமன்ற உறுப்பினர்களான மர்ஜான் பளீல், சஞ்சீவ எதிரிமான்ன உட்பட பிரமுகர்கள் கலந்துகொண்டுள்ளதையும் படங்களில் காணலாம்.

# சர்வதேச விருது பெற்றார் சண்டே ஒப்சேர்வரின் மூத்த பத்திரிகையாளர்




இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள தொழிலாளர்களின் நலனுக்கான ஊடகப் பங்களிப்புகளுக்காக சர்வதேச கடல்சார் விருதைப் பெற்றார், சண்டே ஒப்சேர்வரின் மூத்த ஊடகவியலாளர் லியோன் பெரெஞ்சர். கடந்த ஒன்றரை தஇலங்கை கடற்தொழிலாளர்கள் தேசிய ஒன்றியம் (NUSS), சாப்தங்களாக லண்டனை தலைமையகமாகக் கொண்டுள்ள சர்வதேச போக்குவரத்து தொழிலாளர் சம்மேளனம் (ITWF) என்பனவற்றின் வளர்ச்சி மற்றும் மேம்பாடு குறித்து பல தேசிய செய்தித்தாள்களில் அவர் எழுதி வருகின்றார்.

NUSS மற்றும் அதன் துணை நிறுவனமான ITF உலகெங்கிலும் உள்ள கடல் தொழிலாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பிற்காக வேலை செய்கின்றன, மேலும் 144 நாடுகளில் உள்ள 74 தொழிற்சங்கங்களில் 16.5 மில்லியன் கடல்சார் தொழிலாளர்கள் அவற்றின் தற்போதைய உறுப்பினர்களாக உள்ளனர். NUSS தலைவர் பாலித அதுகோரள ஊடகவியலாளர் லியோன் பெரஞ்சருக்கு விருதை வழங்கினார்.

**படம் மலிஷா லியனகே**



# வயதைப் பார்த்து எடைபோடாதீர்கள்!

## ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷ



**ஜனாதிபதியின் கொள்கைகள் நாட்டுக்கு ஒத்துவராத காரணத்தினால்தான் நாம் விலகினோம்.**

நீங்கள் இன்னனும் இளைஞர்தான். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு நீங்கள் அவசரப்பட்டு விட்டதாக நினைத்ததுண்டா?

இது கட்சியில் உள்ள சிலரை பாதிக்கிறது. வயது முதிர்ந்தவர் வந்தால், வயதாகிவிட்டது என்கிறார்கள். ஒரு இளைஞன் வந்தால், அவன் மிகவும் சிறியவன் என்பார்கள். உலகில் வளர்ந்த நாடுகளை எடுத்துக் கொண்டால் எமது வயதைக் கொண்ட இளைஞர்கள்தான் பொருளாதாரத்தை புரட்டிப் போட்டிருக்கின்றார்கள். வயதைப் பார்ப்பதை விட, யாரால் கொள்கைகளைச் செயல்படுத்த முடியும், யார் அரசியல் கட்டமைப்பிற்குள் திறன் கொண்டவர்கள் என்பதையே பார்க்க வேண்டும். அந்தப் பொறுப்புகளை ஏற்றுக் கொள்வதற்கான அனுபவம் எனக்கு உண்டு.

> சவால்களை ஏற்றுக் கொள்வதுதான் அரசியல்வாதிகளினதும், இளைஞர்களினதும் பொறுப்பாகும்.

**ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கு உங்களுக்கு உள்ள உங்களது திறமை மற்றும் தகுதியை குறிப்பிட்டால்...?**

உண்மையில், ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கான தீர்மானம் மேற்கொண்டது கட்சியே தவிர நானல்ல. நாங்கள் ஒரு குடும்பமாக இருந்தோம். ஆரம்பத்தில் நாங்கள் யாரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என்ற எண்ணத்தில்தான் இருந்தோம். பின்னர், கட்சியின் தேசிய அமைப்பாளரான என்னையே ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளராக நியமிக்க வேண்டும் என கட்சி தீர்மானித்தது. எனவே தேசிய அமைப்பாளர் என்ற வகையில் அந்த சவாலை ஏற்றுக்கொண்டேன். கடந்த இரண்டு ஆண்டுகளில் பல பணிகளைச் செய்துள்ளேன். கட்சியின் பொறிமுறையையும் மஹிந்தவின் சிந்தனையையும் புரிந்து கொண்டு, இந்த விடயங்களை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை நான் சுமந்து கொண்டு தற்போது தேர்தல் களத்தில் இறங்கியிருக்கின்றேன்.

**உங்கள் எதிர்பார்ப்புகளை ஜனாதிபதி நிறைவேற்றாததாலேயே நீங்கள் உள்ளிட்டவர்கள் அரசாங்கத்தை விட்டு வெளியேறியதாக பலர் கூறுகின்றனரே?**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ராஜபக்ஷக்களின் தேவைகளை நிறைவேற்றுகின்றார் என்பதே அவருக்கு எதிராக இருந்த மிகப்பெரிய குற்றச்சாட்டாகும். எனவே இந்த வாதம் நியாயமானதல்ல. ஒரு கட்டத்தில் குற்றம் சாட்டிவிட்டு இப்போது அதை செய்யாததால் வெளியேறிவிட்டார்கள் என்று சொல்வதில் அர்த்தமில்லை. தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி நாங்கள் பேசியதில்லை. அதற்கான அவசியமும் அவருக்கு இருக்கவில்லை. அவரது கொள்கைகள் நாட்டுக்கு ஒத்து வராததாலேயே விலகிக் கொண்டோம்.

**மொட்டுக் கட்சியிலிருந்து உடைந்த பெரும்பாலானோர் தற்போது தேசிய மக்கள் சக்தியோடு இணைந்துள்ளதாகக் கூறப்படுகின்றதே?**

பொதுஜன பெரமுனவின் தேசிய நலனை அடிப்படையாக கொண்டு குறுகிய காலத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்த போது சிலர் அவ்வாறு சென்றிருக்கலாம். இன்று நான் அவ்வாறானவர்களை எம்முடன் வந்து இணைந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கின்றேன்.

**கட்சித் தாவல்களால் புள்ளடிகள் மாற்றமடையுமா?**

கட்சி தாவுவதால் மக்களின் புள்ளடிகளில் மாற்றங்கள் ஏற்படப் போவதில்லை. உயர் மட்ட தலைவர்களே கட்சித் தாவுகிறார்கள். எங்கள் கட்சி ஆதரவாளர்கள் எங்கள் கொள்கைகளுடனேயே இருக்கின்றனர்.

**ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஆதரவாளர்களை ஒன்று திரட்டிக் கொள்வதற்கான வேலைத்திட்டங்கள் உள்ளனவா?**

நானும் எங்கள் கட்சித் தலைவர்களும் இலங்கையின் ஒவ்வொரு தொகுதிக்கும் சென்று தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்வதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

> வயதைப் பற்றிப் பார்ப்பதை விட, யாரால் கொள்கைகளைச் செயல்படுத்த முடியும் என்பதையே பார்க்க வேண்டும்.

**தற்போதைய ஜனாதிபதியைப் போலவே சஜித் பிரேமதாசவும் அரச ஊழியர்களின் சம்பளம் பற்றி பேசுகிறார். அரசாங்கத்தின் சார்பில் அமைச்சரவை அங்கீகாரமும் கிடைத்ததுள்ளது. நீங்கள் ஆட்சிக்கு வந்தால் சம்பள உயர்வு தொடர்பாக எடுக்கப்போகும் நடவடிக்கைகள் குறித்து விளக்குவீர்களா?**

அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு, பதவி வழங்கல்கள் இந்த அரசியல் மேடைகளில் மேற்கொள்ளக் கூடாதவை. பணவீக்கத்திற்கு அமைவாக அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும். அது அரசாங்கம் மாறும் போது செய்யப்படும் தேர்தல் வாக்குறுதியாக இருக்கக் கூடாது. இவற்றை நாம் எப்போதும் கண்டோம். அன்று வரிகளை அதிகரிக்க வேண்டும் எனக் கூறிய அரசாங்கமே இன்று சம்பளத்தை அதிகரிக்க வேண்டும் எனக் கூறுகின்றது. நான் இதற்கான சிஸ்டம் ஒன்றை உருவாக்குவேன்.

> IMF நிபந்தனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்த வேண்டிய தேவை ஏற்பட்டால் நாம் பேச்சுவார்த்தை மேற்கொள்வோம்.

**"உங்களுக்காக அபிவிருத்தியடைந்த நாடு" என்ற தேர்தல் விஞ்ஞாபனத்தின் ஊடாக நாட்டுப் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் போராட்டத்திற்கு எவ்வாறு உரமளிக்கப் போகிறீர்கள்?**

இந்த நாட்டில் கிராமிய வர்த்தகத்தை வலுப்படுத்துவதற்குத் தேவையான தேசிய வர்த்தகத்தைப் பலப்படுத்த வேண்டும். அந்த நடவடிக்கைகளில் ஒன்றாக, கூட்டுறவு மற்றும் கிராமிய வங்கிகள் மூலம், தொழில் முயற்சியாளர்களுக்கு நிதி வலிமையை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். எமது பூமியில் விளையக்கூடிய ஒவ்வொரு பயிரையும் விளைவிப்போம். மீனவர்களுக்கு சலுகைகளை வழங்கி பிடிக்கக்கூடிய அனைத்து மீன் வகைகளையும் பிடிக்க வேண்டும். வெளிநாட்டில் இருந்து கொண்டு வரக்கூடாது. உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் ஆரம்பிக்க வேண்டும். முதலீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகளையும் செய்து கொடுக்க அனைத்து நடவடிக்கைகளையும் உடனடியாக ஆரம்பிக்க வேண்டும்.

**கடுமையான வரிச் சுமையைக் குறைத்து, மூன்று வேளை உண்ணக்கூடிய விரைவான பொருளாதார நிவாரணம் வழங்கும் உங்களின் திட்டத்தைக் கூற முடியுமா?**

முதலாவது விடயம் வரிகளைப் குறைப்பது. அரசின் வரி அல்லாத வருமானத்தை அதிகரிப்பதோடு, அது சமமாக மேற்கொள்ளப்பட வேண்டும். அரசாங்க வருவாயை பாதிக்காமல் மக்களால் உணரக்கூடிய வகையிலான வரிச்சுமை கொண்டு வரப்படும். தங்களால் தாங்கக் கூடிய வகையில் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளக் கூடியவாறு பொருளாதாரத்தை உருவாக்குவோம். மின் கட்டணம் மற்றும் தண்ணீர் கட்டணங்கள் குறைக்கப்பட வேண்டும். அதற்கு சோலாருக்கான வரிச்சுமையை குறைத்து அதற்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். நாம் நிலையான அரசாங்கத்தை உருவாக்கும் அதேநேரம் மக்கள் நிம்மதியாக வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். முதலீட்டாளர்களை வரவழைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

**அதற்காக உங்களிடம் பலமிக்க குழுக்கள் உள்ளனவா?**

ஆம். நிறைந்த அனுபவம் கொண்ட தற்போது வர்த்தகத்துறையில் ஈடுபட்டுள்ள அனேகமானோர் எம்மோடு கைகோர்த்துள்ளார்கள். பாராளுமன்றத் தேர்தலோடு நாம் மாகாண சபைத் தேர்தலையும் நடத்த வேண்டும். உள்ளூராட்சி மன்றங்களின் மூலம் மக்களுக்கு கிடைக்கும் சேவைகளைத் துரிதப்படுத்தல் மற்றும் அரச பொறிமுறையினை டிஜிட்டல் மயமாக்கும் வேலைத்திட்டத்தைத் துரிதமாக ஆரம்பிக்க வேண்டும். இன்று அதிகமான இளைஞர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வது இந்நாட்டில் தொழில் வாய்ப்புக்கள் இல்லாமனாலேயே என்றால் அதற்கான காரணங்களைத் தேட வேண்டும். போட்டித் தன்மையுடனான சந்தை வாய்ப்பை உருவாக்க வேண்டும். தொழில் சந்தையில் வேலை வாய்ப்புகள் கிடைக்க வேண்டும். ஆசிரியர்கள் இல்லாத மாகாணங்களில் தொழில்நுட்பத்தை இணைத்துக் கொண்டு தேவையான பாடசாலை கல்வித்திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும். சாதாரண தரத்தின் பின்னர் ஆங்கிலக் கல்விக்கான வாய்ப்பை உருவாக்க வேண்டும். சாதாரண தரத்திற்குப் பின்னர் தொழில் பயிற்சிக்கு அல்லது தொழில்நுட்பப் பயிற்சிக்குச் செல்வதா அல்லது உயர் தரத்தின் ஊடாக பட்டப்படிப்புக்குச் செல்வதா என்பதைப் பற்றி தேடிப் பார்த்து அனைத்திற்கு உரிய கௌரவம் வழங்கப்பட வேண்டும்.

**தகவல் தொழில்நுட்பத் துறையில் 100,000 வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திட்டத்தை விளக்குங்களேன்....?**

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபயவின் காலத்தில் நாங்கள் ஐந்து தொழில்நுட்ப கிராமங்களை ஆரம்பித்தோம். தகவல் தொழில்நுட்பத் துறையில் முதலீட்டாளர்களைக் கவராத பல பிரச்சினைகள் உள்ளன. அவை தீர்க்கப்பட வேண்டும்.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகிய இரு கட்சிகளும் சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளை மாற்றுவதன் மூலம் நாட்டை பின்னோக்கி திருப்புவதற்கு தயாராகி வருவதாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

**IMF இன் எதிர்கால வேலைத்திட்டம் தொடர்பில் உங்கள் செயற்பாடுகளைக் கூறுங்களேன்...?**

IMF என்பது ஒரேயொரு மாற்று வழி அல்ல. அதில் நல்ல விடயங்களும் இருக்கின்றன. அதேபோன்று எமக்குப் பொருத்தமில்லாத விடயங்களும் உள்ளன. IMF மாத்திரம்தான ஒரே மாற்று வழி என நினைத்துக் கொண்டிருப்பவர்களால் இந்நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது. IMF இனால் அடிப்படையாகக் கூறப்படும் விடயம் அரச செலவுகளை முகாமைத்துவம் செய்வதும், அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்வதுமாகும். உள்நாட்டுப் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச நாணய நிதியத்தில் எந்த தடையும் இல்லை. தொழில்முனைவை ஊக்குவிக்க எந்த தடையும் இல்லை. சில சந்தர்ப்பங்களில் நிபந்தனைகள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்குத் தேவையென்றால் நாம் பேச்சுவார்த்தை நடத்துவோம். இந்த கட்டமைப்பிற்குள், எங்கள் திட்டத்தை எளிதாக பின்பற்ற முடியும். ஏதாவது பிரச்சினை என்றால் ஐஎம் எப் உடன் பேச்சுவார்த்தை நடாத்தலாம்.

எம். எஸ். முஸப்பிர்

# துறைமுக நகரத்தில் சுங்க வரியற்ற "The Mall"




கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள "The Mall" என்ற வரியில்லா வர்த்தக வளாகத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த 05ஆம் திகதி பிற்பகல் திறந்து வைத்தார். இது தொடர்பில் அறிந்து கொள்வதற்காக தினகரன் "The Mall" வர்த்தக வளாகத்தினுள் நுழைந்தது.

உலகின் செல்வந்த நாடுகளில் அமைக்கப்பட்டுள்ள அதிசிறந்த வர்த்தகத் தொகுதிகளை விட எந்த வகையிலும் குறைந்து போகாத வகையில் உருவாக்கப்பட்டுள்ள "The Mall" சுங்க வரியில்லா வர்த்தக தொகுதியானது பார்ப்பவர்களின் கண்களை கவரும் வகையில் உள்ளது. கொழும்பு துறைமுக நகரத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள முதலாவது நகர சுங்கவரி அற்ற வர்த்தக வளாகம் இது என்பதோடு, இங்கு விற்பனை நிலையங்கள், உணவகங்கள் மற்றும் ஏனைய கடைகளும் உள்ளன. இங்கு One World, China Duty Free Group (CDFG) மற்றும் Flemingo என்ற உலகப் புகழ்பெற்ற சுங்க வரியற்ற வர்த்தக நிலையம் தனது வர்த்தக நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளதோடு, தற்போது China Duty Free Group (CDFG) என்ற சுங்க வரி வர்த்தக தொகுதி தனது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. ஏனைய வர்த்தக நிலையங்கள் இவ்வருட இறுதிக்குள் தமது நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளன. இதற்குப் புறம்பாக, சுங்க வரி வர்த்தகத் தொகுதிக்கு வெளியே உள்ள LAKARCADE, SPA CEYLON, 'BASILUR' WORLD'S FRESHEST TEA, மற்றும் CHLL உணவகங்கள் தமது நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளன.

இந்த திட்டத்திற்கு பொறுப்பாகச் செயற்படும் ருவன் கருணாரத்ன இது தொடர்பில் தினகரனுக்கு கருத்து தெரிவிக்கும் போது ,

"கொவிட் தொற்றுநோயால் நாடு முடக்கப்பட்டதன் பின்னர், எமது சுற்றுலா வர்த்தகம் வீழ்ச்சியடைந்தது. வீழ்ச்சியடைந்த சுற்றுலாத் துறையை மீட்டெடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகளில் ஒன்றாக, இந்த துறைமுக நகரத்தில் கட்டப்பட்ட வணிக வளாகத்தை குறிப்பிடலாம். இந்த வணிக வளாகம் 7000 சதுர மீட்டருக்குள் கட்டப்பட்டுள்ளது. இதில், உலகின் புகழ்பெற்ற 03 நிறுவனங்கள் நிறுவப்பட்டுள்ளன. இன்னும் சுமார் 100 நிறுவனங்கள் இதுவரை துறைமுக நகரத்தில் கவனம் செலுத்தியுள்ளன. இவற்றில் 74 நிறுவனங்கள் இந்த ஆண்டின் இறுதிக்குள் துறைமுக நகரத்தில் முதலீட்டு நடவடிக்கைகளை ஆரம்பிக்க உள்ளன.

தென் மாகாணம், அனுராதபுரம், சிகிரியா, பொலன்னறுவை போன்ற இடங்களைப் பார்ப்பதற்காக இவ்வளவு காலமாக சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்தனர். கொழும்பில் ஒரு ஹோட்டலில் தங்கினால் அவர்களின் தேவைக்கேற்ப பொருட்களைக் கொள்வனவு செய்ய வசதியான இடங்கள் இருக்கவில்லை. எனவே இந்த துறைமுக நகரத்தில் அத்தகைய இடத்தை நிறுவ வேண்டிய தேவை எழுந்தது. ஏனெனில் உலகின் பல வளர்ந்த நாடுகளில் சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் இவ்வாறான இடங்கள் உள்ளன. அந்த வகையில்தான் இந்த வர்த்தக தொகுதியும் உருவானது.

மறுபுறம் தென்னிந்தியப் பொருளாதார வலயத்தினுள் எமது நாட்டின் துறைமுகங்கள் தனி இடத்தைப் பெற்றுள்ளன. அந்த நன்மைகளைப் பெற வேண்டுமானால், இவ்வாறான இடங்களை நிர்மாணிப்பது கட்டாயமாகும். இவ்வாறு நாம் துறைமுக வளாகத்தை மேம்படுத்தும்போது சிங்கப்பூர், துபாய் போன்ற நாடுகளுக்கு சுற்றுலாப் பயணிகள் செல்லாமல் நம் நாட்டிற்கு வரத் தொடங்குவார்கள். அது நிகழும்போது இந்நாட்டின் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் நல்ல சந்தைவாய்ப்பு உருவாகும். இது நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு வழிவகுக்கும். ஒரு சுற்றுலாப் பயணி இலங்கைக்கு வரும் போது, அவர்கள் செலவழித்த தொகை வெறும் 175 டொலர்கள்தான். அந்தத் தொகையை 350 முதல் 500 வரையில் கொண்டு வர விரும்பினோம். இ வ்வாறான சூழலை உருவாக்கிக் கொடுத்தால்தான் அவர்கள் மகிழ்ச்சியாக செலவழிப்பார்கள். அந்த நோக்கத்திற்காகவே இதை நாம் உருவாக்கினோம்.









தற்போது, மூன்று டியூட்டி ஃப்ரீ செயற்பாட்டாளர்கள் இங்குள்ளனர். மிகப்பெரிய நிறுவனம்தான் சீனா டூட்டி ஃப்ரீ என்ற நிறுவனம். அவர்கள் வருடத்திற்கு பத்து பில்லியன் டொலர்கள் சம்பாதிக்கும் உல கின் நம்பர் வன் டியூட்டி ஃப்ரீ ஒபரேட்டர்கள் என்று அறியப்படுகிறார்கள். அடுத்ததாக, வன் வேர்ல்ட் சிங்கப்பூர் ஒபரேட்டர். அவர்கள் ஒரு மாதத்தில் தங்கள் வர்த்தக நிலையத்தை திறக்க உள்ளனர். அடுத்ததாக, ஃபிளமிங்கோ உள்ளது. அவர்களும் இந்த ஆண்டு இறுதிக்குள் தங்கள் வர்த்தக நிலையத்தை திறக்க உள்ளனர்.

இதில் டியூட்டி ஃப்ரீ பகுதிக்குள் நுழையும் போது நவீன தொழில்நுட்ப முறைகள் அங்கு செயற்படுத்தப்பட்டுள்ளன. இதற்கு முன்னதாக, சுற்றுலாப் பயணிகள் நம் நாட்டில் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவதில் பல சிக்கல்களை எதிர்கொண்டனர். அதேபோன்று, இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகள் சிலர் பணமோசடியில் ஈடுபட்டு பிடிபட்டுள்ளனர். அதன்படி, ஒருவர் தனது விமானப் பயணச் சீட்டின் மூலம் மட்டுமே இந்த வளாகத்திற்குள் நுழைய முடியும். அதேபோன்று பணம் செலவு செய்து பொருட்களை வாங்கக் கூடியவர்கள் என இனங்காணப்படுபவர்கள் மாத்திரமே இதனுள் நுழைய முடியும். பாஸ்போர்ட்டை ஸ்கேன் செய்யும் போது, அவர்கள் பெறும் பலன்கள் அங்கு பதிவு செய்யப்படும். அதைத் தவிர, இந்த அமைப்பின் மூலம் அவர்களால் எதையும் கொண்டு செல்ல முடியாது. அந்தத் தரவுகள் உடனடியாகவே எமக்குக் கிடைக்கின்றது. அதன்படி அவர் அனுமதி பெற்று இலங்கைக்குள் நுழைந்தாரா இல்லையா என்பதை அடையாளம் காண முடியும். இங்கு எத்தனை வாடிக்கையாளர்கள் வந்திருக்கிறார்கள், எத்தனை பொருட்கள் வாங்கினார்கள், எவ்வளவு பணம் சம்பாதித்தார்கள், இதையெல்லாம் மிக வெளிப்படையாகப் பார்த்துக் கொள்வதற்கான வாய்ப்பு எமக்கு கிடைக்கின்றது.

அதேபோன்று, இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்களுக்கு உலகின் எந்த வர்த்தக நாமத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருட்களையும் சேவைகளையும் இங்கு வாங்க முடியும். ஆனால் அவற்றை வாங்கி நாட்டுக்குள் கொண்டு வர முடியாது. அவர்கள் எமது நாட்டிலிருந்து வெளியேறும் போது குறித்த திகதியில், குறித்த நேரத்தில் கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் தமது அடையாளத்தைச் சமர்ப்பித்து அப்பொருட்களை எடுத்துச் செல்லக்கூடிய வகையில் வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. எனவே அவர்கள் இவற்றை இடத்திலிருந்து இடத்திற்கு எடுத்துச் செல்லவோ அல்லது மீண்டும் பொதி செய்து சிரமப்படவோ வேண்டிய தேவையில்லை.

அதேபோன்று, இனிமேல் வேறு நாட்டில் பணிபுரிந்து இலங்கைக்கு வரும் இலங்கையர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இறங்கி, வரியில்லா பொருட்களை கொள்வனவு செய்து, வாகனங்களை வாடகைக்கு எடுத்து, சிரமப்பட்டு கொழும்புக்கு அழைத்து வர வேண்டிய அவசியமில்லை. அவர்கள் வந்த நாளிலிருந்து நான்கு நாட்களுக்குள் துறைமுக நகரத்தில் உள்ள சுங்கவரி விலக்களிக்கப்பட்ட கடையில் அந்தப் பொருட்களை வாங்கலாம்.

சுங்கவரி விலக்களிக்கப்பட்ட பகுதி இம்மாத இறுதியில் பொதுமக்களுக்காகத் திறக்கப்படும். எனினும் மேற்கூறிய நிபந்தனைகளின் அடிப்படையில் மட்டுமே இதனுள் நுழைய முடியும். மற்றப்படி எல்லோராலும் அங்கு பிரவேசிக்க முடியாது. ஆனால் அவர்கள் அதற்கு வெளியே எந்த சேவையையும் பெற முடியும்; இலங்கை மக்கள் இவ்வாறான வர்த்தக நிலையத்தின் அனுபவங்களைப் பெறுவது இதுவே முதல் முறை என அவர் குறிப்பிட்டார்.

இங்குள்ள டியூட்டி ஃப்ரீ வர்த்தகத் தொகுதியில் உள்ள ஊழியர்கள் மிகவும் நட்பு மற்றும் செயற்திறன்மிக்க சேவையை வழங்குகிறார்கள். இந்த வர்த்தகத் தொகுதியில் உள்ள வசதிகள் தொடர்பில் சீனா டூட்டி ஃப்ரீயின் சில்லறை விற்பனை முகாமையாளர் றொரி டேனியல் எம்மிடம் கருத்து தெரிவிக்கும் போது இவ்வாறு குறிப்பிட்டார். "இலங்கைக்கு வரும் எந்தவொரு வெளிநாட்டவரும் இங்கு வந்து உலகின் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக நாமங்களின் கீழ் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை பெற்றுக்கொள்ள முடியும். அவைகளிடையே சொக்கலேட், வாசனைத் திரவியங்கள், அழகுசாதனப் பொருட்கள், ஃபெஷன் பொருட்கள், தோல் பொருட்கள், வீட்டு உபயோகப் பொருட்கள், மின்சாரப் பொருட்கள், சன்கிளாஸ், மதுபானங்கள் மற்றும் தேநீர் என எதையும் வாங்கலாம். அதேபோன்று வெளிநாட்டிலிருந்து வரும் இலங்கையின் எந்தவொரு குடிமகனும் கட்டுநாயக்காவில் இருந்து இறங்கி வீட்டிற்குச் சென்று மறுநாள் தாராளமாக இங்கு வந்து அவர்களுக்கு வழங்கப்பட்ட 2000 டொலர் வரம்பில் பொருட்களை வாங்க முடியும். இதற்காக அவர்கள் வரும் நாளின் இரவு 12.00 மணியிலிருந்து நான்கு நாட்கள் கால அவகாசம் உள்ளது.

அதேபோன்று இன்னொருவருடன் வருவதற்கும் அனுமதி உள்ளது. அத்துடன் ஒருவர் வேறு நாட்டிற்குச் செல்ல வேண்டுமானால் அவரின் விமானப் பயணச் சீட்டை இங்கு காண்பித்து இங்கு தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்து விட்டுச் செல்ல முடியும். அவர் பயணிப்பது இரவு இன்றிரவு 8.00 மணிக்கு எனின் ஒரு மணி நேரத்திற்கு முன்னர் அப்பொருட்கள் அனைத்தும் பொதி செய்யப்பட்டு உரிய அனுமதியுடன் கட்டுநாயக்காவில் பெற்றுக் கொண்டு வெளிநாட்டுக்குச் செல்ல முடியும். இது அவர்களுக்கு மிகப்பெரும் சலுகையாகும். இல்லையேல் அவற்றைப் பொதி செய்து கொண்டு தூக்கிக் கொண்டு செல்ல வேண்டியிருக்கும். எனினும் இந்த வசதிகளினால் அவர்கள் சிரமமப்பட வேண்டியதில்லை. அதேபோன்று வெளிநாட்டவர்களுக்கும் அவர்கள் வாங்கும் பொருட்கள் இதே முறையில் பொதி செய்யப்பட்டு கட்டுநாயக்கவிற்கு டிலிவரி செய்யப்படுகின்றது. அவர்கள் தமது பொருட்களை அங்கிருந்து எடுத்துக்கொண்டு வெளிநாடு செல்லலாம். எனவே இந்த அனுபவத்தை அனுபவிக்க இந்த இடத்திற்கு வருமாறு உங்களை அழைக்கிறோம்.அடுத்தாக நாம் டியூட்டி ஃப்ரீ வலயத்திற்கு வெளியே பொது இடத்தில் நமக்கே உரிய பாணியில் அழகாகக் கட்டப்பட்டுள்ள எல்லே CHILL Cafe க்குச் சென்றோம். CHILL Cafe நிறுவனம் எல்லே ஸ்தாபகர் தர்ஷனவினால் சில காலத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டது என அதன் செயற்பாட்டு முகாமையாளராகக் கடமையாற்றும் இரங்க கூறினார். சிறிதாக ஆரம்பிக்கப்பட்ட CHILL Cafe சிறிது சிறிதாக விருத்தியடைந்து இன்று இலங்கையில் இருக்கும் மிகப் பெரும் ரெஸ்டுரண்டாக மாறியிருக்கின்றது. ஒரு ரெஸ்டுரண்ட்டிற்கு கிடைத்திருக்கும் மிகப் பெரும் அங்கீகாரம் இந்த ரெஸ்டுரண்டிற்கே கிடைத்திருக்கின்றது. கூகுள் தேடலில் டிரிப் அட்வைசருக்கு அடுத்தபடியாக நாங்கள் இருக்கிறோம். அதாவது ஒரு உயர்தர ரெஸ்டுரண்ட் பார் கஃபேயாகும். இதில் நைட் க்ளப் உண்டு. தர்ஷன் இந்த உணவகத்தை கொழும்பு நகருக்கு அறிமுகப்படுத்த விரும்பினார். துறைமுக நகரம் திறக்கப்பட்ட பிறகு, அதை இங்கே எமது ரெஸ்டுரண்டை ஆரம்பிக்க எங்களுக்கு ஒரு பெரிய வாய்ப்பு கிடைத்தது; அதன்படியே, இந்த இடத்தில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

–எம். எஸ். முஸப்பிர்




# சமூக ஊடகங்கள் வரம்புமீறி செயற்பட்டால் அதன் மீது மக்கள் நம்பிக்கை இழந்து விடுவர்!

## தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்க கூறுகிறார்

**பாரம்பரிய ஊடகங்கள் மீதான நம்பிக்கை குறைந்தமையாலேயே மாற்றுத் தெரிவாக மக்கள் சமூக ஊடகங்களின் பக்கம் சென்றுள்ளனர். இதேபோன்று சமூக ஊடகங்கள் வரம்புமீறி சரியான முறையில் செயற்படாவிட்டால், அதன் மீதான நம்பிக்கையையும் மக்கள் இழந்துவிடுவார்கள் என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் சிறி ரத்னாயக்க தெரிவித்தார். தேர்தல் ஏற்பாடுகள் குறித்து அரச ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.**



**கே: தேர்தலுக்கான ஏற்பாடுகள் குறித்துக் குறிப்பிடுவீர்களா?**

பதில்: தேர்தலை நடத்துவதற்கு இதுவரை தேவையான அனைத்து ஏற்பாடுகளையும் நாம் பூர்த்தி செய்துள்ளோம். அதேபோல, எதிர்வரும் நாட்களுக்குத் தேவையான திட்டமிடல்களை மேற்கொண்டிருப்பதுடன், ஏதாவது திடீர் தேவைகள் ஏற்பட்டால் அவற்றை நிவர்த்தி செய்யக் கூடிய வகையிலேயே எமது திட்டமிடல்கள் எப்பொழுதும் இருக்கும். மாவட்ட ரீதியாக உள்ள தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகள் அந்தந்தப் பிரதேசத்துக்கு ஏற்ற வகையில் தேர்தல் ஏற்பாடுகள் குறித்துக் கவனம் செலுத்தியுள்ளனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்கக் கூடிய வகையில் எமது தேர்தல் அதிகாரிகள் திட்டமிடல்களை மேற்கொண்டுள்ளனர். அதேபோல, தேசிய மட்டத்திலான ஏற்பாடுகளும் உரிய முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

**கே: ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரங்கள் இம்மாதம் 18ஆம் திகதி நள்ளிரவுடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும். இதுவரை உங்களுடைய கண்காணிப்பின் அடிப்படையில் தேர்தல் குறித்த பிரசாரங்கள் எவ்வாறானதாகக் காணப்படுகின்றன?**

பதில்: கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இம்முறை தேர்தல் குறித்த பிரசாரங்கள் குறைவாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கும். உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களின் போது வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகமாக இருப்பதால் பிரசாரச் செயற்பாடுகளும் அதிகமாக இருக்கும். எனினும், இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் பிரசார நடவடிக்கைகள் குறைவாகவே காணப்படுகின்றன. வீதிகளில் காணப்படும் கொடிக் கம்பங்களை அகற்றுமாறு நாம் பணிப்புரை விடுத்துள்ளோம். இது பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாக மாத்திரமன்றி, தேர்தல் சட்டத்திற்கும் முரணானதாகும்.

தற்பொழுது கட்சிகளின் தேர்தல் அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன. தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று வேட்பாளர்களுக்கான தேர்தல் அலுவலகங்களைத் திறப்பதில் எந்தவிதமான தடையும் இல்லை. இருந்தபோதும், இதனை அடிப்படையாகக் கொண்டு பிரசாரங்களை மேற்கொள்வது போன்ற கீழ்மட்டமான செயற்பாடுகளில் ஈடுபடவேண்டாம் எனக் கேட்டுக் கொள்கின்றோம். எந்த வேட்பாளர் வெற்றிபெற்றாலும் தேர்தல் முறைமையில் நேர்மைத் தன்மையைப் பேணுவதில் நாம் கவனம் செலுத்தியுள்ளோம். எனவே, இது போன்று கீழ்மட்ட பிரசாரங்களை மேற்கொண்டு கௌரவத்தை இல்லாமல் செய்து கொள்ள வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

தேர்தல் விதி மீறல்கள் இடம்பெறுவதில் பெரும் பங்கு ஊடகங்களின் வாயிலானதாகவே காணப்படுகின்றது. வாக்காளர்கள் மத்தியில் அதிகமான தாக்கத்தைச் செலுத்தும் ஒன்றாக ஊடகங்கள் காணப்படுகின்றன. தேர்தல் குறித்த தொடர்பாடல்களை மேற்கொள்ளும் அனைத்து ஊடகங்களுக்கும் பொறுப்பு உள்ளது. தேர்தல் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு நடப்பதற்கான பொறுப்பு அவர்களுக்கு உள்ளது. இதற்கு சிறந்த உதாரணம் தேசியக் கொடியைப் பயன்படுத்த வேண்டாம் என்று கூறியுள்ளோம். பிரசார நடவடிக்கைகளுக்குத் தேசியக் கொடி அவசியமில்லை. இது தேர்தல் சட்டம் இல்லை

> **'தேர்தல் விதிமீறல்களில் அதிகமானவை ஊடகங்கள் வாயிலாகவே இடம்பெறுகின்றன'**

யென்றாலும், தேசியக் கொடியைப் பயன்படுத்தக் கூடிய சந்தர்ப்பங்கள் பற்றி உள்நாட்டு அமைச்சினால் வழிகாட்டல்கள் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் காலத்தில் அனைத்தையும் தேர்தல் சட்டத்தைப் பயன்படுத்திக் கட்டுப்படுத்த வேண்டியதென்று இல்லை. சாதாரண சட்டத்தையும் பயன்படுத்தலாம்.

தேர்தல் காலத்தில் வாகனங்களின் பின் பக்க கண்ணாடியில் ஸ்டிக்கர்கள் ஒட்டிக் கொண்டு பயணிக்க முடியாது. இருந்தாலும் தனியார் வாகனங்கள் பல இவ்வாறு ஸ்டிக்கர்களை ஒட்டிக்கொண்டு செல்வதைக் காணக்கூடியதாகவுள்ளது. இவற்றை போக்குவரத்துச் சட்டத்தைப் பயன்படுத்தி அகற்ற முடியும். நாட்டில் பொதுவான சட்டம் உரிய முறையில் கடைப்பிடிக்கப்படுமாயின் தேர்தல் காலத்தில் தேர்தல் சட்டத்தைக் கடைப்பிடிக்க சிறிய முயற்சியையே நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும்.

அதேநேரம், ஊடகப் பயன்பாடு தொடர்பில் சில ஊடகங்களின் நடவடிக்கைகள் பற்றி தீர்மானம் எடுக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. பொதுமக்களின் மனங்களில் மாற்றங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படும் ஊடகங்களைத் தடுக்க வேண்டிய பொறுப்பு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு உள்ளது. காணப்படும் சுதந்திரத்தைப் பயன்படுத்தி அவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவது அனுமதிக்கப்பட முடியாததாகும்.

**கே: பாரம்பரிய ஊடகங்கள் மாத்திரமன்றி சமூக ஊடகங்களின் செயற்பாடுகள் குறித்தும் விமர்சனங்கள் காணப்படுகின்றன. இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

பதில்: பல வருடங்களாக சம்பிரதாய ஊடகங்களில் தங்கியிருந்த மக்கள் தற்பொழுது மாற்றுத் தெரிவொன்றைத் தேடிச் சொன்றுள்ளனர். இதன் மீதான நம்பிக்கை இழக்கப்படும் பட்சத்தில் மக்கள் வேறொரு மாற்றுத் தெரிவுக்குச் செல்வார்கள். இத்தகைய அச்சுறுத்தல் சமூக ஊடகங்களுக்கு உள்ளது. பாரம்பரிய ஊடகங்கள் தமக்கு மாற்றுத் தெரிவுவரும் என எண்ணியிருக்கவில்லை. எனவே மாற்றுத் தெரிவு என்பது எந்த நேரத்திலும் உதயமாகலாம். தகவல்களை வழங்க வேண்டாம் என்று நாம் கூறவில்லை. தொடர்பாடலுக்கான பயனை முழுமையாகப் பெற்றுக் கொண்டால் பிரச்சினையில்லை. மக்களைத் தேவையற்ற வகையில் குழப்பும் வகையில் போலியான தகவல்களை வழங்குதல், செய்திகளை உருவாக்குதல் போன்றவற்றை மேற்கொள்ள வேண்டாம் என்றே நாம் வலியுறுத்துகின்றோம். மக்களின்நம்பிக்கைஇழக்கப்பட்டால் சமூக ஊடகங்களும் பயனாளர்களை இழக்க வேண்டியிருக்கும்.

**கே: இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களில் 15 வேட்பாளர்களே ஆகக் குறைந்தது ஒரு கூட்டத்தையாவது நடத்தியிருப்பதாக ஊடகங்கள் அறிக்கையிட்டிருந்தன. இது பிரச்சினைக்குரியது இல்லையா?**

பதில்: இது பிரச்சினைக்குரியது அல்ல. ஏனெனில், இதில் போட்டியிடும் அனைவரும் சட்டத்துக்கு உட்பட்ட ரீதியிலேயே போட்டியிட முன்வந்துள்ளனர். எனவே அவர்கள் இவ்வாறு போட்டியிட முன்வந்திருப்பதற்கான சூழல் பற்றியே சிந்திக்க வேண்டும். அவ்வாறான நிலைமையை சீர்செய்வதாயின் சம்பந்தப்பட்ட சட்டத்தைத் திருத்த வேண்டியது சட்டவாக்கத்தின் கடமையாகும். சட்டவாக்கமோ நிறைவேற்று அதிகாரமோ சம்பந்தப்பட்ட தரப்பு யாராக இருந்தாலும், இது பற்றிய யோசனையை அமைச்சரவையின் ஊடாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்து அதற்கு சட்டரீதியான தன்மையை வழங்க வேண்டும். அவ்வாறு செய்வதன் ஊடாக இந்த நிலைமையை மாற்ற முடியும்.

**கே: அதிக எண்ணிக்கையான வேட்பாளர்கள் காணப்படும் சூழ்நிலையில் வாக்குச் சீட்டின் நீளமும் அதிகமாக இருக்கும் என்பதால் வாக்குகளை சேகரிப்பதற்கான ஏற்பாடுகள் எந்தளவில் உள்ளன?**

பதில்: வாக்குச் சேகரிப்பிற்கு நாம் மரத்தினாலான பெட்டிகளுக்குப் பதிலாக கார்ட் போர்ட் பெட்டிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். அது மாத்திரமன்றி வாக்குச் சீட்டின் நீளம் கடந்த முறை காணப்பட்ட அளவிலேயே இருப்பதால் வாக்குப் பெட்டிகள் குறித்த பிரச்சினை இல்லை. வாக்குச் சீட்டு சற்று நீளமாக இருப்பதால், வாக்காளர்கள் மேலிருந்து கீழ் வாசிக்க வேண்டியதொரு நிலைமை மாத்திரம் இருக்கும். எனினும், தாம் யாருக்கு வாக்களிக்கப் போகின்றோம் என்ற முடிவில் உள்ள வாக்காளர்களுக்கு வாக்களிப்பதில் எந்தச் சிரமமும் இருக்காது.

# ஷேக் ஹசீனாவின் விடை தெரியாத எதிர்காலம்!



## மூன்றாவது நாடொன்றில் புகலிடம் பெறுவதற்கு முயற்சிகள்!



## இந்தியாவில் தொடர்ச்சியாக தஞ்சமடைந்திருப்பதால் பங்களாதேஷுடனான நட்புறவு பாதிக்கப்படுமா?

கடந்த மாதம் 5 ஆம் திகதி வரை பங்களாதேஷ் நாட்டின் பிரதமராக இருந்த ஷேக் ஹசீனா அங்கிருந்து வெளியேறி இந்தியாவுக்கு வந்து ஒருமாத காலம் ஆகிவிட்டது.

அவரும் அவரது தங்கை ஷேக் ரெஹானாவும் தங்குவதற்கான ஏற்பாடுகளை இந்திய அரசு மிகவும் இரகசியமாகவும், பலத்த பாதுகாப்புடனும் செய்துள்ளது. ஆனால் இந்த விஷயத்தில் தனது இறுதி முடிவு என்னவாக இருக்கும் என்பதை இந்தியா இன்னும் முறைப்படி தெரிவிக்கவில்லை.

இதற்கிடையில் ஷேக் ஹசீனாவின் தூதரக கடவுச்சீட்டை வங்கதேச அரசு கடந்த வாரம் ரத்து செய்தது. இதனால் அவர் இப்போது இந்தியாவில் தங்கியிருப்பதற்கு சட்ட அடிப்படை என்ன என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஷேக் ஹசீனா விவகாரத்தில் தற்போது இந்தியாவிற்கு மூன்று மாற்று வழிகள் திறந்திருக்கின்றன.

இந்தியாவில் தங்கியுள்ள பங்களாதேஷ் முன்னாள் பிரதமர் மற்றொரு நாட்டில் தஞ்சம் புகுவதற்கான ஏற்பாடுகளை செய்வது முதல் வழி. அது அவரின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் அளிக்கும் இடமாக இருக்க வேண்டும்.

இரண்டாவது வழி, ஷேக் ஹசீனாவுக்கு அரசியல் புகலிடம் அளித்து அவர் இந்தியாவில் தங்குவதற்கான ஏற்பாடுகளைச் செய்வது.

மூன்றாவது வழியைத் தேர்ந்தெடுப்பது இப்போது ஒருவேளை சாத்தியமாக இருக்காது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு நிலைமை சீரடைந்தால், ஷேக் ஹசீனா அரசியல் ரீதியாக சொந்த நாடு திரும்புவதற்கு இந்தியா முயற்சி செய்யக்கூடும் என்று இந்திய அதிகாரிகள் கருதுகின்றனர்.

ஒரு கட்சியாக அல்லது ஒரு அரசியல் சக்தியாகத் திகழும் தகுதியை அவாமி லீக் இன்னும் இழக்கவில்லை என்பதே இதற்குக் காரணம். ஹசீனா தனது நாட்டிற்குத் திரும்பிய பிறகு கட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்க முடியும்.

இந்தியாவைப் பொறுத்தவரை முதல் வழியே சிறந்தது என்பதில் சந்தேகமில்லை.

ஷேக் ஹசீனா இந்தியாவில் தொடர்ந்து இருந்தால், அது இந்தியா - வங்கதேச உறவில் எதிர்மறை தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

இதனுடன் இந்தியா - வங்கதேசத்திற்கு இடையிலான நாடு திருப்பி அனுப்பும் ஒப்பந்தத்தின் கீழ் ஷேக் ஹசீனாவை நாடு திருப்பி அனுப்புமாறு வங்கதேசம் கோரிக்கை விடுத்தால், ஏதேனும் சில வாதங்களின் அடிப்படையில் இந்தியா அதை நிராகரிக்கும் என்பதும் உறுதி.

நீதி விசாரணையை எதிர்கொள்ளும் பொருட்டு ஷேக் ஹசீனாவை வங்கதேசத்திடம் ஒப்படைப்பது இந்தியாவுக்கு நடைமுறை ரீதியில் சாத்தியம் இல்லை.

அத்தகைய சூழ்நிலையில் ஷேக் ஹசீனா விவகாரத்தில் முன்னர் குறிப்பிட்ட மூன்று வழிகள் தவிர வேறு எந்த வழியும் இந்தியாவிடம் இல்லை.

வங்கதேசத்தின் நிலைமை குறித்து வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் ஓகஸ்ட் 6ஆம் திகதி நாடாளுமன்றத்தில் பேசினார். அப்போது ஹசீனா இந்தியாவுக்கு வந்திருப்பதைக் குறிப்பிடும் போது 'இப்போதைக்கு' என்ற வார்த்தையை பயன்படுத்தினார். அதன் பிறகு இந்த விவகாரத்தில் அரசு தரப்பில் இருந்து எந்தக் கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

ஷேக் ஹசீனாவை இந்தியா, வங்கதேசம் அல்லாத மூன்றாம் நாட்டிற்கு பத்திரமாக அனுப்பும் முயற்சிகள் இன்னும் நடந்து கொண்டிருப்பதே இதற்குக் காரணம். ஆனால் இதில் உடனடி வெற்றி கிடைக்காவிட்டாலும், அவருக்கு அரசியல் தஞ்சம் அளித்து நீண்ட காலம் இங்கு தங்கவைக்கவும் இந்தியா தயங்காது.

ஷேக் ஹசீனா மூன்றாவது நட்பு நாடு ஒன்றுக்குச் சென்று வாழக்கூடிய விஷயத்தில் நல்லபடியாக ஏதாவது நடக்கும் என்ற நம்பிக்கை இந்தியாவுக்கு இருக்கிறது. ஆனால் அது நடக்கவில்லை என்றால், இந்தியா ஷேக் ஹசீனாவை இந்தியாவில் நீண்ட காலம் தங்க வைக்கத் தயாராகும் என்பதே உண்மை.

ஷேக் ஹசீனாவின் அமெரிக்கா செல்லும் திட்டத்திற்கு ஆரம்ப கட்டத்திலேயே தடைகள் ஏற்பட்டதைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவூதி அரேபியா மற்றும் ஐரோப்பாவில் உள்ள இரண்டு சிறிய நாடுகளுடன் இந்த விஷயம் குறித்து இந்தியா விவாதித்ததாகத் தெரிய வந்துள்ளது.

எனினும், இந்த விவகாரத்தில் இதுவரை எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. இப்போது ஷேக் ஹசீனாவுக்கு புகலிடம் வழங்குவது தொடர்பாக மத்திய கிழக்கின் மற்றொரு செல்வாக்குமிக்க நாடான கட்டாருடன் இந்தியா பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகத் தெரிகிறது.

ஷேக் ஹசீனா இதுவரை அமெரிக்காவிலோ அல்லது இந்த நாடுகளிலோ அரசியல் தஞ்சம் கோரி எழுத்துபூர்வமாக விண்ணப்பிக்கவில்லை.

இந்த விவகாரம் தொடர்பான எல்லா பேச்சுவார்த்தைகளையும் அவர் சார்பாக, அவருடைய வாய்மொழி சம்மதத்தின் அடிப்படையில் இந்திய அரசு மேற்கொண்டு வருகிறது.

ஷேக் ஹசீனாவுக்கு அரசியல் தஞ்சம் வழங்க ஏதாவது மூன்றாவது நாடு ஒப்புக்கொண்டால், டெல்லியில் இருந்து அந்த நாட்டுக்கு அவர் எந்த கடவுச்சீட்டில் செல்வார் என்ற கேள்வியும் இப்போது எழுந்துள்ளது.

ஆனால் வங்கதேச அரசு அவரது கடவுச்சீட்டை ரத்து செய்துவிட்டது என்றாலும், இந்தியா வழங்கும் பயண ஆவணம் அல்லது அனுமதிப்பத்திரத்தின் உதவியுடன் அவர் மூன்றாவது நாட்டிற்கு பயணம் செய்யலாம் என்கிறார்கள் இராஜதந்திரிகள்.

இந்தியாவில் ஆயிரக்கணக்கான திபெத்திய அகதிகள் உள்ளனர். அவர்களிடம் கடவுச்சீட்டே இல்லை. அத்தகைய வெளிநாட்டவருக்காக இந்தியா பயண ஆவணத்தை வழங்குகிறது. அவர்கள் அதைக் கொண்டு உலகம் முழுவதும் பயணம் செய்கிறார்கள்.

ஷேக் ஹசீனாவுக்கு ஒரு நாடு புகலிடம் அளிக்கத் தயாராக இருக்கிறது என்று வைத்துக்கொண்டால், இந்திய அரசு வழங்கும் பயண ஆவணத்தில் சம்பந்தப்பட்ட நாட்டின் விசா பெற்றுக்கொண்டு அவர் எளிதாக அங்கு சென்று வாழலாம்.

ஷேக் ஹசீனா 1975 இல் தனது குடும்பத்துடன் இந்தியாவில் வசித்தார். மிகவும் அவசியமானால் ஷேக் ஹசீனாவுக்கு அரசியல் தஞ்சம் அளித்து அவரை நாட்டிலேயே வைத்திருக்க இந்தியா தயங்காது என்பதற்கான அறிகுறிகளும் டெல்லியில் இருந்து வருகின்றன.

திபெத்திய மதத்தலைவர் தலாய் லாமா, நேபாள மன்னர் திரிபுவன் பீர் விக்ரம் ஷா, ஆப்கானிஸ்தான் அதிபர் முகமது நஜிபுல்லா ஆகியோருக்கு இந்தியா முன்னதாக அரசியல் புகலிடம் அளித்துள்ளது. ஷேக் ஹசீனாவும் 1975 ஆம் ஆண்டு தனது குடும்பத்துடன் இந்தியாவில் வசித்துள்ளார். ஆனால் இந்த விருப்பத்தை தெரிவு செய்யும் பட்சத்தில், இந்திய - வங்கதேச இருதரப்பு உறவுகளில் அது என்ன விளைவை ஏற்படுத்தும் என்பதையும் இந்தியா மனதில் கொள்ள வேண்டியுள்ளது.

1959ஆம் ஆண்டு தலாய் லாமாவுக்கு அரசியல் தஞ்சம் அளித்த பிறகு இந்தியா - சீனா உறவில் ஏற்பட்ட கசப்பு, 65 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதும் காணப்படுவதாக பார்வையாளர்கள் கூறுகின்றனர்.

தலாய் லாமா இந்தியாவிலோ அல்லது உலகின் பிற பகுதிகளிலோ எவ்வளவு மதிப்புடன் பார்க்கப்பட்டாலும், இந்தியாவுக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவுகளில் அவர் எப்போதும் சர்ச்சைக்குரியவராகவே இருந்து வருகிறார்.

ஷேக் ஹசீனாவுக்கு இந்தியா அரசியல் புகலிடம் அளித்தால், வங்கதேசத்தின் புதிய அரசுடனான உறவை வலுப்படுத்துவதற்கு அது தடையாக அமையும்.

இந்திய அரசும் இதை நன்றாக புரிந்து கொண்டுள்ளது. இருந்த போதிலும் முதல் வழியில் வெற்றி கிடைக்கவில்லையென்றால், இரண்டாவது விருப்பத்தை தெரிவு செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படும். இதற்குக் காரணம், தனது நீண்ட கால நண்பரான ஷேக் ஹசீனாவை நெருக்கடியில் தனித்து விட்டுவிடுவது இந்தியாவுக்கு எந்த சூழ்நிலையிலும் சாத்தியம் இல்லை.

இதுஒருபுறமிருக்க வங்கதேச அரசியலில் ஷேக் ஹசீனாவின் முக்கியத்துவமும், பங்கும் இன்னும் முடிவடையவில்லை என்றும், தகுந்த நேரம் வரும்போது அவரது அரசியல் மறுவாழ்வுக்கு இந்தியா உதவுவது பொருத்தமானதாக இருக்கும் என்றும் ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

வங்கதேச அரசியலில் ஷேக் ஹசீனா மூன்று முறை (1981, 1996 மற்றும் 2008 ஆம் ஆண்டுகளில்) வலுவான மறுபிரவேசம் செய்துள்ளார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஒவ்வொரு முறையும் ஹசீனா மீண்டும் வருவது 'ஒருவேளை சாத்தியமில்லை' என்று பலர் நினைத்தார்கள். ஆனால் அவர் ஒவ்வொரு முறையும் அதை தவறு என்று நிரூபித்து வருகிறார்.

வங்கதேசத்தில் அவாமி லீக் மீது எந்த தடையும் விதிக்கப்படவில்லை. நாடு முழுக்க சக்திவாய்ந்த தொடர்புகளை அது கொண்டுள்ளது. அக்கட்சியின் உச்ச தலைவராக ஷேக் ஹசீனா எதிர்காலத்தில் வங்கதேசம் திரும்பக்கூடும் என்றும் பலர் நம்புகின்றனர்.

கடந்த ஐம்பது வருடங்களில் ஷேக் ஹசீனா மீது இந்தியா செய்த அரசியல் முதலீடு காரணமாக டெல்லியின் செல்வாக்கு மிக்க ஒரு பிரிவினர், "ஹசீனாவின் அரசியல் வாழ்க்கை முடிந்துவிட்டது" என்பதை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை.

**எஸ்.சாரங்கன்...**

# புனர்வாழ்வளிக்கப்பட்ட புலிகள் ஜனாதிபதி ரணிலுக்கே ஆதரவு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி தீர்மானித்துள்ளதாக கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்துள்ளார்.

கட்சியினால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைக்கப்பட்ட ஐந்து அம்சக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அவற்றை செயற்படுத்தி தருவதாக, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாக அவர் தெரிவித்தார்.

கட்சியின் மன்னார் மாவட்ட தேர்தல் அலுவலகத்தை நேற்று முன்தினம் (06) திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்துக்குப் பின்னர் சுமார் 12,000 முன்னாள் போராளிகள் வடக்கு கிழக்கில் வாழ்வதாகவும் தமிழ் அரசியல் தலைவர்களோ புலம்பெயர் அமைப்புக்களோ இதுவரை அவர்களுக்கு முழுமையான வாழ்வாதார உதவிகளை வழங்கவில்லை. இந்நிலையில், முன்னாள் போராளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குதல் மற்றும் புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகள் கைதுசெய்யப்படக்கூடாதென்றும் அவர்களுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும் நாட்டில் தமிழ் மக்கள் கௌரவமாக வாழ்வதற்கான சுதந்திரத்தை உறுதிப்படுத்தவேண்டும் என்ற கோரிக்கைகளை ஜனாதிபதியிடம் முன்வைத்துள்ளோம்.

அவற்றை நிறைவேற்றி தருவதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எமக்கு உறுதியளித்துள்ளார். இதனடிப்படையிலேயே புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கட்சி இம்முறை ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிக்க முடிவுசெய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மக்களுக்கு

# 13 ஆவதை தருவாரா? மாட்டாரா? இல்லை தேர்தல் வெற்றுவேட்டா?

## சஜித் பதிலளிக்க வேண்டும் என்கிறார் அநுர



13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்துவது அல்லது 13 பிளஸ் வழங்குவதெனக் கூறுவது தெற்கிலிருந்து வரும் ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் கால வெற்றுக் காசோலைகளென தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திசாநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் கடந்த 05 ஆம் திகதி நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க,

தமிழ் மக்களிடம் 13 ஆவது திருத்தத்தை வைத்து வர்த்தகம் செய்வதற்கு நான் வரவில்லை.

அதனைச் செய்யும் நோக்கமும் எனக்கில்லை.

தென்னிலங்கை அரசியல்வாதிகள் ஒவ்வொரு ஜனாதிபதி தேர்தலிலும் தமிழ் மக்களுக்கு 13 ஆவதை காண்பித்து வாக்குகளை பெறும் முயற்சிகள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

நான் தமிழ் மக்களிடம் 13 ஆவதை தருகிறேன் என கூறமாட்டேன். ஒட்டுமொத்த இலங்கை மக்கள் விரும்பும் மாற்றத்தை உருவாக்குவதோடு புதிய அரசியலமைப்பை ஏற்படுத்துவேன். நாட்டில் நீண்ட காலமாக புரையோடியுள்ள இலஞ்சம், ஊழல் வாதிகளை அப்புறப்படுத்தி புதிய இலங்கையை உருவாக்குவதே எனது இலக்கு. அதற்காகவே மக்கள் எங்களோடு அணி திரண்டுள்ளனர்.

நாட்டு மக்கள் எம்முடன் திரண்டுள்ளதனால் சுமந்திரன், சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கி தமிழ் மக்களின் எதிர்பார்ப்பை சீரழிக்க முயற்சிக்கின்றார்.

சஜித் பிரேமதாச 13 ஆவதை தரப் போகிறாரா? அல்லது 13 பிளஸ் தரப் போகிறாரா? என்பது தொடர்பாக தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு உண்மையை வெளிப்படுத்த வேண்டும் என அநுரகுமார திஸாநாயக்க மேலும் தெரிவித்தார்.

13 ஆவதை அமுல்படுத்த இணக்கம்

# சஜித்துடன் கூட்டணி அமைத்துள்ள ஹக்கீம், ரிஷாத் பதிலளிக்க வேண்டும்



அரசியலமைப்பிலுள்ள 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதாக சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளதுள்ளதாக சிறிதரனின் கேள்விக்கு மனோ கணேசன் பதிலளித்துள்ளார். சஜித்துடன் கூட்டணி அமைத்துள்ள ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீனும் இதற்கான தெளிவான பதிலை முஸ்லிம் சமூகத்துக்கு வழங்க வேண்டுமென உலமா கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கருத்து தெரிவித்துள்ள ஸ்ரீலங்கா உலமா கட்சித் தலைவர் முபாறக் அப்துல் மஜீத் முப்தி,

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவது என்பது வடக்கு, கிழக்கு முஸ்லிம்களை மட்டுமல்ல, கொழும்பு முஸ்லிம்களையும் பேரினவாதங்களுக்கு அடிமையாக்கும் செயலாகும்.

இதன்படி, காணி மற்றும் பொலிஸ் அதிகாரம் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டால் 1987 முதல் 1990 வரை முஸ்லிம்கள் கொல்லப்பட்ட வரலாறே மீண்டும் வரும்.

காணி அதிகாரம் மாகாண சபைக்கு இல்லாத இன்றைய சூழலிலும் கிழக்கு மாகாண முஸ்லிம்களின் பல காணிகள் அரச அதிகாரிகளினால் பறிக்கப்பட்டு வருகின்றன.

புலிகள் காலத்தில் கைப்பற்றப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் காணிகள் இன்று வரை மீள கையளிக்கப்படவில்லை. அதேபோன்று கிழக்கு மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் வழங்கப்பட்டால் முஸ்லிம்களே பாதிக்கப்படுவர்.

இதை நாம் கற்பனையாக கூறவில்லை. இவ்வாறு 1989 இல் கிழக்கு மாகாண சபைக்கு பொலிஸார் தமிழ் தேசிய இராணுவம் என்ற பெயரில் உருவாக்கப்பட்டபோது, காரைதீவு சந்தியில் வைத்து சக தமிழ் தேசிய இராணுவத்தால், கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்ட பொலிஸாரில் தமிழ் பொலிஸாரை பிரித்து விட்டு 40 முஸ்லிம் பொலிஸாரை சுட்டுக்கொன்றது நினைவில்லையா? இதன்போது, உயிர் தப்பிய ஒரேயொரு பொலிஸ் உத்தியோகத்தர் இப்போது சாய்ந்தமருது பொலிஸில் கடமையாற்றுகிறார்.

ஆகவே, 13ஐ முழுமையாக அமுல்படுத்துவதாக தமிழ் கூட்டமைப்பிடம் சஜித் பிரேமதாச வாக்குறுதியளித்துள்ளதாக மனோ கணேசன் சொல்வது உண்மையா? இது தொடர்பான தெளிவை ஹக்கீமும் ரிஷாத்தும் கூற வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# 50 கிலோ யூரியா உர மூடையை 4,000 ரூபாவுக்கு வழங்க ஏற்பாடு

பெரும்போகத்தில் விவசாயிகளுக்கு 50 கிலோ யூரியா உர மூடையை 4,000 ரூபாவுக்கு வழங்க அரசாங்கம் ஏற்பாடு செய்துள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

2022ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் 42,000 ரூபாவாக இருந்த யூரியா உர மூடையின் விலை இவ்வாண்டு சிறுபோக ஆரம்பத்தில் 8,000 ரூபாவாகக் குறைக்க முடிந்ததாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

விவசாயிகளுக்கு வழங்கப்படும் விசேட சலுகை மற்றும் நிவாரணமாக உர மூடையை 4,000 ரூபாவுக்கு வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் இதன்மூலம் நெற் செய்கையாளருக்கு அதிகபட்ச விலையையும் நுகர்வோருக்கு அரிசிக்கு நியாயமான விலையையும் வழங்க முடியுமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு பெரும்போகம் வரையில் உரங்களை கொள்வனவு செய்வதற்காக 55,000 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகையை அரசாங்கம் விவசாயிகளின் கணக்கில் வரவு வைத்துள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

2024 பெரும்போகத்திலும் 2025 பெரும்போகத்திலும் 55,000 மெற்றிக் தொன் Bundi அல்லது MOP உரம் என அழைக்கப்படும் (Muriate of Potash) உரத்தை பெற்றுக்கொள்ள உலக உணவு திட்டத்துடன் அரசாங்கம் உடன்பாடு செய்து ஒவ்வொரு நெற்பயிர்க்கும் தேவையான அளவு MOP உரத்தை இலவசமாக வழங்குவதாகவும் அமைச்சர் மேலும் கூறினார்.

2024 ஜனவரி முதல் 08 மாதங்களில்

# சுங்கத்துறை வருமானம் 1,000 பில்லியன் ரூபா

## சுங்கத்திணைக்களம் வரலாற்றுப் பதிவு

எந்தவொரு தரப்புக்கும் அடிபணியாமல் சுயாதீனமாக செயற்பட இலங்கை சுங்க திணைக்களத்தின் கட்டுப்பாட்டு அதிகார சபைக்கும் அதன் அதிகாரிகளுக்கும் சந்தர்ப்பம் வழங்கியதன் மூலம் வரலாற்றில் முதற் தடவையாக இவ்வருடத்தின் 08 மாதங்களில் சுங்க திணைக்களம் ஒரு இலட்சம் கோடி ரூபாவை (1,000 பில்லியன்) வருமானமாக ஈட்ட முடிந்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் நாயகம் சரத் நோனிஸ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்காக சர்வதேச நாணய நிதியம் 1,534 பில்லியன் ரூபாவை வருமான இலக்காக நிர்ணயித்துள்ளது. ஆனால், 2024 ஆம் ஆண்டின் 08 மாத நிறைவில் 1,000 பில்லியன் வருமான இலக்கை எட்டியிருப்பதால், வருடத்துக்காக நிர்ணயிக்கப்பட்ட இலக்கை அடுத்த 04 மாதங்களில் எட்ட முடியுமென சரத் நோனிஸ் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரலாற்றில் இதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டு அதிக வருமானம் கிடைத்ததாகவும், அந்த வருடத்தின் மொத்த சுங்க வருமானம் 975 பில்லியன் ரூபாய் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். இதுவரையில் மொத்த சுங்க வருமானத்தில் 25 சதவீதம் முதல் 30 சதவீதம் வாகன இறக்குமதியில் பதிவு செய்யப்படுமெனவும், இந்த இரண்டு வருடங்களிலும் வாகனங்கள் இறக்குமதி மட்டுப்படுத்தப்பட்டதால் அந்த எண்ணிக்கை 06 சதவீதத்துக்கும் குறைவாக இருப்பதாகவும் சரத் நோனிஸ் மேலும் தெரிவித்தார். நிதி அமைச்சரென்ற வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இராஜாங்க அமைச்சர்களான ரஞ்சித் சியம்பலாபிட்டிய, செஹான் சேமசிங்க ஆகியோரின் தலைமைத்துவமும், சுதந்திரமாக செயலாற்ற கிடைத்தமையுமே இந்த இலக்கை அடைய முடிந்துள்ளதாக சுங்கப் பணிப்பாளர் தெரிவித்தார்.

கடந்த இரண்டு ஆண்டுகளில், சுங்கத் திணைக்களத்தில் பல சாதகமான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. மேலும், அனைத்து அதிகாரிகளுக்கும் புதிய முறைகள் மற்றும் தொழில்நுட்ப செயற்பாடுகள் மூலம் அவர்களின் செயற்பாட்டை எளிதாக்க முடிந்ததென்றும் அவர் தெரிவித்தார்.

# புத்தளம், சேரக்குளி காட்டுப்பகுதியில் 35,470 போதை மாத்திரைகள் மீட்பு

புத்தளம், சேரக்குளிய கடற்கரைப் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போது, காட்டுப்பகுதில் மறைத்து வைக்க ப்பட்டிருந்த நிலையில், 35,470 Pregabalin வலி நிவாரண மாத்தி ரைகள் போதை மாத்திரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

வடமேற்கு கடற்படை கட்டளைக்குச் சொந்தமான கடற்படை கப்பல் தம்பபன்னி, வடமத்திய கடற்படை கட்டளைக்குச் சொந்தமான கஜபா என்ற இலங்கை கடற்படை கப்பலுடன் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின்போது, புத்தளம், சேரக்குளிய கடற்கரை பகுதியின் காட்டுப்பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் 02 சிறிய ரக கொள்கலன்களில் பொதி செய்யப்பட்டநிலையில் 35, 470 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட போதைப்பொருட்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையினரின் பாதுகாப்பில் வைக்கப் பட்டுள்ளன.

இந்த நடவடிக்கையின் இவ்வாண்டு(2024) இதுவரை மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளினூடாக 136,798 சட்டவிரோத போதை மாத்திரைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இவை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐக்கிய மக்கள் கூட்டணியின்...

எதிர்காலத்தில் பெருந்தோட்ட மக்கள் சேவைகள் முன்னெடுக்கப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியாவிலிருந்து...

முட்டை இறக்குமதிக்கான விண்ணப்பங்கள், கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதாரத் துறையின் ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

மேலும், இறக்குமதி செய்யப்படும் முட்டையொன்றை 40 ரூபாவுக்கு வழங்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## விவசாயக் கடன்கள்...

மற்றும் விவசாய சங்கங்களுக்கு செலுத்த வேண்டியுள்ளது. விவசாய சங்கங்கள் மற்றும் விவசாயிகளின் கோரிக்கைகளை ஏற்று, விவசாயிகளுக்கு நிதி நிவாரணம் மற்றும் ஆதரவை வழங்கும் நோக்கில் இந்த விவசாய கடன்களை தள்ளுபடிசெய்ய அரசு முடிவு செய்துள்ளது. நியாயமான காரணமின்றி இரசாயன உர இறக்குமதியை நிறுத்தும் தீர்மானத்தினால் விவசாயிகளுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு ஓரளவு நியாயம் காண்பதையும் அரசாங்கம் நோக்காகக் கொண்டுள்ளது.




# ஜனநாயக பாரம்பரியம் சீர்குலைக்கப்படலாகாது!

சமூக ஊடகங்களில் பதிவு செய்வோர் பொருட்படுத்துவதில்லை. சமூக ஊடகங்களில் கணக்கு வைத்துள்ள பயனாளர்கள் ஒவ்வொருவரும் தங்களை ஒரு ஊடகவியலாளராகக் கருதியவாறே கண்டபடியாக கருத்துகளைப் பதிவேற்றம் செய்கின்றனர்.

சமூக ஊடகங்களாக இருக்கட்டும், இல்லையேல் இலத்திரனியல், அச்சு ஊடகங்களாக இருக்கட்டும்... குறைந்தபட்சமேனும் ஊடக நெறிமுறைகளைப் பின்பற்றியவாறே செயற்படுவது அவசியம். குறித்த தரப்பினருக்கு வசைபாடும் விதத்திலும், அத்தரப்பினருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்திலும் எந்தவொரு ஊடகமும் செயற்படுவது முறையல்ல.

தேர்தல் தொடர்பாக சமூக ஊடகங்களில் வெளிவந்து கொண்டிருக்கின்ற தகவல்களில் ஐந்து சதவீதமும் உண்மை கிடையாது. கற்பனைகளையே அவர்கள் பதிவேற்றம் செய்கின்றனர். குறித்த தரப்பொன்றை இலக்கு வைத்து, அத்தரப்பினருக்கு பாதிப்பை ஏற்படுத்தும் விதத்தில் தகவல்கள் பதிவேற்றப்படுகின்றன.

சமூக ஊடகங்களைக் கட்டுப்படுத்துவது சிரமமானதென்றாலும் கூட, ஊடக ஒழுக்கவிழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டிய தார்மிகப் பொறுப்பு தங்களுக்கு உள்ளதை ஊடகங்கள் மறந்து விடலாகாது. கருத்துக் கணிப்பு என்பதன் பேரில் தவறான கணிப்புகளை மக்களுக்குத் தெரியப்படுவத்துவது, ஒருதரப்பினருக்கு பிரசாரம் வழங்குதல், எதிர்த்தரப்பினருக்கு வசைபாடுதல் போன்ற காரியங்களில் தேசிய ஊடகங்கள் சில ஈடுபட்டு வருவதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கது.

உலகில் சிறப்பான ஜனநாயகப் பாரம்பரியங்களைக் கடைப்பிடிக்கின்ற நாடென்ற பெருமை இலங்கைக்கு உள்ளது. எனவே ஜனநாயகப் பாரம்பரியத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் விதத்தில் சமூக ஊடகங்கள் நடந்து கொள்வது தவறாகும்.

## வடக்கு தமிழ் மக்களிடம்...

திசாநாயக்க வடக்கு தமிழ் மக்களிடம் மன்னிப்புக்கோர வேண்டுமென்றும் ஜனாதிபதி ரணில் தெரிவித்தார்.

அதேபோன்று சிங்கள மக்களின் பெயரை உபயோகித்து அவர்களை அவமானத்துக்குள்ளாக்கியமைக்காகவும் தெற்கு சிங்கள மக்களிடமும் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் மக்கள் மத்தியில் உரையாற்றியுள்ள அனுரகுமார திசாநாயக்க, தெற்கு மக்கள் தமக்கே வாக்களிப்பதாகவும் தமிழ் மக்கள் அச்சமிமின்றி தமக்கே வாக்களிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டுள்ளதுடன் அவ்வாறில்லாவிட்டால் வடக்கு தமிழ் மக்கள் தெற்கு மக்களுக்கு எதிரானவர்களாவீர்களென்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் தமக்கு வாக்களிக்காவிட்டால் என்ன நடக்கும் என்பதை தெரிவித்து, வடக்கு தமிழ் மக்களை அவர் அச்சுறுத்தும் தொணியில் பேசியுள்ளார். அவ்வாறு தமிழ் மக்களை அவர் எவ்வாறு அச்சுறுத்த முடியும்? என கேள்வி எழுப்பிய ஜனாதிபதி, தமிழ் மக்களை அவர் அச்சுறுத்துவதை தாம் முற்றாக நிராகரிப்பதாகவும் தெரிவித்தார்.

அனுரகுமார திசாநாயக்க ஒருபோதும் வெற்றி பெறப் போவதில்லை. ஆனால் தமிழ், சிங்கள மக்களை அச்சுறுத்தி கருத்துக்களை வெளிப்படுத்தி வருகின்றார். யாழ்.மக்களை தெற்கு மக்களுக்கு எதிரானவர்களாக காண்பித்து வருகிறார். அவரால் மீண்டும் எவ்வாறு யாழ்ப்பாணத்துக்கு வர முடியும் என்றும் ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

எதிர்வரும் ஜனாதிபதித தேர்தலில் நான் வெற்றி பெறுவேன். எனது வெற்றியின் பங்குதாரர்களாக வடக்கு மக்கள் மாற வேண்டும். வடக்கு, கிழக்கு மக்களின் பல்வேறு பிரச்சினைகளுக்கும் தீர்வு கண்டு அபிவிருத்தியை முன்னெடுக்க என்னிடம் மட்டுமே திட்டங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

'இயலும் ஸ்ரீலங்கா' ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் மாபெரும் மக்கள் பேரணிக் கூட்டம் நேற்று யாழ். நல்லூர் சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரனின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த மாபெரும் மக்கள் பேரணியின் பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

## பகிரங்க விவாதத்துக்கு...

அனுப்புமாறும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அதன்படி, திங்கட்கிழமைகளில் இரவு ரூபவாஹினியில் ஔபரப்பாகும் 'கரட்டகர' என்ற தொலைக்காட்சி விவாத நிகழ்ச்சி அல்லது வியாழக்கிழமைகளில் சுயாதீன தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகும் 'துலாவ' என்ற விவாத நிகழ்ச்சிக்கு வருமாறும் அமைச்சர் பந்துல குணவர்தன அழைப்புவிடுத்துள்ளார்.

## புதிய முக மூடிகளுடன்...

புத்தளத்தில் நடைபெற்ற ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் கூட்டத்தில் உரையாற்றும்போதே முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார்.

## முஸ்லிம்கள் ஒரு போதும்...

தெரிவித்தார். மஞ்சந்தொடுவாய் அல்அக்ஷா கடற்றொழிலாளர் சங்கத்தினரால் ஏற்பாடு செய்யப்பட்ட கலந்துரையாடலிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் ரீ.எல். பஷீர் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில், கடந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் கொரோனா ஆட்கொல்லி வைரஸ் தொற்றுக் காலத்திலும் தற்போதைய சூழ்நிலையிலும் தாம் எதிர்கொண்ட பொருளாதாரக் கஷ்டங்களை கடற்றொழிலாளர்கள் ஆளுநரிடம் சுட்டிக்காட்டினர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஆளுநர் நஸீர் அஹமட், இனவாதமற்ற ஒரு தலைவரால்தான் இந்த நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப முடியும். இந்த நாட்டை முழுமையாகச் சீரழித்ததே இனவாதம் தான். தற்போது தாம் இனவாதிகளல்ல என்று காட்டிக் கொண்டு முன்வரும் தலைவர்கள் புளியம்பழத்தில் சீனியைப் பூசிக் கொண்டு வருகிறார்கள். இவர்கள் நாட்டுக்கு நல்லது செய்வார்கள் என்று நம்பி மக்கள் ஏமாந்து விடக் கூடாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியின் கீழ் முஸ்லிம்கள் ஒருபோதும் அச்சத்துடன் வாழ்ந்ததில்லை. இனியும் அவரது தலைமையின் கீழான ஆட்சியில் அச்சம் பீதி இனவாதமின்றி வாழலாம். வறிய கடற்றொழிலாளர் சமூகத்துக்கு ஏற்ற தலைவர் ரணில் விக்கிரமசிங்கவே என அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழரசு கட்சி எடுத்த முடிவு...

உறுப்பினர் எம்.ஏ சுமந்திரன் பாராளுமன்றத்தில் மாகாண சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணையை முன்வைத்திருந்தார்.

அது தொடர்பான விவாதங்கள் பாராளுமன்றத்தில் நடைபெற்று வருவதுடன், தமிழ்க் கட்சிகள் ரணில் விக்கிரமசிங்கவை அண்மையில் சந்தித்தபோது இப் பிரேரணையை நிறைவேற்றுவது தொடர்பாக சாதகமான கருத்துக்களை முன்வைத்ததாக அறிகிறேன்.

இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் சுமந்திரனால் கொண்டுவரப்பட்ட மாகாண சபை தொடர்பான தனிநபர் பிரேரணை ஒத்திவைக்கப்பட்டது.

இந்த ஒத்திவைப்பு, சிலவேளை தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப்போவதான அறிவிப்பு வெளியாகியமைக்கான தாக்கத்தை செலுத்தியிருக்கலாம்.

ஏனெனில், தற்போது ஜனாதிபதி தேர்தலுக்கான பிரசாரங்கள் நடைபெற்றுவரும் இச் சந்தர்ப்பத்தில், மாகாண சபை தொடர்பான விவாதம் சிலருக்கு தேவையாக இருக்கலாம். மற்றொரு தரப்பினர் அதை விரும்பாமலும் இருக்கலாம்.

எனினும், தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் கொண்டு வந்த மாகாண சபை தேர்தல் தொடர்பான தனிநபர் பிரேரணை, இறுதியாக நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் எடுத்துக் கொள்ளப்படுகின்றமை தெரிந்தும் அதற்கு முன்னரே சஜித் பிரேமதாசவின் ஆதரவு அறிவிப்பை சுமந்திரன் வெளிப்படுத்திவிட்டார்.

தமிழரசு கட்சி சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவு வழங்கப்போவதாக எடுத்த முடிவு மக்களின் முடிவல்ல, அது கட்சி சார்ந்த முடிவாகும் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவித்தார்.

## சுமந்திரன் சஜித்துக்கு...

(06) யாழ். நகரப் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பிரசார நடவடிக்கையின்போது ஊடங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழரசுக் கட்சியின் சிலர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கப் போகிறார்களென அண்மையில் அறிவிப்பு வெளியானது.

தமிழரசு கட்சியின் முக்கிய நபர்கள் கலந்துகொள்ளாமல் சுமந்திரன் அணி, சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து வெளியான அறிவிப்பு தொடர்பாக தமிழ் மக்கள் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் தமிழ் பொது வேட்பாளருக்கு வாக்களிக்கவே உள்ளனர். சஜித் பிரேமதாசவுக்கு சுமந்திரன் அணி வாக்களிக்குமாறு கூறியதை தமிழரசு கட்சி கூறியதாக எடுத்துவிட முடியாது என, நீதியரசர் சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

## இந்துக்களுக்கு பெருமை...

காலத்தில் இரண்டாவது உலக இந்து மாநாடு, உலகிலுள்ள இந்துக்கள் அனைவரையும் வியக்கவைக்கும் வண்ணம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த மாநாட்டின் போது பண்டாரநாயக்க மண்டபத்தில் தற்போதைய ஜனாதிபதியான அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்கி அங்குரார்பண நிகழ்வை ஆரம்பித்து வைத்திருந்தார்.

இதன்போது, அந்தண பெருமக்கள் புடைசூழ வேத மந்திரம் முழங்க, மங்கள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டு அந்த நிகழ்வில் கலந்துகொண்டு இந்து மாநாட்டை சிறப்பித்து இருந்ததை ஒருபோதும் இந்து மக்கள் மறக்கமாட்டார்கள்.

நாடு பொருளாதார ரீதியில் முடங்கியிருந்தவேளை எரிபொருளுக்கும் எரிவாயுவுக்கும் மக்கள் நீண்ட வரிசைகளில் நின்றபோது, நாடு ஜனநாயகத்தை இழந்து கொண்டிருந்த இக்கட்டான சூழ்நிலையில், துணிந்து பிரதமராக பதவியேற்று மக்கள் பாராளுமன்றத்தின் மூலம் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு தனது துணிச்சலான நடவடிக்கைகளின் மூலமும் தீர்க்கதரிசனமான சிந்தனைகளின் மூலமும் பொருளாதாரப் பிரச்சினைக்கு ஓரளவு சுமூகமான தீர்வை கண்டு, இன்று வரிசையை இல்லாமல்செய்து, மக்களின் பட்டினியை போக்குவதற்கு அசுவெசும திட்டத்தை கொண்டுவந்து, மக்களுக்கு உரிய கொடுப்பனவை மானிய முறையில் வழங்கி உதவி செய்திருந்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

இன்று நாடு முழுவதும் பசி பட்டினியின்றி ஓரளவுக்கு பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்கு வழியை திறந்து விட்ட பெருந் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அவருக்கு இந்துக்களாகிய நாங்கள் முழு மனதுடன் ஆதரவு வழங்க வேண்டும் என்பதுடன் வட, கிழக்கிற்கும் நிச்சயம் நல்லதொரு தீர்வையும் தருவார் என்ற நம்பிக்கையோடு வாக்களிக்க வேண்டும் என்றார்.

தியானம்;

# அகத் தூய்மைக்கான அற்புதமான பயிற்சி



அகத்தை தூய்மையாக வைத்துக்கொள்வதற்கான அற்புதமான பயிற்சி தியானம். இதை முறைப்படி செய்வதன் மூலம் தனக்குள்ளிருக்கும் ஆன்மாவை அறியமுடிவதுடன் தனக்குத்தானே வழிகாட்டியாகவும் இருக்கமுடியுமென ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி தெரிவித்தார்.

அண்மையில் இலங்கை வந்த இந்தியாவைச் சேர்ந்த ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி ஒருமித்த உலகின் அமைதி எனும் தொனிப்பொருளில் கொழும்பு, குருநாகல் மற்றும் காலி ஆகிய பகுதிகளில் தியானம் மற்றும் அதன் மகத்துவம் பற்றி தெளிவுபடுத்தியதோடு செயன்முறையிலான பயிற்சியினையும் வழங்கியிருந்தார்.

அது தொடர்பில் தெளிவுபடுத்திய ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி,

பொதுவாக, யோகாசனம் என்பது இன்று பல நாடுகளிலும் பின்பற்றப்படுகின்ற ஒன்றாக உள்ளது.

இது ஒரு உடற்பயிற்சியாகும். அதாவது உடலை அழகாக கட்டமைப்புடன் வைத்துக்கொள்ள இது உதவுகிறது. ஆனால் தியானத்தின் ஊடாக உள்ளத்தை அதாவது அகத்தை தூய்மையாக வைத்துக் கொள்ள முடியும்.

இவ்வாறு அகத்தினை தூய்மையாக வைத்துக்கொள்ளும்போது வாழ்க்கையில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் ஏற்படுகிறது. அதனூடாக அமைதியான உலகை உருவாக்கலாம்.

இன்றைய பரபரப்பான வாழ்க்கை முறையில், அனேகமானோர் மன அழுத்தத்துக்கு உள்ளாகின்றனர். வாழ்க்கையில் பல வெற்றிகளை அடைகின்ற போதும் திருப்தியற்ற மனநிலையில் இருக்கின்றார்கள். தியானத்தின் ஊடாக திருப்தியற்ற மனநிலையில் மாற்றத்தை ஏற்படுத்தி அமைதியான மனநிறைவுடன் கூடிய வாழ்க்கையை பெற்றிடலாம். தியானத்தில் ஒரு எளிதான யுக்தி சமர்ப்பணத் தியானமாகும். யோக நிலைகள், மூச்சுப் பயிற்சிகள் போன்றவை இதில் இல்லை. எனவே யார் வேண்டுமானாலும் இதை மிகவும் எளிதாக செய்ய முடியும்.

வயது வித்தியாசமோ, அல்லது தனிப்பட்ட வாழ்க்கை முறையோ அல்லது அவர் எவ்வாறான பழக்கவழக்கங்ளை கொண்டவராக இருந்தாலும் அவர் அந்த தியான முறையை பின்பற்றலாம். அதற்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை.

இந்த பிரஞ்ச சக்தியோடு அவரவருக்கான அனுபவத்தை பெறுவதற்கு இது ஒரு சிறந்த வழியாகும். மனதைத் தெளிவுபடுத்தி ஒருவருடைய ஆன்மாவோடு இணைப்பதற்கான ஒரு யுக்தியே தியானமாகும்.

ஒருவருடைய வாழ்க்கையில் மகிழ்ச்சியையும் நல்ல இணக்கத்தையும் தியானத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளலாம். தியானத்தின் ஊடாக இறந்தகால சம்பவங்கள் பற்றிய அச்சநிலைகளையும் வருங்காலம் பற்றிய கவலைகளையும் துறக்க முடிவதுடன், தியானம் செய்பவர் பிரபஞ்ச சக்தியோடு தன்னை இணைத்துக்கொள்கிறார்.

இந்த சக்தியானது அவருடைய உடல், மனம் மற்றும் ஆன்மாவைத் தூய்மையாக்குகிறது.

ஆகையால் சலனமற்றதொரு நிலையை அடைந்து அவரால் ஆழ் தியான நிலையை அடைய முடிகிறது. சமர்ப்பணத் தியானம் முழுமையானதொரு தியான வழிமுறையாகும். உடலிலுள்ள மூன்று நாடிகளையும் ஏழு சக்தி மையங்களையும் ஈடுபடச்செய்கிறது. இவ்வாறு முறையாக தியானம் செய்வதன் ஊடாக தனக்குள்ளிருக்கும் ஆன்மாவை அறியமுடிவதுடன் தனக்குத்தானே வழிகாட்டியாக மாறமுடிகிறது எனவும் ஸ்ரீ சிவகிருபானந்த சுவாமி தெரிவித்தார்.

கோவிலூர் செல்வராஜனின் "நல்லது நடக்கட்டும்"'

# "கொரோனா" கால வாழ்வியலை பதிவுசெய்யும் இலக்கிய ஆவணம்

ஈழத்துத் தமிழ் இலக்கியப் பரப்பில் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த திருக்கோவில் பிரதேசத்திற்கு முக்கிய இடமுண்டு. மட்டக்களப்பு மாவட்டத்தின் (1960க்கு முன்னர் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு ளேயே அம்பாறை மாவட்டமும் இருந்தது ) முதலாவது நாவலாசிரியர் என்று பண்டிதர் வீ.சி. கந்தையாவால் அடையாளப்படுத்தப்பட்ட 1958, 1959 களிலேயே இந்திராபுரி இரகசியம், மஞ்சட் பூதம் அல்லது இழந்த செல்வம் ஆகிய நாவல்களைத் தந்த முன்னோடி எழுத்தாளர் உவில்லியம் பிள்ளை பிறந்த பிரதேசம் அது.

அப் பிரதேசத்தில் இருந்து, ஈழத்துப் புனைகதைத் துறைக்கு ஒரு புதிய வரவாக மலர்ந்திருக்கிறது 'நல்லது நடக்கட்டும்' என்ற சிறுகதைத் தொகுதி.

மட்டக்களப்பு மகுடம் பதிப்பக வெளியீடாக 90 பக்கங்களில் (பதிப்புரை, என்னுரை, முன்னுரை, அணிந்துரை என்பவை தவிர்த்து) வெளிவந்துள்ள நூலின் ஆசிரியர் ஈழத்து இலக்கியப் பரப்பிலும் புலம்பெயர் நாடுகளிலும் நன்கு அறியப்பட்டிருக்கும் பொன்விழாக் கண்ட படைப்பாளி கோவிலூர் செல்வராஜன்.

நாவல், சிறுவர் தொடர்கதை, மெல்லிசைப் பாடல், கவிதை, கட்டுரைகள் வரிசையில் பத்து நூல்களையும் 'விடியாத இரவுகள்', 'ஊருக்குத் திரும்பணும்','கொத்து ரொட்டி'என்ற பெயர்களில் மூன்று சிறுகதை நூல்களையும் ஏற்கனவே இலக்கிய உலகுக்கு வழங்கியிருக்கின்ற அவரின் 14ஆவது நூல் இது. சிறுகதைத் தொகுதி வரிசையில் இது அவரின் 4ஆவது நூல்.

உலகத்தையே ஒரு குலுக்குக் குலுக்கிய 'கொறொனா' வால் ஏற்பட்ட மனரீதியிலான தாக்கம், சமூக, பொருளாரதர ரீதியிலான பாதிப்பு என்பவற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்ற15 சிறுகதைகள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன. கொரோனா கால மக்கள் வாழ்வைப் பிரதிபலிக்கின்ற ஒரு முழுமையான இலக்கியப் பதிவாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

ஆழிப்பேரலை அனர்த்தத்தோடு குடிபெயர்ந்து வாழும் திருக்கோவில் பிரதேசத்தின் மண்டானைக் கிராமத்து மக்களின் வாழ்க்கை பற்றிக் கூறுகிறது 'நீங்க நல்லா இருக்கணும்' என்ற முதற்கதை. கணவனை, தாய், தந்தையரை இழந்து, விதவைகளாகவும் ஆதரவற்றவர்களாகவும் நாட்கூலிகளாக வாழும் அக்கிராம மக்களை கொரோனாவும் அதனால் ஏற்பட்ட ஊரடங்கும் எப்படித் தூக்கிப்போட்டு வதைத்தது என்பதைக் கூறுகின்ற கதை அது.

'என்ன பாக்கியம் படுத்து தூங்கிறாயா?' கேட்டாள் பார்வதி.

'இல்லை அக்கா பிள்ளைகள் இரண்டும் பசி, பசி என்று அனுங்குதுகள். அதுதான் என்ன செய்யலாம் என்று யோசிச்சுக்கிட்டு இருந்தன். மரவள்ளி மரம் ஒன்றை புடுங்கி கிழங்காவது அவிச்சுக் கொடுப்போமாஎன்றுஇருந்தன்சம்பல்போட தேங்காயும் இல்லை'.

' பாக்கியம் கவலைப்படாத இன்று மண்டானை பள்ளிக்கூடத்துக்குள்ள திருக்கோவிலில் இருந்து பெடியன்மார் மூன்று ஆட்டோவில் சாமான்கள் கொண்டு வந்து இறக்கி இருக்காங்க. இங்கே கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு கொடுக்கப் போறாங்களாம்'

பார்வதியும் பாக்கியமும் பள்ளிக் கூடத்துக்குப் போகிறார்கள்.

"கொரோனா வைரஸின் தொற்றைத் தடுக்க அரசாங்கம் மக்களை வீட்டில் இருக்கச் சொல்லி ஊரடங்கு சட்டம் போட்டதால உணவு கிடைப்பது கஷ்டம் ஆகிவிட்டது. இதை அறிந்து வெளிநாட்டில் உள்ள எம்மவரிடம் உதவி கோரியிருந்தோம். அவர்கள் கஷ்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு உலர் உணவுகளை கொடுக்கச் சொல்லி, பண உதவி செய்துள்ளார்கள். அதன்படி இங்குள்ளவர்களில் தினக்கூலி, மீன்பிடி தொழிலாளர்கள் மற்றும் விதவை தாய்மார்கள், என்று நாங்கள் தெரிவு செய்த 100 குடும்பங்களுக்கு முதற்கட்டமாக இன்று உணவு பொதிகளை வழங்குகிறோம். வரிசையில் அமைதியாக வந்து பெற்றுச் செல்லவும்" என்று விதானையார் கூறி முடிக்கிறார்.

அந்த உணவுப்பொதிகளைப் பெற்றுக் கொண்டு அவர்களை 'நல்லா இருக்கணும்' என்று அந்தக் கிராமத்து மக்கள் மனதார வாழ்த்திக் கொண்டு சென்றதாக முதற்கதையில் சொல்கிறார் கதைஞர்.




முதலாவது கதை பிறந்த மண்ணின் கொரோனா கதை. இரண்டாவது கதை புலம்பெயர்ந்த இலண்டன் மாநகரின் கொரோனா கதை.

"இலண்டன் மாநகரில் கொரோனா வைரஸின் தொற்று தீவிரமடைந்ததால் இறந்தவர்கள் தொகை இருபதாயிரத்தைக் கடந்து சென்றது. அத்தியாவசிய தேவைக்காக மட்டும் வழியில் அனுமதி உண்டு. மற்றப்படி வீட்டில் இருக்க சொல்வதால் சுந்தரேசன் வீட்டிலேயே முடக்கப்பட்டு இருந்தார். இது அவருக்கு மிக கஷ்டமாக இருந்தது. பெற்ற மகள் 4 கிலோ மீட்டர் தூரத்தில் தான் இருக்கிறார். அவளைக் கூட கண்டு பார்க்க முடியாத அவலத்தை கொரோனா அவருக்கு கொடுத்திருக்கிறது. இதைவிட, இன்னும் கொடுமை பேரப்பிள்ளைகளை பார்க்க முடியாமல் போனது. சாதாரணமாக மனைவியை அழைத்துக் கொண்டு ஒவ்வொரு நாளும் பேரப்பிள்ளைகள் இருவரையும் பார்க்க அவர் செல்வது வழக்கம். மகள் சொல்லிப் போட்டாள், நீங்கள் வீட்டை விட்டு வெளியே செல்ல வேண்டாம். 70 வயதுக்கு மேற்பட்டவர்கள் ஏற்கனவே சத்திரசிகிச்சை செய்தவர்கள் மற்றும் பலவீனமானவர்கள் வெளியில் வராமல், வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்க வேண்டும் என்று தேசிய சுகாதார சேவையினர் சொல்லியுள்ளார்கள். அதனால் நீங்கள் வரவேண்டாம் என்று கண்டிப்பாக சொல்லிவிட்டாள்." கதாசிரியரின் சொந்த வாழ்க்கை அனுபவமாக அமைந்துள்ள அக்கதையில்,

இலண்டனில் புலம்பெயர்ந்து வாழ்ந்த தவமணி கொரோனா காலத்தில் (கொரோனா நோயால் அல்ல) இறந்து போவதையும் சுவிஸில் வாழும், அம்மா, அக்காவோ, இலங்கையில் இருந்து உறவுகளோ, இலண்டனில் வாழும் நண்பர்களோ அங்குசென்று பார்க்க முடியாமலிருப்பதையும் எடுத்துச் சொல்லிக் கலங்குவார்.

"ஓம் நீர் சொல்வது சரிதான். இறுதிக்கிரியை வேலை செய்ய இரண்டு மணி நேரம் கொடுத்திருக்கிறார்கள். ஒரே நேரத்தில் ஐந்து பேர் மட்டும் இரண்டு மீற்றர் இடைவெளியில் சென்று அப்படியே வெளிவர வேண்டுமாம்.

முகக் கவசம், கையுறை கண்டிப்பாக அணிந்திருக்க வேண்டுமாம் என்று தவத்தின் மகன் சொன்னார்"

என்று வரும் உரையாடல்களின் மூலம் கொரோனா கால இலண்டன் நகர வாழ்க்கையைப் பதிவு செய்வார் கோவிலூர் செல்வராஜன் .

இவ்வாறு முழுமையான கொரோனாகால வாழ்வியலை வித்தியாசமான நிகழ்வுகளினூடாக ஒவ்வொரு கதையிலும் கோவிலூர் செல்வராஜன் எடுத்துக் காட்டுவதை, சிறுகதைகளை வாசிப்போர் உணர்ந்து கொள்வர். நூலுக்கு முன்னுரை, அணிந்துரை, பதிப்புரை என்பவற்றை முறையே பேராசிரியர் சி.மௌனகுரு, எழுத்தாளர் எஸ். தில்லை நடராசா, மகுடம் ஆசிரியர் வி.மைக்கல் கொலின் ஆகியோர் வழங்கியுள்ளனர்.

"கோவிலூர் செல்வராஜன் இலங்கையில் பரவலாக அறியப்பட்ட ஒருவர். இன்று லண்டனில் வதியும் அவர் உலக நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அறிமுகமானவர்.

இசை அவரது ஒரு முகமானால் அவரது இன்னொரு முகம் எழுத்து ஆகும். இன்று அவர் தனது சிறுகதைகளோடு நம் முன் நிற்கிறார். நெருக்கடி காலத்தின் மனித உணர்வுகளை இக்கதைகள் பேசுகின்றன.

(18 ஆம் பக்கம் பார்க்க)

பாவேந்தல் பாலமுனை பாறூக்

# ஈழத்தில் காலனியம் முதல் பின்காலனியம் வரை; சாதியமும் இனக்கலவரமும்



## ஜீவாவின் படைப்புலகத்தை முன் வைத்து

ஈழத்து நவீன இலக்கியம் 50களில் தொடக்கம் பெறுகிறது. இதில் இடதுசாரி முற்போக்கு இயக்கத்தின் பங்களிப்பு முக்கியமானது. மெரினா பீச் கதைகள் எழுதப்பட்ட காலத்தில் அதற்கு எதிரான இயக்கமான இடதுசாரி முற்போக்கு இயக்கத்தின் பங்களிப்பானது ஈழத்துத் தமிழ் கலை இலக்கியத்தின் போக்கைத் திசை திருப்பியது. அதன் வெளிப்பாடாகக் காலம் காலமாக வளர்த்தெடுக்கப்பட்ட, பிரித்தாளும் தந்திர உபாயத்திற்குப் பயன்பட்ட சாதியம், அரசியலுக்கும் எதிரான இயக்கமாகவும் தோற்றம் பெற்றது. வர்க்கப் போராட்டம், தேசிய இலக்கியம், பிரதேச இலக்கியம், மண்வாசனை இலக்கியம் எனப் பல போக்கில் எழுதும் பல படைப்பாளிகள் தோற்றம் பெற்றார்கள். அந்த வகையில் இவற்றுக்கு இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் செயற்பாடுகள் பெரும் உந்து சக்தியாக அமைந்தன.

ஈழத்துத் தமிழ்ச் சூழலில் சாதிய கொடுமையும், ஒடுக்கப்பட்டவர்கள் சமூக ரீதியாகப் பல வழிகளில் எதிர் கொண்ட கொடுமைகளையும் அநியாயங்களையும் ஈழத்துத் தமிழ் படைப்பாளிகள் தம் படைப்புகளில் வெளிப்படுத்திய பொழுது, ஈழத்து தமிழ்ச் சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் இலக்கிய இயக்கம் உருவானது. அந்த இயக்கத்தின் ஒருவராக ஜீவா திகழ்ந்தார்.

ஜீவா ஒடுக்கப்பட்ட சமூகத்திலிருந்து வந்தவர். கடைசி வரை இடதுசாரி சிந்தனையில் இயங்கியவர். சாதிய அரசியால் மிகவும் பாதிக்கப்பட்டவர், அவமதிக்கப்பட்டவர். அதை மீறியும் தன்னை தக்க வைத்துக் கொண்டவர். ஈழத்து தமிழ்ச் சூழலில் குறிப்பாக யாழ்ப்பாண சூழலில் சாதிய அரசியல் உச்சநிலை இருந்த காலகட்டத்தில் எழுத வந்தவர்.

ஈழத்து இலக்கியப் பரப்பில் ஒடுக்கப்பட்டவர்களின் இலக்கியப் பிரதிகளைத் தந்த முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். அடுத்தவர் கே.டானியல்.

ஜீவா ஒடுக்கப்பட்ட, சாதியத்திற்கு எதிரான போராட்டத்தில் இயக்க ரீதியாகவும் இலக்கிய ரீதியாகவும் இயங்கியவர்.

ஜீவா படைத்த சிறுகதைகள், மற்றும் அவர் ஆரம்பித்த மல்லிகை இதழ்களில் தந்த அபுனைவு பிரதிகள் வழியாகவும், அவர் எதிர் கொண்ட சாதிய மற்றும் வர்க்கப் போராட்டங்கள் வழியாகவும் தான் பெற்ற அனுபவங்கள் சார்ந்த கருத்துகளை முன் வைத்தார்.

இதற்கு உதாரணமாக ஜீவாவின் பல படைப்புகளை எடுத்துக் காட்டலாம். அவரது இரு கதைப் பிரதிகளை வைத்து மேற்படி தலைப்பில் சில கருத்துகளை முன் வைக்கிறேன்.

அவரது “காலத்தால் சாகாதது “ என்ற கதைப்பிரதியை ஜீவா இப்படி ஆரம்பிப்பார்..

”நூற்றைம்பது ஆண்டுகளாக இலங்கை மக்கள் மீது ஆட்சி செலுத்திய ஆங்கிலேயர், கட்டிக் காத்த ஆட்சி அமைப்பு இயந்திரத்தின் உபயோகமுள்ள இரும்புச் சக்கர அங்கங்கள்தான் விதானைமார்கள். இந்தத் திருக்கூட்டத்தினர், இப்பொழுது பல்லிழந்த பாம்புகளைப் போல தங்கள் அதிகாரங்கள் பலவற்றை இழந்திருப்பினும், இந்த உண்மையை உணராத விதானையார் பரம்பரையில் உதித்த, மமதையுடன் வாழ்பவர்தான் மயில்வாகனம் அவர்கள்”

இவர்களால் ஒதுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பொன்னுத்துரை பொலிஸ் உத்தியோகத்தில் இணைய தேவையான அத்தாட்சிப் பத்திரத்தைப் பெற விதானையாரிடம் வருகிறான், ’இவன் எல்லாம் என்ன பெரிய உத்தியோகத்திற்குப் போறது’ என சாதித் திமிருடன் அவனுக்குச் சாக்கு போக்கு சொல்லி நாளை வா என்று சொல்லி அனுப்பி விடுகிறார், ஒரு நாள் அந்த விதானையாரின் மகள் கிணற்றில் விழுந்து விடுகிறாள். விதானை அத்தாட்சிப் பத்திரதை பெறமுன்னர் வந்த பொன்னுத்துரை, அவ்வழியாக வந்தான். எதைப் பற்றியும் யோசிக்காமல் அந்தக் கிணற்றில் குதித்து விதானையாரின் மகளைக் காப்பாற்றி விடுகிறான்.

பொன்னுத்துரை விதானையாரின் மகளை காப்பாற்றியதற்கு நன்றியாக அவன் கேட்ட அந்த அத்தாட்சிப் பத்திரத்தை விதானையார் கொடுப்பார் என வாசகர்கள் எதிர்ப்பார்கள்.

ஆனால் விதானையார் செய்தது என்ன? தாங்கள் குளிக்கும் கிணற்றில் அவரால் தாழ்த்தப்பட்டவன் என அடையாளப்படுத்தப்பட்ட, ஒருவன் குதித்து, அக்கிணற்றை தீட்டுப்படுத்தி விட்டான் என்ற காரணத்தால் அந்த கிணற்றை இறைக்கச் சொல்லுகிறார். இச்செயல் விதானையாரின் சாதி வெறியையும் திமிரையும் அப்பட்டமாக எடுத்து காட்டியது,

இப்படியாக ஒடுக்கப்பட்டவர்கள் சமூகத்தின் உயர்வான அந்தஸ்தையும் கல்வியில் வளர்ச்சி பெறுவதையும் விரும்பாமை, நன்றி பாராட்ட வேண்டிய இடத்திலும் கூட, சாதி திமிரைக் காட்டியமை போன்ற உயர்குடியினராகக் கருதப்படுவோரின் குணங்களை ஜீவாவின் மேற்படி பிரதி எடுத்துக் காட்டியது.

இவ்வாறான பல விடயங்கள். ஒடுக்கியவர்களின் சாதித் திமிரால் ஜீவாவின் தனிப்பட்ட வாழ்விலும் நடந்திருக்கின்றன என்பதை அவரது சுயசரிதை நூலான ”எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம்” எனும் நூலில் மூலம் அறிந்து கொள்ள கூடிதாக இருந்தது.

சில சம்பவங்கள்

1.பாடசாலையில் ஜீவா ஆரம்பக் கல்வியை கற்று கொண்டிருந்த நேரத்தில் சாதித்திமிர் பிடித்த வாத்தியார் ஜீவாவின் சாதியைச் சொல்லி உங்களுக்கெல்லாம் எதற்கு படிப்பு? என்று சொல்லி அவமானப்படுத்தியிருப்பார். அந்த கோபத்தால் ஜீவா பாடசாலை கல்வியை கை விடுகிறார்.

2. ஜீவா அவரது சிறுகதைத் தொகுப்பான தண்ணீரும் கண்ணீரும் தொகுப்புக்கு சாகித்திய விருது பெற்றதை முன்னிட்டு யாழ்ப்பாணத்தில் வழங்கப்பட்ட வரவேற்பைக் கேள்விப்பட்ட ஆசிரியர் ஒருவர் அவரது சாதியைச் சொல்லி அவ்வாறானவர்களுக்கெல்லாம் சாகித்திய விருதா? என்று நக்கலாக கேட்டார். இதுவும் சாதித் திமிர்.

3.ஜீவா நடத்திய மல்லிகையின் ஒரு பிரதியைக் காசு கொடுத்து வாங்கிய ஒரு இளைஞர், சாதித் திமிரால் யாழ்ப்பாணத்து நடு வீதியில் கிழித்தெறிந்து ஜீவா முகத்தில் வீசியது.

(பிற்காலத்தில் ஜீவாவை ஐரோப்பிய நாடொன்றின் வீதியில் சந்தித்த அதே இளைஞன் மேற்படி சம்பவத்தை நினைவூட்டி மன்னிப்பு கேட்டதை அந்த நூலில் எழுதி இருப்பார்.)

இப்படியாக சாதித் திமிர் தொடர்ந்தது. பின் காலனியச் சூழலில் ஒடுக்கப்பட்டவர்களின் இயக்கம் எழுச்சி பெற்றது. அதன் காரணமாக ஒடுக்கப்பட்டவர்கள் கல்வி, பொருளாதாரம் ஆகியவற்றில் வளர்ச்சி அடைந்தமையை ஒடுக்கியவர்களால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை என்பதும் உண்மை.

இவ்வாறாகச் சாதிய அரசியல் வர்க்கப் பிரச்சினை மற்றும் இனப் பிரச்சினையைப் பற்றி குறியீடாக சில பிரதிகளிலும் ஜீவா பேசி இருப்பார். அவரது பெரும்பான்மை பிரதிகள் சாதிய அரசியலை பற்றியும் வர்க்கப் பிரச்சினை பற்றியும் இனப்பிரச்சினை பற்றியும் வர்க்கப் போராட்டம் பற்றியும் பேசும்

இந்த வரிசையில் 1958 இல் எழுதப்பட்ட ஜீவா வின் அடுத்த பிரதியான தீர்க்கதரிசி பற்றி..

பிரபலமான அப்புகாத்து பாரிஸ்டர் பரநிருசிங்கர், 1956ஆம் ஆண்டு, சாதி, பிரதேசம், பொருளாதாரம், மதம் போன்ற எந்த விதமான பேதங்களுமின்றி, தமிழர்கள் என்ற ஒரே காரணத்திற்காக பாதிக்கப்படுகிறார்.

அதனால் பெரும்பான்மை மக்கள் பற்றிய கருத்தினை மாற்றிக் கொண்டவராக , வெள்ளைக்காரன் நல்லவன் என்று தீர்மானித்தவராக, தான் பிறந்த மண்ணான இலங்கை ஒரு மோசமான நாடு என்ற முடிவுடன், காலனியவாதிகளுக்கு விசுவாசமான பாரிஸ்டர் பரநிருசிங்கர் லண்டனுக்கு குடும்பத்தார் சகிதம் இடம் பெயர்கிறார். லண்டனுக்குப் போக கப்பலேறுகிறார், லண்டனில் இலங்கை நண்பர்கள் பலருக்கும், தான் வரப்போவதாக அறிவித்தும், அவர்களில் ஒருவரேனும் தன்னை வரவேற்க வராததைக் கண்டு ஏமாற்றம் அடைகிறார்.

அவர்கள் அங்கு வராமல் போனதற்கான காரணத்தை அறியாதவராக துறைமுகத்தை விட்டு குடும்ப சகிதம் வெளியே வருகிறார்.

அவர் தங்க நினைத்த ஹோட்டலுக்கு போக டாக்ஸி வண்டியை நிறுத்த முயற்சிக்கும் பொழுது எந்த வண்டியும் நிறுத்தாமல் போனது அவருக்கு ஆச்சரியமாக இருக்கிறது. இவர்களுக்கு என்ன நடந்தது? எனக் கேள்வி எழுகிறது.

கொஞ்சத் தூரம் நடந்து வந்த போது கறுப்பின மக்களுக்கு எதிராக கோஷங்கள் எழுப்பியவாறு நிகழும் ஆர்ப்பாட்டங்களைக் காண்கிறார். தன்னையும் கறுப்பின நீக்ரோவாக எண்ணி விடுவார்களோ (அவர் தோல் கறுப்பாக இருப்பதனால்) என்ற பயமும் சந்தேகமும் அவருக்கு எற்படுகிறது. அந்த பயத்துடனும் சந்தேகத்துடன் தங்க நினைத்த ஹோட்டலுக்கு வருகிறார்.

அந்த ஹோட்டல் வாசலில் நின்ற வெள்ளைக்கார பணியாள் அவரை வெளியே தூரத்தி வாசலில் வைத்திருக்கும் அறிப்பு பலகையை காட்டுகிறார். அதில் பின்வருமாறு எழுதி இருப்பதை வாசித்தார்.

“நாய்களும் கறுத்தவர்களும் இந்த ஹோட்டலுக்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள்”

அந்த காலத் தொடக்கம் மேலை நாடுகளில் கறுப்பின மக்களை வெறுத்தொதுக்கும் இயக்கத்தின், மனோபாவத்தின் நீட்சியாக, தோல் நிற அரசியலின் அடிப்படையிலும், சமூக பொருளாதார, கலாசார வேறுபாடுகளின் காரணமாகவும் ஆசிய, குறிப்பாக கீழைத்தேய மக்களை வெறுத்தொதுக்கும் இயக்கம் தோன்றும் என்பதை தீர்க்கதரிசனமாகப் பேசி. இருப்பார், 1958ஆம் ஆண்டில் ஜீவாவால் எழதப்பட்ட 'காலத்தால் சாகாதது' 'தீர்க்கதரிசி” ' ஆகிய இரு பிரதிகள் குறிப்பிடத்தக்க பிரதிகளாகும்

மேமன்கவி

# தமிழரசுக் கட்சிக்குள் தோன்றிய மாறுபட்ட நிலைப்பாடுகள்!




## ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்ப– தென்பதில் குழப்பமான அபிப்பிராயங்கள்! கட்சிக்குள் பிளவு உருவெடுத்ததா?

**ஜனாதிபதித் தேர்தல் களம் சூடுபிடித்துள்ள தற்போதைய நிலையில், பிரதான வேட்பாளர்களுக்கான ஆதரளவுத் தளம் அதாவது அரசியல் கட்சிகளின் ஆதரவுத் தளமும் பரபரப்பு அடைந்துள்ளது.**

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியினர், பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்து வந்து புதிய கூட்டணியை உருவாக்கியவர்கள், ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து பிரிந்து சென்ற பாராளுமன்ற உறுப்பினர்கள் எனப் பலரும் ஆதரவு வழங்கி வருகின்றனர்.

மற்றுமொரு வேட்பாளரான தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க கடந்த அரசாங்கங்களில் பதவியில் இருந்த எவரையும் தம்முடன் இணைத்துக் கொள்ளவில்லை. ஜே.வி.பி மற்றும் தங்களுடன் ஏற்கனவே இணைந்துள்ள தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களுடன் தனது பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றார்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவுக்கு மிகவும் குறைந்த எண்ணிக்கையிலான பாராளுமன்ற உறுப்பினர்களே ஆதரவாக இருக்கின்றனர். தனது தந்தையான முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் அவருக்கு ஆதரவானவர்களுடன் தனது பிரசாரங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார்.

அதேநேரம், மற்றுமொரு பிரதான வேட்பாளரான எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கு அவருடைய கட்சி உறுப்பினர்கள், பொதுஜன பெரமுனவிலிருந்து பிரிந்துவந்த குழுவினர், ரிஷாட் பதியுதீன், ரவூப் ஹக்கீம், மனோ கணேசன், சம்பிக்க ரணவக்க போன்ற கூட்டணிக் கட்சிகள் ஆதரவு வழங்கி வருகின்றன.



இந்த வரிசையில் மற்றுமொரு பிரதான கட்சியின் ஆதரவும் சஜித்துக்குக் கிடைத்துள்ளது. வடக்கு, கிழக்கில் உள்ள பெரும்பாலான தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகப் பார்க்கப்படும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளில் ஒன்றான இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தனது ஆதரவை சஜித்துக்கு வழங்கத் தீர்மானித்துள்ளது.

அண்மையில் கூடியிருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய குழுக் கூட்டத்தில் இந்த விடயம் தீர்மானிக்கப்பட்டதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அறிவித்தார். இருந்தபோதும், இவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட்டமை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், தனக்கு அறிவிக்கப்படவில்லையென்றும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கூறியிருப்பது அக்கட்சிக்குள் பிளவு ஏற்பட்டுள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது.



### பொதுவேட்பாளரும் தமிழ்க் கட்சிகளும்:

ஏழு தமிழ் அரசியல் கட்சிகளும், ஒரு சில சிவில் சமூக அமைப்புக்களும் இணைந்து பொதுத் தமிழ் வேட்பாளராக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரனைக் களமிறக்கியுள்ள பின்னணியில், இலங்கைத் தமிழரசுக் கட்சி சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்க எடுத்த தீர்மானம் பற்றி பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன.

பொதுவேட்பாளர் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பம் தொட்டு ஆதரவான நிலைப்பாட்டில் இருக்கவில்லை. இருந்தாலும், தமிழரசுக் கட்சியின் ஒரு சில உறுப்பினர்கள் தனிப்பட்ட ரீதியில் பொதுவேட்பாளரைக் களமிறக்குவதற்கு ஆதரவான நிலைப்பாட்டில் இருந்தனர். குறிப்பாக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், "பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்படுவதற்கு தனிப்பட்ட ரீதியில் ஆதரவாக உள்ளேன்" எனக் கூறியிருந்தார்.

**அதிகாரப் பரவலாக்கல், பொருளாதாரத் திட்டக் கொள்கைகள் காரணமாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு, கிழக்கில் கணிசமான மக்கள் ஆதரவு**

இந்த நிலையில் வெளிநாடு செல்வதன் காரணமாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் இறுதியாக நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை. இருந்தபோதும், வெளிநாடு செல்ல முன்னர் கட்சியின் தலைவருக்கு அனுப்பியிருந்த கடிதத்தில் தனது நிலைப்பாட்டை அறிவித்திருந்தார். தென்னிலங்கை வேட்பாளருக்கு ஆதரவா அல்லது பொதுவேட்பாளருக்கு ஆதரவா என்ற தெரிவை எடுக்கும் நிலைமை ஏற்பட்டால் பொதுவேட்பாளருக்கே தனது ஆதரவு என்ற தொனியில் அவர் அக்கடிதத்தை எழுதியிருந்தார்.



அதேநேரம், சுகவீனம் காரணமாக குறித்த மத்தியகுழுக் கூட்டத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கலந்து கொள்ளவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் எடுக்கப்பட்டதாகக் கூறப்படும் தீர்மானம் தொடர்பில் தனக்கு அறிவிக்கப்படவில்லையென்றும், "என்ன அடிப்படையில் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தார்கள் என்பது ஆராயப்பட வேண்டும்" என்றும் மாவை சேனாதிராஜா கூறியுள்ளார்.

இரகசிய ஒப்பந்தத்தின் அடிப்படையில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டிருக்கலாம் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஏற்கனவே, தமிழ் பொதுவேட்பாளர் ஒருவர் களமிறக்கப்பட்டு பல தமிழ் அரசியல் கட்சிகள் அவருக்கு ஆதரவாகப் பிரசாரங்களை மேற்கொண்டுள்ள நிலையில், இலங்கைத் தமிழரசுக் கட்சி மாத்திரம் தென்னிலங்கை வேட்பாளர் ஒருவருக்குத் தனது ஆதரவை அறிவித்திருப்பது தமிழ்த் தரப்புக்கள் மத்தியில் ஒற்றுமை இன்மையை வெளிக்காட்டும் ஒன்றாகவும் அரசியல் அவதானிகள் நோக்குகின்றனர்.

### வடக்கு, கிழக்கு மக்களின் நிலைப்பாடு:

கடந்தகாலத் தேர்தல்களில் தென்னிலங்கை வேட்பாளர்கள் பலரை நம்பி ஏமாந்த நிலையிலேயே தமிழர்களின் அபிலாஷைகளை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறுவதற்காக பொதுவேட்பாளர் ஒருவரை நிறுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டை ஏழு அரசியல் கட்சிகளும், ஒருசில சிவில் அமைப்புக்களும் இணைந்து எடுத்திருந்தன.

இந்த விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆரம்பம் முதலே இரட்டை நிலைப்பாட்டில் இருந்து வந்தது. அதேநேரம், கஜேந்திரகுமார் தலைமையிலான அணியினர் இதனை முன்கூட்டியே எதிர்த்திருந்ததுடன், ஜனாதிபதித் தேர்தலைப் புறக்கணிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை எடுத்தனர். இந்த நிலையில் தமிழரசுக் கட்சி சஜித்தை ஆதரிக்க எடுத்திருக்கும் முடிவு எவ்வாறானது என்பதே தற்போது பேசுபொருளாகியுள்ளது.



இலங்கைத் தமிழரசுக் கட்சி மற்றும் அது உள்ளடங்கலான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்பன கடந்த காலத் தேர்தல்களில் குறிப்பாக ஜனாதிபதித் தேர்தல்களில் வேட்பாளர்களை ஆதரிப்பது தொடர்பில் எடுத்த தீர்மானங்களைப் பற்றி எடுத்துப் பார்த்தால், கொள்கை ரீதியாக எடுத்த முடிவுகள் அல்ல என்பது தெளிவாகும்.

வடக்கு, கிழக்கில் உள்ள பொதுமக்கள் அதாவது தமிழ் வாக்காளர்களின் போக்கை நன்று ஆராய்ந்து பார்த்து அந்தப் போக்கிற்கு ஒத்துப் போகும் வகையிலேயே அவர்கள் தீர்மானங்களை எடுத்துள்ளனர். கடந்த ஜனாதிபதித் தேர்தலில் சஜித்தை ஆதரித்த முடிவும், அதற்கு முன்னர் மைத்திரியை ஆதரிக்க எடுத்த முடிவும், அதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை ஆதரிக்க எடுத்த முடிவும் அவ்வாறானதேயாகும்.

வேட்பாளர்களுடன் கொள்கை ரீதியில் ஏற்படுத்திக் கொண்ட உடன்பாடுகளுக்கு அமைய அவர்கள் தீர்மானங்கள் எடுத்ததாகத் தெரியவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி இவ்வாறான தீர்மானத்தை எடுத்திருந்தாலும், வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் மக்களைப் பொறுத்தவரை இம்முறை யாரை ஆதரிப்பார்கள் என்பது குறித்து உறுதிபடக் கூறமுடியாவிட்டாலும், பொருளாதார ரீதியில் நாட்டை மீட்டெடுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு கணிசமான ஆதரவு இருப்பதாகவே தெரிகின்றது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தொடர்பில் தமிழ் மக்களுக்கு எப்பொழுதும்நல்லதொருஅபிப்பிராயமே இருந்து வந்துள்ளது. இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் அதிகாரப் பகிர்வு உள்ளிட்ட விடயங்களில் ஓரளவுக்கு நடுநிலைமையாகச் செயற்படக் கூடியவராக அவர் பார்க்கப்படுகின்றார்.

அவர் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அரசியலமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்ட தலைவராகவும் காணப்படுகின்றார். அது மாத்திரமன்றி, 'தமிழ் மக்களுக்கும் பிரச்சினை உள்ளது, அது தீர்க்கப்பட வேண்டும்' என்பதில் உறுதியான நம்பிக்கை கொண்ட ஒருவர் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நிலையில், அவருக்கான தமிழ் மக்களின் ஆதரவு இருப்பதாகவே களநிலைமைகள் எடுத்துக் காட்டுகின்றன.

### தெளிவற்ற தேர்தல் விஞ்ஞாபனம்:

இந்த நிலையில் தமிழ்க் கட்சிகள் சிலவற்றினாலும், சிவில் அமைப்புக்கள் சிலவற்றினாலும் களமிறக்கப்பட்டுள்ள தமிழ் பொதுவேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனம் அண்மையில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தமிழ் மக்கள் அல்லது தமிழ் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு, தமிழ் மக்களுக்கெதிராக இழைக்கப்பட்ட போர்க்குற்றங்களுக்கு சர்வதேச விசாரணை என முழுமையாக முன்வைத்தே இந்த விஞ்ஞாபனம் வெளிவந்துள்ளது. அநீதி இழைக்கப்பட்ட சம்பவங்களின் பட்டியல்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ள போதும், தெளிவான விளக்கங்களோ அதற்கான கொள்கை விளக்கங்களோ எதுவும் தெளிவாக வழங்கப்படவில்லை.

பொதுவாக்கெடுப்பு என்ற தீர்மானம் இந்த தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படவில்லை. தேர்தலில் தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொண்டால் எவ்வாறான விடயங்களை முன்னெடுப்பார்கள் என்ற தெளிவான விளக்கங்களையும் அதில் காணக்கிடைக்கவில்லை.

ஒட்டுமொத்த தேர்தல் விஞ்ஞாபனத்தை நோக்கும்போது பிறிதொரு வேட்பாளருடன் செய்துகொள்ளக் கூடிய ஒப்பந்தத்திற்கான நிபந்தனைகள் போன்ற விடயங்களே இதில் காணக்கிடைக்கின்றன.

உதாரணமாக எடுத்துக்கொள்வதாயின், ஒரு நிரந்தரத் தீர்வைக் கண்டடைவதற்கு இடைப்பட்ட காலகட்டத்தில், தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவரும் கட்டமைக்கப்பட்ட இனஅழிப்பு நடவடிக்கைகளை தடுக்கும் நோக்கத்தோடும், தமிழர் தேசத்தின் இருப்பைப் பாதுகாக்கும் நோக்கத்தோடும் போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கென்று பன்னாட்டு சமூகத்தின் மேற்பார்வையின்கீழ் விசேட இடைக்காலப் பாதுகாப்பு ஏற்பாடு ஒன்று உருவாக்கப்பட வேண்டும் என்ற விடயம் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதனை முன்னெடுப்பதற்கு தான் எடுக்கக் கூடிய நடவடிக்கைகள் பற்றியோ அல்லது யாரிடம் இவ்வாறானதொரு விடயத்தை உள்ளடக்கப் போகின்றேன் என்பது பற்றியோ எவ்வித தெளிவான வழிகாட்டலும் உள்ளடக்கப்படவில்லையென்பதைக் காணக் கூடியதாகவுள்ளது.

---

# நாகூர்கனியின் "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்"

சிந்தனைத் தடங்களின் ஊற்றுக்கண்கள் எங்கும் ஏக தன்மை கொண்டுள்ளன என்பதான கருத்தியலை முன்னிறுத்தி, எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர்கனி, “மாநபி பேசாத மௌன மொழி தமிழ்” எனும் நூலை எழுதியுள்ளார், என நூலின் தலைப்பின் மயக்கத்தை போக்கு கிறார், நூலின் அணிந்துரையில், பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன். நபி பெருமானார் (ஸல்) வாழ்வின் யதார்த்தங்கள் பற்றி சொன்னவை இதர மதத்தவர் போற்றும் முன்னோர் உண்மை படுத்தியதை தன் தனித்துவமான காத்திரமான எழுத்துக்களால் இந்நூலில் பகர்கிறார், சத்திய எழுத்தாளர் எஸ்.ஐ.நாகூர்கனி. அவரது கடுமையான தேடலின் மாண்பினை இந்நூல் படம் பிடித்துக் காட்டுகிறது. நபி மொழியினை திருக்குறள், பாரதி பாடல்கள், ஞானக்குரவர்கள் பாடிய பாடல்கள், குதம்பை சித்தர் பாடிய ஈரடிகள் அனைத்தும் தொட்டுப் பேசியதை இலாகவமாக பதிவு செய்கிறார். பெருமானார் (ஸல்) அவர்கள் மொழிந்ததை ஒவ்வொரு தலைப்பாக்கி, விரிவான தன் வியாக்கியானத்தில் வாசகனை வியக்கவைக்கும் நாகூர்கனி, சட்டென அதற்கு திருக்குறள், பாரதி பாக்கள் போன்ற தமிழ் உலகு போற்றும் அறிஞர்களின் சாதக எழுத்துக்களை முன்னிறுத்தி இறும்பூத வைக்கிறார். அவரது பகீரத தேடல், பேராச்சரியம் கொள்ளச் செய்கிறது. நாகூர்கனி,“பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா..” எனும் தலைப்பில் நபிகளார் பெண்மைக்கு மகிமை கொடுத்திருப்பதை விலாவாரியாக விளக்குகிறார். அங்கே 'மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா' எனப் பாரதி பாடியதை நூலாசிரியர் ஒப்பு நோக்கியமை பூரிக்கவைக்கிறது. உயர்ந்தவன், தாழ்ந்தவன் என வேற்றுமை கிடையாது என நபிகளார் உரக்கப் பேசியதை, 'சாதி இரண்டொழிய வேறில்லை....” என ஔவை பாடி வரவேற்றதை பொருத்தமாகக் கொண்டு வந்து கையாண்டிருப்பதனை எவ்வாறுதான் பாராட்டாமல் இருக்க முடியும்?

அடுத்தவரை மகிழ்விக்கும் வார்த்தைகளையே பேசுங்கள். நாவினை பேணுவதில் கவனம் செலுத்துங்கள் எனும் நபி (ஸல்) அவர்களின் கண்டிப்பான மொழிகளின் உயர்வினை “யாகவா ராயினும் நா காக்க..” எனும் குறளின் மூலம் நூலின் ஒரு பக்கத்திலே நூலாசிரியர், விலாவரியாக தன் தமிழ் மொழியாற்றலால் விளங்க வைக்கிறார். இக்கூற்றுக்கு ஒத்தாசை தரும் “தீயினால் சுட்ட புண் உள்ஆறும் ஆறாதே நாவினால் சுட்ட வடு” எனும் குறளையும் முன் வைக்கிறார்.



“கொடிது கொடிது வறுமை கொடிது” எனும் பக்கத்தில் “வறுமை மனிதனை குபுர் (தவறான) வழியில் கொண்டு சென்றுவிடும்” எனும் மாநபியின் வார்த்தையை முன்னிறுத்துகிறார். அங்கே வறுமை மனிதனை எப்படி ஆட்டிப்படைக்கிறது என்பதை தன் சிந்தனையைக் கொண்டு படம் பிடித்துக் காட்டுகிறார். ”பசி வந்திடில் பத்தும் பறந்து போம்” என்ற தமிழின் அனுபவத்திற்கேற்ப, அறவொழுக்கத்தை விட்டும் மனிதன் ஒதுங்கி சமய ஒழுக்க விழுமியங்களைத் துறந்து விடுகிறான். மனித புனிதத்தை தொலைத்து விடுகிறான் என்ற யதார்த்தத்தை எழுத்தாளர் நாகூர்கனி புடம் போடுகிறார். அதனாலேயே,” அண்டை வீட்டார் பசித்திருக்க நீங்கள் புசித்து மகிழாதீர்கள்” எனும் உயர் தத்துவமிக்க நபிகளாரின் அறப்போதனையை இங்கே பொருத்தமெனக் கருதி எழுத்தாளர் நினைவு கூர்கிறார். ”நம்மில் ஒருவன் இல்லாமை காரணமாக படிக்கவில்லை என்றால் நாமெல்லாம் நண்ணுதல் வேண்டும்” என பின்னாளில் மொழிந்து முண்டாசு கவிஞன் பாரதி அதனை உறுதிப்படுத்தியதை நினைவுபடுத்துகிறார். அதனாற்றான் வறுமையை விட்டும் பாதுகாப்பை வேண்டி அல்லாஹ்விடம் எப்பொழுதும் பிரார்த்திப்பதை நபியவர்கள் பழக்கமாக்கிக் கொண்டார்கள். அந்தப் பிரார்த்தனையில் நம்மையும் ஈடுபட தூண்டியிருக்கிறார்கள்.

ஒரு மனிதன் இவ்வுலக வாழ்வில் செய்கின்ற நற்கருமங்களே, இவ்வுலகிலும், இறந்ததன் பின்பும் உய்விக்கும் எனும் உண்மையை நபிகளார் பல சந்தர்ப்பங்களில் சொல்லியுள்ளார்கள். இதனை வலியுறுத்த வல்ல பட்டினத்தார் பாடல் ஒன்றினை நம் மனக்கண் முன் கொண்டுவருகிறார். “வீடுவரை உறவு மாட்டே வீதிவரை மனைவி மாட்டே காடுவரை பிள்ளை மாட்டே கடைசிவரை யாரு மாட்டே” எனும் பாடலே அது. எழுத்தாளர் நாகூர்கனி, நபிகளாரின் போதனைகள் மதம் கடந்தும் ஏற்புடையது என்பதை மிக, மிக சிறப்பாக தமிழ்பேசும் நல்லுலகுக்கு “மாநபி பேசாத மௌன மொழி தமிழ்” என்பதன் மூலம் உணரவைக்கிறார். “மாநபி பேசாத மௌன மொழி தமிழ் மொழி” எனும் இந்நூல், ஒவ்வொரு மதத்தவரும் வாசிக்க வேண்டிய நூலாகிறது. “மாநபி பேசாத மௌன மொழி” சமூகங்களுக்கு இடையில் நேசப்பாலத்தை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை.




**எம்.எஸ்.எம். ஜின்னா...**

# கல்வி அமைச்சு

## வட்டியில்லா மாணவர் கடன் திட்டம்

8 ஆவது உள்ளீர்ப்புக்கான விண்ணப்பம் கோரல்

2020/2021/2022 ஆகிய ஆண்டுகளில் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கானது

IFSLS

**கல்வி அமைச்சின் மாணவர் கடன் பிரிவினால், இலங்கை பரீட்சை திணைக்களத்தினால் நடத்தப்படும் க.பொ.த (உயர்தர) பரீட்சையில் சித்தியடைந்த இலங்கை மாணவர்களுக்கான வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தை (IFSLS) செயல்படுத்துகிறது.**
**கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களால் நடாத்தப்படும் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டப்படிப்புகளைப் பின்பற்ற மாணவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது.**

### எவ்வாறு விண்ணப்பிப்பது

தகுதியான விண்ணப்பதாரிகள் www. studentloans.mohe.gov.lk எனும் இணையதளம் ஊடாக நிகழ்நிலையில் விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

### பட்டக் கற்கைநெறிகள்

சகல பட்டக் கற்கைநெறிகளும் ஆங்கிலத்திலேயே மேற்கொள்ளப்படுவதுடன், www. studentloans.mohe.gov.lk எனும் இணையத்தளத்தில் உள்ள மாணவர் கையேட்டின் மூலம் குறிப்பிட்ட பட்ட கற்கைநெறிகளை அறிய முடியும்.

### விண்ணப்பம் சமர்ப்பிக்கும் காலம்:

ஆரம்ப திகதி: 2024.09.09
முடிவுத் திகதி: 2024.10.20

### தகைமை

(i) 2020/ 2021/ 2022 ஆம் ஆண்டுகளில் க.பொ.த(உ/த) பரீட்சையில் அனுமதிக்கப்பட்ட பாடங்கள் 3இல் குறைந்த பட்சம் மூன்று அமர்வுகளுக்கு மேற்படாமல் சாதாரண சித்தி (S) 3 இனை குறைந்த பட்சம் ஒரே அமர்வில் பெற்றிருக்க வேண்டும்
**மற்றும்**
(ii) மேலே (i) குறிப்பிடப்பட்ட ஏதாவதொரு அமர்வில் பொது ஆங்கிலப் பரீட்சையில் 30 க்கும் குறையாத புள்ளிகளைப் பெற்றிருத்தல்
**மற்றும்**
(iii) க.பொ.த (உயர்தர) பரீட்சையில் பொது ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி அல்லது க.பொ.த சாதாரண தரத்தில் ஆங்கிலத்தில் சாதாரண (S) சித்தி **மற்றும்**
(iv) விண்ணப்பதாரிகளின் வயது 2024.10.20 ஆம் திகதியன்று 26 அல்லது அதற்கு மேற்படாமல் இருக்க வேண்டும்.

### ஏனைய தகைமைகள்

பட்டக் கற்கைநெறிக்கான ஏனைய நுழைவுத் தகைமைகளைத் தெரிந்து கொள்ள www.studentloans.mohe.gov.lk எனும் இணையதளத்தில் மாணவர் கையேட்டைப் பார்வையிடவும்.

### தேர்ந்தெடுப்பதற்கான வரைமுறைகள்

குறித்த பட்ட கற்கைநெறிக்கு கீழ் வரும் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு உள்ளீர்ப்பு நடைபெறும்

i. விண்ணப்பதாரி கொண்டிருக்க வேண்டிய ஆகக் குறைந்த தகைமைகள்
ii. பட்டக் கற்கைநெறிக்கான விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்ட விருப்புத் தேர்வுகள்
iii. குறிப்பிட்ட அரச சார்பற்ற உயர் கல்வி நிறுவகத்தால் அந்தந்தத் துறைகளுக்காக ஒதுக்கப்படும் ஆசனங்களின் எண்ணிக்கை.
iv. குறித்த துறைகளுக்கு அரச சார்பற்ற கல்வி நிறுவனங்களால் ஒதுக்கப்பட்ட ஆசனங்களிலும் பார்க்க கிடைக்கப்பெற்ற விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை அதிகமாய் இருக்கும் பட்சத்தில் விண்ணப்பதாரிகள் க.பொ.த உயர் தரப் பரீட்சையில் பெற்ற Z பெறுமானம் கருத்தில் கொள்ளப்படும்.

### அதி கூடிய கடன் தொகை ரூபா 1,500,000.00

பட்டப்படிப்பு கற்கைக்காக வழங்கப்படும் உச்ச கடன் வரம்புகளை தெரிந்துகொள்வதற்கு www.studentloans.mohe.gov.lk என்ற இணையதளத்திற்கு பிரவேசித்து மாணவர் கையேட்டை பரீட்சிக்கவும். அந்தக் கடன் வரம்பின் கீழ் கற்கையை முழுமையாக கற்று முடிப்பதற்கு வாய்ப்பு உள்ளது. இது தவிர மாணவரின் விருப்பு அடிப்படையில் ஆண்டுக்கு ரூபா 75,000 புலமைப்பரிசில் கடனை வட்டி இன்றி பெற்றுக்கொள்ள முடியும்.

**மேலதிக தொடர்புகளுக்கு அழையுங்கள்:**

மாணவர் கடன் பிரிவு
அரச சார்பற்ற உயர் கல்விப் பிரிவு
கல்வி அமைச்சு, இல 989/4A,
விக்கிரமசிங்க பிளேஸ்,
எதுல்கோட்டே.

E: dala@mohe.gov.lk
W: www.mohe.gov.lk
T: 070 3555 970/979
F: 0112-879 719

### கடனை வழங்கல்

கல்வி அமைச்சினால் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் கடன் பெறுவதற்கு தகுதி இருப்பதாக வங்கிக்கு பரிந்துரைக்கப்படுவதோடு மாணவர் தமது கடன் விண்ணப்பத்தை, பிணையாளர்கள் இருவருடன் குறித்த வங்கிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். பிணையாளர்கள் இருவரில் முதல் பிணையாளராக தாய் தந்தை அல்லது பொறுப்பாளர் என்பதோடு இரண்டாவது பிணையாளர் வங்கியினால் கோரப்படும் வருமானம் கொண்டவராக இருத்தல் வேண்டும்.
மாணவர்களின் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு கல்வி அமைச்சினால் பரிந்துரைக்கும் வகையில் அரையாண்டு அடிப்படையில் கற்கை கட்டணத்திற்காக கொடுப்பனவு மேற்கொள்ளப்படும்.

### மாணவர்களின் பொறுப்பு

வட்டியில்லா கடன் திட்டத்தின் கீழ் கல்வி கற்கும் அனைத்து மாணவர்களும் கற்கைநெறியின் அனைத்து கட்டாய பாடத்துக்கும் குறைந்த பட்சம் திறமை சித்தி ஒன்றை (C) பாடநெறிக் காலத்தினுள் பெறவேண்டும் என்பதோடு, அவர்களது கல்விக் காலத்தில் 80% வருகையை பேண வேண்டும்.

### கடனை மீளச் செலுத்தும் முறை

மொத்த கடன் காலமானது 12 வருடங்களாகும் இதற்கான முழு வட்டி தொகையும் அரசினால் செலுத்தப்படும். கற்கை காலம் மற்றும் ஒருவருட சலுகைக் காலத்தின் பின்னர் கடன் தொகையினை மீளச் செலுத்த ஆரம்பிக்க வேண்டும்.

கடன் மீள செலுத்துகையானது, 4/3 வருட பாட நெறிகளுக்கான முழுக் கடன் தொகையானது 84/96 தவணைகளில் செலுத்தி முடிக்கப்பட வேண்டும்.

### வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட அரச சார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள்



தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI

# சிறு விளம்பரங்கள்

சிறு விளம்பரதாரர்களின் நம்பிக்கையான சந்தை

Hotline - 011 2 429 342 / 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380 | E-mail - classified@lakehouse.lk

## மோட்டார் வாகனங்கள்

### 117 வேன்கள் விற்பனைக்கு

மிட்சுபிஷி டெலிகா L400 வேன் புல் சீட் நீண்ட மொடல் டுவெல் A/C சிறந்த நிறை சிறந்த பராமரிப்பு 32 இலட்சம் கிட்டிய அதி கூடிய கோரிக்கைக்கு - 077 9571023. 061983

## வர்த்தகம்

### 207 வியாபார ஸ்தலம் விற்பனைக்கு

வத்தளை, ஹுணுப்பிட்டிய ஜயந்தி மஹால் சந்தி பிரதான வீதிக்கு முகப்பாக 10 பேர்ச் வர்த்தகக் காணி விற்பனைக்கு. 071 4240384, 071-4240383. 059352

### 212 அச்சு இயந்திரங்கள் விற்பனைக்கு

KORD, KOR, KORS, SORDZ சகல சிலின்டர் பர்பெக்ட் பைன்டர் போலர் கட்டர், புத்தகம் தைக்கும் மெசின், இந்தியன் போர்டிங் அப்பியாசப் புத்தகங்களுக்கு 25X36 ஹேன்ட் பிளேடிங் 0777-390394. 061255

### 237 கண் மருத்துவர் மற்றும் உபகரணங்கள்

அதி நவீன சுவிஸ் மற்றும் ஜேர்மன் தயாரிப்பில் உருவான AI தொழில்நுட்பத்துடன் கூடிய நீர்புகா மற்றும் ரீஜார்ஜ் செய்யக்கூடிய காதுகோள் கருவிகளை விக்ரமாரச்சி ஹியரிங் கியாரிடமிருந்து பெற்றுக் கொள்ளுங்கள். இலவச செவிப் பரிசோதனை மற்றும் காதுகோள் கருவிகளை அணிந்து பார்க்கும் வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளலாம். ரூ.55,000 முதல் எம்மிடம் காதுகோள் கருவிகள் உண்டு. நாடு முழுவதும் உள்ள எமது கிளைகளில் இச் சேவையைப் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக தகவல்களுக்கு : 0112201700 062075

## வேலைவாய்ப்பு

### 308 வெற்றிடங்கள் சந்தைப்படுத்தல்

விற்பனையாளர் (Salesman) உடனடி வேலைவாய்ப்புBairaha உற்பத்திகளை விற்பனை செய்யும் தெஹிவளை கல்கிசையிலுள்ள எங்கள் விற்பனை நிலையத்திற்கு ஆண் விற்பனையாளர் தேவை. அருகாமையில் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. வயதெல்லை 22 தொடக்கம் 56 வரை சம்பளம் மற்றும் மேலதிக கொடுப்பனவு. விற்பனை ஊக்கத்தொகை வழங்கப்படும். அனுபவமற்றவர்களும் விரும்பத்தக்கது.தொடர்புகளுக்கும், விண்ணப்பங்களுக்கும் 0772715309 Email ஊடாக:kwalitymeatmart@gmail.com 062070

வில்லியம் ஸ்டோர்ஸ் கொழும்பு வரத்தக நிறுவனத்திற்கு பயிற்சி-பெற்ற, பெறாத 18-25 வயதிற்கிடைப்பட்ட திருமணமாகாத வெளி மாவட்ட ஆண் பிள்ளைகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம். 077 5540201. 061283

வேயன்கொட விற்பனை நிலையத்திற்கு ஊழியர்கள் தேவை. உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. தொடர்புகள் தொ.பே. 0778576247. 061092

### 311 வெற்றிடங்கள் தகவல் தொழில்நுட்பம்

சிறந்த ஆங்கில அறிவுடைய பெண் கணனி இயக்குநர் தேவை. தட்டச்சு வேகம் 20 wpm 80% திடநுட்பம் கட்டாயம். கொழும்பு -08 இற்கு 10 கி. மீ. இல். வசிப்போர் விரும்பத்தக்கது. தொடர்பு - 070 5363099. 062006

### 312 வெற்றிடங்கள் தொழில் நுட்பம்

டீசல் மோட்டார் மெக்கனிக் ரிங்கரிங், பெயின்டர்கள், எலக் ரீசியன்கள் தேவை. வெற்றிடங்கள் (5) தங்குமிடமுன்டு. கிராம சேவகர் பொலிஸ் சான்றிதழ், (இருப்பின்) உடன் வார நாட்களில் மு.ப. 9 இலிருந்து பி.ப. 4 வரை வரவும். வேர்ல்ட் எக்ஸ்பிரஸ் கம்பனி, 190/சி, துடல்ல பமுனுகம பாதை, போபிட்டிய, ஜா-எல (போபிட்டிய நகரத்திற்கு அருகாமையில்) அழைக்கவும். 077 3346768/ 076 14084 9 4/ 071 2724403. 061614

### 318 வெற்றிடங்கள் டிரைவர்கள்

கனரக வாகன சாரதி மற்றும் வாகன உதவியாளர் போக்குவரத்து நிறுவனத்திற்கு அனுபவமுள்ள கன்டெயினர் பிறைம் மூவர் ஸ்கெமல், தட்டு லொறி, பட்டாலொறி, டிரெக்டர், ஜீப், மோட்டார் காரிற்கு சாரதிகள் மற்றும் டீசல் மோட்டார் மெக்கனிக்குகள் தேவை. மாதாந்த வருமானம் ரூ. 150, 000. 0 0 வெற்றிடங்கள் (5) விடுதி வசதியுண்டு. கிராம சேவகர்/ பொலிஸ் சான்றிதழ் (இருப்பின்) வார நாட்களில் மு.ப. 9.00 முதல் 4.00 வரை வாருங்கள். வேர்ஸ்ட் எக்ஸ்பிரஸ் கம்பனி 190/ C, துடெல்ல பமுனுவ வீதி, போபிட்டிய ஜா-எல (போபிட்டிய நகரிற்கு அருகில்) அழையுங்கள் - 077 3346768/ 076-1408494/ 071-2724403. 061618

பாணந்துறையில் அமைந்துள்ள ஹாட்வெயார் நிறுவனத்திற்கு இலங்கை பூராகவும் Route தெரிந்த டிரைவர் (Driver Heavy Vehicle) மற்றும் உதவியாளர் (Do) அவசரமாக தேவைப்படுகின்றனர். தங்குமிட வசதிகள் செய்து கொடுக்கப்படும். தொ.பேசி. 0768243362 061526

**ராஜகிரியவிலுள்ள பேக்கரியொன்றிற்கு** முச்சக்கர வண்டி சாரதியொருவர் தேவை. தங்குமிடம், சாப்பாட்டுடன் 70,000 ரூபா மாதச் சம்பளம். வயது 50 இற்கு மேல், லீவு குறைந்தளவு. தொலைபேசி - 0776 454 354. 061821

driver wanted for a Company age below 40 years with experience residing within 5km to Colombo -08, Should possess Valid Light Vehicle Driving License, (Motorbike + Manual car) Contact 070 5993113. 062023

### 319 வெற்றிடங்கள் வீட்டு வேலையாளர்கள்

குழந்தைப் பராமரிப்பிற்காகப் பெண் ஒருவர் தேவை. கொழும்பில் அமைந்துள்ள வீடொன்றில் தங்கி, குழந்தையைப் பராமரிக்க இயலுமான பெண் ஒருவர் அவசரமாகத் தேவை. வயது : 25 - 45 இற்கு இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும். ரூ. 40, 000 இற்கு அதிகமான சம்பளம், உணவு மற்றும் தங்குமிட வசதி வழங்கப்படும்.தொடர்புகளுக்கு : 0 718746827/ 0717483058 061301

### 320 வெற்றிடங்கள் ஹோட்டல்கள், பேக்கரிகள்

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட பேக்கரிக்கு விறகு போரனை பாஸ், மேசை வேலையாட்கள் தட்டு வேலையாட்கள் உடன் தேவை. கூடுதல் சம்பளம் 0777 899573. 061244

விறகு பேரனை பேக்கரிக்கு பாஸ்மார் தேவை. தட்டு வேலைக்கு உதவியாளர்களும் தேவை. கடுவளை. 078-4977388, 077-8045692. 061252

### 321 வெற்றிடங்கள் தோட்டத்துறை

கோழிப் பண்ணைக்கு ஊழியர் தேவை. உயர்ந்த சம்பளம் மாத படி உண்டு. உணவு, தங்குமிடம் உண்டு, அடையாள அட்டை அவசியம். 076 - 4972029 061616

### 323 வெற்றிடங்கள் தொழிலாளர்கள்

களஞ்சிய பொறுப்பாளர் (STORE KEEPER) - தெல்கொடை, கந்துவொட எஸ்டேடில் அமைந்துள்ள உற்பத்தி நிலையமொன்றிற்கு களஞ்சிய பொறுப்பாளர் (STORE KEEPER) தேவை. வாட்ஸ்அப் மூலம் விண்ணப்பிக்கவும் 0772300450, 0777227381, 0777072545. 061217

வளர்ப்பு நாய்கள் உள்ள இடத்திற்கு சேவைக்காக ஆண் பெண் தேவை. சிங்கள மொழி பேசக்கூடிய தங்கி வேலை செய்வதற்கு. 077 8171570. 061259

### 325 தொழில்துறை பொது

எமது நிறுவனத்தின் வேலைத்தளத்திற்குள் பல்வேறு பராமரிப்பு வேலைகளுக்கு உதவுவதற்கும் தோட்டத்தை சுத்திகரிக்கவும், மரங்களை அகற்றுவதற்கும், பயிர் செய்கையில் உதவுவதற்கும் மற்றும் உணவு சமைப்பத்தல் சாதாரண தேர்ச்சியுள்ள ஆண்களுக்கு விண்ணப்பிக்கலாம். சம்பளம் ரூ. 40000/ - மேலதிக கொடுப்பனவுகள் செலுத்தப்படும். தங்குமிடம் மற்றும் உணவு பானங்கள் இலவசம் - 071-5354756. 061342

கொழும்பு -08இல் தங்கியிருக்கக் கூடிய 40 வயதிற்கு குறைந்த NVQ தகைமையுடைய பெண் கண்காணிப்பாளர் தேவை. கவர்ச்சிகரமான சம்பளப் பொதி. இலவச தங்குமிடம் மற்றும் உணவுடன் வழங்கப்படும். தொடர்பு - 070 5363099. 062015

ஜா - எல, கொடுகொட பகுதியில் மீன் பண்ணை ஒன்றில் மீன்களுக்கு தீனி வழங்குவது, மேலும் தோட்ட வேலை செய்ய ஆட்கள் தேவை. நீச்சல் தெரிந்திருப்பது மேலதிக தகுதியாக கருதப்படும்.வயது : 20 - 400719922436 061467

மளிகைக் கடையொன்றுக்கு அனுபவமுள்ள ஒருவரும் மிளகு அரைக்கும் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ள ஒருவரும் வேலைக்கு தேவை. 0778673344, 0777593030 நாம்பு லுவ பஸ்யால 061208

## காணி/தோட்டம்

### 616 வீடு சொத்து கொழும்பு மாவட்டம் விற்பனைக்கு

கடுவளை, கொரதொட்ட, விஜேதுங்க மாவத்த ஓர் 8.5 பேர்ச் காணி விற்பனைக்கு. (தரகர்கள் வேண்டாம்) தயவு செய்து அழையுங்கள் - 072-1980296 உடனடியாக விற்பனைக்கு. 060924

நேசன் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட அருவ்வில 3 மாடி வீடு விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம்.25 மில்லியன். 077 2361243. 061665




### 617 வீடு சொத்து கம்பஹா மாவட்டம் விற்பனைக்கு

கட்டுநாயக்க கிம்புலாப்பிட்டிய வீதியில் 10.6 பேர்ச் காணி விற்பனைக்கு. (தரகர்கள் வேண்டாம்) அழையுங்கள் - 072-1980296. 060926

களனியில் சதுர வடிவான 20 பே முதன்மையான காணி விற்பனைக்கு. தெளிவான உறுதி, களனி பன்சலைக்கு 300 மீ. கொஹல்வில சந்தி மற்றும் பியகம வீதிக்கு 75மீ, கிரிபத்கொடவிற்கு 3 கி.மீ எந்தவொரு திசையிலிருந்தும் இலகுவான நுழைவு வழியுண்டு. கொஹல்வில வீதி பிரதேசத்திலுள்ள ஏனைய காணிகளுடன் ஒப்பிடுகையில் வெள்ளப்பெருக்கிற்கு இடமில்லை, பசளைக் காணியுடன் உயரமான தேக்கு மரமுமுண்டு. குடியிருப்பு பிரதேசம் மற்றும் நல்ல பக்கத்து வீட்டுக்காரர். 1 பேர்ச் 1.65மி. சிறிதளவு பேசித் தீர்க்கலாம். எம். டபிள்யு பெரேரா (உரிமையாளர்) உடன் 0706963322 என்ற இலக்கத்தினூடாக தொடர்பு கொள்ளவும். 061920

### 618 வீடு சொத்து களுத்துறை மாவட்டம் விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட பாணந்துறையில் வீடு மற்றும் காணி 19 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 26 மில்லியன். 077 2361243. 061667

### 621 வீடு சொத்து கண்டி மாவட்டம் விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட கண்டி திகன 12.1 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 202419/ 22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 9.8 மில்லியன். 077 2361243. 061661

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட கண்டி ஹுலுகங்க 157.7 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 13.5 மில்லியன். 077 2361243. 061648

### 628 வீடு சொத்து கேகாலை மாவட்டம் விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட தரணியகல 434 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 4.7 மில்லியன். 077 2361243. 061654



### 629 வீடு சொத்து இரத்தினபுரி மாவட்டம் விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட எம்பிலிப்பிட்டிய 300 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 26.2 மில்லியன். 077 2361243. 061660

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட பலாங்கொட புத்த ஜயந்தி மாத்தையில் 10.6 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 1.1 மில்லியன். 077 2361243. 061629

நேசன் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட பலாங்கொட புத்த ஜயந்தி மாவத்தை 25 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 2.5 மில்லியன். 077 2361243. 061670

### 632 வீடு சொத்து ஹம்பாந்தோட்ட மாவட்டம் விற்பனைக்கு

நேசன்ஸ் ட்ரஸ் வங்கியினால் சுவீகரிக்கப்பட்ட திஸ்ஸமஹாராம, கதிர்காமம் 171 பேர்ச் காணி விற்பனைக்கு. விலை விசாரணை 2024.09.22 இற்கு முன் விஷேட சொத்துக்கள் முகாமைத்துவ பிரிவு 242, யூனியன் இடம், கொழும்பு -02 ஆகக் குறைந்த விண்ணப்பம். 34.2 மில்லியன். 077 2361243. 061674

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
சிறு விளம்பரங்கள்
சிறந்த பெறுபேறுகளுக்காக - விளம்பரம் செய்திடுவீர்
முதல் 15 சொற்களுக்கு 330/- ரூபா
* ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 20 ரூபா
* ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
* அவ் அறிவித்தலை மிகவும் கவர்ச்சியாக பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
* அவ் அறிவித்தலை இன்டர்நெட்டில் பிரசுரிப்பதற்கு மேலதிகமாக ரூ. 100
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
011 2 429 342 / 011 2 429 343
classified@lakehouse.lk

தினகரன் வாரமஞ்சரி
THINAKARAN VAARAMANJARI
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) 000000377
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.

TEGOSL
ஸ்ரீ லங்கா பத்திரிகை ஸ்தாபனம் / இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute
25th anniversary
மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் 2023
தேசிய பத்திரிகையொன்றில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் தமது ஆக்கங்கள், கேலிச் சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் பிரசுரமான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 என்ற அடிப்படையில் பத்திரிகையிலிருந்து வெட்டப்பட்ட தமது ஆக்கங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் புகைப்படங்களின் பகுதிகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.
பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட அசல் விடயதானங்களைப் பெறுவது சாத்தியமற்றிருப்பின் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பக் கோரப்படுகிறது.
சுயாதீன நடுவர்கள் குழுவொன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது.
விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கான பிரிவுகளுக்காக அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்ட கியூ.ஆர். குறியீட்டை ஊடுருவல் செய்யவும். மேலதிக தகவல்களுக்கு www.slpi.lk அல்லது www.pccsl.lk க்கு பிரவேசிக்க வேண்டும்.
விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 30, 2024 ஆகும்.
அனைத்து விடயதானங்களும் சரியான முறையில் கோப்பாக்கம் செய்யப்பட்டு (தளர்வான கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அவைத் தலைவர், அதிசிறந்த ஊடகவியல் விருதுகள் 2023, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னாட் சொய்சா மாவத்தை (கிருள்ள வீதி), கொழும்பு 5 என்ற முகவரியில் கையளிக்கப்பட வேண்டும்.

# வாரமஞ்சரி BUDGET adz

It suits your budget

Hot Line - 011 2 429 369 | 011 2 429 368
Fax - 011 2 429 330 / E-mail - adzsuo@gmail.com
Chamara -077 727 0067

**APPLE EYE CARPET & SOFA CLEAN**
Vehicle Interior cleaning
සෝෆා සෙට්, කාපට්, කාර්යාල පුටු, මෙට්‍රස්, කර්ට්න්
කුණු පැල්ලම් ඉවත්කර අළුතින් ගත්තා වගේම අලුත්කර ගන්න
නිවසට හෝ සේවා ස්ථානයට පැමිණ කරදෙමි
APPLE EYE CARPET & SOFA CLEAN
Tel: 0713 285 842, 0757 452 890 Email: appleeyeauto@gmail.com

**SALE HAVELOCK CITY**
Edmonton Tower Brand New 2 Room Apartment City View
Call : Owner - 0764 849 843 / 0703 737 240

**HOUSE FOR RENT EKALA**
Rs. 55000.00 PER MONTH. 3 months advance.
NEAR MICHELIN TYRE COMPANY
3 bedrooms, Solar Hot-water, Municipal Water, CCTV, Burglar Alarm, All-around parapet walls, Parking Space for 02 cars.
+1201 600 9874 (Whatsapp - Only)

**VICTORIAN GUEST**
Bandarawela
victorianbungalow.lk
2km Away from Railway Station & Bandarawela Town
බණ්ඩාරවෙල නිවාඩුවක් ගත කරන ඔබට සුන්දර නිවාඩු නිකේතනයක්...
Rs. 22,000/- (Full Bungalow) - A Cook available
077 3 711 196 | 070 2 536 896

**Sun Lanka SANY**
Brand New stock available
Highest spec made for quarry & excavation operation
SY220C-9HD 077 766 0366

**Complete Workshop for Sale @ KEGALLE TOWN**
Perch 112 - Million 180
Exchange for Land or Vehicles.
- Near Laugfs Eco Sri Center -
Contact - 077 080 70 70

**LAND FOR SALE NEAR THE HIGH-LEVEL ROAD (WIJERAMA - CAMPUS ROAD)**
A HIGHLY RESIDENTIAL AREA IN WIJERAMA, (GANGODAWILA, NUGEGODA) EGODAWATTA ROAD, BETWEEN 2ND LANE AND WEERA MAWATHA. FACING A PADDY FIELD 8 PERCH BARE LAND FOR SALE.
2.2 Million per perch, (Negotiable) only one land available. 15' ft. access road, 10 minutes to high-level road and Sri Jayawardenapura Campus, Close proximity to all convenience. Egodawatta 2nd lane last land. All approved. Can take bank loan as well
Contact Details
0718 712 795, 0774 745 333

**JA ELA - PAMUNUGAMA**
PRIME RESIDENTIAL LAND FOR SALE
113 Perch Square Shape land within 4KM to Ja Ela Highway, facing Negombo to Colombo Beach road, directly from the landlord.
SERIOUS BUYERS ONLY
PRICE 900,000 PER PERCH
COULD BE NEGOTIATED AFTER INSPECTION.
CONTACT VIA WHATSAPP 0094 779 193 483
CALL FOR MORE INFORMATION 0779 120 150

**LUXURY VILLA FOR SALE KATUNAYAKA**
197 perches, 6 AC bedrooms with balconies, 6 en-suite bathrooms, office, spa, swimming pool, open lanai, living and dining rooms, kitchens, staff quarters, laundry and more. Coconut garden with potential for expansion.
Price Rs. 225 Mn OR THE HIGHEST OFFER
Contact via WhatsApp : 0773 080 616

**හර්නියා**
රෝගීන් සඳහා ශල්‍යකර්මවලින් තොරව ඖෂධීය ප්‍රතිකාර ප්‍රවීණ වෛද්‍යවරයෙක් මගින්
සෙත් රෝහල හෝමාගම
0112 748 808, 0113 031 717
0714 282 721

**LUXURY HOUSE FOR SALE IN KANDY**
28.5 Perches, 02 Unit house for sale in Heerassagala, Kandy. 6 bedrooms, 4 bathrooms, Living, Pantry, Maids room, ample Parking with a beautiful Garden
Beautiful Scenic Neighbourhood
QUICK SALE 54.5 Million
Contact: 0772 257 225 / 0777 784 020

**WADDUWA BEACH HOTEL FOR SALE**
Extent : 02 A - 1 R
Price : Rs. 600 Mn or the Highest offer
Prime location, just 34 KM from Colombo. 24 Suitable, Large Lobby, Restaurant, Banquet Hall, Wellness Centre, Swimming Pool, Yoga Room, Billiard Room, Car Park
Contact via WhatsApp texts : 0773 080 616

**WE REPAIR**
AMPLIFIERS - SPEAKERS - MIXERS - TV
0114 721 500
0760 993 840
GILBERT & SONS
141 D. R. WIJEWARDENA MAWATHA, COLOMBO 10.
Email: gilbertcompany@gmail.com www. Gilbertsonslk.com

**தார் பதித்தல் காபட் பதித்தல்**
அனைத்து மூலப்பொருட்களுடன்
- ඉන්ටර්ලොක් ගල් ඇතිරීම
- පෞද්ගලික පාරවල්
- කර්මාන්තශාලා පාරවල්
- ලෑන්ඩිංග් පාරවල් කාපට් ඇතිරීම හා තාර යෙදීම
- බොරළු යොදා පාරවල් සකස් කිරීම හා කොන්ක්‍රීට් කිරීම
- කාර් පාර්ක් කොන්ක්‍රීට් කිරීම හා කාපට් කිරීම

உங்களது வீட்டில் அல்லது நிறுவனத்தில் அனைத்து நிர்மாணப் பணிகளும் ஒரே இடத்திலிருந்து
அப்சரா குளோபல் ஹோல்டிங்ஸ்
දිවයිනේ ඕනෑම ප්‍රදේශයකට පැමිණ සිදුකරදෙනු ලැබේ. 0778 383 834
Email - asankasameera417@gmail.com

**KALUTARA**
2-STOREY HOUSE FOR SALE
Land Size : 20 Perches
House Size: 2000 Sq.ft., 2-storey house + rooftop area
03 Bedrooms, 1 Bathroom
Living and dining areas, pantry, parking for 1 vehicle
Price: 9.5 Million (95 lakhs) - Negotiable
LOCATION :
- 4 KM TO KALUTARA TOWN
- 6 KM TO KALUTARA NAGODA GENERAL HOSPITAL
- 10 KM TO GALANIGAMA HIGHWAY ENTRANCE
- 11 KM TO DODANGODA HIGHWAY ENTRANCE

NOTE : URGENT SALE DUE TO MIGRATION
CONTACT DETAILS :
WhatsApp: +61 460 620 788
Email: pamodas.pm@gmail.com

**கொழும்பு 05 இல் அடுக்குமாடி குடியிருப்புக்கள் விற்பனைக்கு**
NEW
ஆரம்ப தொகை 24 மில்லியனிலிருந்து !
முக்கிய இடத்தில் முதலீடு செய்யுங்கள்!
Swimming Pool GYM Kids Play Area
லங்கா வைத்தியசாலைக்கு அருகாமையில் உள்ளது.
தொடர்புகளுக்கு
077 188 9999 / 077 257 1588

**FOR RELIEVING**
JOINT PAINS & DIFFICULTIES IN CLIMBING STAIRCASES UP & DOWN, WALKING AND STANDING UP.
100% Natural
MIRACLE REMEDY FOR CURING JOINT DISORDERS INTERNALLY.
DEEGAYU JOINTHEALER PLUS
COMPLETE CURE AFTER 4 WEEKS USE.
ONLY RS.2490.00 TO BE DELIVERED TO YOUR DOORSTEP.
DEEGAYU HELA OSU COMPANY
KANDY ROAD, KALAGEDIHENA
(IN FRONT OF FILLING STATION.)
0117 673 402
0710 397 399 / 0710 397 644
JOIN AILMENT CLINIC - ON EVERY SUNDAY FROM 9.30 A.M. TO 5.00 P.M.

வாரமஞ்சரி BUDGET adz

**வாரமஞ்சரி திருமண சேவைகள்**
உங்கள் விளம்பரங்களை பின்வரும் மின்னஞ்சலுக்கு அனுப்பவும
classified@lakehouse.lk
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
- ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 10 ரூபா
-ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65
விசாரணைகளுக்கு பின்வருபவர்களுடன் தொடர்பு கொள்ளவும்
077 7 278 948 / 011 2 429 383 / 011 2 429 347
011 2 429 342

**House for sale @ KOTIKAWATTA**
Kotikawatta, within walking distance to Low Level Road, a newly renovated
3 BEDROOM HOUSE
with all amenities for sale. Easy access to leading Super Markets, Shopping Malls, Major bus routes.
5 Minutes to highway access. Clear Title.
075 17 97 795

**Advertise Here**
வாரமஞ்சரி BUDGET adz
5.8cm (Height) x 16.3cm (Width)
Rs. 3,000/- +VAT
Contact :-
011 2 429 367 / 011 2 429 368
adzsuo@gmail.com

**Looking for Your Life Partner..,**
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

# தேர்தலுக்கு இரு வாரங்கள் இருக்கையில் பரபரப்பின் உச்சத்தில் பிரசாரக் களம்!

**இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்வதற்கான தேர்தலுக்கு இன்னமும் இரண்டு வாரங்கள் மாத்திரமே எஞ்சியிருக்கும் நிலையில், பிரதான வேட்பாளர்களின் பிரசாரங்கள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.**



இம்முறை தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிட்டாலும், இது நான்குமுனைப் போட்டியாகவே பார்க்கப்படுகின்றது. ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரத்திற்காக கட்சிகளின் முக்கியஸ்தர்களும் தனிநபர்களும் அரசியல் களத்தை புத்துயிர் பெறச் செய்துள்ளனர்.

முக்கிய வேட்பாளர்கள் பங்கேற்கும் பிரசாரக் கூட்டங்கள், பேரணிகள், கலந்துரையாடல் நிகழ்வுகள், கேள்வி - பதில் அமர்வுகள் என நாளுக்குநாள் பரப்புரைப் பணிகள் தீவிரமடைந்துள்ளன.

ஊழல் ஒழிப்பு என்ற கோஷம் முக்கிய வேட்பாளர்களின் பிரதான தேர்தல் பிரசாரமாக அமைந்திருப்பதையும் காணக் கூடியதாகவுள்ளது. நாட்டை மாறிமாறி ஆட்சிசெய்த அரசியல் தரப்புக்களின் அணுகுமுறை காரணமாக ஊழல் அதிகரித்து, நாடு பொருளாதார ரீதியில் பாதிப்படைந்துள்ளது என்ற கோணத்தில் பெரும்பாலான மக்கள் சிந்திப்பதால், பெரும்பாலான வேட்பாளர்களும் அதனைத் தமது பிரசார உத்தியாகக் கையில் எடுத்துள்ளனர். வெளிப்படையான, பொறுப்புக் கூறக்கூடிய அரசாங்கப் பொறிமுறையொன்றின் தேவையை மக்கள் எதிர்பார்ப்பதும் இதற்கு முக்கிய காரணமாகும்.



எனவே, வாக்காளர்களின் மனங்களை வெல்வதற்காக ஊழல் எதிர்ப்பு விடயத்தைப் பெரும்பாலான ஜனாதிபதி வேட்பாளர்கள் தமது கொள்கைப் பிரகடனங்களில் உள்ளடக்கியுள்ளனர்.

சுயாதீனமான ஊழல் எதிர்ப்பு அமைப்புகளை நிறுவுதல், சட்ட கட்டமைப்பை வலுப்படுத்துதல் மற்றும் கொள்முதல்களின் போது வெளிப்படைத் தன்மையை மேம்படுத்தல் போன்ற யோசனைகள் அதில் அடங்குகின்றன. எனினும், ஊழல் ஒழிப்பு தொடர்பில் ஏற்கனவே பல உறுதிமொழிகள் வழங்கப்பட்டிருந்தாலும், அவற்றை நடைமுறைப்படுத்துவதில் வேட்பாளர்களின் அர்ப்பணிப்புப் பற்றியே மக்கள் அதிகம் கவனம் செலுத்துகின்றனர்.

2022ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட அமைதியின்மை அல்லது பொருளாதார நெருக்கடியினால் ஏற்பட்ட குழப்பங்களின் போதும் ஊழல் என்ற விடயம் அதிகம் பேசப்பட்டது. இவ்வாறான பின்னணியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தினால் புதிய இலஞ்ச ஒழிப்பு சட்டம் கொண்டுவரப்பட்டது. ஆசியாவிலேயே மிகவும் பலம் பொருந்திய இலஞ்ச ஒழிப்பு சட்டமாக இது பார்க்கப்படுகின்றது.

இலஞ்ச ஒழிப்பு என வரும்போது போதிய சட்டக் கட்டமைப்புக்கள் நாட்டில் இருக்கின்றபோதும் அவற்றை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை ஒருங்கிணைத்து, சட்டத்தை சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பே அவசியம். இதில் நோக்கப்பட வேண்டிய மற்றுமொரு விடயம் அரசியல்வாதிகள் என்பதற்கு அப்பால் அரசாங்க ஊழியர்களும் தமது பொறுப்பை உணர்ந்து ஊழல் இன்றி செயற்படுவதற்கான உறுதிமொழியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்பதாகும்.

## தேர்தல் விஞ்ஞாபனங்களின் வேறுபாடு:

இம்முறை தேர்தலில் போட்டியிடும் பிரதான வேட்பாளர்களான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க மற்றும் பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகியோரின் தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் இந்த ஊழல் ஒழிப்பு விடயம் பொதுவான ஒன்றாகக் காணப்படுகின்றது.





இது தவிரவும், பொருளாதார அணுகுமுறை குறித்த விடயத்தில் இவற்றுக்கிடையில் வேறுபாட்டைக் காணமுடிகின்றது. நாட்டின் முன்னேற்றத்துக்கு அரசாங்கத் துறையின் பங்களிப்பு தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனம் அதிகம் கவனம் செலுத்தியிருந்தாலும், ஏனைய வேட்பாளர்களின் தேர்தல் விஞ்ஞாபனங்கள் தனியார்துறையின் அதிகரித்த பங்களிப்புப் பற்றிக் குறிப்பிடுகின்றது. எனினும், முன்னர் இருந்த நிலைப்பாட்டிலிருந்து மாறுபட்டுள்ள தேசிய மக்கள் சக்தியினர் தனியார் துறையினரின் பங்களிப்பையும் உணர்ந்திருப்பதைக் காணக்கூடியதாகவுள்ளது.

இந்த விஞ்ஞாபனங்களில் காணப்படும் மற்றுமொரு வேறுபாடு சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்டுள்ள ஒப்பந்தம் பற்றியதாகக் காணப்படுகின்றது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறித்த ஒப்பந்தத்தைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதாகக் கூறியுள்ளார். அதேநேரம், அநுரகுமார மற்றும் சஜித் பிரேமதாச ஆகியோர் சர்வதேச நாணய நிதியத்துடன் மீண்டும் பேச்சுவார்த்தைகளை நடத்தி ஒப்பந்தத்தில் தேவையான மாற்றங்களைச் செய்யப் போவதாகக் கூறியுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தம் என்பது இலங்கை என்ற நாட்டுக்கும் குறித்த நிறுவனத்துக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் என்ற அடிப்படையில் பார்க்க வேண்டும். எந்தவொரு தனிநபருடனும் செய்யப்பட்ட ஒப்பந்தம் இல்லை என்பதால் விரும்பியவாறு அதில் திருத்தங்கள் செய்வது சுலபமான காரியமல்ல.

அரசியல்வாதிகள் சிலர் பொருளாதார விவகாரங்களில் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வெளியிட்டும் வருகின்றனர்.

## நாட்டின் பொருளாதார விவகாரத்தில் சாத்தியமற்ற உறுதிமொழிகளை வெளியிடும் சில அரசியல்வாதிகள்!

தேர்தல் பரப்புரைகளுக்காக கருத்துகளைக் கூறுவது மக்களைக் குழப்பும் செயலாகும். தேசிய மக்கள் சக்தியைப் பொறுத்தவரையில் அவர்கள் ஆரம்பத்தில் கூறியது, சர்வதே நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தை இரத்துச் செய்வோம் என்பதாகும். இருந்தபோதும் கள யதார்த்தத்தை உணர்ந்துகொண்டுள்ள அவர்கள், குறித்த ஒப்பந்தம் பேணப்படும் ஆனால் உரிய மாற்றங்கள் செய்யப்படும் எனக் கூறி வருகின்றனர். தேர்தலுக்காக மக்களை வீணாகக் குழப்பத்திற்குள் தள்ளக்கூடாது என்பதையும் அரசியல் கட்சிகள் புரிந்து கொள்ள வேண்டும்.

## தீவிரமடைந்துவரும் பிரசாரங்கள்:

தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடப்பட்டு வேட்பாளர்களின் கொள்கைகள் வாக்காளர்களாகிய மக்கள் முன்னிலையில் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், தேர்தலை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்கள் பலவும் சர்ச்சைகளைக் கிளப்பியுள்ளன.

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டொக்டர் ராஜித சேனாரத்ன அண்மையில் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்தார். இவர் அண்மையில் கூறிய கருத்து சர்ச்சையாகியுள்ளது. அதாவது "வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் வாக்களிப்பதற்காக நாட்டுக்கு வரவேண்டாம். அவ்வாறு வந்து வாக்களிப்பதாயின் தேசிய மக்கள் சக்தி வெற்றிபெறும் பட்சத்தில் நாட்டைவிட்டு வெளியேறக் கூடாது. அதனால் நாடு எதிர்கொள்ளும் அவலத்தை அவர்களும் அனுபவிக்க வேண்டும்" எனக் கூறியிருந்தார்.

இது சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இதற்கு எதிராக தேசிய மக்கள் சக்தியினர் தேர்தல்கள் ஆணைக்குழுவில் முறைப்பாடொன்றைப் பதிவு செய்துள்ளனர்.

இதுபோன்று பிரசாரங்களில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள் பல சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்றால் பொதுத்தேர்தல் நடைபெறும்வரை அமைச்சுக்களின் செயலாளர்களைக் கொண்ட காபந்து அரசாங்கமே செயற்படும் என தேசிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான சுனில் ஹந்துன்நெத்தி கூறிய கருத்து சர்ச்சைக்குரியதாக மாறியது.

தேசிய மக்கள் சக்திக்கு மூன்று உறுப்பினர்கள் மாத்திரமே இருக்கும் நிலையில், பாராளுமன்றம் கலைக்கப்பட்டு பொதுத் தேர்தல் நடத்தப்படும்வரை அமைச்சரவை காபந்து அரசாங்கமாகச் செயற்படும். இவ்வாறான நிலையில் அமைச்சின் செயலாளர்களைக் கொண்ட காபந்து அரசாங்கம் செயற்படுவது அரசியலமைப்பு ரீதியில் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லையென்ற நிலைப்பாடுகளும் முன்வைக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று நாளுக்கு நாள் அரசியல் ரீதியான கருத்துகளும், பிரசாரங்களும் தீவிரமடைந்து தேர்தல் களத்தைப் பரபரப்பாக்கி வருகின்றது.

பி.ஹர்ஷன்...

---

## கைதிகள் பரிமாற்றத்துக்கான யுத்தநிறுத்தத்துக்கு வலியுறுத்தல்;

# இஸ்ரேலில் பொதுவேலைநிறுத்தம், ஆர்ப்பாட்டங்கள், ஊர்வலங்கள்!



இஸ்ரேலில் கடந்த ஞாயிறன்று (01.09.2024) பாரிய ஆர்ப்பாட்டத்திற்கும் பொதுவேலைநிறுத்தத்திற்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. இஸ்ரேலின் மிகப்பெரிய தொழிற்சங்கமான ஹிஸ்டாட் ரூட் தொழிற்சங்கத்தினர், பணயக் கைதிகளின் உறவினர்கள் மற்றும் நலன்கள் குறித்த சங்கம், எதிர்க்கட்சித் தலைவர் யர் லபிட் ஆகியோர் இவ்வழைப்பை விடுத்தனர்.

அதற்கேற்ப டெல் அவிவ் நகரில் கூடிய இஸ்ரேலியர்கள், 'ஹமாஸ் பிடியிலுள்ள பணயக்கைதிகளை விடுவிக்கும் வகையில் உடனடி யுத்தநிறுத்த உடன்படிக்கையை ஹமாஸுடன் மேற்கொள்ளுமாறு கோரியதோடு, பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலத்தையும் முன்னெடுத்தனர். மறுநாள் திங்கட்கிழமை பொதுவேலைநிறுத்தத்திலும் ஈடுபட்டனர்.

ஹமாஸின் பிடியிலுள்ள இஸ்ரேலிய பணயக் கைதிகளில் 06 பேர் கொல்லப்பட்ட நிலையில், காஸாவின் ரபாவிலுள்ள சுரங்கப்பாதையொன்றில் கடந்த 31 ஆம் திகதி மாலையில் இஸ்ரேலிய படையினரால் கண்டெடுக்கப்பட்டனர். அதனைத் தொடர்ந்தே இக்கொதிநிலை ஏற்பட்டது.

இந்நிலையில் பணயக் கைதிகளின் உறவினர்கள், தங்கள் உறவினரை மீட்டுத் தருமாறு கோரி ஆட்சியாளர்களுடனும் பாதுகாப்புத் தரப்பினருடனும் சந்திப்புக்களை நடத்தினர். 'உயிருடன் மீட்டுத் தருவோம் என நம்பிக்கை அளிக்கப்படுகின்ற போதிலும், உறவினர்கள் வீடு திரும்புவதாக இல்லை. இந்தச் சூழலில் யுத்தத்தை நிறுத்தி ஹமாஸிடம் பணயக் கைதிகளாக உள்ள எமது உறவினர்களை மீட்டுத் தாருங்கள்' எனக் கோரி அவர்களது உறவினர்கள் டெல்அவிவ்விலும் ஏனைய நகரங்களிலும் ஆர்ப்பாட்டங்களையும் ஊர்வலங்களையும் நடத்தத் தொடங்கினர்.

அந்த வகையில் கடந்தாண்டு ஒக்டோபர் 07 ஆம் திகதி முதல் இவ்வருடம் ஓகஸ்ட் 30 ஆம் திகதி வரையும் 1240 ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் இஸ்ரேலில் நடத்தப்பட்டுள்ளன. அவற்றில் பெரும்பாலானவை பணயக் கைதிகளை மீட்கும் வகையில் காஸாவில் யுத்த நிறுத்தத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்திருந்தன.

இந்த ஆர்ப்பாட்டங்கள் டெல் அவிவில் மாத்திரமல்லாமல், இஸ்ரேலின் ஏனைய நகர்களிலும் இடம்பெற்றுள்ளன. அவற்றில் 336 ஆர்ப்பாட்டங்கள் கடந்த ஜுலை மாதம் மாத்திரம் டெல்அவிவில் இடம்பெற்றுள்ளன.

காஸாவில் யுத்தநிறுத்தத்தை ஏற்படுத்துவதையும் ஹமாஸ் பிடியிலுள்ள பணயக் கைதிகளை விடுவிப்பதையும் நோக்காகக் கொண்டு கடந்த பத்து மாதங்களாக பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் கட்டார், எகிப்து, அமெரிக்கா ஆகிய நாடுகள் உச்சபட்ச முயற்சிகளை மேற்கொள்கின்றன. என்றாலும் ஒவ்வொரு பேச்சுவார்த்தையிலும் இஸ்ரேல் தரப்பில் முன்வைக்கப்படும் நிபந்தனைகள் யுத்தநிறுத்த இணக்கப்பாட்டை தாமதப்படுத்தி பின்னடைவுக்கு உள்ளாக்குவதாக ஹமாஸ் அண்மைக்காலமாக குற்றஞ்சாட்டுகிறது.

'எங்கள் பிடியிலுள்ள பணயக் கைதிகளை விடுவிக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் இஸ்ரேலிய சிறைகளிலுள்ள பலஸ்தீன கைதிகள் விடுவிக்கப்பட வேண்டும். அதற்கான உடன்பாட்டுக்கு தயாராக உள்ளோம்' என்று குறிப்பிடுகின்ற ஹமாஸ், 'காஸாவில் நிரந்தர யுத்தநிறுத்தம் அவசியம், காஸாவில் இருந்து இஸ்ரேலியப் படைகள் முழுமையாக வெளியேற வேண்டும்' ஆகிய கோரிக்கைகளையும் பிரதானமாக முன்வைத்து வருகின்றது.

இஸ்ரேலோ தற்காலிக யுத்தநிறுத்தத்திற்கு தயார் என்றும் முழுமையாக படைகளை வெளியேற்ற முடியாது என்றும் குறிப்பிட்டு வருவதோடு, பிடடெல்பி மற்றும் நெட்சாரிம் நுழைவாயில்களில் இருந்து வெளியேற முடியாது என்ற நிபந்தனையை கடந்த இரண்டொரு வாரங்களாக முன்வைத்து வருகிறது.





## ஆறு பணயக்கைதிகள் உயிரிழந்ததையடுத்து ஏற்பட்டுள்ள கொதிநிலை!

இரண்டு தரப்பினரும் தத்தமது நிபந்தனைகளில் விட்டுக்கொடுப்புகளுக்கு இடமளிக்காத வகையில் உறுதியாக உள்ளனர். அதனால் காஸா யுத்தநிறுத்த உடன்பாட்டை எட்டுவதில் தொடர்ந்தும் தாமதநிலை நீடித்து வருகிறது. இந்நிலையில் பணயக்கைதிகளின் உறவினர்களில் சிலர், 'எங்கள் உறவினர்களை நாங்கள் மீட்டு வருகிறோம்' எனக் குறிப்பிட்டு கடந்த 29 ஆம் திகதி காஸாவுக்குள் பிரவேசித்தனர். அதற்கு இஸ்ரேலியப் படையினர் அனுமதி வழங்கவில்லை. அதேநேரம் காஸாவில் தாக்குதல்கள் குறைந்ததாகவும் இல்லை.

இவ்வாறான சூழலில்தான் ஹமாஸ் பிடியிலுள்ள பணயக்கைதிகளில் ஆறு பேரும் சுரங்கப்பாதையொன்றில் பிரேதங்களாக மீட்கப்பட்டிருக்கின்றனர். இதனை இஸ்ரேலிய இராணுவமும் உறுதிப்படுத்தியது. இப்பணயக் கைதிகளை ஹமாஸ் படுகொலை செய்துள்ளதாகக் குறிப்பிட்ட இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அவர்களை உயிருடன் மீட்டெடுக்கக் கிடைக்காததற்காக நான் மன்னிப்பு கேட்கிறேன். இவர்கள் கொல்லப்பட காரணமான ஹமாஸ் கடும் விலை கொடுக்க வேண்டிவரும்' என்று இஸ்ரேலிய தொலைக்காட்சியொன்றுக்கு பேட்டியளித்த போது எச்சரித்தார்.

ஆனால் ஹமாஸின் சிரேஷ்ட அதிகாரி இஸத் அல் ரிஷேக், 'இப்பணயக்கைதிகளும் அவர்களுக்கு பாதுகாப்புக்காக இருந்தவர்களும் இஸ்ரேலிய விமானத்தாக்குதலில் கொல்லப்பட்டனர்' என்று சர்வதேச ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், 'பணயக் கைதிகளை விடுவிப்பதற்கான ஒப்பந்தத்தை எட்டுவதற்கு இஸ்ரேலிய பிரதமர் போதுமான அளவு செயல்படவில்லை' என்று வெள்ளை மாளிகை செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறான பின்புலத்தில் இஸ்ரேலில் எட்டு இலட்சம் அங்கத்தவர்களைக் கொண்ட ஹிஸ்டாட்ரூட் தொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் அர்னான் பார்டேவிட், 'பிரதமர் நெதன்யாகு மீதான அழுத்தத்தை அதிகரித்து, காஸாவில் உள்ள பணயக்கைதிகளை விடுவிப்பதே இந்நடவடிக்கையின் இலக்கு' என்றுள்ளார்.

அதற்கேற்ப இஸ்ரேலின் மிகப் பெரிய 200 தனியார் வர்த்தக நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இஸ்ரேல் வர்த்தக மன்றம், இஸ்ரேலிய தொழில்நுட்ப நிறுவனங்கள், பெங்கூரியன் சர்வதேச விமான நிலையம், இஸ்ரேலின் பிரதான சர்வதேச போக்குவரத்து மையம், இஸ்ரேலிய சட்டத்தரணிகள் சங்கம், ஆசிரியர்கள் சங்கம், ஜெரூஸலம் பல்கலைக்கழகம் உள்ளிட்ட அனைத்து பல்கலைக்கழகங்களின் தலைவர்கள், இஸ்ரேலிய உற்பத்தியாளர்கள் சங்கம் உள்ளிட்ட பல தரப்பினரும் இந்த பொது வேலைநிறுத்தத்திலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களிலும் கலந்து கொண்டனர்.

டெல்அவிவ் வில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாத்திரம் சுமார் 2 இலட்சத்து 80 ஆயிரம் பேர் பங்கேற்றதாக கிரவ்ட் சொலுசன் நிறுவனம் மதிப்பிட்டுள்ளது. நாடெங்கிலும் நடந்த ஆர்ப்பாட்டங்களில் சுமார் 2 இலட்சம் பேர் கலந்து கொண்டிருக்கலாமென ரைம்ஸ் ஒப் இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டவர்களில் ஒருவரான நடவ் குறிப்பிடுகையில், 'இஸ்ரேலிய ஆட்சியாளர்கள் யுத்த நிறுத்த ஒப்பந்த முயற்சிகளை மீண்டும் மீண்டும் கபடத்தனமாக சீர்குலைத்திராவிட்டால் 26 பணயக்கைதிகள் இன்று எங்களுடன் உயிருடன் இருந்திருப்பார்கள்' என்றுள்ளார்.

'பணயக்கைதிகள் அனைவரையும் வீட்டிற்கு அழைத்து வர நாங்கள் எல்லாவற்றையும் செய்வோம். இது செயல்பட வேண்டிய நேரம். கைதிகள் பரிமாற்றத்திற்கான ஒரு ஒப்பந்தம் வரும் வரை தீவிரமாக செயற்பட வேண்டும்' என்று பணயக்கைதி மடன் சங்குஸ்தரின் தாயார் குறிப்பிட்டுள்ளார்.

## யுத்தநிறுத்த முயற்சிகளுக்கு மத்தியிலும் குறைவடையாத தாக்குதல்கள்!

இந்நிலையில் நிதியமைச்சர் பெஸலால் ஸ்மோர்ட்ச், வேலைநிறுத்தத்திலும் ஆர்ப்பாட்டத்திலும் கலந்து கொண்டவர்களுக்கு கொடுப்பனவு வழங்க வேண்டாம்' என திறைசேரிக்கு உத்தரவிட்டுள்ளார். 'இது ஹமாஸுக்கும் அதன் தலைவர் யஹ்யா சின்வாருக்கும் ஆதரவளிப்பதற்காக நடத்தப்படுகிறது' எனக் குறிப்பிட்டு இவ்வேலைநிறுத்தத்தை நிறுத்தி தொழிலாளர்களை பணிக்கு திரும்ப உத்தரவிடுமாறு தொழிலாளர் நீதிமன்றத்தில் அவசர மனு தாக்கல் செய்யப்படவும் ஏற்பாடு செய்தார்.

இம்மனுவைப் பரிசீலனை செய்த நீதிமன்றம், விடுத்த உத்தரவுக்கு அமைய, ஊழியர்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு பணிக்கு திரும்பினர். ஆனால் ஆர்ப்பாட்டமும் ஊர்வலங்களும் அடிக்கடி இடம்பெற்ற வண்ணமுள்ளன.

அமெரிக்காவினதும் இஸ்ரேலிய குடிமக்களினதும் அழுத்தத்தின் பின்புலத்தில் கைதிகள் பரிமாற்றம் குறித்த மற்றொரு யுத்த நிறுத்த பேச்சுவார்த்தைக்கு செல்ல இஸ்ரேல் தயாராகி வருவதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஆனால் கைதிகள் பரிமாற்றத்தின் நிமித்தம் கட்டார் ஏற்கனவே முன்னெடுத்த முயற்சிகளின் ஊடாக 2023 நவம்பர் 24 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வந்த ஒரு வாரகால யுத்தநிறுத்தத்தின் ஊடாக ஒரு இஸ்ரேலிய பணயக் கைதிக்கு 3 பலஸ்தீனக் கைதிகள் என்றபடி சுமார் 105 பணயக்கைதிகள் விடுவிக்கப்பட்டனர். ஆனால் அனைத்து கைதிகளும் விடுவிக்கப்பட முன்னர் அந்த யுத்தநிறுத்த உடன்பாட்டில் இருந்து வெளியேறிய இஸ்ரேல் டிசம்பர் முதலாம் திகதி முதல் யுத்தத்தை ஆரம்பித்தது. அதனால் எஞ்சிய கைதிகள் தொடர்ந்தும் ஹமாஸின் பிடியில் உள்ளனர்.



மர்லின் மரிக்கார்...

# உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதி பெருமாள் திரௌபதியம்மன் ஆலய கும்பாபிஷேகம்

## ஆலயக் குருக்களின் ஆசிச்செய்தி



புத்தளம் மாவட்டத்தில் அலைகடல் ஓங்கும் உடப்பூர் பதியில் பல்நெடுங்காலங்களாக வரலாற்றுப் பெருமையும் வழிபாட்டுச் சிறப்பு மிகு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத பார்த்தசாரதிப் பெருமாள் ஸ்ரீதிரௌபதியம்மன் தேவஸ்தான சுற்று மண்டபங்கள் கம்பீரமான ராஜகோபுரம் பரிவார மூர்த்திகள் என்பனவற்றுக்கு ஆகம சிற்ப சாஸ்திர முறைப்படி சிற்ப வர்ண அலங்கார வேலை அமைப்புக்களுடன் புனராவர்த்தனம் செய்யப்பட்டுள்ளது.

இவ்வாலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு குறுகியகால இடைவெளியில் பலகோடி ரூபா செலவில் திருப்பணிகள் நடைபெற்று 2024.09.08 திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 07.14 மணி முதல் 08.32 மணி வரையுள்ள சுப மூகூர்த்த வேளையில் புனராவர்த்தன அஷ்டபந்தன நவகுண்ட பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஸ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நடைபெற இறையருள் கிட்டியுள்ளது. உடப்பூர் பெரிய ஆலயம் மேலும் சிறப்புறவும் இவ்வூர் மக்களும் உலக மக்களும் என்றும் சாந்தி சமாதானம் நிலவி யாவரும் ஒற்றுமையாகவும் அமைதியாகவும் லக்ஸ்மி கடாச்சம் பெற்று மங்களகரமாக வாழ காத்தல் கடவுளும் திரௌபதியம்பாளையும் தொழுது சகல செல்வயோக மிக்க பெருவாழ்வு கிடைக்க வேண்டுமென என் நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

'லோகா சமஸ்த்தா சுக்கினோ பவந்து'
'விப்ர சிரேஸ்டர்'
'விஷ்ணு வித்தியா சாகரம்'

*சிவஸ்ரீ.குமார பஞ்சாட்சர சிவாச்சாரியார்*
(ஆலய பிரதம குரு)

## இந்து ஆலய பரிபாலன சபை திருப்பணிச் சபை தலைவர்களின் வாழ்த்துச் செய்தி




இயற்கை வளம் நிறைந்த இந்து சமுத்திரத்தைக் கொண்ட உடப்பூரானது வந்தாரை வாழவைக்கும் சிங்கார ஊராகும்.பல இன மக்கள் வாழ்ந்தாலும் தனக்கென ஒரு தனி இடத்தைப் பிடித்து கலை சமயம் போன்றவற்றைக் கட்டிக் காத்து பாதுகாக்கும் ஊர் என்று போற்றலாம். பல கலை மரபு கலையம் சத்தைக் கொண்ட இந்த ஆலயமானது தொன்று தொட்டு வந்த இவ்வூர் மக்களால் வணங்கப்படுகின்றது. 108 அடி இராஜ கோபுரத்தைக் கொண்ட இந்த ஆலயம் மகா கும்பாபிஷேகத்தை இன்று நாம் காண்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். அன்னை தானே விரும்பி குடியேறுவதாகிய உடப்பு நகரில் வெறுமனே வழிபாட்டு தலமாக மட்டுமல்லாமல் கல்வி கலை இலக்கியங்களை ஊக்குவிக்கும் அமைப்பாக செயற்பட்டு சமூக அபிவிருத்தியை கருத்திற் கொண்டு அவற்றை முடிந்தவரை நடைமுறைப்படுத்தி எதிர்கால பரம்பரைக்கு வழிகாட்டியாக செயற்படும் இந்த தேவஸ்தானத்தின் மகாகும்பாபிஷேக அரும்பணிக்கு முன்னின்று உழைத்த அனைத்து நல்லுள்ளங்களுக்கும் பக்தர்களுக்கும் அன்னையின் அருள் கிடைத்திட வேண்டுகின்றோம்.

*திரு.க.சின்னராசா*
(இ.ஆ.ப.சபைத் தலைவர்)

*திரு.மு.சண்முகம்*
(திருப்பணிச்சபைத் தலைவர்)



புத்தளம் மாவட்ட த்தில் வரலாற்று சி றப்பு வாய்ந்த உடப்பு ஸ்ரீருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீபார்த்தசாரதிப் பெருமாள் ஆலயத்தின் கும்பாபிஷேகப் பெருவிழா இன்று நடைபெறவுள்ளது.

அதன்படி பஞ்சமி திதியும் சுவாதி நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய காலை 07.14மணி முதல் 08.32மணி வரையுள்ள சுப வேளையில் மஹா கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது. அதிகாலை 5மணி முதல் விஸ்வசேன கணபதி பூஜையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும். அதனைத் தொடர்ந்து தூபிகளுக்கு 7.14மணியிலிருந்து கும்பநீர் ஊற்றுதல் இடம்பெறும்.

(உடப்பு குறூப் நிருபர்)

## திருப்பணிச் செயலாளரின் வாழ்த்துக்கவி

புத்தளத்தில் அமைந்துள்ள
புண்ணியபூமி உடப்பினிலே !
நித்தமும் அருள்பொழியும்
நிகரில்லா இறையருளும் !
வானுயர்ந்த கோபுரமும்
வனப்புமிக்க சிலைகளையும் !
காணுகின்ற அனைவரின்
கவலைகளைப் போக்கிடுமே !
மாமாங்கம் கடந்தின்று
மகிழ்வான மங்களவிழா !
கோமான் மாயவன்
கோபாலன் அருளாலே !
பார்த்தசாரதி எம்பிரானுக்கும்
பாரிமார் ருக்மணி சத்தியபாமாவுக்கும்
சீர்பெற்ற பெருமாட்டி
சீரிய திரௌபதிக்கும் !
பரிவார மூர்த்திகளுக்கும்
பாங்கான குடமுழுக்கு !
உரிய வேதங்கள் ஒலிக்க
உயர்வான கும்பாபிஷேகம் !
கும்பாபிஷேகத்தை கண்ணுற்றால்
குடிகொண்ட பாவம்போம் !
நம்பிணியகன்று நமக்கெல்லாம்
நல்லருள் கிடைத்திடுமே !
என்னதவம் செய்தோமோ
எம்பெருமான் அருள்பெற !
என்னவன் நாராயணன்
என்றும் அருள் பொழிந்து !
சகியாக உடனிருந்து
சகல துயர்நீக்கி !
அகிலமெல்லாம் காத்து நின்று
அனைவரையும் வாழவைப்பான் !



*திரு.பெ.வீரசுந்தரேஸ்வரன்*
(திருப்பணிச்சபை செயலாளர்)
ஆண்டிமுனை

## கும்ப யாக சாலா பிரவேசம்




ஆலய மஹா கும்பாபிஷேக நிகழ்வில் வியாழக்கிழமை (5) இரவு கும்பயாகசாலா பிரவேசம், மூல மந்ர காயத்ரீ மந்ர ஹோமம் மற்றும் விளக்குப் பூஜைகள் இடம்பெற்றன.

**கும்பாபிஷேக குருமார்கள்**

ஆலய நி கழ்வுகளில் பிரதிஷ்டா பிரதம குருவாக விப்ர சிரேஸ்டர் விஷ்ணு வித்தியா சாகர ம் சிவஸ்ரீ குமாரபஞ்சாட்சரக் குருக்கள் கலந்து கொள்வதோடு, கும்பாபிஷேகம் சிறப்புற அருளாசி வழங்குபவர் சிவாகம கலாநிதி வேதாகம ஞான பாஸ்கரன் சிவஸ்ரீ தானு மகாதேவ குருக்களும் கலந்து கொள்வார்.

சிறப்பிதழ் ஒருங்கிணைப்பாளர்– *க. மகாதேவன்*


V. Kugadharsan
KVM
Hardware
Division 06, Udappu
07718055 99



S.K Thasan
075 6007076
HARI DHASH
Retail dealers in Toys, Fancy & Stationery
Cosmetic & Gift Items, Etc
Division No 02, Udappu. Tel : 075 6007076.
E.mail : garidhash@yahoo. com

Studio!
Uma's
Since - 2016
PHOTOGRAPHY & VIDEOGRAPHY

சுஜே ஓவியம்
நவீன முறையில் அலங்கரிக்கப்பட்ட திருமண மணவறைகள்
திருமண அலங்காரப் பொருட்கள்
மண்டப அலங்காரம்
அலங்கார பந்தல்கள் தலைப்பா
Reception மணவறை போன்றவை வாடகைக்கு விடப்படும்.
V.Muthukrishnan Sujey Arts Udappu
ஆலய வர்ண வேலைப்பாடுகள் ஓவிய வேலைப்பாடுகள் தரமான முறையில் செய்து தரப்படும்.
ஓவியர் வீ.முத்துக்கிருஷ்ணன்
Udappu Sujey Arts சுஜே ஓவியம், உடப்பு 0777 952 993

ஐங்கரமூர்த்தி (கிளி)
மீன்/ கருவாடு/ கோழித்தீன் வியாபாரம்
உடப்பு - 06
Tel : 077 9 012 654

V. நந்தன் STORES
ஆண்டிமுனை
உடப்பு
Tel : 077 6 031 997

M. ரவிகரன் (ரவி)
SM - Fish Transport
கடற்கரை வீதி
உடப்பு - 06
Tel : 077 1 825 756

S. சுதன்,
S. உதயபிரசன்
(சகோதரர்கள்)
கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்
உடப்பு - 05

S. T ANTONY
Sea Food
உடப்பு - 02
Tel : 077 0 093 638

SKS SOKKALA STORES
(S. Naresh)
No, 3, Main Street, Udappurwa.
Email : Nareshwaisu2809@gmail
Tel : 072 0 992 299/ 076 8 484 734

M. அம்பிகைராஜன்
(தொழிலதிபர்)
ஆண்டிமுனை
உடப்பு - 05
Tel : 077 7 363 654

இந்து ஆலய பரிபாலன சபை
பிரதான வீதி
உடப்பு
Tel : 032 225 8501

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்

கும்பாபிஷேகம் சிறப்புற வாழ்த்துக்கள்

இந்து ஆலய திருப்பணிச் சபை
பிரதான வீதி
உடப்பு
Tel : 032 225 8501

# உடப்பு திரௌபதியம்மன் ஆலய நவதள இராஜகோபுர மகா கும்பாபிஷேகம் இன்று



வடமேல் மாகாணத்தில் புத்தளம் மாவட்டத்தில் மேற்கே இந்து சமுத்திரமும் கிழக்கே ஒல்லாந்தர் வெட்டு வாய்க்காலும் கொண்ட இயற்கையான சூழலில் உடப்பு என்ற தமிழ்க் கிராமம் அமைந்து காணப்படுகின்றது. இங்கு இந்துக்கள், கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் என மும்மதத்தவர்களும் வாழ்ந்து வருகின்றார்கள்.

தென்னிந்திய கிராமங்களின் அக்காமடம் தங்கச்சிமடம் போன்ற இறுக்கமான இந்து மத கலாசார பின்புலத்தில் வாழ்ந்த இந்த உடப்பூர் வாழ் மக்கள் தமது குலத்துக்கு ஏற்பட்ட மதமாற்ற தாக்கத்துக்குப் பயந்து இடம்பெயர்ந்து பல்வேறு இடப்புலங்களிலிருந்து விடுபட்டு நல்ல தண்ணீரும் நிரந்தரமான ஜீவனோபாய தொழில் இருப்பைகளை தக்க வைத்துக் கொள்ளும் நோக்குடன் இந்த உடப்பு கிராமத்தைக் அறிந்துள்ளார்கள்.

ஆனால் இந்த மக்கள் எங்கெங்கெல்லாம் தங்கி இருந்தார்களோ அங்கெல்லாம் தமது குல தெய்வமான அன்னை திரௌபதி தேவிக்கு மற்றும் சக்திப் பெண் தெய்வங்களுக்கும் ஆலயம் அமைத்து கோவில் கட்டி வழிபட்டு வந்துள்ளார்கள். ஆனால் உடப்பு மக்கள் தமது மூதாதையர்கள் கடைப்பிடித்த பழக்க வழக்கங்கள் கலை கலாசார முறைமைகள் தெய்வ வழிபாடுகள் கூட முன்னோர்கள் பின்பற்றிய சாயலை இன்னமும் பிசகாமல் இடம்பெற்று வருவது முக்கிய கூறாகும். இவ்வழிபாடு இங்கு நடாத்தப்பட இரு காரணங்களை முன் வைக்கின்றனர்.

இங்குள்ள மூதாதையர்கள் இராமநாத புரத்திலிருந்து வழிபட்டு வந்த ஒரு தெய்வத்தையே இங்கும் பூஜித்தார்கள் என்பர் ஒரு சாரார். மற்றைய ஒரு சாரார் அதுவல்ல என்கின்றனர். இருந்த போதிலும் இங்குள்ளவர்கள் சக்தி வழிபாட்டில் நாட்டம் உடையவர்கள் என்பது யதார்த்தமாகும். திரௌபதியம்மன் வழிபாடு



பாரதக்கதையை அடிப்படையாகக் கொண்டு நடாத்தப்படுகின்றன. கரகம் பாலிக்கும் பூசகர் தன்னை ஜீவாத்மாவாக பாவனை செய்து பதினெட்டு நாள் உபவாசமிருப்பார். முதல் நாள் பாரதக் கதையின் யுத்தத்தின் ஆரம்பக் கதை படிக்கப்பட்டு சர்ப்பக்கொடியோடு துரியோதனின் ஞாபகக் கொடி ஏற்றி வைக்கப்படும்.

ஐந்தாவது நாளன்று ஐவர்களின் ஞாபகக் கொடியாகிய அனுமன் கொடி வெளிக் கொடியாக ஏற்றப்படும். அன்று தொடக்கம் ஒவ்வொரு நாளும் இரவு 9.00 மணி தொடக்கம் 11.00 மணி வரையும் பாரதக்கதை பூரணமாகப் படிக்கப்படும். இத்தினங்களில் ஒன்றுவிட்ட ஒரு நாள் பூசகர் மாரியம்மன் ஆலயத்திலிருந்து கரகம் பாலித்து பக்தர்கள் பரவசமடைய திரௌபதியம்மன் ஆலயத்தை அடைவார்கள். நாட்கள் அண்மிக்க அண்மிக்க பூசகரின் உருக்கொள்ளும் நிலையும் பக்தி உணர்வூட்டும்.

இது பக்தி பரவசத்துக்கு எடுத்துக் காட்டாகும். பாரதக்கதை நகர்த்தலின் பதினொராவது தினம் பாண்டவர்களில் வனம் புகும் காட்சியில் வேடம் தரித்த நேர்த்திக்குத் தெரிவு செய்யப்பட்ட அடியார்கள் தத்துவார்த்தமாக பாண்டவர்களாக வேசமிட்டும் ஜிவாத்தமாகிய திரௌபதா தேவியாகவும் காட்சி கொடுத்து நிகழ்வுறும் விழாவானது அற்புத அதிசயமாக இருக்கும்.

அடுத்த நாள் பாரதத்தின் நாயகன் அருச்சுனனிடம் தவம் புரியும் காட்சி நடித்துக் காட்டப்படும். சிவ பெருமானின் கையிலுள்ள பாசுபதாஸ்திரத்தைப் பெறுவதற்காக 70 அடிக் கம்பத்தின் உச்சியில் தவம் செய்வது போல் அருச்சுனனாகப் பாவனை செய்தவர் உபவாசமிருந்து காளியம்மன் ஆலயத்திலிருந்து மேளதாள வாத்தியங்கள் முழங்க சேகண்டி சங்கு ஒலி ஒலிக்க பாரதக் கதை படிக்கப்பட்டு தவசி மரத்தை வந்தடைந்து அம்மரத்தில் ஏறி தவம் புரிந்து பாசுபதாஸ்திரத்தை பெற்றுக் கொண்டதாக பாவனை செய்வார். இதன் தத்துவ விளக்கமாக இவ்வாலயத்தில் பாவிக்கப்படும் அம்பு, வில்லு என்பன இந்நிகழ்வில் முக்கிய கருவியாக இருக்கும். இது பக்தியுடன் நிகழ்வுறும்.

அடுத்த தினம் கர்ணனின் படுகளக்காட்சி இடம்பெறும். அறத்தின் மடியில் பிறந்து முன்னைய ஊழ் வினைப் பயனாய் அரக்கர் குலத்தில் சேர்ந்து உயிர்விட்ட தியாகி கர்ணனாக ஒருவர் நடித்துக் காட்ட அருச்சுனனாக ஒருவர் தத்துவமாகத் தோன்றி யுத்த களத்தில் போரிட்டது போல் காட்சி கொடுத்து இறுதியில் கர்ணன் மாண்டு மடிவதை இவர் எடுத்துக் காட்டுவதாக இருக்கும்.

இறுதியாக திரௌபதாதேவி ஆலயத்தின் இறுதி வாதம் முடித்து துரியோதனனின் தொடையைப் பிளந்து அதில் வடியும் இரத்தத்தினால் அன்று விரித்த கூந்தலை திரௌபதாதேவியானவள் அள்ளி முடித்த அற்புதக் காட்சி இடம்பெறும். இதன் வெற்றிக் களிப்பிலே இவ்வூர் மக்கள் இந்திர விழாவான தீமிதிப்பு விழாவை கொண்டாடி மகிழ்கின்றனர்.

உடப்பு வாழ் மக்களின் வாழ்வோடு பின்னிப் பிணையப்பட்டதாக அம்பாளின் சக்திகளே மூலாதாரமாக இருப்பதாக திடமான எத்தனமாகும். திரௌபதியின் அருளின்றி ஒன்றும் அசையாது. தமது பிறப்பிலிருந்து இறப்பு வரையும் அன்னையின் அருளாட்சியே மூலவேராகும் என்ற நாட்டுப் புற வாழ்வியலின் பண்பாடு என்பதை விளங்கக் கூடியதாக உள்ளது.

**க. மகாதேவன்**
**(உடப்பு குறூப் நிருபர்)**

# ஒப்சேர்வர் பத்திரிகையாளர் தினுலி பிரான்சிஸ்கோவுக்கு விருது





தாஜ் சமுத்ரா ஹோட்டலில் அண்மையில் நடைபெற்ற SPARK இறுதிப் போட்டியில் 'SPARK இளம் தொழில் முனைவோர் பத்திரிகையாளர்' விருதை வென்றார், சண்டே ஒப்சேர்வர் பத்திரிகையாளர், தினுலி பிரான்சிஸ்கோ. அவருக்கான விருதை லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் வழங்குகின்றார்.

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மற்றும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்துடன் இணைந்து இலங்கை வர்த்தக சம்மேளனத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு தனித்துவமான முயற்சியான SPARK போட்டியானது, இலங்கையில் இளம் தொழில்முனைவோரை வளர்ப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது முகிழ்ந்து வரும் தொழில்முனைவோருக்கு உதவும் சூழலை உருவாக்குவதிலும், நாட்டின் இளைஞர்களிடையே தொழில் முனைவு கலாசாரத்தை ஊக்குவிப்பதிலும் கவனம் செலுத்துகிறது.

இந்த ஆண்டின் SPARK இறுதிப் போட்டி இரண்டு புதிய விருதுகளை அறிமுகப்படுத்தியது: "இளம் தொழில் முனைவு பத்திரிகையாளர்" மற்றும் "இளம் தொழில் முனைவோர் பத்திரிகையாளர்." என்பனவே அவையாகும். இந்த விருதுகள் இளைஞர்களிடையே தொழில் முனைவு மனப்பான்மையை ஊக்குவிப்பதில் சிறந்து விளங்கும் இளம் ஊடகவியலாளர்கள் மற்றும் இலங்கையில் வணிக நட்பு சூழலை உருவாக்குவதற்கு ஆதரவளிக்கும் மற்றும் தொடக்க வணிகங்களை நடத்தும் ஊடகவியலாளர்களை அங்கீகரிக்கின்றன.

# பட்டம்பெற விரும்புவோருக்கு தனித்துவமான வாய்ப்பு தரும் ICBT

இலங்கையின் முன்னணி தனியார்துறை உயர்கல்வி நிறுவனமான ICBT Campus, மென்பொருள் பொறியியலில் இளங்கலை விஞ்ஞானத்துடன் (Hons) வணிக மேலாண்மை (Hons) பட்டப்படிப்பு கல்வி அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது. 2020, 2021 மற்றும் 2022ஆம் ஆண்டுகளில் உயர்கல்வியை முடித்த மாணவர்களுக்கு, வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் கீழ் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட பட்டத்தைப் பெறுவதற்கான தனித்துவமான மற்றும் அற்புதமான வாய்ப்பை இந்த ஒப்புதல் அளிக்கிறது.

வட்டியில்லா மாணவர் கடன் திட்டத்தின் கீழ், தகுதியுடைய மாணவர்கள் ICBT வளாகத்தின் நான்காண்டு பட்டப்படிப்பைத் தொடர அசாதாரண வாய்ப்பு கிடைக்கும். அரசாங்கம் இதற்கு வட்டியில்லா கல்விக் கடனை வழங்குகிறது. உயர்கல்விக்கு அடிக்கடி ஏற்படும் நிதிச்சுமையின்றி மாணவர்கள் படிப்பில் கவனம் செலுத்த உதவுகிறது. கடனைத் திருப்பிச் செலுத்த ஆரம்பிப்பது பட்டப்படிப்பு முடிந்த ஒரு வருடத்திற்குப் பிறகுதான். பட்டதாரிகள் கடனைத் திருப்பிச் செலுத்தத் தொடங்குவதற்கு முன் தங்கள் வாழ்க்கையை நிறுவிக்கொள்வதற்கான நெகிழ்வுத்தன்மையை அது வழங்குகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு ஏழு ஆண்டுகள் அவகாசம் இருக்கும்.



ICBT வளாகத்தில் வணிக மேலாண்மையில் இளங்கலை (Hons) படிப்பதன் மூலம், மாணவர்கள் அத்தியாவசிய துறைகள் பற்றிய விரிவான புரிதலைப் பெறுவார்கள், மாறும் மற்றும் போட்டித் தொழில்களில் சிறந்து விளங்க பட்டதாரிகளுக்கு அதிகாரம் அளிக்கப்படுகின்றது. வணிக மேலாண்மை பட்டம் நிதி, சந்தைப்படுத்தல், மனித வள மேலாண்மை மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை உள்ளடக்கியது.

மென்பொருள் பொறியியல் திட்டத்தில் இளங்கலை அறிவியல் (Hons) நிரலாக்கம், மென்பொருள் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப கண்டுபிடிப்பு போன்ற முக்கியமான பகுதிகளில் கவனம் செலுத்துகிறது. வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பத் துறையில் வெற்றிகரமான வாழ்க்கையை உருவாக்க மாணவர்களுக்கு ஒரு மதிப்புமிக்க பாதையை வழங்குகிறது. புரோகிராமிங் மற்றும் கிளவுட் முதல் செயற்கை நுண்ணறிவு போன்ற வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் வரை மென்பொருள் திறன்களை வளர்ப்பதில் ஆர்வமுள்ளவர்களுக்கு இந்த பட்டப்படிப்பு சிறந்தது.

உயர்தர கல்வியை வழங்குவதில் 24 வருட அனுபவத்துடன், இந்த பட்டப்படிப்பு திட்டங்களுக்கு பதிவு செய்ய விரும்பும் மாணவர்களுக்கு ICBT வளாகம் சிறந்த தேர்வாக உள்ளது. இந்த வளாகம் கொழும்பு மற்றும் கண்டி ஆகிய இரண்டு இடங்களிலும் அதிநவீன வசதிகளைக் கொண்டுள்ளது. இது மாணவர்களுக்கு ஒரு ஆழ்ந்த மற்றும் சாதகமான கற்றல் சூழலை உறுதி செய்கிறது. விரிவான தொழில் அனுபவத்தைக் கொண்ட அர்ப்பணிப்புள்ள ஆசிரிய உறுப்பினர்கள், வணிக மேலாண்மை அல்லது மென்பொருள் பொறியியல் போன்ற துறைகளில் வெற்றிபெறத் தேவையான அறிவு மற்றும் திறன்களைக் கொண்டு மாணவர்களின் கல்விப் பயணம் முழுவதும் வழிகாட்டி ஆதரவளிப்பார்கள்.

இந்த தனித்துவமான வாய்ப்பைப் பயன்படுத்த, ஆர்வமுள்ள மாணவர்கள் மேலும் தகவல் மற்றும் பதிவு செயல்முறைக்கு உடனடியாக ICBT வளாகத்தைத் தொடர்பு கொள்ள ஊக்குவிக்கப்படுகிறார்கள். அரசாங்கத்தின் வட்டியில்லா கல்விக் கடன் திட்டத்தின் கீழ் கல்வி அமைச்சின் அங்கீகாரம் பெற்ற பட்டத்தைப் பெறுவதற்கான வாய்ப்பைத் தவறவிடாதீர்கள். உங்கள் எதிர்காலத்தைப் பாதுகாத்து, ICBT வளாகத்துடன் நிறைவான கல்விப் பயணத்தைத் தொடங்குங்கள்.

**மேலும் விபரங்களுக்கு, www.icbt.lk ஐப் பார்வையிடவும் அல்லது 0114777888 அல்லது 0814777888ஐ தொடர்பு கொள்ளவும்**



# சாதனை வீரன் சஹ்மி சஹீதை பாராட்டி கௌரவிக்கும் வைபவம்





பேருவளை சாதனை வீரன் சஹ்மி சஹீதை பாராட்டி கௌரவிக்கும் வைபவமொன்று மஹாகொடை ஐ.எல்.எம். ஸம்ஸுதீன் மகா வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

அதிபர் பாத்திமா சிஹானா தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் சஹ்மி சஹீதின் தாயார், பேருவளை நகர சபை முன்னாள் உப தலைவர் ஹஸன் பாஸி, ஸிமி ஹோல்டிங் முகாமைத்துவ தலைவர் செய்ஹு யூஸுப் முஹம்மத் இஜ்லான், பிரதி அதிபர் பாத்திமா ரைஸா, பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளர் மஹ்தி ஹஸன், பிரபல சமூகசேவையாளர் நபுஹான் சிஹாப்தீன் உட்பட பிரமுகர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க, பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் என பெருமளவிலானோர் பங்குபற்றினர். கரையோரமாக நாட்டை '1500 கிலோ மீற்றர் தூரத்தை' 45 நாட்களில் சுற்றி சாதனை நிலைநாட்டிய சஹ்மி சஹீத் இப் பாடசாலையின் பழைய மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

**பேருவளை பீ.எம். முக்தார்**

# "சொல்லின் செல்வர்" இர.சிவலிங்கத்தின் இருபத்தைந்தாவது நினைவுப் பேருரை

'சொல்லின் செல்வர்' இர. சிவலிங்கத்தின் இருபத்தைந்தாவது நினைவுப் பேருரை இன்று றைலன்ஸ் கல்லூரி பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. "பெருந்தோட்டத் தொழிலாளர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் சட்டத்தின் வகிபங்கு பற்றிய ஓர் மதிப்பீடு" எனும் தலைப்பில் கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட பேராசிரியர் அ. சர்வேஸ்வரன் பேருரை ஆற்றவுள்ளார். பேராசிரியர் அ.சர்வேஸ்வரன் இலங்கையின் சமகால சட்ட அறிஞர்களில் குறிப்பிடத்தக்கவர் என்பதோடு ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்காக போராடும் பல்கலைக்கழக ஆசிரியர்களில் முதன்மை வகிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வேறு சில நிகழ்வுகளும் அன்றைய தினம் நடைபெறவுள்ளன. அண்மையில் நடந்த இலங்கை கல்வி நிர்வாக சேவை போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து பதவியுயர்வு பெற்றுள்ள மலையக கல்வியாளர்கள் பாராட்டப்படவுள்ளனர். அத்துடன் இறுதியாக நடைபெற்ற கல்விப் பொதுத்தராதர உயர்தர பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் உயர்சித்தி பெற்று பல்கலைக்கழகம் செல்லவுள்ள மலையக மாணவர்கள் சிலரும் கௌரவிக்கப்படவுள்ளனர். அத்துடன் இலங்கை வெளிநாட்டுச்சேவை போட்டிப்பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்டு தற்போது புதுடில்லியில் தொழில் சார் பயிற்சிபெறும் பாமினி செல்லத்துரையும் கௌரவிக்கப் படவுள்ளார். பத்தாயிரம் பேர் தோற்றிய மேற்படி பரீட்சையில் தெரிவுசெய்யப் பட்ட 19 பேரில் பாமினியும் ஒருவர் என்பது மலையகத்துக்கு பெருமை சேர்க்கிறது. பாமினி அவர்கள் கடந்த 13 வருடங்களாக இலங்கை கல்வி நிர்வாக சேவையில் பணிபுரிந்தவர். இவர் நாவலப்பிட்டியை பிறப்பிடமாகக் கொண்டவர். மலையகத்தின் இளைஞர் யுவதிகளுக்கு முன்மாதிரியாக திகழும் இவரை கௌரவிப்பதில் ஞாபகார்த்த குழு பெருமைகொள்கிறது.

சிவலிங்கம் ஞாபகார்த்த குழுவினர் கடந்த கால் நூற்றாண்டு காலத்தில் குறிப்பிடத்தக்க சமூக, இலக்கியப் பணிகளை செய்துவருகின்றனர். வருடம்தோறும் நடக்கும் நினைவுப் பேருரைகள் நூல்களாக வெளியிடப்படுகின்றன. இவைகள் அனைத்தும் மலையக வரலாறு மற்றும் மறைக்கப்பட்ட சமூக பிரச்சினைகளை ஆவணப்படுத்துவதோடு மலையகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்களுக்கு பெறுமதிமிக்க ஆய்வுக் கருவூலமாக திகழ்கின்றது. அத்துடன் முதல் பதினெட்டு பேருரைகளை உள்ளடக்கி "மலையகம்: பல்பக்கப்பார்வை" எனும் தொகுதியாக வெளியிடப்பட்டுள்ளது.

**பேராசிரியர். தை. தனராஜ்**
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்

# முற்றுப்புள்ளி ( . )

முற்றுப்புள்ளியில்லா உறவுகளும்
முடிவுரைக்காய் முற்றுப்பெற
முற்றுப்புள்ளிகளை நாடுது....

கேள்விக்குறிகளாய்
சில உறவுகள்...
அடைப்புக்குறிக்குள்
சில உறவுகள்...
வியப்புக்குறியாய்
சில உறவுகள்...
கால் புள்ளியாய்
அரைப்புள்ளியாய்
முக்கால் புள்ளியாய்
சில உறவுகள்...
உணர்ச்சிக்குறியாய் சில உறவுகள்..
இணைப்புக் கோடாய்
இடைக்கோடாய்
சாய்கோடாய் இன்னும்
சில உறவுகள்...
வாழும் வாழ்வில் எத்தனை உறவுகள்...
நிறுத்தற் குறி கோலங்களாய்..
பிறை அடைப்புக் குறியாய்
அடைத்து வைத்தாலும்
பிரிந்து போக நினைக்கும் உறவுகளே
அதிகம்..
பிடிக்காவிட்டால் பிரிந்து போகட்டும்...
கால்புள்ளியாய் கை கோர்த்து
கரைசேர மனமில்லையானால்...
முற்றுப்பெறா முற்றுப் புள்ளிகளாய்

முடிவுரை எழுதாமல் முற்றுப்புள்ளி
யிட்டு முடிவு தேடுவதே
முன்நகர முதலுதவியான முடிவு...

**நுஸ்ரத் மஹ்ரூப், மாதம்பை.**



# புதிய கூட்டணி ஆரம்பமானபோது மஹிந்த பற்றி பேசப்பட்டது என்ன?

ஜனாதிபதித் தேர்தல் களம் சூடு பிடித்துள்ள நிலையில், தபால் மூல வாக்குகள் தீர்க்கமான சமிக்ஞையை வழங்கியிருக்கின்றன. பொலிஸாரும் இராணுவத்தினரும் ரணிலை நோக்கிச் சென்றிருந்த போது ஆசிரியர்களும் ஏனையோரும் அனுரவை நோக்கிச் சென்றுள்ளனர். இதனடிப்படையில் ஜனாதிபதித் தேர்தல் தற்போது இரண்டு வேட்பாளர்களுக்கிடையில் சூடு பிடித்துள்ளமை தெளிவாகியுள்ளது.

ஜனாதிபதி ரணிலும் கடந்த வாரம் முழுவதும் பிரசாரக் கூட்டங்களில் அதிக நேரத்தைச் செலவிட்ட அதே நேரம் ஏனைய வேட்பாளர்களும் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டிருந்தனர்.

ஜனாதிபதி ரணில் கடந்த சனிக்கிழமை ஐந்து பொதுக் கூட்டங்களில் உரையாற்றியிருந்த அதேநேரம், ஏனைய வேட்பாளர்களால் அவ்வாறு பல பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ள முடியாமல் போனமை அரசியல் களத்தில் பேசுபொருளானது. ஜனாதிபதி ஞாயிற்றுக் கிழமை நான்கு பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டிருந்தார்.

ஜனாதிபதி கடந்த திங்கட்கிழமை பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்ளவில்லை. என்றாலும், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் அக்கட்சியின் அழைப்பை ஏற்று கலந்து கொண்டிருந்தார்.

கடந்த சனிக்கிழமை காலையே பண்டாரவளைக்குச் சென்ற ஜனாதிபதி ரணில், அங்கு இடம்பெற்ற மிகவும் வெற்றிகரமான பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அதன் பின்னர் பொலனறுவை, திருகோணமலை, காத்தான்குடி மற்றும் சம்மாந்துறை ஆகிய பிரதேசங்களில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்ட அவர், சம்மாந்துறை பொதுக் கூட்டத்தில் கலந்து கொள்ளச் சென்ற போது நேரம் இரவு பத்து மணியைத் தாண்டியிருந்தது.

எனினும் ஜனாதிபதி வரும் வரைக்கும் கூடியிருந்த மக்கள் கலைந்து செல்லாது விளையாட்டரங்கில் கூடியிருந்தமை விசேட அம்சமாகும்.

அன்றைய தினம் ஐந்து கூட்டங்களில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில், மறுநாள் வவுனியா, கெகிராவை, சிலாபம் மற்றும் தொம்பே ஆகிய நகரங்களுக்குச் சென்று அங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொண்டார். திங்கட்கிழமை பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை என்றாலும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு மற்றும் இளைஞர் மாநாட்டிலும் ஜனாதிபதி ரணில் கலந்து கொண்டார். அதேபோன்று கடந்த வாரம் முழுவதும் மாலையில் ஜனாதிபதி பொதுக் கூட்டங்களில் கலந்து கொண்டு மக்களோடிருந்தார்.

தேர்தல் ஆணைக்குழுவின் சட்டங்களுக்கு அமைய செலவுகளுக்கான வரம்புகள் ஏற்படுத்தப்பட்டிருப்பதோடு, ஜனாதிபதி தனது பிரசாரக் கூட்டங்கள் பலவற்றை இரத்துச் செய்துள்ளார். இதேவேளை தான் பங்கேற்ற பண்டாரவளை கூட்டத்தில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள் அநுரவின் வெலிமடை கூட்டத்திற்கு வந்தவர்கள் என சமூக வலைத்தளங்களில் எடுத்து காட்டப்பட்டதாக ஜனாதிபதிக்கு முறைப்பாடு கிடைத்தது. இது தொடர்பில் அங்கிருந்த பாராளுமன்ற உறுப்பினர் வஜிர "இந்த திசை காட்டி கட்சியினது அலையானது, ஊதப்பட்ட பலூனைப் போன்று வெறும் ஊடக தந்திரம் மாத்திரமேயாகும். உள்ளே இருப்பது வெறும் காற்றுத்தான். பணம் இருப்பதால் ஊடகங்களில் பொய்களை காட்டுகிறார்கள்" என்றார்.

ஜனாதிபதி சர்வதேச நாணய நிதியத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் விவாதத்திற்கு அழைப்பு விடுத்த போதும் சஜித், அநுர இருவருமே இந்த அழைப்பிற்கு பதிலளிக்காமல் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.

அதேபோன்று ஜனாதிபதி ரணில் தற்போது தனது அரசியல் மேடைகளில் அவர்களுக்குச் சவால் விட்ட போதிலும், அவற்றிற்குப் பதிலளிக்காமல் அவர்கள் இருவரும் தப்பிச் செல்லும் நிலையையே காண முடிகிறது. சஜித்திற்கு வழங்கும் வாக்குகள் அநுரவிற்கு வழங்கும் வாக்குகளுக்குச் சமனானது என ஜனாதிபதி ரணில் மஹியங்கனையில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் வைத்து தெரிவித்திருந்தார். எனினும் அதற்கு பதிலளித்தது ஆஷு மாரசிங்கவாகும். "ஜனாதிபதி தாம் செய்வதை கூறும் தலைவர் என்பதை மக்கள் நம்புகின்றனர். ஏனெனில் வரலாறு நெடுகிலும் அரச ஊழியர்களின் சம்பளத்தை உயர்த்தியவர் இவர் ஒருவரேயாகும்" என அவர் கூறினார்.

அமைச்சரவை உள்ளூராட்சி மன்ற வேட்பு மனுக்களை இரத்துச் செய்தது மிகவும் நல்லது. காரணம் கட்சி பிரச்சினைப்படுத்துவதால் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தவர்களால் ஜனாதிபதித் தேர்தலில் பணியாற்ற முடியாமல் இருந்தது.

அடுத்தது ஐக்கிய மக்கள் சக்தியினால் "ப்ளு" பிரிண்ட் என்ற பெயரில் முன்வைக்கப்பட்டுள்ள பொருளாதார வேலைத்திட்டம் மற்றும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் இடையில் தெளிவான வித்தியாசங்கள் உள்ளன" என வியாழக்கிழமை காலை ஜனாதிபதி செயலகத்திற்கு வந்திருந்த ஷெஹான் சேமசிங்க கூறினார்.

"ஆமாம், ப்ளு பிரிண்ட் பொருளாதார வேலைத்திட்டத்தை ஹர்ஷ, எரான், கபீர் ஆகிய மூவரே தயாரித்துள்ளனர்.

இதனை அவர்கள் தயாரித்த போது சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தைத் தயாரித்தது டளஸ், ஜீ.எல். பீரிஸ், கொடஹேவா மற்றும் பாட்டலி ஆகியோராகும். இந்த இரண்டின் கொள்கைகளும் வெவ்வேறானவை" என்றார் பாராளுமன்ற உறுப்பினர் தொலவத்தை.

"ப்ளு" பிரிண்ட் வேலைத்திட்டத்தில் அரச சேவையில் ஆட் குறைப்புச் செய்யப்படும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர்களிடையே இராணுவ வீரர்களும் கூட உள்ளனர். இதைப் பற்றி ஏன் எவரும் பேசுகிறார்கள் இல்லை?" என வினா எழுப்பினர் ஜனாதிபதி ரணில்.

"ஆமாம். 39 ஜனாதிபதி வேட்பாளர்கள் இருந்த போதிலும், ஒருவரும் இதைப் பற்றிப் பேசவில்லை. இதைப்பற்றி நாமாவது பேசுவோம்" என்றார் அமைச்சர் பிரசன்ன.

ஆமாம், சஜித்தினதும், அநுரவினதும் தேர்தல் விஞ்ஞாபனங்களில் இருக்கும் இளைஞர்கள் கொள்கைகள் முரண்பாடானவை. பொருளாதார சமூகக் கொள்கைகள் முரண்பாடானவை.

எல்லாமே பொய்கள். சில விடயங்கள் ஜனாதிபதி முன்வைத்துள்ள கொள்கைகளாகும். அவற்றிற்கு வேறு பெயர்களைப் போட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. இவர்களின் வேலைகள் வெட்கக் கேடானவை" என முன்னாள் அமைச்சர் மனுஷவும் அவர்களோடு இணைந்து கொண்டார்.

சஜித்தின் இரண்டு தேர்தல் விஞ்ஞாபனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் என்ன கூறுகிறார் எனத் தெரியவில்லை. காரணம் ஒன்றைத் தயாரித்தது அவரல்லவா" என்றார் அங்கிருந்த ஹரினும் வினா எழுப்பினார்.

இவ்வாறு அரசாங்கத்தின் கொள்கைகளில் குறிப்பிடப்படும் போது மாலையில் பல இராஜாங்க அமைச்சர்களை இராஜாங்க அமைச்சுப் பதவிகளிலிருந்து நீக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவிற்கு பணிப்புரை விடுத்தார். அதனடிப்படையில், இந்திக அனுருத்த, பிரேமலால் ஜயசேகர, மொஹான் பிரியதர்ஷன டி சில்வா மற்றும் சிறிபால கம்லத் ஆகியோர் அமைச்சுப் பதவிகளிலிருந்து வியாழக்கிழமை மாலை நீக்கப்பட்டனர்.

(17 ஆம் பக்கம் பார்க்க)

எம். எஸ். முஸப்பிர்



பேராசிரியர்
கே.ரீ.கணேசலிங்கம்
யாழ். பல்கலைக்கழகம்

## ஹமாஸ் – இஸ்ரேலியப் போர்

# பணய கைதிகள் விவகாரத்தால் மாற்றப்படும் உலக ஒழுங்கு?

ஹமாஸ் இஸ்ரேல் போர் ஏறக்குறைய 11 மாதங்களை கடந்து நகர்கிறது. தற்போதைய பிராந்திய அரசியல் சூழலில் யூதர்கள், போரை தொடங்கிய ஹமாஸின் மீதான நடவடிக்கையை விடுத்து இஸ்ரேலிய அரசாங்கத்துக்கு எதிராக போராட்டங்களை தீவிரப்படுத்தி வருகின்றனர். பணயக் கைதிகளை மீட்டெடுக்கும் கோரிக்கையை முன்வைத்து அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் திரண்டு நாடு முழுவதும் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். இத்தகைய போராட்டம் இஸ்ரேல் ஹமாஸ் போரில் மாற்றத்தை ஏற்படுத்துமா என்ற கேள்வியை நோக்கிய புரிதலை இக்கட்டுரை ஏற்படுத்த விளைகிறது.

போர் நிறுத்தம் எட்டப்படாத பட்சத்தில் இன்னும் பல பணயக் கைதிகளின் சடலங்களை இஸ்ரேலுக்கு அனுப்புவதாக ஹமாஸ் அமைப்பு அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. இது தொடர்பில் நீண்ட அறிக்கை ஒன்றினை ஹமாஸ் அமைப்பு பணயக் கைதிகளின் குடும்பங்களுக்காக வெளிப்படுத்தியுள்ளது. பேச்சுவார்த்தைக்கு பதிலாக இராணுவ அழுத்தத்தினால் பணயக் கைதிகளை விடுவிக்க நெதன்யாகு அரசாங்கம் வலியுறுத்துவது என்பது பணயக் கைதிகள் தங்கள் குடும்பங்களுக்கு சடலங்களாக திருப்பி அனுப்பப்படுவதை ஊக்குவிப்பதாக அமைவதோடு அவர்கள் இறக்க வேண்டுமா அல்லது உயிருடன் இருக்க வேண்டுமா என்பதை பணயக் கைதிகளின் குடும்பங்கள் முடிவு செய்ய வேண்டும் எனவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 31.08.2024 காசாப் பகுதியில் ஆறு பணயக் கைதிகளின் சடலங்கள் கண்டெடுக்கப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவம் அறிவித்துள்ளது. இதன் பிற்பாடு ஹமாஸுடைய அறிக்கையும் யூத மக்களினுடைய எதிர்ப்புணர்வும் நெதன்யாகு அரசாங்கத்துக்கு நெருக்கடியாக மாறியுள்ளது.

ஹமாஸ் – இஸ்ரேல் போர் தொடங்கி பல சந்தர்ப்பங்களில் யூதர்கள் போரை நிறுத்துவதற்கு பல போராட்டங்களை ஆரம்பகாலத்தில் பணயக் கைதிகள் தொடர்பாக முன்னெடுத்திருந்தனர். ஆனால் அவை எவையும் எத்தகைய விளைவையும் ஏற்படுத்தவில்லை. ஆனால் தற்போது இஸ்ரேலின் தொழிற்சங்கங்கள் பாரிய அளவில் அரசுக்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. டெல்அவிவ் உட்பட இஸ்ரேலின் நகரங்கள் அனைத்திலும் போராட்டம் நிகழ்ந்து வருகின்றது. ஆயிரக்கணக்கான மக்கள் ஒன்று கூடி பிரதமர் நெதன்யாகுவின் அலுவலகத்தை முற்றுகையிட்டுள்ளனர். இதற்கு எதிராக இராணுவமும் காவல்துறையும் செயல்பட்ட போதும் போராட்டம் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது. யூதர்கள் நெருக்கடி மிக்க சூழலில் தமது உறவுகளை மீட்டெடுப்பதற்கு அரசாங்கத்தை ஹமாஸ் முன்வைத்திருக்கும் பேச்சுவார்த்தை மற்றும் சமாதான முயற்சிக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு கோருவதோடு பணயக் கைதிகளை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் எனவும் வலியுறுத்துகின்றன. கடந்த 01.09.2024 இல் இஸ்ரேலில் நாடு முழுவதும் செயல்படும் தொழிற்சங்கங்கள் அரசுக்கு எதிராக போராடுவதற்கு அழைப்பு விடுத்திருந்தன. அத்தகைய அழைப்பை ஏற்று பல்லாயிரக்கணக்கான யூதர்கள் வீதிக்கு வந்து அரசுக்கு எதிராக போராட்டத்தை முன்னெடுத்தனர். புரதான வீதிப் போக்குவரத்து மற்றும் பென்கூரியர் விமான நிலையமும் குறிப்பிட்ட நேரத்துக்கு மூடப்பட வேண்டிய நிர்ப்பந்தமும் ஏற்பட்டது. போராட்டத்தை நீடிப்பதன் மூலம் இஸ்ரேல் அரசின் ஹமாஸுக்கு எதிரான நடவடிக் கைகளை நிறுத்த முடியுமா என்ற கேள்வி முதன்மையானது. இதனை விளங்கிக் கொள்வதற்கு இது சார்ந்து எழுந்திருக்கின்ற பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் சூழலை புரிந்து கொள்ளுதல் வேண்டும்.



முதலாவது, இஸ்ரேல் நடத்தும் போர் ஹமாஸுக்கும் பலஸ்தீன மக்களுக்கு எதிரானது என்ற ஒரு பார்வை பொதுத்தளத்தில் நிலவுகிறது. ஆனால் அடிப்படையில் அது பிராந்திய ரீதியான ஒழுங்கையும், சர்வதேச அரசியல் ஒழுங்கையும் கட்டமைப்பதற்கான போராக அமைந்துள்ளது. அடிப்படையில் அதற்கு ஏதோ ஒரு பிராந்தியப் பரிமாணம் உள்ளது. குறிப்பாக அராபிய மக்களின் மீதான போர் என்ற அடிப்படையில் மேற்காசியாவில் எழுச்சி பெறக்கூடிய அரசுகளை முற்றாகவே அழித்தொழிப்பது என்ற நோக்கத்தோடு தொடங்கப்பட்ட போராக உள்ளது. அதனால் இத்தகைய போரை நிறுத்துவது என்பது அல்லது கைவிடுவது என்பது கடினமான ஒரு செய்முறையாக காணப்படுகிறது. ஈரானுக்கு எதிரான அணுகுமுறைகளை வெற்றிகரமாக மேற்கொண்டிருக்கும் இஸ்ரேல், மேற்குலகம் அது குறித்தான அரசியலுடன் இராணுவ, பொருளாதார ஒழுங்கையும் கட்டமைப்பதில் கரிசனை கொண்டு செயல்படுகிறது. இஸ்ரேல் ஹமாஸுக்கு எதிராக மட்டும் இந்த போர் நிகழ்த்தப்படவில்லை. முழு அராபிய நாடுகளுக்கு எதிராகவும், அராபியர்களை துணையாக வைத்துக் கொண்டும் இத்தகைய போரை இஸ்ரேலும் மேற்குலகமும் ஒன்றிணைந்து செயல்படுத்துகின்றன. இஸ்ரேல் பணயக் கைதிகளின் குடும்பங்கள் கூறுவது போல் அதனால் இப்போரை முடிவுக்கு கொண்டுவருவதும் அல்லது அவர்களை மீட்பதற்காக போரை கைவிடுவதும் சாத்தியமான ஒன்றாக தென்படவில்லை. அதனை ஒரு உத்தியாக பயன்படுத்திக் கொண்டாலும் அதற்கான விளைவுகள் ஹமாஸினால் முன்னிறுத்தப்படும். அவ்வாறு முன்னிறுத்தப்படும் விளைவுகள், இஸ்ரேலுக்கும் மேற்கு உலகத்துக்கும் தொடங்கப்பட்ட போரை உண்மையான நோக்கத்தை இல்லாமல் செய்துவிடும். ஆகவே இப்போது இலகுவில் சாத்தியமான ஒரு செய்முறை போல் உள்ளது. சுமூகமான ஒரு தீர்வுக்குள் வந்துவிடும் என்று எதிர்பார்ப்பது கடினமானது.

இரண்டாவது சர்வதேச அரசியல் ஒழுங்கு, போருக்கு ஊடாக கட்டமைக்கப்பட்டு வருகின்றது. சீனாவால் எழுச்சி பெற்று வந்த பட்டி மற்றும் பாதை முன்முயற்சி நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறே பிரிக்ஸ் என்ற அமைப்பின் விரிவாக்கம் மேற்காசிய நாடுகளையும் இணைப்பதில் கொண்ட ஈடுபாடு நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. இதனால் சீனாவுடனான அமெரிக்க மற்றும் மேற்குலகத்தின் அணுகுமுறை ஆழமானதாக உள்ளதோடு நோக்கு நிலையிலும் மேற்குலகத்துக்கு ஆரோக்கியமான விளைவுகளை கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. அதனால் இப்போது உடனடியாகவும் நீண்டகால நோக்கிலும் அதிக மாற்றத்தை மேற்கொள்ள வழிவகுத்துள்ளது. இந்த போரில் வெற்றி பெற்ற தரப்பாக சீன கருதப்பட்டாலும் அதாவது சமகாலத்தில் ஏகாதிபத்திய அரசுகளுக்குள்ளேயே உக்ரேன் ரஷ்யப் போரிலும் ஹமாஸ் – இஸ்ரேல் போரிலும் சீனா பங்கெடுக்காமல் அமைதியாக இருப்பது என்பது, அதன் வெற்றியை உறுதிப்படுத்தியதாக பல தரப்புகள் விவாதித்து வருகின்றன. ஆனால் இப்போரில் ஈடுபட்ட மேற்குலகம் அதனூடாக அதிக இலாபங்கள் உட்பட்ட உலக ஒழுங்கை வரையறுப்பதில் வெற்றிகரமான பங்கை உறுதிப்படுத்தி இருக்கின்றன. அது மட்டுமல்ல சீனாவின் பட்டி மற்றும் பாதை முன்முயற்சி வடிவங்களையும் போக்குகளையும் திசைதிருப்பி உள்ளது. ஆப்பிரிக்காவையும் இலத்தீனமெரிக்க நாடுகளையும் சீனா பெரிய அளவில் ஒன்றிணைத்த போதும் மேற்காசியாவுக்குள் இஸ்ரேலின் அணுகுமுறையினால் அத்தகைய ஒன்றிணைப்பை வெற்றிகரமாக சாத்தியப்படுத்த முடியவில்லை. ஆசியாவின் உப பிராந்திங்கள் அனைத்துமே குழப்பத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. உலக ஒழுங்கு மீளவும் முழுமையான மேற்குலகின் கட்டுப்பாட்டுக்குள் தங்கியுள்ளது. இத்தகைய சூழல் ஒன்றை நோக்கி இஸ்ரேல் – ஹமாஸ் போர் விரிவாக்கப்படுகிறது. அதனால் இந்த போரை பணயக் கைதிகளின் குடும்பங்கள் கருதுவது போல் இலகுவில் கைவிடுவது என்பது இஸ்ரேலால் மட்டுமல்ல, மேற்குலகத்தாலும் முடியாததாக உள்ளது.

எனவே, இஸ்ரேல் – ஹமாஸ் போர் பணயக் கைதிகளுக்கானதாக அல்லது அதற்கான சமாதான முயற்சிகளுக்கான ஒத்துழைப்பினை தரக்கூடியதாக அமையுமா என்ற சந்தேகம் வலுவடைந்துள்ளது. ஆனால் இஸ்ரேலிய புலனாய்வுத்துறை யூத பணயக் கைதிகளை மீட்பது பெரும் தோல்வியை எதிர்கொண்டுள்ளது. போர் தொடங்கி 11 மாதங்களாக பணயக் கைதிகள் மறைத்து வைத்திருக்கப்படும் இடங்களையும் சந்தர்ப்பங்களையும் மொசாட் உளவு பிரிவினால் கண்டுபிடித்து மீட்க முடியாதிருப்பது துரதிர்ஷ்டவசமானது.

ஒரு வகையில் ஹமாஸ், காசா எல்லைக்குள்ளேயே பணயக் கைதிகளின் சடலங்களை விட்டுச் செல்வதனால் பலவீனம் அதிகரிக்கின்றது. அதேவேளை ஹமாஸ் தரப்பு மொசாட்டையும் கையாளும் திறன் உடையதாக மாறிவருகிறது என்பதை புரிந்து கொள்ளுதல் வேண்டும். யூத இராணுவத்துக்கும் இது ஒரு பெரும் எச்சரிக்கையாகவும் பலவீனமானதாகவும் தென்படுகிறது. எனவே பணயக் கைதிகள் குடும்பங்கள் எத்தகைய போராட்டத்தை முன்னெடுத்தாலும் அதற்கான சரியான தீர்வை இஸ்ரேலிய அரசாங்கம் மேற்கொள்ளுமா என்பது கேள்விக்குரியது. காரணம் இது ஒரு பிராந்திய மற்றும் சர்வதேச அரசியல் பரிமாணங்களைக் கொண்ட போர் என்பதை கவனத்தில் கொள்ளுதல் வேண்டும்.

# நாட்டின் பின்னடைவுக்கு முஸ்லிம்கள் என்றும் துணை போகக்கூடாது



**ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் கொழும்பு மாநகர சபையின் முன்னாள் உறுப்பினரும் ஐக்கிய தேசியக் கட்சியின் கிராண்ட்பாஸ் வடக்கு அமைப்பாளருமான ஏ.ஆர்.எம் சபான் தினகரன் வார மஞ்சரிக்கென அளித்த நேர்காணல்.....**

## மக்களின் நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே

**கேள்வி: எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருகிறது. கடும் பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி நாடு மீட்சி பெற்றுள்ள சூழலில் நடைபெறும் இத்தேர்தலை நீங்கள் எவ்வாறு நோக்குகிறீர்கள்?**

பதில்: இரு வருடங்களுக்கு முன்னர் நாடு எப்படி இருந்தது என்பதை சகலரும் அறிவர். பெற்றோல், டிசல், மண்ணெண்ணெய், சமையல் எரிவாயு மாத்திரமல்லாமல் குழந்தைகளுக்கான பால்மா உள்ளிட்ட அனைத்துமே கிடைக்கப்பெறாத, துர்ப்பாக்கிய நிலை நாட்டில் ஏற்பட்டிருந்தது. அனைத்து பொருட்களினதும் விலைகள் பெரிதும் அதிகரித்திருந்தன. பணமிருந்தும் சந்தையில் பொருட்கள் இல்லாத நிலை. நாடு முகம் கொடுத்திருந்த பொருளாதார வீழ்ச்சியின் விளைவே அது.

நாட்டின் இந்நிலைக்கு வீண்விரயம், ஊழல், மோசடி என்பனவே காரணம் என அச்சமயம் உருவான போராட்டக்காரர்கள் (அரகலய) குறிப்பிட்டதோடு அவற்றை ஒழித்துக்கட்டுமாறு கோரினர்.

அதனால் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியை விட்டு வெளியேறியதோடு, நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரமதாசவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. அதற்கு முன்வர எதிர்க்கட்சித் தலைவர் தயக்கம் காட்டினார். இச்சமயம் அமைச்சர் அலி சப்ரி எதிர்க்கட்சித் தலைவருடன் தொடர்பு கொண்டு நாட்டை பொறுப்பெடுத்து முன்கொண்டு செல்லுமாறு கேட்டபோது, தனக்கு இரண்டு நாட்கள் அவகாசம் தாருமாறும் தனது பொருளாதார குழுவுடன் கலந்துரையாடி பதிலளிப்பதாகவும் கூறியுள்ளார்.

ஆனால் மூன்று, நான்கு நாட்கள் கடந்த பின்னர் அமைச்சர் அலி சப்ரியுடன் தொடர்பு கொண்ட எதிர்க்கட்சித் தலைவர், 'அம்மோ... இதைப் பொறுப்பெடுக்க முடியாது. இது மிகவும் கஷ்டமான காரியம். எனது அரசியல் பயணத்துக்கு இது இடையூறாக அமையும். தற்போதைய நிலையில் நாட்டை யாராலும் நிர்வகிக்க முடியாது' எனக் கூறியுள்ளார்.

அச்சமயம் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டது. அவர் ஏற்கனவே பல தடவைகள் இப்பதவியை வகித்துள்ளார். அதனால் அந்த இக்கட்டான சூழலில் அவர் பிரதமர் பதவியை ஏற்றார்.

அதனைத் தொடர்ந்த சொற்ப காலத்தில் நாட்டின் ஜனாதிபதி பதவியையும் ஏற்கும் நிலைக்கு அவர் உள்ளானார். நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார ரீதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான விரிவான வேலைத்திட்டங்களை ஆரம்பித்தார். அதன் ஊடாக பொருளாதார நெருக்கடி நிலவிய போது நாட்டில் காணப்பட்ட

## வாக்குறுதிகளை அள்ளிவீசி சாதனை படைக்கிறார் எதிர்க்கட்சித் தலைவர்

நெருக்கடிகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நாட்டை விட்டு நீங்கலாயின. பொருளாதாரப் பிரதிபலன்களை மக்கள் பெற்றுக் கொள்ளலாயினர். இவ்வாறான சூழலில் தான் இத்தேர்தல் நடை பெறுகிறது.

**கேள்வி: பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளான நாட்டை குறுகிய காலப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீட்டெடுத்துள்ளமை குறித்து குறிப்பிடுவதாயின்?**

பதில்: பொருளாதார நெருக்கடியினால் நாடு அதலபாதாளத்தில் வீழ்ந்திருந்தது. அப்பொருளாதார சவாலுக்கு முகம் கொடுக்க முடியாது மக்களின் நலன்களைக் கூட கருத்தில் கொள்ளாது அன்றைய ஆட்சியாளர்கள் பதவிகளை விட்டு வெளியேறியதோடல்லாமல் எதிர்க்கட்சித் தலைவரும் நாட்டின் தலைமையை ஏற்க மறுத்தார்.

அந்த சூழலில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி, பொருளாதார ரீதியில் நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்காக, இரவு பகல் பாராது அர்ப்பணிப்புடன் அயராது உழைத்தார். அதன் பயனாக பொருளாதார நெருக்கடி நிலவிய போது நாட்டில் காணப்பட்ட நிலை இருவருடங்களுக்குள் நீங்கியது. அதற்கான பெருமையும் கௌரவமும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு உரித்தாகும்.

அவரிடம் பரந்த அறிவும் அனுபவமும் முதிர்ச்சியும் உள்ளது. சர்வதேச மட்டத்தில் நல்ல அங்கீகாரம் இருக்கிறது. நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கு அவை அவருக்கு பெரிதும் பயனளித்தன.

**கேள்வி: தற்போதைய பொருளாதார நிலை எவ்வாறுள்ளதெனக் கருதுகிறீர்கள்?**

பதில்: நாட்டின் பொருளாதாரம் ஸ்திர நிலையை அடைந்துள்ளது. ரூபாவின் பெறுமதி உயர்ந்து டொலரின் விலை குறைந்துள்ளது. மக்களின் கரங்களில் பணம் புழங்குகின்றது. சந்தையில் பொருட்களுக்கு எவ்வித தட்டுப்பாடும் கிடையாது. அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது. பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன. உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது. ஏற்றுமதி வருமானம் உயர்ந்துள்ளது. வெளிநாடுகளில் தொழில்புரிபவர்கள் அனுப்பிவைக்கும் அந்நியச் செலாவணி அதிகரித்துள்ளது. வெளிநாட்டு செலாவணி கையிருப்பு பலமடைந்துள்ளது. இவை அனைத்துக்கும் அடித்தளமிட்டவர் ஜனாதிபதி தான்.

ஆனால் அன்று மக்கள் பட்டினியில் இருப்பதையும் எதிர்கால சந்ததியினரின் நலன்களையும் கருத்தில் எடுக்காது எதிர்க்கட்சித் தலைவர் செயற்பட்டார் என்பதை மறந்துவிடலாகாது. தமது அரசியல் நலன்களுக்காக மக்கள் கஷ்டப்படுவதை விரும்பும் தலைவராக அவர் இருந்தார்.

**கேள்வி: பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களுக்கும் பாதிப்புகளுக்கும் மக்கள் முகம் கொடுத்திருந்த போது அவர்களுக்காக தீர்மானம் எடுக்காதவர்கள், தற்போது அதே மக்களின் வாக்குகளை இலக்காகக் கொண்டுள்ளனரே?**

பதில்: இவர்களைப் பற்றி மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். பொருளாதார நெருக்கடியின் துன்பங்களின் போது தங்களுக்கு நிவாரணம் பெற்றுக் கொடுத்த தலைவருக்கு நன்றிக்கடன் செலுத்துவதே வாக்காளர்களின் விருப்பமாக உள்ளது. அதனை அனைத்து குடிமக்களும் தம் பொறுப்பாக கருதுகின்றனர்.

கடந்த பொருளாதார நெருக்கடி காலத்தில் தங்களின் நலன்களுக்காக தீர்மானம் எடுக்கத் தவறியவர்களிடம் நாட்டை ஒப்படைக்க அவர்கள் ஒரு போதும் தயாரில்லை. மீண்டுமொரு தடவை பொருளாதார நெருக்கடி ஏற்பட்டால் அதே போன்று தான் இவர்கள் செயற்படுவர் என்பதே மக்களின் கருத்தாக உள்ளது.

**கேள்வி: தற்போது தேர்தல் மேடைகளில் அளிக்கப்படும் வாக்குறுதிகளை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: இத்தேர்தலில் போட்டியிடும் எல்லா அபேட்சகர்களும் வாக்குறுதிகளை வழங்கவே செய்கின்றனர். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் வாக்குறுதி வழங்குவதில் சாதனை படைக்க விரும்புகிறார் போலும். மேடைக்கு மேடை வாக்குறுதிகளை அள்ளிவீசுகிறார். இத்தேர்தலில் அதிகூடிய வாக்குறுதிகளை வழங்கிய அபேட்சகர் என்ற பெருமையை அவர் பெற்றுவிட்டார். ஆனால் அவரது வாக்குறுதிகள் அனைத்தும் நடைமுறைச்சாத்தியமற்றவை. நிறைவேற்றப்படாதவை. உதாரணமாக நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் உலகிலுள்ள பத்தாயிரம் கோடீஸ்வரர்களை கொண்டு அபிவிருத்தி செய்வதாகக் குறிப்பிடுகிறார். அதேபோன்று ஒவ்வொரு ஏழை வீட்டுக்கும் 20 ஆயிரம் ரூபா வழங்குவதாகக் குறிப்பிடுகிறார். 50 கிலோ கொண்ட பசளை மூடையை ஐயாயிரம் ரூபாவுக்கு வழங்குவதாகக் கூறுகிறார். இவை எதுவும் நிறைவேற்றக்கூடிய வாக்குறுதிகளா? அதற்கு நாட்டில் பணம் இருக்கிறதா? அத்திட்டங்களுக்கான நிதியை எவ்வாறு பெற்றுக் கொள்வார் என்பதைக் கூட அவர் இற்றைவரையும் குறிப்பிடவில்லை. ஆனால் நாட்டின் பொருளாதாரம் என்ன நிலையில் உள்ளது என்பதை ஜனாதிபதி நன்கறிவார். அதற்கேற்ப அவர் நடைமுறைச் சாத்தியமான வாக்குறுதிகளை மக்களுக்கு வழங்குகிறார். இருந்தபோதிலும் எதிர்க்கட்சித் தலைவர், ஜனாதிபதி கூறுகிறாரே.... அதனால் நாமும் வாக்குறுதி வழங்க வேண்டும் என்ற தோரணையில் விரும்பியதையெல்லாம் கூறுகிறார்.

**கேள்வி: தற்போதைய சூழலில் முஸ்லிம் வாக்காளர்கள் குறித்து நீங்கள் குறிப்பிட விரும்புவதென்ன?**

பதில்: இத்தேர்தலில் முஸ்லிம்கள் ஜே.வி.பி. க்கு வாக்களிக்கும் முயற்சியில் இருப்பதாக தெரிகிறது. எதிர்க்கட்சி தலைவருடன் இணைந்துள்ள முஸ்லிம் கட்சிகளின் தலைவர்கள் கடந்த காலங்களில் விட்ட தவறுகளின் விளைவாகவே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஆனால் அக்கட்சிகளின் தலைவர்கள் விட்ட தவறுகளுக்காக முஸ்லிம் வாக்காளர்கள் தவறான முடிவுகளை எடுக்கக்கூடிய தருணம் இதுவல்ல. அது நாட்டின் பின்னடைவுக்கு துணை போவதாக அமைந்துவிடும். ஆட்சி பொறுப்பு குறித்து ஜே.வி.பி. யினர் எவ்வித அனுபவமும் அற்றவர்கள்.

அதனால் நாட்டினதும் மக்களினதும் முன்னேற்றத்தில் முஸ்லிம்கள் பங்காளர்களாக இருக்க வேண்டும். இன்று இக்கட்சிகளின் தலைவர்கள் முஸ்லிம்களின் வாக்குகளுக்காக நீலிக் கண்ணீர் வடிக்கிறார்கள். பொருளாதார நெருக்கடி காலத்தில் முஸ்லிம்கள் உட்பட முழு நாட்டு மக்களும் துன்பப்பட்ட போது எதிர்க்கட்சித் தலைவருடன் சேர்ந்திருந்து அவர்கள் அந்த துன்பங்களில் இன்பங்கண்டார்கள். அந்த துன்பங்களை தங்கள் அற்ப அரசியல் நலன்களுக்காகப் பயன்படுத்திக் கொள்ள முயற்சி செய்தார்கள். ஆனால் அந்த துர்ப்பாக்கிய நிலையில் இருந்து முஸ்லிம்கள் உட்பட முழு நாட்டு மக்க

## முஸ்லிம் வாக்காளர்கள் சிந்தித்து வாக்களிக்க வேண்டும்

ளையும் மீட்டெடுத்தவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தான். இதனை எவரும் மறந்துவிடலாகாது.

**கேள்வி: நிறைவாக நீங்கள் கூறவிரும்புவதென்ன?**

பதில்: இது மிகவும் முக்கியமான தீர்மானகரத் தேர்தல். அறிவுபூர்வமாக சிந்தித்து செயற்பட வேண்டும். நாட்டில் பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தப்பட வேண்டும். அதற்காக எமது வாக்குகள் பங்களிக்க வேண்டும். இல்லாவிடில் நாடு மீண்டும் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாவதைத் தவிர்க்க முடியாது போய்விடும்.

**நேர்கண்டவர்: மர்லின் மரிக்கார்**

# எரிக் காமினி ஜினப்பிரியவின் நூலும் தேர்தல் ஆணைக்குழுவும்

இலங்கையினுள் தேர்தல் செயற்பாடுகளைச் சுதந்திரமாகவும், பாரபட்சமின்றியும், நியாயமாகவும் நடத்துவது தேர்தல் ஆணைக்குழுவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பிரதான கடமையாகும். அதனால் தான் இலங்கை அரசியலமைப்பினால் தேர்தல் ஆணைக்குழு ஒரு சுதந்திர நிறுவனமாக நிறுவப்பட்டுள்ளது. நாட்டின் ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்ற, மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற தேர்தல்களை பாராளுமன்றத்தினால் இயற்றப்பட்ட கட்டளைகளுக்கு அமைவாகவும் அரசியலமைப்பிற்கு அமைவாகவும் நடத்தும் பொறுப்பை தேர்தல் ஆணைக்குழு நிறைவேற்றுகிறது. எனவேதான் ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறும் இந்தக் காலத்தினுள் அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவது தொடர்பில் பாரிய பணிகளை தேர்தல் ஆணைக்குழுவினால் செய்ய வேண்டியுள்ளது.

அந்தவகையில் தனது பொறுப்புக்களை நிறைவேற்றும் போது தேர்தல் ஆணைக்குழுவினால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் மற்றும் அது தொடர்பில் கடைப்பிடிக்கப்பட்ட செயற்பாடுகள் தொடர்பில் இந்நாட்டில் உள்ள அறிஞர்கள், எழுத்தாளர்கள் மற்றும் மனித உரிமை அமைப்புகளின் கவனம் ஈர்க்கப்பட்டிருப்பது தெரிகிறது. செப்டெம்பர் 04ஆம் திகதி திவயின பத்திரிகையின் ஞாயிறு வெளியீட்டில் சிரேஷ்ட ஊடகவியலாளர் எரிக் காமினி ஜினப்பிரியவினால் எழுதப்பட்ட “NPP கதையும் ஜே.வி.பி நடவடிக்கையும்” என்ற நூல் பொரளை என்.எம்.பெரேரா நிலையத்தில் வைத்து வெளியிடப்படவிருந்தது. இந்த நிகழ்விற்கு பெங்கமுவே நாலக தேரர் தலைமை தாங்கவிருந்ததோடு, ஓமரே கஸ்ஸப தேரர், சி.ஏ.சந்திரபிரேம மற்றும் சுமேத வீரவர்தன ஆகியோரினால் உரைகள் ஆற்றப்படவிருந்தன.

அவ்வாறிருக்கையில் இந்தக் கூட்டம் தேர்தல் ஆணைக்குழுவினால் தடை செய்யப்பட்டதாக ஊடகங்களில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. தேர்தல் ஆணைக்குழுவின் உத்தரவுக்கு அமைய, பொரளை பொலிஸார் இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொண்டிருந்தனர். எனினும் ஏற்பாட்டாளர்கள் இது தொடர்பில் விடயங்களை முன்வைத்ததன் பின்னர் அதிதிகளின் உரைகள் இன்றி குறித்த நூலை வெளியிடுவதற்கு இடமளிக்கப்பட்டது. இலங்கை எழுத்தாளர் ஒருவரால் எழுதப்பட்ட புத்தகத்தை வெளியீடு செய்வதைத் தடை செய்தமை தொடர்பில் நாம் கேள்விப்படுவது இதுவே முதல் தடவையாகும். நாட்டின் அரசியலமைப்பு பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை உறுதி செய்துள்ளது. தேர்தல் நேரத்தில் பொதுமக்களுக்கு நியாயமான தீர்ப்பு வழங்குவதற்கு ஊடகங்கள் மூலம் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. என்றாலும் ஒரு எழுத்தாளரால் வெளியிடப்படும் ஒரு புத்தகம் தேர்தலில் ஏற்படுத்தப் போகும் தாக்கங்கள் தொடர்பில் தேர்தல் சட்டத்தினால் இனங்காணப்பட்டிருப்பதாகவும், புத்தக வெளியீட்டை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் விதிகள் உள்ளனவா என்பதும் தெரியவில்லை. இலங்கையின் தேர்தல் வரலாற்றில், பல்வேறு எழுத்தாளர்களால் வெளியிடப்பட்ட புத்தகங்கள் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்திய சந்தர்ப்பங்கள் தொடர்பில் அறியக்கிடைக்கின்றது. 1965 அல்லது 1970ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்களின் போது, ஐக்கிய தேசியக் கட்சியின் ஒவ்வொரு தே ர்தல் கூட்டத்திலும் "திப் பத்தயே பௌத்த சங்காரய" என்ற புத்தகம் விநியோகிக்கப்பட்ட முறை எனக்கு நினைவிருக்கிறது. அதன்போது எனக்கும் ஒரு புத்தகம் கிடைக்கப்பெற்றதோடு, இன்று வரை அந்தப் புத்தகம் என்னிடமுள்ளது. நாட்டில் மார்க்சியம் வலுப்பெற்றால் பௌத்தம் அழிந்து போகலாம் என்பதை பொதுமக்களுக்கு புரியவைக்கும் வகையில் புத்தகம் விநியோகம் செய்யப்பட்டதாக தெரிகிறது.

1977ஆம் ஆண்டு தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியால் வெளியிடப்பட்ட "குடும்ப மரம்" என்ற புத்தகம் நினைவுக்கு வரக்கூடிய மற்றுமொரு வெளியீடாகும். பண்டாரநாயக்கா குடும்பம் "குடும்பம்" என்ற கிளைகளைக் கொண்ட ஒரு பெரிய மரமாக மாறியதை அந்தச் சிறிய புத்தகம் விபரிக்கிறது. அந்தத் தேர்தலின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் ஒவ்வொரு கூட்டத்திலும் இந்தப் புத்தகம் விற்கப்பட்டது. அது பணத்துக்காக விற்கப்பட்டாலும், இலங்கையினுள் இந்தப் புத்தகம் எப்படி அதீத பிரபலமடைந்தது என்பது எனக்கு நினைவிருக்கிறது.

மறுபுறம், இந்த ஆண்டு தேர்தலுக்காக அரசியல் கட்சிகளினால் வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனங்களை அவதானிக்கும் போது, அவையும் புத்தக வடிவிலான வெளியீடுகள் என்பது தெளிவாகிறது. ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனம் A4 தாளில் 62 பக்கங்களைக் கொண்டதாக அச்சிடப்பட்டு ள்ளது. அநுரகுமார திஸாநாயக்கவின் விஞ்ஞாப னம் அதே அளவு 233 பக்கங்களைக் கொண்டது. சஜித் பிரேமதாசவின் விஞ்ஞாபனம் அதே அளவு 38 பக்கங்களைக் கொண்டது. பல்வேறு விஷயங்களில் அந்தந்த கட்சிகள் வைத்திருக்கும் சித்தாந்தங்கள் அடங்கிய புத்தகங்கள் என்றும் அவற்றை அழைக்கலாம். தேர்தல் ஆணைக்குழு நியாயமான தேர்தல்களுக்கான தனது அளவுகோல்களை வகுக்கும் போது எப்போதும் பயன்படுத்தி வந்துள்ள ஒரு சொல் "வேட்பாளர்களை ஊக்குவிக்கும் அல்லது மற்றைய வேட்பாளர்களுக்கு தீங்கு விளைவிக்கும்" என்பதாகும். உதாரணமாக, எந்தவொரு வேட்பாளரையும் ஊக்குவித்தல் அல்லது மற்றைய வேட்பாளர்களுக்கு தீங்கு விளைவிக்கும் நடைமுறையை ஊடகங்கள் பின்பற்றக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. என்றாலும் எந்தவொரு வேட்பாளரின் தேர்தல் விஞ்ஞாபனமும் அந்த வேட்பாளரை மக்கள் மத்தியில் பரபலப்படுத்துவதற்குப் பயன்படுவதோடு, நிச்சயமாக அது மற்றைய வேட்பாளர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தக் கூடும். எனினும் அவ்வாறான தேர்தல் விஞ்ஞாபனங்கள் வெளியிடுவதைத் தடுக்கும் திறன் தேர்தல் ஆணைக்குழுவிற்கு இல்லை.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் எரிக் காமினி ஜினப்பிரியவின் “NPP கதையும் ஜேவிபி நடவடிக்கையும்” என்ற நூல் வெளியீட்டு விழாவைத் தடுப்பதற்கு தேர்தல் ஆணைக்குழுவிற்கு எவ்வாறு முடிந்தது என்பது தொடர்பில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. நாட்டினுள் பல்வேறு அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டாலும், எழுத்தாளர்களின் சுதந்திரத்திற்கு தடைகளை ஏற்படுத்துவதற்கோ, கட்டுப்படுத்தவோ எந்த ஒரு அரசும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை. சில சந்தர்ப்பங்களில் சில புத்தகங்களைத் தடைசெய்யும் யோசனைகளை முன்வைத்த சந்தர்ப்பங்கள் இருந்தன. இருப்பினும், இது போன்ற செயல்கள் அரிதாகவே நடைமுறையில் இருந்ததாகத் தெரிகிறது. இந்த நாட்டில் எழுத்தாளர் தலைமுறையினர் அனுபவிக்கும் சுதந்திரத்தை தேர்தல் காலத்தில் கட்டுப்படுத்த தேர்தல் சட்டத்திலோ அல்லது வேறு எந்த சட்டத்திலோ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா என்ற பிரச்சினை எழுகிறது.

இந்தச் செயற்பாடானது அரசியலமைப்பில் கடுமையான உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை கடுமையாக மீறும் செயற்பாடாகும். அந்த நூல் வெளியீடு ஏதேனும் கட்சிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என எவராவது முறைப்பாடு செய்துள்ளார்களா என்பதை தேர்தல் ஆணைக்குழு தெளிவுபடுத்த வேண்டும். அத்துடன் அந்த இந்நிகழ்ச்சியைத் தடைசெய்யும் அளவுக்குப் போதிய விடயங்கள் அந்தப் புத்தகத்தில் உள்ளனவா என்பதை உறுதிசெய்ய தேர்தல் ஆணைக்குழுவில் உள்ள எவராவது புத்தகத்தை வாசித்திருக்கிறார்களா என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். அந்த பேச்சாளர்களின் பேச்சுக்கள் தடை செய்யப்பட்டது அந்த உரைகளில் ஏதேனும் ஒரு கட்சிக்கு ஏதாவது தீங்கு இருக்கக்கூடும் என்ற அனுமானத்தின் காரணமாகவா, இல்லாவிட்டால் அந்த அனுமானத்திற்கு அடிப்படையாக இருந்த சாட்சிகள் என்ன என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும். நாட்டில் தேர்தல் நடத்தப்படுவதால் கல்வியலாளர் குழுவின் பேச்சை நிறுத்த எந்தச் சட்டத்தின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உள்ளது என்பதையும் தெளிவுபடுத்த வேண்டும்.

நியாயமான தேர்தலை நடத்தும் போது எந்தவொரு குழுவும் வற்புறுத்தல், அழுத்தங்கள் அல்லது அச்சுறுத்தல்கள் ஏற்படுத்தப்படுமானால் அத்தகைய நிலைமையைத் தடுப்பது தேர்தல் ஆணைக்குழுவின் பொறுப்பாகும். நீண்ட காலமாக நாட்டின் இசைத்துறையில் மக்களை மகிழ்வித்து வரும் "மேரியன்ஸ் இசைக்குழு" அண்மையில் சந்தித்த சோகமான சூழ்நிலை தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு கவனத்தில் கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியால் இந்த இசைக்குழுவுக்கு கொலை மிரட்டல்கள் மற்றும் அச்சுறுதல்கள் விடுக்கப்பட்டமை அனைவரும் அறிந்த உண்மையாகும். அந்தக் குழுவிற்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டதையடுத்து, அவர்கள் சமூக ஊடகங்களில் தங்கள் வருத்தத்தை வெளிப்படுத்தும் அறிக்கையை வெளியிட்டிருந்தனர். தனது உறுப்பினர்களுக்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டதாக அந்தக் குழுவின் தலைவர் தெரிவித்திருந்தார். தேர்தலுக்குப் பிறகு யாருக்கும் தீங்கு விளைவிக்க விட மாட்டோம் என்று அறிவித்த அரசியல் கட்சியிடமிருந்து நாட்டில் உள்ள பிரபல இசைக் குழுவிற்கு கொலை மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது. இந்த மரண அச்சுறுத்தல்கள் குறித்த தகவல்களை அந்த இசைக் குழு, நாட்டுக்கு பகிரங்கமாக வெளிப்படுத்தியுள்ளது. அவ்வாறானவர்கள் வெற்றி பெற்றால் நாட்டில் அமைதியான சூழல் பேணப்படும் என்ற கூற்று உண்மையல்ல என்பது அதனூடாகத் தெளிவாகிறது. இரண்டாவது புத்தகத்தின் ஒரு வசனத்தைக் கூட வாசிக்காத, புத்தக வெளியீட்டு விழாவை நடத்த தடை விதிக்கும் தேர்தல் ஆணைக்குழு மரண அச்சுறுத்தல் தொடர்பில் ஒரு வார்த்தை கூட பேசாமலிருப்பது எவ்வகையான தர்மமாகும்? எரிக் ஜினபிரியாவின் புத்தக வெளியீட்டைத் தடுப்பதற்கு அனுப்பப்பட்ட பொலிஸாருக்கு கொலைமிரட்டல் விடுக்கப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள தேர்தல் ஆணைக்குழு மறந்துள்ளது. தற்போது மக்களுக்கு ஏற்பட்டுள்ள கேள்வி, தேர்தல் ஆணைக்குழுவினுள் உள்ள ஒருவரின் அழுத்தம் காரணமாக அது ஒரு கட்சிக்கு சார்பாகச் செயற்பட்டுள்ளதா என்ற சந்தேகமாகும். தேர்தல் காலம் முழுவதும், ஒரு கட்சியோடு தொடர்புடைய நிறங்கள் முச்சக்கரவண்டிகளில் ஒட்டப்பட்டமை, அவ்வாறே பயணிக்கின்றமை போன்றன தொடர்பில் ஏராளமான தகவல்கள் வெளியாகியும் தேர்தல் ஆணைக்குழு ஒரு வார்த்தை கூட பேசவில்லை. எனினும் ஐக்கிய தேசிய கட்சியினர் காலி முகத்திடலில் முச்சக்கர வண்டிகளில் இவ்வாறான ஸ்டிக்கர்களை ஒட்டும் போது, வாகனங்களில் அவ்வாறானவற்றை ஒட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழு வின் எவரோ ஒருவரின் அழுத்தங்களுக்கு அடிபணியாது ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு அமைவாக நடவடிக்கைகளை முன்னெடுக்கும் நிலையினை ஏற்படுத்திக் கொள்வது ஆணைக்குழவின் பக்கச்சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்துவதற்கு மிகவும் முக்கியமானதாக இருக்கும்..




**மக்கள் நேசன்**

# சிறப்பாக நடந்தேறிய அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாடு





அனைத்துலக முத்தமிழ் முருகன் *மாநாடு* தமிழ்க் கடவுள் முருகன் சரவணப் பொய்கையில் உதித்ததாக வரலாறு கூறும் பழனியம்பதியில் நடைபெற்றது சிறப்பு. விழாவின் துவக்கத்தில் திருமடங்களின் தலைவர்கள் ஆசியுரை வழங்கியது சிறப்பு.

இதுபோல் முத்தமிழ் முருகனின் அருளையும், புகழையும் செம்மொழித் தமிழின் தேமதுர ஓசையோடு முதன் முதலாக தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையத் துறை வாயிலாக பெரிய அளவில் வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாக நடத்துவது சிறப்பு. தொல்காப்பியம் சங்க காலம் துவங்கி இன்றைய நாள் வரையில் தொன்மையும், வளமையும், உயர்வும், சீரும் சிறப்புமிக்க தமிழ் இலக்கிய வரலாறு கண்ட ஏராளமான இலக்கியங்கள் கூறும் திருமுருகனின் அளப்பரிய கருணையையும், பக்தி நெறியையும் நன்கு கற்று உணர்ந்து தம் உணர்வுகளை எழுச்சியுடன் எடுத்துரைத்த சமயப் பெரியவர்கள், தமிழறிஞர்கள், ஆராய்ச்சியாளர்களை அழைத்து ஆயிரக்கணக்கான ஆன்மிக அன்பர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு இப்பெரு விழாவில் பயன்பெறத்தக்கவாறு ஏற்பாடுகள் செய்திருப்பது விழாவிற்கு அணி சேர்ப்பதாகும்.

தமிழ்க்குடி தோன்றிய நாள் தொட்டு முருகன், தமிழர்களால் நம் கடவுளாக அங்கீகரிக்கப்பட்டு, பக்தி செலுத்தப்பட்டு வரும் பெருமை படைத்தவன். மலையும், மலை சார்ந்த குறிஞ்சிக் கடவுளாக துவக்கத்தில் வணங்கப் பெற்று, பின்னர் முல்லை, மருதம், நெய்தல், பாலை என அனைத்து இடங்களிலும் வழிபடப் பெற்று, குன்று இருக்கும் இடம் எல்லாம் குமரன் இருக்கும் இடம் ஆனது. நாவிலே தமிழை வைத்து சுட்ட கனி வேண்டுமா, சுடாத கனி வேண்டுமா என இயற்றமிழால் ஔவையோடு விளையாடினான். நக்கீரனின் திருமுருகாற்றுப் படையிலும், அருணகிரியாரின் தேமதுரத் திருப்புகழிலும் மற்றும் வள்ளலார் பெருமானின் திருஅருட்பாவிலும், பண்ணோடும் இசையோடும் கலந்து விரவி இசைத் தமிழானான். எக்காலத்திலும் அடியார்கள் பாடும் பாடல்களின் இசையைக் கேட்டு மயங்கும் முருகன் அவ்விசையை சுவைக்கிறான். அதைக் கேட்டு உறங்குகிறான். மீண்டும் கேட்டு விழிக்கிறான். என்றுமே இசைத்தமிழோடு கலந்து உறவு கொள்கிறான்.

முருகு என்றால் அழகு, இளமை என்று இலக்கியங்கள் செப்புகின்றன. தமிழ்த்தாய், சீர் இளமைப் பொலிவோடு என்றும் இருக்கின்றாள். எங்கள் முருகனும் என்றும் இளமையாகவே இருக்கின்றான். தமிழ்த்தாய் அழகு படைத்தது போல் எங்கள் முருகனும் குன்றா அழகு படைத்தவன். நல்ல தமிழ் நூலை படிக்கும் பொழுதும், படித்த பின்பும், எண்ணும் பொழுதும், அதைப் பேசும் பொழுதும், சுவையும் தெரியும், சுகமும் தெரியும், எங்கள் திருமுருகனின் திருமுகத்தை, உருவத்தை, வனப்பை எத்தனை முறை பார்த்தாலும் புதியதாகவே தோன்றும். சலிப்பே தட்டாத அழகு முகம் படைத்தவன் அழகன் தானே.

***முருகனின் பிறப்பும் அடியார்க்கு அருளும் கருணையும்***

பஞ்ச பூதங்களையும் தனக்குள் அடக்கியவன் என்பதையும், முருகன்பால் உள்ள பக்தி உணர்வு முழுமையான நம்பிக்கையோடு உறுதியாக இருக்க வேண்டும் என்பதையும் அருணகிரியார் கூறுகிறார்.

அறுபடை வீடுகளில் ஒவ்வொரு வீட்டிலும் ஒரு செயலை முருகன் புரிந்தான். பழத்திற்காக பழனியில் மலை மேல் நின்றான். உபதேசம் செய்வதற்காக சுவாமிமலையில் அமர்ந்தான். சூரனை வதைக்க செந்திலில் வீறிட்டு எழுந்தான். அதற்குப் பரிசாக பரங்குன்றில் தேவயானையை மணந்தான். வள்ளியை மணந்து திருத்தணிகையிலே கோபம் தணிந்தான். தேவியர் இருவரோடு பழமுதிர்சோலையில் காட்சி தந்தான்.

இவ்வாறாக, நின்றான், அமர்ந்தான், எழுந்தான், மணந்தான், தணிந்தான், தந்தான் என ஆறு செயல்களைப் புரிந்த முருகன் ஒரு செயலை மட்டும் செய்யவில்லை. அவன் நடக்கவில்லை. நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பு நடக்கும் செயலை அடியார்களுக்குத் தந்தான். உண்மையான பக்தி உணர்வோடு நடக்கும் அடியார்களுக்கு அத்தனை வளங்களையும் அள்ளித் தருகிறான் "கருணைவாரி கந்தவேள்".

கண்ணால் அவனது திருவடியைக் கண்டு ஆதரவு பெருகி இரு கையால் தொழுது, காலால் வலம் செய்து பண்ணால் உருகி பரவும் அடியார்களை கண் கலங்காமல் தாயாக நின்று காக்கின்றான்.

| 3.7 | Steel plate shearing machine | 01 | | 40,000.00 |
| 3.8 | Pipe bending machine | 01 | | 18,000.00 |
| 3.9 | ARC Welding Machine-DC | 01 | | 5,000.00 |
| 3.10 | ARC Welding Machine-AC | 01 | | 5,000.00 |
| 3.11 | ARC Welding Machine-AC | 01 | | 4,000.00 |
| 3.12 | ARC Welding Machine-AC | 01 | | 3,000.00 |
| 3.13 | MIG Welding Machine | 01 | | 6,000.00 |
| 3.14 | TIG Welding Machine | 01 | 5,000.00 | 6,000.00 |
| 3.15 | Gas Welding/Cutting Apparatus | 01 | | 3,000.00 |
| 3.16 | Electric Cut-Off Machine | 01 | | 2,000.00 |
| 3.17 | Horizontal Band Saw | 01 | | 2,500.00 |
| 3.18 | Power Hack Saw | 01 | | 2,000.00 |
| 3.19 | Angle Grinder | 03 | | 1,000.00 |
| 3.20 | Tool Grinders | 02 | | 1,600.00 |
| 3.21 | Hammer Drill/Impact Drill | 03 | | 1,000.00 |
| 3.22 | Personal Protective Equipment | 01 | | 10,000.00 |
| 3.23 | Hand Pallet Truck | 01 | | 1,500.00 |
| 3.24 | Tool Board | 01 | | 500.00 |
| 3.25 | Anvil | 01 | | 3,000.00 |
| 3.26 | 3D Printing Machine | 01 | | 8,500.00 |
| **Package No. 04 – Marine Engineering Thermodynamics Laboratory Equipment** | | | | |
| 4.1 | Thermal Conductivity apparatus | 01 | | 30,000.00 |
| 4.2 | Convection Heat Transfer Apparatus | 01 | 3,500.00 | 35,000.00 |
| 4.3 | Shell and Tube Heat Exchanger Unit | 01 | | 25,000.00 |
| 4.4 | Pump Characteristic Apparatus | 01 | | 40,000.00 |
| **Package No. 05 – Furniture** | | | | |
| 5.1 | Reception counter | 01 | | 5,000.00 |
| 5.2 | Office filing cabinet | 06 | | 6,000.00 |
| 5.3 | Wooden door key hanging board | 02 | | 1,000.00 |
| 5.4 | Wooden office table for security | 01 | | 1,000.00 |
| 5.5 | Wooden office table | 02 | | 2,000.00 |
| 5.6 | L Grand Corner Sofa | 02 | | 3,000.00 |
| 5.7 | Wooden Bed | 02 | | 2,500.00 |
| 5.8 | Bedroom Table | 02 | | 1,500.00 |
| 5.9 | Wooden Towel Rack (Large) | 01 | 2,000.00 | 250.00 |
| 5.10 | Wooden Towel Rack (Small) | 01 | | 250.00 |
| 5.11 | Wooden Notice Boards | 04 | | 2,000.00 |
| 5.12 | Fitting Bench | 02 | | 5,000.00 |
| 5.13 | Steel Welding Bench (Type-A) | 02 | | 5,000.00 |
| 5.14 | Steel Welding Bench (Type-B) | 02 | | 5,000.00 |
| 5.15 | Steel Working Table | 01 | | 3,000.00 |
| 5.16 | Glass Door Cupboard | 06 | | 5,000.00 |
| **Package No. 06 – Marine Training Manuals, Standards and Textbooks** | | | | |
| 6.1 | Marine Training Manuals, Standards and Textbooks **(62 Separate Books – refer bid document)** | **refer bid document** | 2,000.00 | **refer bid document** |
| **Package No. 07 – Marine Engineering, Naval Architecture, Navigation, Firefighting & Life Savings Appliances Laboratory Equipment** | | | | |
| 7.1 | Marine Sludge Discharge Pump/ Sewage Pump. | 01 | | 10,000.00 |
| 7.2 | Marine Gear Pump | 01 | | 5,000.00 |
| 7.3 | Merchant ship cutaway models | 02 | | 40,000.00 |
| 7.4 | Azimuth Circle | 05 | | 10,000.00 |
| 7.5 | Azimuth Mirror | 05 | | 2,000.00 |
| 7.6 | Brunton Compass | 25 | | 20,000.00 |
| 7.7 | Angle Fire Hose Valve | 10 | | 2,500.00 |
| 7.8 | Synthetic Rubber Fire hose – 3 inch | 02 | 3,500.00 | 2,000.00 |
| 7.9 | Synthetic Rubber Fire hose – 4 inch | 02 | | 2,000.00 |
| 7.10 | 3 inch EPDM Fire Hose | 02 | | 2,000.00 |
| 7.11 | 4 inch EPDM Fire Hose | 02 | | 2,000.00 |
| 7.12 | Storz/Bauer coupling | 10 | | 15,000.00 |
| 7.13 | Fireproof Lifeline | 05 | | 2,000.00 |
| 7.14 | Explosion Proof Light | 05 | | 2,000.00 |
| 7.15 | Line thrower | 02 | | 200.00 |
| 7.16 | Life boat Equipment (Available as a Package) | 04 | | 4,000.00 |
| 7.17 | Light-bearing buoys | 10 | | 4,000.00 |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. மேலே குறிப்பிட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை பல்கலைக்கழகத்தின் சிறாப்பர் கருமபீடத்திற்கு செலுத்தி அல்லது எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையின் ஊடாகவும் றுஹுண பல்கலைக்கழகத்தின் (மக்கள் வங்கி, காலி பிரதான வீதி) 169100121871753 எனும் கணக்கிலக்கத்திற்கு மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்புச் செய்த பின் ஸ்கேன் செய்யப்பட்ட வரவுத் துண்டை சமர்ப்பிப்பதன் பேரில் 2024-09-26ஆம் திகதி பி.ப. 1.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை (ஆங்கில மொழியில்) காலி, ஹப்புகல, பொறியியல் பீடத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.
4. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 90 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
5. ITB 35.4 மற்றும் பிரிவு III(2) மதிப்பீட்டு மூலப் பிரமாணங்களின் பிரகாரம் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.
6. விலைமனுக்களுடன் இலங்கையில் செயற்படும் ஏற்றுக் கொள்ளக்கூடிய வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்டதும் ஏற்புடையதான விலைமனுக்கோரல் உருப்படிகளுக்கு உரித்தான (நிபந்தனையற்ற) விலைமனுப்பிணையொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் செல்லுபடியாகும் திகதிக்கு அப்பால் 30 நாட்கள் வரை செல்லுபடியாகும் தன்மையில் ''துணை வேந்தர், றுஹுண பல்கலைக்கழகம்'' எனும் முகவரிக்கான விலைமனுப்பிணையாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2024-09-12ஆம் திகதி மு.ப. 11.00 மணியாகும்.
9. 2024-09-12ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு காலி, ஹப்புகல, பொறியியல் பீடத்தின் பணிப்பாளர் சபை அறையில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் நிகழ்நிலையின் ஊடாக இடம்பெறும். (Zoom Meeting)
10. உரிய முறையில் இரு பிரதிகளில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, கல்வி அமைச்சு, உயர் கல்விப் பிரிவு, இல. 18, வார்ட் பிளேஸ், கொழும்பு 07 அல்லது உட்கட்டமைப்பு அபிவிருத்தி, பணிப்பாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் மேலேயுள்ள முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன்னராக கிடைக்கும் வகையில் உள்ளிடல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். உறையின் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் மற்றும் இலக்கம் ஆகியன சுட்டிக்காட்டப்படல் வேண்டும்.
11. விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டவுடன் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் திறக்கப்படும். விலைமனுக்களை திறக்கும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
12. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பொறியியல் பீடத்தின் உதவி நிதியாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: 091-2245763/091-2245765 மின்னஞ்சல்: ab@eng.ruh.ac.lk.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**கல்வி அமைச்சு,**
**உயர் கல்விப் பிரிவு,**
**இல. 18, வார்ட் பிளேஸ்,**
**கொழும்பு 07.**
2024 செப்டெம்பர் 08ஆம் திகதி.

# வாரபலன்



08.09.2024 - 14.09.2024

கலாநிதி சிவஸ்ரீ இராமச்சந்திர குருக்கள் பாபுசர்மா
ஸ்ரீ வித்தியா ஜோதிடம்

## மேஷம்

**(அஷ்விணி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்)**

அனுகூலமான பலன்கள் உண்டாகும். எடுத்த காரியங்களில் தொய்வு ஏற்பட்டாலும் வார இறுதியில் வேகம் பிடிக்கும். வீண் மனச் சஞ்சலம் உண்டாகும். தொழில் வியாபாரம் நன்றாக இருக்கும். அதேநேரத்தில் புதிய வாடிக்கையாளர்களைப் பிடிக்க கூடுதலாக அலைய வேண்டியிருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது பணிகளை தாமதம் இல்லாமல் முடிக்க பாடு படுவர். குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும். குழந்தைகளால் மனச் சஞ்சலம் ஏற்பட்டு நீங்கும். வாழ்க்கை துணையின் மூலம் அனுகூலம் உண்டாகும். வாகனங்களில் செல்லும் போது கவனம் தேவை. நினைத்ததை சாதிக்கும் மனவலிமை உண்டாகும். பெண்களுக்கு காரிய அனுகூலம் உண்டாகும். கலைத்துறையினருக்கு பணவரத்து திருப்திதரும். வீண் கவலைகள் அகலும். மாணவர்களுக்கு கல்வியை பற்றிய கவலை ஏற்பட்டு நீங்கும். விளையாட்டுகளில் கலந்து கொள்ளும் போது கவனம் தேவை.

## ரிஷபம்

**(கார்த்திகை 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், ரோஹிணி, மிருகசீரிடம் 1ஆம் 2ஆம் பாதம்)**

காரிய தடைகள் நீங்கும். திட்டமிட்டபடி எல்லாம் நடக்கும். ஆடம்பரமான பொருட்களை வாங்கத் தூண்டும். கடன் தொல்லை குறையும். தொழில் வியாபாரத்தில் எதிர்பாராத தடைகள் ஏற்பட்டு நீங்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் பல தடைகளை சந்திக்க நேர்ந்தாலும், முடிவில் வெற்றி உங்கள் பக்கமே இருக்கும். குடும்பத்தில் சுப செலவுகள் உண்டாகும். வாழ்க்கை துணையின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். பிள்ளைகள் நலனில் கவனம் செலுத்துவீர்கள். உறவினர்கள், நண்பர்கள் மூலம் தேவையான உதவிகள் கிடைக்கும். பெண்கள் திட்டமிட்டபடி காரியங்களை செய்து முடிப்பர். கலைத்துறையினருக்கு தடை நீங்கி பணிகள் வேகம் பிடிக்கும். மாணவர்கள் பல தடைகளையும் தாண்டி கல்வியை கற்று வெற்றி பெறுவார்கள்.

## மிதுனம்

**(மிருகசீரிடம் 3ஆம், 4ஆம் பாதம், திருவாதிரை, புனர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

மனோதைரியம் அதிகரிக்கும். சமய சந்தர்ப்பம் அறிந்து காரியங்களை செய்வீர்கள். சந்திரன் சஞ்சாரத்தால் வீண் கவலைகள் நீங்கும். வழக்கு விவகாரங்களை தள்ளிப் போடுவது நல்லது. தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது. நிதானமான போக்கு காணப்படும். தொழில் வியாபாரத்திற்காக கடன் வாங்க நினைப்பதை தள்ளிப்போடுவது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு வீண் அலைச்சலும், வேலைப் பளுவால் மனச் சலிப்பும் உண்டாகும். குடும்பத்தில் திடீர் குழப்பம் ஏற்பட்டு நீங்கும். கணவன், மனைவிக்கிடையே இருந்த மனவருத்தம் மாறி, சகஜ நிலை ஏற்படும். குழந்தைகளுக்கு தேவையான பொருட்களை வாங்கி கொடுப்பீர்கள். பெண்களுக்கு வீண் அலைச்சலும், காரிய தாமதமும் ஏற்படும். கலைத்துறையினருக்கு உடல் நலத்தில் அக்கறை தேவை. மாணவர்கள் வீண் அலைச்சலை குறைத்துக் கொண்டு பாடங்களை கூடுதல் கவனத்துடன் படிப்பது நல்லது.

## கடகம்

**( புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்)**

சுப பலன்கள் உண்டாகும். மனோதிடம் ஏற்படும். அவசர முடிவுகளை தவிர்ப்பது நல்லது. எதிர்பாராத திடீர் செலவு உண்டாகலாம். தாயாரின் உடல்நிலையில் கவனம் தேவை. தொழில் வியாபாரம் தொடர்பான விவகாரங்கள் தாமதமாக நடைபெறும். புதிய ஆர்டர்கள் கிடைத்தாலும் அதை உடனடியாக நிறைவேற்ற பாடுபட வேண்டி இருக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேலதிகாரிகளை அனுசரித்து செல்வது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் கிடைக்கலாம். குடும்பத்தினருடன் அனுசரித்துச் செல்வது நன்மை தரும். கணவன், மனைவிக்கிடையே பந்த பாசங்கள் கூடும். பெண்கள் அவசரப்பட்டு எந்த வாக்குறுதியையும் கொடுக்காமல் இருப்பது நல்லது. கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த பணம் வந்து சேரலாம். மாணவர்களுக்கு சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கல்வியில் மேன்மை உண்டாகும்.

## சிம்மம்

**(மகம், பூரம், உத்தரம் 1ஆம் பாதம்)**

சாமர்த்தியமாக திட்டமிட்டு எதிலும் ஈடுபடுவீர்கள். மனதில் தைரியமும், உற்சாகமும் கூடும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு வாய்க்கு ருசியான உணவுகளை உண்பீர்கள். நண்பர்களால் உதவிகள் கிடைக்கும். வெளி வட்டார தொடர்புகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் இருப்பவர்களின் பொறுப்புகள் அதிகரிக்கும். கூடுதலாக உழைக்க வேண்டி இருக்கும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கணவன், மனைவிக்குள் இருந்து வந்த மனக்கசப்புகள் விலகும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும். பெற்றோர் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகளால் பெருமை சேரும். பெண்களுக்கு எதிலும் சாதகமான பலன் கிடைக்கும். மனோ திடம் கூடும். கலைத்துறையினர் உற்சாகமாக காணப்படுவர். மாணவர்கள் பாடங்களை படிப்பதில் ஆர்வம் காட்டுவர். கல்விக்கு தேவையான உதவிகள் கிடைக்கும்.

## கன்னி

**(உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் பாதம், அத்தம், சித்திரை 1 ஆம் 2ஆம் பாதம்)**

சுபச்செலவுகள் அதிகரிக்கும். சந்திரன் சஞ்சாரத்தால் உடல் ஆரோக்கியம் பெறும். யாருக்கும் எந்த வாக்குறுதியும் அளிக்காமல் இருப்பது நன்மை தரும். எதிர்ப்புகள் அகலும். தொழில் வியாபாரத்தில் முன்னேற்றத்திற்கு தேவையான பண உதவி கிடைக்கும்.உத்தியோகத்தில் இருப்பவர்கள் மேன்மை அடைவர். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். சக பணியாளர்களின் ஒத்துழைப்பும் இருக்கும். கணவன், மனைவிக்கிடையில்அன்பு அதிகரிக்கும். குடும்ப விஷயங்களை மூன்றாவது நபரிடம் பேசாமல் இருப்பது நன்மை தரும். குழந்தைகள் எதிர்கால நலனில் அக்கறை காட்டுவீர்கள். பெண்களுக்கு வரவுக்கு ஏற்ற செலவு இருக்கும். எந்த ஒரு காரியத்தையும் ஒருமுறைக்கு இருமுறை அலைந்தே செய்து முடிக்க வேண்டி வரும். கலைத்துறையினருக்கு எதிர்ப்புகள் குறையும்.முயற்சிகள் வெற்றி பெறும். மாணவர்களுக்கு கல்விக்கான செலவு கூடும். பாடங்கள் படிப்பதில் வேகம் இருக்கும்.

## துலாம்

**(சித்திரை 3ஆம் 4ஆம் பாதம், சுவாதி, விசாகம் 1 ஆம் 2 ஆம் 3ஆம் பாதம்)**

எல்லா வகையிலும் நன்மை உண்டாகும்.உடல் ஆரோக்கியம் உண்டாகும். அலைச்சல் இருக்கும். பணவரவும் இருப்பதுடன் பயணங்கள் செல்லவும் நேரலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் புத்தி சாதூரியத்தால் கூடுதல் இலாபம் கிடைக்கப் பெறுவார்கள். வியாபாரம் தொடர்பான பயணங்கள் சாதகமான பலன்தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் மனத் திருப்தி காண்பர். கணவன் மனைவிக்கிடையே இருந்த மனவருத்தங்கள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். பிரிந்து சென்ற உறவினர்கள் மீண்டும் வந்து சேர்வார்கள். பெண்கள் அடுத்தவர்களுக்கு உதவி செய்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். கலைத்துறையினருக்கு திடீர் பயணங்கள் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் முன்னேற்றம் அடைய பாடுபட்டு படிப்பர். கல்வி தொடர்பான பயணங்கள் ஏற்படும்.

## விருச்சிகம்

**(விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை)**

எல்லா வகையிலும் நற்பலன்கள் உண்டாகும். வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்கள் ஏற்படும். மனதுக்கு பிடித்தமான காரியங்களை செய்து மனநிறைவடைவீர்கள். முக்கிய நபர்கள் மூலம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வேலை தேடிக் கொண்டிருப்பவர்களுக்கு உத்தியோகம் கிடைக்கும். மனதில் இருந்த கவலைகள் நீங்கி அலுவலக வேலைகளில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பாராத வளர்ச்சி காண்பர். குடும்பத்தில் இருந்து வந்த சிக்கல்கள் நீங்கும். நீங்கள் கூறும் வார்த்தைகளுக்கு மதிப்பு உண்டாகும். கணவன், மனைவிக்கிடையே இருந்த கருத்து வேற்றுமை நீங்கி ஒற்றுமை உண்டாகும். குழந்தைகளால் பெருமை பெறுவீர்கள். பெண்களுக்கு சுய நம்பிக்கை அதிகரிக்கும். கலைத்துறையினருக்கு எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். மாணவர்களின் உங்களது செயல்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

## தனுசு

**(மூலம், பூராடம், உத்தராடம் 1ஆம் பாதம்)**

எண்ணிய காரியங்கள் ஈடேறும். எந்த ஒரு வேலையும் மிகவும் சரியாக நடக்க வேண்டும் என எண்ணுவீர்கள். காரிய அனுகூலம் உண்டாகும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். தன்னம்பிக்கை உண்டாகும். அடுத்தவருக்கு உதவி செய்து அதன் மூலம் மதிப்பு உயரும். அவசரப்படாமல் எதையும் செய்வது நல்லது. தொழில் வியாபாரத்தில் முன்னேற்றம் காணப்படும். கைநழுவிச் சென்ற ஆர்டர்கள் மீண்டும் கிடைக்க பெறலாம். முயற்சிகள் சாதகமான பலனை தரும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் கட்டளை இடும் பதவிகள் கிடைக்க பெறுவார்கள். குடும்பத்தில் மகிழ்ச்சியான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவிக்கிடையே சுமூக உறவு இருக்கும். பெண்களுக்கு எப்படிப்பட்ட சிக்கலான பிரச்சினைகளையும் தீர்க்கும் வல்லமை உண்டாகும். கலைத்துறையினருக்கு எதிர்பாராத சந்திப்புகள் ஏற்படலாம். மாணவர்களுக்கு சக மாணவர்களுக்கு உதவி செய்வதன் மூலம் மதிப்பு கூடும்.

## மகரம்

**(உத்தராடம் 2ஆம் 3ஆம் 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் பாதம்)**

எதிலும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டியது அவசியம். அடுத்தவரை நம்பி எதிலும் ஈடுபடாமல் இருப்பது நன்மையை தரும். சந்திரன் சஞ்சாரத்தால் ஆன்மிக ஸ்தலங்களுக்கு செல்வீர்கள். நீண்ட நாட்களாக நடந்து முடியாமல் இருந்த ஒரு வேலை நடக்கும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தந்தையின் உடல்நிலையிலும் கவனமாக இருப்பது நல்லது. கடன் விவகாரங்கள் காலதாமதமாகும். தொழில் வியாபாரத்தில் எதிர்பார்த்த வேகம் இருக்காது. ஆனால் வருமானம் வழக்கம் போல் இருக்கும். உத்தியோகத்தர்களுக்கு கவனமாக பணி செய்வது நல்லது. குடும்பத்தில் இருப்பவர்களையும், வாழ்க்கை துணையையும் அனுசரித்து செல்வது நன்மை தரும். பெண்களுக்கு நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த ஒரு வேலை நடந்து முடியும். உடல் ஆரோக்யத்தில் கவனம் தேவை. கலைத்துறையினருக்கு வாய்ப்புகள் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் கூடுதல் கவனம் செலுத்தி பாடங்களை படிப்பது நல்லது.

## கும்பம்

**( அவிட்டம் 3 ஆம் 4 ஆம் பாதம், சதயம் , பூரட்டாதி 1 ஆம் 2ஆம் 3ஆம் பாதம்)**

எந்த விஷயத்திலும் உடனடி தீர்வுகாண முடியாத இழுபறி நிலை காணப்படும். சந்திரன் சஞ்சாரத்தால் புதிய நட்புகள் கிடைக்கும். பணவரத்து திருப்திகரமாக இருக்கும். கவன தடுமாற்றம் உண்டாகலாம். மனதில் திடீர் கவலை தோன்றும். சகோதரர் வழியில் மனவருத்தம் தரக்கூடிய சம்பவம் ஏற்படலாம். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. தொழில் வியாபாரத்தில் பங்குதாரர்களை அனுசரித்து செல்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் வேலை செய்யும் இடத்தில் இருப்பவர்களை அனுசரித்து செல்வதும் நல்லது. பிள்ளைகளிடம் எதையும் பக்குவமாக சொல்வது நன்மையை தரும். பெண்கள் வாழ்க்கை துணையுடன் வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. கலைத்துறையினருக்கு புதிய முயற்சிகள் கைகொடுக்கும். மாணவர்களுக்கு சக மாணவர்கள் ஆசிரியர்களை அனுசரித்து செல்வதன் மூலம் கல்வியில் முன்னேற்றமடைய தேவையான உதவிகள் கிடைக்கும்.

## மீனம்

**(புரட்டாதி 4 ஆம் பாதம், புரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி)**

மன உறுதி அதிகரிக்கும். எதிர்ப்புகள் நீங்கும். சந்திரன் சஞ்சாரம் புதிய தொடர்புகளை உண்டாக்கும். விருந்து நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வீர்கள். பலவகையிலும் வருமானம் கிடைக்கும். சிலர் புதிய வீடு கட்டும் பணி தொடங்குவார்கள். உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு பதவி உயர்வு, தேடி வரும். கனவுத் தொல்லை உண்டாகலாம். நீண்ட நேரம் கண் விழிக்க நேரிடும். தந்தையின் உடல்நிலையில் கவனம் தேவை. சகோதரர் வழியில் மனவருத்தம் உண்டாகலாம். தொழில் வியாபாரத்தில் இருப்பவர்கள் கடுமையான உழைப்பிற்கு பின் நல்ல பலன் பெறுவார்கள். குடும்பத்தினர் மூலம் உதவிகள் கிடைக்கும். கணவன், மனைவிக்கிடையே மகிழ்ச்சியான நிலை காணப்படும். பெண்கள் வெளியூர் பயணம் செல்ல நேரிடும். கலைத்துறையினருக்கு தேவையான உதவிகள் கிடைக்கும். மாணவர்களுக்கு கூடுதல் நேரம் ஒதுக்கி பாடங்களை படிப்பதன் மூலம் கல்வியில் வெற்றி உண்டாகும்.

# அஞ்சலி குப்பனின் தியாகம்...

## மொரீசியஸ் முதல் ரீயூனியன் வரை...

மாத்தளை சோமு

04



பிரிட்டிஷ் ஆட்சியில் கரும்புத் தோட்டத்தில் வேலை செய்த தொழிலாளர்கள் ஊதியம் போதாமை, பாதுகாப்பான சூழல், மேற்பார்வையாளர்களின் கெடுபிடி போன்றவற்றால் துயருற்று நிர்வாகத்திற்கு எதிராகப் போராடுவதற்கான வேலை நிறுத்தத்தை 1943 செப்டெம்பர் 13இல் தொடங்கினார்கள். வேலை நிறுத்தத்தை முடிவுக்கு கொண்டு வர தொழிலாளர்களின் பிரதிநிதிகளான ஹரிபிரசாத், ராம்நரையன், சர்மா ஜகதம்பா ஆகியோர் தொழிலாளர்களைக் கலந்தாலோசிக்காமல் கரும்புத் தோட்ட நிர்வாகத்தோடு ஒப்பந்தம் செய்தார்கள். ஆனால் அந்த ஒப்பந்தம் தமக்கு சாதகமில்லாததால் தொழிலாளர்கள் அதை ஏற்க மறுத்து வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்தார்கள். நாளாக நாளாக பதற்றம் அதிகரித்தது. செப்டெம்பர் 27ஆம் திகதி தொழிலாளர்கள் சமய வழிபாட்டை நடத்த ஒன்று திரண்டார்கள். ஆண்களும், பெண்களும், சிறுவர்களுமாக 300 பேர் அக்கூட்டத்தில் இருந்தார்கள். அவர்கள் நிர்வாகத்திற்கு எதிராக குரல் எழுப்பியவாறு இருந்தார்கள்.



தோட்ட நிர்வாகம் காவல்துறையை அழைத்தது. தொழிலாளர்களைக் கலைந்து போகச் சொன்னபோது அவர்கள் கலைந்து போகவில்லை. தொழிலாளர்கள் கைகளில் தடிகளையும் கற்களையும் வைத்திருந்தார்கள் என காவல்துறை சொல்லியிருக்கிறது. (அது எந்தளவுக்கு உண்மை எனத் தெரியவில்லை). காவல்துறை அவர்கள் கலைந்து போக நிர்ப்பந்தித்தபோது அவர்கள் கற்களை வீசியதால் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்று அது தோல்வி காண, காவல்துறை தொழிலாளர்களை நோக்கிச் சுடத் தொடங்கியது. அதில் மூவர் உயிர் துறக்க பலர் படுகாயமடைந்தனர்.

இறந்தவர்களில் 32 வயதான தனது முதலாவது குழந்தையை வயிற்றில் சுமந்த அஞ்சலி குப்பன் என்ற பெண்மணியே இன்று சிலையாக இருப்பவர். அவரோடு கிருஷ்ணசாமி, முனுசாமி, முனுசாமி முனியன் ஆகியோரும் கொல்லப்பட்டார்கள். இவர்கள் மூவரும் தமிழர்கள். இன்னொருவர் மார்டேபனப்பென் என்பவர் மருத்துவமனையில் காலமானார். மூவரின் இறுதி ஊர்வலத்திற்கு 1500 பேர் திரண்டார்கள். அஞ்சலி குப்பன் கொல்லப்பட்டது நாடெங்கும் அதிர்வலைகளை உண்டாக்கியது. 1980இல் பெருமாள் சுப்பராயன் என்பவர் அஞ்சலி அஞ்சலி எனும் கவிதை நாடகத்தை எழுதி வெளியிட்டார்.

2000ஆம் ஆண்டு டிசம்பர் 13ஆம் திகதி அஞ்சலிக் குப்பனின் உருவம் தாங்கிய ஒன்பது ரூபாய் மதிப்புள்ள முத்திரை வெளியிடப்பட்டது. 2003இல் அஞ்சலியைப் புதைத்த இடத்தில் கறுப்பு நிற நடுகல் நிறுவப்பட்டது. அந்த நிகழ்வில் அப்போது பிரதமராக இருந்த சேர் அனுருத் ஜகனாத் மற்றும் உதவிப் பிரதமர் போல் பெரெஞ்சர் ஆகியோர் கலந்து கொண்டனர். 2007இல் போர்ட்லூயிஸ் உயர் நீதிமன்றத்துக்கு அருகில் மனித உரிமை நிலைய வளாகத்தில் அஞ்சலிக் குப்பனின் சிலை நிறுவப்பட்டது. 2012இல் அரசின் சம வாய்ப்பை வழங்கும் அமைப்பு ஒவ்வொரு ஆண்டும் செப்டெம்பர் 27ஆம் நாளை சமய வாய்ப்பு வழங்கும் நாளாக அறிவித்தது. அந்நாளே அஞ்சலி குப்பன் மறைந்த நாளாகும். 2015இல் அஞ்சலி குப்பனையும் இன்னொரு பெண்மணியையும் உலகப் பெண்கள் தினத்தில் பாலின அங்கீகாரம், குழந்தை மேம்பாடு, குடும்ப நல அமைச்சர் மொரீசியஸ் அரசு சார்பாக கௌரவிக்கும் அறிவிப்பை வெளியிட்டார்.

வண்டியை நிறுத்த இடம் தேடி அதை நிறுத்த நாங்கள் மூவரும் வண்டியிலிருந்து இறங்கி சிலையருகே போனோம். உயரமான சிலை போர்ட் லூயிஸில் அமைக்கப்பட்ட ஒரு பெண் தொழிலாளியின் ஒரே ஒரு சிலை அது மட்டுமே. கரும்புத் தோட்டத் தொழிலாளர்களின் துயரத்தின் அடையாளம் அது.... முன்னரே விபரம் தெரிந்திருந்தால் ஒரு பூமாலை வாங்கிக் கொண்டு வந்திருக்கலாம் என்று நினைத்தேன்.

மூவரும் சிலை வடிவத்தில் இருக்கும் அஞ்சலி குப்பனுக்கு அஞ்சலி செய்துவிட்டு வண்டிக்குத் திரும்பினோம். வண்டி மறுபடியும் புறப்பட்டது.

"வீரன் அடுத்து எங்கே போகிறோம்?" என்று கேட்டார் மதியழகன்.

"ஒரு ஸ்டேடியம் பார்க்கப் போகிறோம்..."

"ஸ்டேடியமா? வேண்டாம். 83500 பேர் உட்காரும் ஸ்டேடியம் சிட்னியில் இருக்கிறது. அதை விட இது பெரிதா?"

வீரன் சொன்னார்..." இது பெரியது இல்லை. ஆனால் தமிழரின் பெயர் சொல்லும் ஸ்டேடியம். பார்த்தால் தெரியும்."

"அப்படியானால் போகலாம்" என்றேன்.

அந்த ஸ்டேடியத்தின் முன்னே வண்டியை நிறுத்தினார். கார் கண்ணாடி வழியே தெரிந்த பெயர் என்னைத் திகைக்க வைத்தது. ஆங்கிலத்தில் ANJALAY COOPEN STADIUM என்றிருந்தது. கரும்புத் தோட்டத் தொழிலாளியான அஞ்சலி குப்பன் பெயரில் ஒரு விளையாட்டு அரங்கம் (நவீன மைதானம்) 16000 பேர் இருந்து பார்க்கக் கூடியது. கால் பந்தாட்டப் போட்டி இங்கு நடக்கும். 1991இல் திறக்கப்பட்டது. என் அறிவுக்கு எட்டிய வகையில் ஒரு தொழிலாளியின் அதுவும் ஒரு தமிழ்ப் பெண்ணின் பெயரில் உலகில் உள்ள ஒரேயொரு மைதானம் இதுதான்.

வீரனுக்கு நன்றி சொன்னேன்...' எங்களின் குறிப்பாக என் நாடி பிடித்துப் பார்ப்பதுபோல் நாங்கள் போக விரும்பும் இடங்களுக்குக் கூட்டிப் போகிறாரே!..'

பகல் உணவுக்காகத் தமிழரின் உணவகத்திற்குப் போனோம். தமிழ்நாட்டுத் தமிழைக் கேட்டோம். உணவகத்தை நடத்துபவர் தமிழ் நாட்டிலிருந்து வந்தவர். அவர் மனைவியும் உணவகத்தில் இருப்பதால் குடும்ப உணவகமாக இருந்தது. நாங்கள் தமிழ் பேசுவதால் உணவகத்தை நடத்துபவருக்கு மகிழ்ச்சி. "நான் மனைவியோடு பிள்ளைகளோடு தமிழ் பேசினாலும் உங்களோடு தமிழ் பேசுவது உற்சாகமாக இருக்கின்றது...." என்றார். அவர் பெயர் ரவி.

இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற அந்த உணவகத்தில் இட்லி, தோசை, பூரி, வடை, பகோடா, பஜ்ஜி எனப் பல உணவுகளும் இருந்தன. உணவைச் சுவைத்து காரில் ஏறினோம். கார் புறப்பட்டது.

"அடுத்து என்ன பார்க்கப் போகிறோம் வீரன்?" என்று கேட்டார் மதியழகன்.

"புகழ் பெற்ற கோயில் கங்கா தலாவ்..."

முன்னொரு காலத்தில் எரிமலை வெடித்ததில் உருவான பள்ளத்தில் உருவான பெரிய குளத்தோடு கட்டப்பட்ட பெரிய கோயிலே கங்கா தலாவ். கடல் மட்டத்திலிருந்து 500 மீட்டர் உயரத்தில் 55 அடி அழமான குளம். இந்த இடம் குறித்து குடியேறிய இந்தியர்களால் நாட்டுப்புறக் கதைகள் சொல்லப்பட்டன. அது பரிதலாவ் என்றும் அழைக்கப்பட்டது. இங்கு இரவில் தேவதைகள் வந்து நடனமாடுவார்கள் என்றும் நம்பப்பட்டது. ஆனால் கோயில் உருவாக 1897இல் நேபாளிலிருந்து வந்த பண்டிட் ஜஹம்மோன் கிரி என்ற பூசாரியின் கனவே காரணமாக அமைந்தது. கங்கா தேவியின் மற்றொரு பெயரான ஜாஹனவி நதியிலிருந்து ஏரியில் நீரை ஊற்றுவதாக கனவு கண்டார். இதைக் கேள்விப்பட்ட மொரிசீயஸில் இருந்த சிலர் பூசாரி சொன்ன இடத்தைப் பார்வையிட்டபோது பூசாரி கனவில் சொன்னதைப் போல் ஒரு பெரிய குளத்தைக் கண்டார்கள். சிவராத்திரியின் போது நடைப் பயணமாக வந்து அக்குளத்தில் நீராடி சிவனை மனதால் வழிபட்டார்கள்.



இது நடப்பதற்கு முன்னர் 1866இல் பண்டிட் சன்ஜிபோனல் ரியூனியலிருந்து வந்தார். அவர் வர்த்தகம் செய்து பணம் சேர்த்ததால் குளம் இருக்கும் கிராண்ட் பாசின் (GRAND BASSIN) என்ற இடத்தை ஒரு புனிதத் தலமாக்க முடிவு செய்து கையிலிருந்த பணத்தில் அங்கிருந்த மாளிகையை விலைக்கு வாங்கினார். பிறகு கோயில் கட்ட முடிவு செய்தார்.

போர்ட் லூயிஸ் சொக்கலிங்கம் மீனாட்சியம்மன் கோயில் நிர்வாகம் கோயில் கட்டும் வடிவமைப்புக்கு உதவி செய்தது. சிவனுக்காகக் கட்டப்பட்ட இக்கோயிலில் அனுமான், கங்காதேவி, விநாயகர் ஆகியோருக்கு கோயில்கள் இருக்கின்றன. இக்கோயிலுக்குப் போகும் முகப்பில் 108 அடி உயரமுள்ள சிலைகள் சிவனுக்கும் துர்க்காதேவிக்கும் அமைக்கப்பட்டுள்ளது. ஆண்டுதோறும் சிவராத்திரியன்று இலட்சக்கணக்கானவர்கள் கூடுவார்கள். அவர்களில் ஆயிரக்கணக்கானவர்கள் தீவின் மறு கோடியிலிருந்து பாதயாத்திரையாக வருவார்கள். மொரீசியஸின் இந்து மக்களின் புனித தலமாக இருக்கும் இந்த இடத்தின் கிராண்ட் பேசின் என்ற பெயரை பிரதமராயிருந்த சேர் சீவோஸாகர் ராம்குலாம் குளத்தில் இந்தியாவிலிருந்து கொண்டு வந்த கங்கை நீரை ஊற்றி 'கங்காதலாவ்' (தலாவ் என்றால் குளம்) என மாற்றினார். கங்கா தலாவ் இன்று இந்துக்களின் ஆன்மிகத் தலமாகவும் உல்லாசப் பயணிகளின் முக்கிய இடமாகவும் மாறியிருக்கிறது.




கங்கா தலாவ்வைப் பார்த்துவிட்டு திரும்பும் போது வழியில் ஒரு பெரிய வண்டி நிறுத்தும் இடமும் கழிப்பறைகளும் தெரிந்தன. வீரன் வண்டியை நிறுத்தினார். சற்று தூரத்தில் மக்கள் கூடியிருந்தார்கள். அங்கு சிறிய உணவு விற்பனையகம் இருந்தது. போய்ப் பார்த்தோம். வடை, சமூசா, பக்கோடா என்பன விற்பனைக்கு இருந்தன. கங்கா தலாவ் கோயிலுக்குப் போகிறவர்கள், போய்த் திரும்புகிறவர்கள் இங்கு போய் வடை சாப்பிடாமல் போகமாட்டார்கள். வடை சுவையாக இருந்தது. வடை சுடுபவர்கள் தமிழர்களாய் இருந்த போதும் தமிழ் தெரியவில்லை அவர்களுக்கு.

அடுத்து எங்கே என்று கேட்டபோது வீரன் அங்கேயே காரை ஓட்டி நிறுத்தினார், நுழைவுச் சீட்டு வாங்கிக்கொண்டு போனோம், அங்கு கட்டடங்களோ வேறு எதுவும் இல்லை. ஆனால் பெரிய மக்கள் கூட்டம் கூடியிருந்தது. .எட்டிப்பார்த்த போது வட்டமான ஒருநிலப்பகுதி விதவிதமான நிறங்களில் இருந்தது. விசாரித்ததில் இயற்கையாகவே அந்த நிலப்பகுதி பல்வேறு நிறங்களைக் கொண்டதாம். அது ஏழு நிறபூமி (seven coloured earths) என அழைக்கப்படுகிறதாம் அது சுற்றுலாப் பயணிகளின் பிரசித்திபெற்ற இடமாக இருக்கிறது. தனியாருக்கு சொந்தமான அதனை பார்வையிட்டுவிட்டு திரும்பினோம்.

விடுதிக்குத் திரும்பிய போது ஸ்டீபன் நாராயணப் பிள்ளை என்னைச் சந்திக்க வருவதாக கைபேசியில் தகவல் கொடுத்தார். அரைமணி நேரத்தில் அவர் வந்தார். என்னோடு இருந்தவர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தேன்.

"நாளை மகாத்மா காந்தி இன்ஸ்ட்டியூட்டில் மாணவர்களுக்குப் பரிசளிப்பு இருக்கிறது. நீங்கள் மூவரும் வரவேண்டும். நேரம் குறித்த தகவல் தருகிறேன். மேலும் நேரம் இருந்தால் சுப்பிரமணியன் கோயிலுக்கு வாருங்கள். அங்கு ரீயூனியனுக்குப் போவது பற்றி பேசலாம்" என்றார் ஸ்டீபன் நாராயண பிள்ளை, அவர் விரிவுரையாளர்.

"உங்கள் பெயரில் ஸ்டீபன் இருக்கிறதே! நீங்கள் எப்படி இந்து கோயிலுக்கு...." என்று நிறுத்தினேன்.

"நான் இந்து.. ஆனால் பிரெஞ்சு ஆட்சியில் எல்லோரும் கிறிஸ்தவப் பெயர் வைக்கும் முறை இருந்தது. அதன்படி எனக்கு ஸ்டீபன்.. சுதந்திரத்திற்குப் பிறகு அது மாறிவிட்டது.."

அவரின் பதில் என்னை பர்மாவை நினைக்க வைத்தது. பர்மாவில் (மியன்மாரில்) பௌத்த மதம் சார்ந்த பர்மியர்களைத் தவிர மற்ற மதத்தவர்களும் பர்மிய மொழியில் பெயர் வைக்க வேண்டும். அப்போது தான் பிறப்பையே பதிவு செய்வார்கள். அங்கு பர்மிய மொழியில் பெயர்; இங்கு மதத்தின் பேரால் பெயர். ஆளும் வர்க்கங்களின் அதிகாரத்தில் தனி மனிதர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது என்பதையே இவை காட்டுகின்றன....

பயணம் தொடரும்...



# படித்ததும் பகர்வதும் 207



சிரேஷ்ட சட்டத்தரணி, கலாபூஷணம் ரஷீத் எம் இம்தியாஸ்

## நல்லதை சொல்கிறோம்

### வாக்களிக்க வழிகாட்டுங்கள்!

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே எஞ்சி இருக்கின்றன. இம்முறை 39 வேட்பாளர்கள் என்ற அதிக அளவிலான வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

இலங்கையில் நடைபெற்ற முன்னைய ஜனாதிபதி தேர்தல்களை போலன்றி இம்முறை பிரதான வேட்பாளர்கள் மூவர் அல்லது நால்வர் இடையே கடும் போட்டி நிகழ்வதை அவதானிக்கக் கூடியதாக இருக்கின்றது. இதனால் எவர் வெற்றி பெறுவார் என்பதை ஓரளவுக்கேனும் ஊகிப்பது சற்றுக் கடுமையானதாகவே தெரிவதாக கூறப்படுகிறது.



இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் படி, எந்தவொரு வேட்பாளராயினும் அளிக்கப்பட்ட வாக்குகளில் 50 வீதத்திற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான வாக்குகளைப் பெற்றால் மட்டுமே முதல் சுற்றுலேயே வெற்றிபெற்றவராக அறிவிக்கப்படுவார். எந்தவொரு வேட்பாளரும் இவ்வாறு 50 வீத வாக்குகளைப் பெறாவிட்டால் முதலிரு இடங்களை பெறுபவர்களை போட்டியாளர்களாக கருதி ஏனைய வேட்பாளர்கள் பெற்ற வாக்குகளில் இரண்டாவது, மூன்றாவது விருப்பு வாக்குகளை கணிப்பிட்டு அவற்றையும் சேர்த்து கூடுதலான வாக்குகளை பெறுபவரே வெற்றியாளராக அறிவிக்கப்படுவார்.

இலங்கையில் இவ்வாறானதொரு நிலை முன்னர் ஒருபோதும் ஏற்பட்டதில்லை. ஆயினும் இவ்வருட தேர்தலில் முதலிடங்களுக்கு கடுமையான போட்டி இருப்பதால் இத்தகைய இரண்டாவது விருப்பு வாக்குகளை எண்ண வேண்டிய தேவை ஏற்படும் என்பதே பரவலான கருத்தாக உள்ளது. இந்த நிலைமையை புரிந்து கொண்டு வாக்காளர்கள் சரியான முறையில் வாக்களிக்கவும், அவர்களது இரண்டாவது மூன்றாவது விருப்பத் தேர்வுகளை சரியான முறையில் வாக்களிப்பின் போது பதிவு செய்யவும் வழிகாட்டவும் பயிற்சியளிக்கவும் வேண்டிய தேவை உள்ளது.

பெருந்தொகையான புதிய வாக்காளர்கள் வாக்களிக்க இருக்கிறார்கள். வயோதிபர்களும் சரியாக வாக்களிக்கத் தெரியாதவர்களும், அதிக அளவில் காணப்படுகிறார்கள். இவ்வாறானவர்கள் சரியாக வாக்களிக்க முறையான வழிகாட்டல்கள் கட்டாய தேவையாக உள்ளது. இல்லையெனில் நிராகரிக்கப்படும் வாக்குகளின் எண்ணிக்கை எதிர்பாராத வகையில் அதிகரிக்கக் கூடிய சாத்தியங்களே அதிகம் காணப்படுகின்றன.

இந்நிலைமையை சரியாக புரிந்து கொண்டு, வாக்காளர்கள் தமது விருப்பத்துக்கு ஏற்ப ஒருவருக்கு வாக்களிக்கவும், அதே வேளை அவர்களது இரண்டாவது மூன்றாவது விருப்பத் தேர்வுகளை சரியாக வழங்கிடவும் முறையான, பொருத்தமான வழிகாட்டல்களை அல்லது பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டியது விடயமறிந்த, விளக்கம் தெரிந்த ஒவ்வொருவர் மீதுள்ள தார்மீகப் பொறுப்பாகும்.

## நெஞ்சுக்கு நீதி

நாளைய நாளை நல்லதாக ஆக்கிடத்தான் தேர்தல்
நமை ஆள நல்லோரை தேர்ந்திடவுந்தான் தேர்தல்
நாமதனைச் சரியாகச் செய்கின்றோமா என்றறிதல்
நம் கடமை அதனோடு சரிதெரிவில் வாக்களித்தல்

## சட்டமும் நாமும்

### ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி?

இவ்வருட ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கும் ஒழுங்குமுறை பற்றி ஒவ்வொருவரும் சரியாகத் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகும். இதுபற்றி தேர்தல் ஆணைக்குழு தனது ஊடக அறிவித்தல் மூலம் தெளிவுபடுத்தியுள்ளதன் அடிப்படையில் பின்வருமாறு அதனை விளங்கிக்கொள்ள முடியும்.

இவ்வருடம் செப்டம்பர் மாதம் 21ஆம் திகதி நடத்தப்படவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது மூன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றமையினால் ஒரு வேட்பாளருக்கு ஒரு வாக்கையும், வேறு இரண்டு வேட்பாளர்களுக்கு இரண்டாவது, மூன்றாவது விருப்பத் தெரிவையும் தமது வாக்குச்சீட்டில் அடையாளமிடுவதற்கான வாய்ப்பு காணப்படுவதோடு, அவசியமெனில் ஒரு வாக்கை மாத்திரம் அடையாளமிடுவதற்கும் முடியும்..

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | |
| LMN | ⬯ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ⬯ | |

| | | |
|---|---|---|
| ABC | □ | |
| XYZ | ⬠ | 1 |
| IOU | △ | |
| PQR | ◇ | 2 |
| LMN | ⬯ | 3 |

வாக்காளர், வாக்குச்சீட்டில் தனக்கு விருப்பமான வேட்பாளரின் பெயர் மற்றும் சின்னத்திற்கு எதிரில் அதற்கென குறித்தொதுக்கப்பட்டுள்ள பகுதியில் 1 என்ற இலக்கத்தைக் குறித்து வாக்கைப் பிரயோகித்தல் வேண்டும். அதன் பின்னர் 2 மற்றும் 3 என்ற இலக்கங்களைக் குறிப்பதன் மூலம் தனது இரண்டாவது மற்றும் மூன்றாவது விருப்பத் தெரிவைக் குறிப்பிட முடியும்.

வாக்குச்சீட்டொன்றில் வாக்காளர் தனது இரண்டாவது அல்லது மூன்றாவது விருப்புத் தெரிவுகளை அடையாளமிடவில்லையென்றாலும் அதில் முறையாக ஒரு வேட்பாளருக்கு அடையாளமிடப்பட்ட வாக்கொன்று காணப்படின், அது செல்லுப்படியான வாக்கொன்றாக ஏற்றுக் கொள்ளப்படும். அதற்கமைய சட்டரீதியாக செல்லுபடியான வாக்கு மற்றும் விருப்பத் தெரிவுகளை அடையாளமிடக்கூடிய முறைகள் கீழே தரப்பட்டுள்ள படங்களில் காட்டப்பட்டுள்ளன. இதன்படி தமது விருப்பத்துக்கு ஏற்ப ஒருவருக்கு மட்டும் வாக்களிப்பது, இருவருக்கு வாக்களிப்பது, மூவருக்கும் வாக்களிப்பது எப்படி என்பது வரிசையாகத் தரப்பட்டுள்ளன.

மேற்படி முறைகள் தவிர, வாக்காளரின் வாக்களிக்கும் உளக்கருத்து வாக்குச்சீட்டின் மீது இடப்பட்ட ஏதேனும் அடையாளமொன்றினால் தெளிவாகத் தெரிகின்றவிடத்து (உதாரணமாக X மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ளபோது) அது குறித்த வாக்காளருக்கு அளிக்கப்பட்ட வாக்கொன்றாகக் கருதப்படும்.

கீழே குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் அடையாளமிடப்பட்டுள்ள வாக்குச்சீட்டுகள் வாக்கு எண்ணலின் போது நிராகரிக்கப்படும்.

எந்தவொரு வேட்பாளருக்கும் வாக்கு அடையாளமிடப்படாதுள்ளபோது,

ஒன்றுக்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்காக வாக்கு அடையாளமிடப்பட்டுள்ள போது,

ஒரு வேட்பாளருக்கு 1 மற்றும் மற்றொருவருக்கு X அடையாளமிடப்பட்டுள்ள போது,

இரண்டாவது விருப்பத் தெரிவு அல்லது மூன்றாவது விருப்பத் தெரிவு மாத்திரம் அடையாளமிடப்பட்டுள்ள போது,

வாக்காளரை அடையாளம் கண்டுகொள்ளக்கூடியதான ஏதேனுமொன்று எழுதப்பட்டிருப்பின் அல்லது வரையப்பட்டுள்ள போது,

1 தவிர்த்த வேறு அடையாளமொன்றுடன் 2, 3 விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது.

1, 2, 3 ஐ தவிர வாக்கு மற்றும் விருப்புத் தெரிவுகள் அடையாளமிடப்பட்டுள்ள போது,

இவ்வாறு பிழையாக வாக்களித்து தமது வாக்குகளை வீணாக்கிவிடக் கூடாது என்பதில் ஒவ்வொருவரும் மிகக் கவனமாக இருத்தல் வேண்டும்.

## புது வரவு

### மாநபி பேசாத மௌன மொழி தமிழ்

2023.06.04ஆம் திகதி தினகரன் வாரமஞ்சரி 'படித்ததும் பகர்வதும்' பத்தியில் நாம் எழுதியது போல், ஆறு தசாப்தங்களாக சிறப்பான இலக்கிய பங்களிப்புகளை வழங்கி வருபவரும், பல்வேறு பரிசில்களுக்கும், பட்டங்களுக்கும், பாராட்டுக்களுக்கும் சொந்தக்காரருமான கலாபூஷணம் எஸ். ஐ. நாகூர்கனி, பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட ஆய்வுத்துறையில் ஈடுபாடுள்ளவர்களுக்குப் பயன்படும் விதத்தில் எழுதியுள்ள "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" எனும் நூல் இப்போது சிறப்பாக, வெளிவந்துள்ளது.

"இஸ்லாமியர்கள் மாத்திரமின்றி தமிழ் பேசும் அனைவரும் மிகவும் நெருக்கமாக அறிந்த சமயமாகவும் பண்பாடாகவும் அது நிலவுகின்றது. இதன் வழி தான் ஏக இறைவனும் இறைத்தூதரும் புனித குர்ஆனும் தமிழ்ப் பண்பாட்டில் கால்கொண்டு ஊன்றித் திளைத்தன. இறைதூதர் முகம்மது அலைஹிவஸல்லம் அவர்களுக்குத் தமிழ் தெரியாது. ஆயினும் அவர் தமிழ் வழி வாழ்க்கையில் பரவலாக அறியப்பட்டிருக்கின்றார். அவர் நிகழ்த்திய போதனைகளும் முறைகளும் தமிழில் பரிச்சயமாகி உள்ளன. அதேவேளை அவரது கருத்துக்களும் தமிழில் நிலவிய பாரம்பரியக் கருத்துக்களும் ஒத்துப் போகின்றன.



சிந்தனைத் தடங்களின் ஊற்றுக் கண்கள் எங்கும் ஏக தன்மை கொண்டுள்ளன என்பதான கருத்தியலை முன்னிறுத்தி எழுத்தாளர் எஸ். ஐ, நாகூர்கனி "மாநபி பேசாத மௌன மொழி தமிழ்" என்ற நூலை எழுதியுள்ளார்." என இந்நூல் பற்றி பேராதனைப் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் வ. மகேஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

"உண்மைகள், உயர்ந்த சிந்தனைகள் உலகம் முழுவதற்கும் பொதுவாக உரிமையானவை ஒருமையானவை. ஒன்றும் ஒன்றும் இரண்டு என்ற உண்மைக்கு யார் உரிமை கோர முடியும்? உலகின் எல்லாப் பகுதிக்கும் எல்லாச் சமூகத்திற்கும் எல்லா மொழிக்கும் ஒன்றான உண்மை அது. இத்தகைய உயர்ந்த விளக்கத்தை – தத்துவத்தை தன்னுட் கொண்ட தலைப்பாக இந்நூலின் தலைப்பு அமைகிறது. நூலாசிரியர் தாம் உச்சியில் வைத்துப் போற்றும் நபிமொழிகளோடு தமிழ் இலக்கியங்களுக்கு இயைபு காண்கின்றார். உண்மைகளை நடைமுறைச் சம்பவங்களோடு பொருத்தி எளிமையாக விளக்குகிறார். அவர் கையாண்ட எடுத்துரைப்பு உத்தி பொது வாசகர்களுக்கு இஸ்லாத்தின் சிறப்புகளையும் தமிழ் இலக்கியச் சுவையையும் உணர்த்தும் என்பது உறுதி." என விதந்துரைக்கிறார் தென் கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை முதுநிலை விரிவுரையாளர் க. இரகுபரன்.

"மொழியினின்றும் சமயத்தை பிரித்துவிட வேண்டும்" என்னும் திராவிடவியலாளரின் ஆணித்தரமான கருத்துக்கு சாவுமணி அடித்திருந்திருக்கிறார் நூலாசிரியர். மொழியினின்றும் சமயத்தைப் பிரிப்பது எப்படி? மொழியோடு சமயம் வளர்கிறது. சமயத்தோடு மொழியும் வளர்கிறது. அரபும் – இஸ்லாமும் பின்னிப்பிணைந்த பாங்கில் தமிழ்மொழியின் பாற்கொண்ட காதலால், புதிய சிந்தனை, புரட்சிகரமான சிந்தனை என்ற வகையில் ஆசிரியர் நாகூர்கனி சிந்தனை வழி மொழியில் நிற்கிறார், நிற்பார்! எனப் புகழ்ந்துள்ளார் தமிழ்நாட்டு தமிழ்ப் புலவர் அ. நீலாவதி.

இவ்வாறு பேரறிஞர்கள் போற்றியுள்ள 'மாநபி பேசாத மௌன மொழி தமிழ்' என்ற இந்த இந்நூலின் ஆசிரியர், இவ்வாறு கூறுகின்றார், "வின்முகட்டை வெண்ணிறத் தாளாக விரித்து மாநிலத்தின் மரங்களை எல்லாம் சீவி எழுதுகோலாக்கி கடல் நீரை எல்லாம் மையாக ஊற்றி எழுதினாலும் புகழ் பாடி முடியாத பூமான் நபி (ஸல்) யின் காதையை உலகின் பல்வேறு மொழிகளில் பல நூறு பேனா மன்னர்கள் பல தரப்பட்ட கோணங்களில் எழுதி முடித்தனர். இதில் என் பங்காக என் அன்னை மொழியாம் தேமதுரத் தமிழில் நானும் எழுதிடத் துணிந்தேன். அதாவது பெருங்கடலில் சிறு கிண்ணத்தால் நீரள்ள வந்த சிறுவனாய் செம்மல் நபி (ஸல்) யின் சீர்மேவும் சீறாவை செம்மொழியால் பேச வந்தேன்."

மாநபி முஹம்மத் (ஸல்) பற்றி தமிழில் ஏராளமான நூல்கள் வெளிவந்துள்ள போதிலும் அவற்றுக்கு முற்றிலும் வேறுபட்ட தனித்துவமான 63 வேறுபட்ட தலைப்புகளில் கருத்துக்கள் செறிந்துள்ள இந்நூல் தமிழ் பேசும் அனைவரும் சுவைபட வாசித்து இரசிக்கக் கூடிய நூல் என்றால் மிகையல்ல.

நூல்: மாநபி பேசாத மௌன மொழி தமிழ் (ஒப்பீட்டாய்வு : மாநபியின் சிந்தனைகள் தமிழ்), ஆசிரியர்: காதிபுள் ஹக் சத்திய எழுத்தாளர் கலாபூஷணம் எஸ்.ஐ. நாகூர்கனி, பதிப்பு: 2024, பக்கங்கள்: 500, விலை: 900/=.

## சிந்தனை செய் மனமே

### மன்னனும் வாக்குறுதிகளும்!

ஒரு மன்னனுக்கு நிறைய பிள்ளைகள். அந்த நாட்டின் சட்டப்படி மன்னனின் வாரிசுகளில் யாருக்கு மக்களிடம் அதிக செல்வாக்கு இருக்கிறதோ அவரே அடுத்த மன்னனாக வர முடியும்.

அந்த வகையில் மன்னனின் பிள்ளைகளில் ஒருவன் மக்களிடம், தான் அந்த நாட்டு அரசனானால் அவர்களுக்கு நிறைய சலுகைகளை, வசதி வாய்ப்புகளை வழங்குவதாகவும், அவர்களது வாழ்க்கையை சுபீட்சமாக்குவதாகவும் உறுதியளித்தான்.

அவனின் பேச்சு மக்களை நன்கு ஈர்த்தது. மக்கள் அவனது வாக்குறுதிகளில் மதி மயங்கினர். அதனால் அவனை அமோகமாக ஆதரித்தனர். அதனால் அவனும் அந்நாட்டின் மன்னனானான்.

ஆனால், அவன் மன்னனான பின் அவன் கொடுத்த வாக்குறுதிகளில், உறுதிமொழிகளில் ஒன்றைக் கூட நிறைவேற்றவில்லை. இதனால் மக்கள் வெறுப்படைந்திருந்தனர்.



இதனால் அந்த மன்னரிடம் மெய்க்காப்பாளனாக வேலை பார்த்த ஒருவன் மக்களின் சார்பாக அவரிடம் இப்படி கேட்டான்,

"மன்னா! உங்கள் வார்த்தைகளையும், வாக்குறுதிகளையும் நம்பித்தான் மக்கள் உங்களுக்கு ஆதரவளித்தார்கள். ஆனால் நீங்கள் அவர்களின் ஆதரவை மட்டும் பெற்றுக்கொண்டு, இப்போது அவர்களுக்குச் செய்வதாகச் சொன்ன சலுகைகள் ஒன்றைக்கூட செய்யவில்லையே! ஏன் மன்னா?"

மன்னன் அவனது கேள்விக்கு பதிலேதும் பேசவில்லை. சில நாட்கள் கழித்து அந்த மெய்க்காப்பாளனை அழைத்துக் கொண்டு ஆற்றுக்கு மீன் பிடிக்கச் சென்றான். மெய்க்காப்பாளன் தூண்டிலில் புழுவை மாட்டிக் கொடுக்கக் கொடுக்க அதை வாங்கிய மன்னன், தூண்டிலை நதியில் வீசி மீன்களை பிடித்தான். நிறைய மீன்கள் சிக்கின. அவை கூடைகளில் துடிதுடித்துக் கொண்டிருந்தன.

மீண்டும் அரண்மனைக்கு கிளம்பும் போது மன்னன் மெய்க்காப்பாளனிடம் கேட்டான், "காவலனே! நான் மீன் பிடிப்பதற்கு முன்பாக மீனுக்கு விருப்ப உணவாக இருக்கும் புழுக்களை தூண்டிலில் மாட்டி மாட்டி என்னிடம் கொடுத்தாயே! இப்பொழுது இரண்டு கூடை நிறைய மீன்கள் பசியால் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன. அவைகளுக்கு ஏன் நீ இப்பொழுது புழுக்களை உணவாகக் கொடுக்கவில்லை?"

காவலன் சட்டென பதில் சொன்னான், "மன்னா! நமது நோக்கம் புழுவைக் காட்டி மீன்களை பிடிப்பது தானே தவிர மீன்களைப் பிடித்து அதற்கு புழுக்களை உணவாக கொடுப்பது அல்லவே"

மன்னன் சிரித்துக் கொண்டே கேட்டான், "இப்பொழுது புரிகிறதா? நான் ஏன் மன்னனாகும் முன் மக்களிடம் சொன்னவைகளை மன்னான பின் செய்யவில்லை என்று...!"

காவலன் மன்னனின் இந்தப் பதிலால் வாயடைத்து நின்றான்!

இதனை வாசித்துவிட்டு இப்போதைய தேர்தல் காலத்தில், நீங்கள் வேறு எதனையாவது கற்பனை செய்துகொண்டால் அதற்கு நாம் பொறுப்பல்ல.

இப்பத்தியில் இடம்பெறும் அம்சங்களின் நோக்கை, போக்கை, அமைப்பை, அளவை, அழகை பின்பற்றி எவரும் எழுதலாம். "படித்ததும் பகர்வதும்" பகுதியுடன் தொடர்பு கொள்ள, மின்னஞ்சல் (email): pptknvm@gmail.com, வாட்ஸ்எப் (WhatsApp): 0777314207




40

ஜனரஞ்சக எழுத்தாளர்
மொழிவாணன்

# நிறைவு பெற்றதே துப்பாக்கி முனை! பார்வதி தருவாளே இனி உங்களுக்கு துணை!

துர்காவுக்கு ஆபத்து வந்துவிட்டது என்பதைத் புரிந்து கொண்ட சிந்துஜன்,

விரைந்து மறைவிடத்தில் இருந்து வெளியே வந்தான்.

இதைக் கவனித்துவிட்ட சொலமன்,

உடனே அவனைக் குறிபார்த்துச் சுட்டார்!

அடுத்து,

சிந்துஜன் சுருண்டு கீழே விழவில்லை!

காரணம்,

சொலமனின் கைத்துப்பாக்கி வெடிக்கவில்லை!

உடனே அதை சட்டைப் பைக்குள் போட்டுக் கொண்டு,

கால்சட்டைப் பையில் இருந்த மற்றைய துப்பாக்கியை எடுப்பதற்கு முயற்சி செய்தார்.

ஆனால் அதற்கு அவருக்கு அவகாசம் கொடுக்காமல்,

இறப்பர் பந்தைப் போல்,

சுவர்மீது துள்ளிப் பாய்ந்தான் சிந்துஜன்.

அடுத்து,

இருவரும் கீழே விழுந்தார்கள்!

சொலமன் துப்பாக்கியை எடுத்துவிடாதபடி அவர் கையை அழுத்திப் பிடித்துக் கொண்டான் சிந்துஜன்.

சொலமனும் அவனைவிடவில்லை!

ரிவோல்வரை எடுப்பதற்கு முயற்சி செய்தார்!

அடுத்து,

இருவரும் படிகளில் இருந்து கீழே உருண்டு சென்றார்கள்!

ஆனாலும்,

சொலமனின் கையில் இருந்த ரிவோல்வரோ,

சிந்துஜன் பிடித்திருந்த சொலமனின் கையோ,

பிடிதளரவில்லை!

இருவரும் பயங்கரமாக கட்டிப் புரண்டார்கள்.

இறுதியில், டுமீல்!

சொலமனின் துப்பாக்கி வெடித்தது!

இப்போ,

இருவரும் எழுந்து நின்றார்கள்

எல்லோரும் வியப்புடன் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்!

துப்பாக்கி,

சொலமனின் மார்பைக் குறிபார்த்துக் கொண்டிருந்தது.

துப்பாக்கியின் லிவரை அவர் கையாலேயே அழுத்தும்படி செய்து விட்டான் சிந்துஜன்!

இப்போது,

சொலமனின் முதுகுப் பக்கத்தாலும் மார்புப் பக்கத்தாலும்,

இரத்தம் வடிய ஆரம்பித்தது!

சிறிது நேரம் அப்படியே நின்றிருந்த சொலமன்,

அடியற்ற மரம்போல் அப்படியே தரையில் சாய்ந்தார்!

சாயும் போதே பிணமாகத்தான் சாய்ந்தார்!

அத்தோடு முடிந்தது சொலமனின் கதை!

பண்டாரவளை பொலிஸாரின் உதவியுடன் எல்லா விசாரணைகளையும் முடித்துவிட்டு,

இரண்டு பிணங்களையும் எலும்புக்கூட்டையும் அவர்களிடம் ஒப்படைத்து,

பயங்கரமாக அந்த துப்பாக்கி முனையில் இருந்து அவர் வெளியே வரும்போது,

மாலையாகிவிட்டது.

துர்காவையும் சிந்துஜனையும் தோமஸூடன் ஏற்கனவே அனுப்பி வைத்திருந்தார்.

இன்ஸ்பெக்டரின் காயத்தின் வலி அதிகரித்திருந்ததனால்,

அவர் பண்டாரவளை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்!

அதன்பிறகு அங்கிருந்து புறப்பட்டு தோமஸின் வீடு வந்து சேர்ந்த போது,

அவர்கள் மூவரும் இரவு உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

மூவரும் மகிழ்ச்சியோடு பேசிக் கொண்டிருந்தார்கள்!

தான் செய்த சட்ட விரோதமான செயல்களினால்,

துர்காதான் தனது மகள் என்று

சொல்ல முடியாத அளவுக்கு அவர் அடைந்த துயரங்கள் எல்லாம் நீங்கி இப்போது தான் மகிழ்ச்சியோடு வாழும் நிலையை அடைந்துள்ளார்.

சுதந்திரக் காற்றைச் சுவாசித்தபடியே, அவர் தனது மகளுடன் பேசிக் கொண்டிப்பதைப் பார்ப்பதற்கு சிரஞ்சீவிக்கு மகிழ்ச்சியாகவே இருந்தது. தனது வருங்கால கணவனுடனும், தந்தையுடனும் அமர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த துர்கா,

'வாங்க சேர்... சாப்பிடலாம்!'

'இல்லை... நான் புகையிரதத்தில் வரும்போதே கென்டினில் சாப்பிட்டு விட்டேன்!' என்று சொல்லியபடியே,

அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டார்.

பிறகு,

அவர் மெல்லப் பேச ஆரம்பித்தாள்.

'ம்... இதுவரையில் துப்பாக்கி முனையில் நடந்த எல்லா மர்மங்களுக்கும் விடை கிடைக்காமலே இருக்கிறது. செல்வராகவன் எழுதி வைத்திருக்கும் டைரியை படித்துப் பார்த்தால் அதற்கான விடையையும் கண்டு பிடித்துவிடலாம்!' என்று சொல்லி விட்டு, தனது கையில் வைத்திருந்த அந்த டைரியை எடுத்து படிக்க ஆரம்பித்தார்.

'நான் இந்த டைரியை எழுதுவதற்கு முக்கியமான காரணம், ஏதோ ஒரு காரணத்தினால் தான் திடீரென்று இறந்துபோனால் சில சமயம் அதற்கான காரண கர்த்தாவாக சொலமன் இருக்கக் கூடும் என்பதனால்தான் இந்த டைரியை எழுதிவைக்கிறேன்.

எங்கள் இருவருக்கும் பொலிஸ் உத்தியோகம் கிடைத்த பிறகு கொழும்பு ஏழில் இருந்த பெரும் புள்ளிகளுடன் எங்களுக்கு தொடர்பு ஏற்பட்டது. இதனால் அவர்களைப் போல் செல்வந்த வாழ்க்கை வாழ வேண்டுமென்பதற்காக வட்டிக்குக் கூட பணம் வாங்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதனால் சில செல்வந்தர்களுக்கு அடிமையாக வாழ வேண்டிய சூழ்நிலை கூட ஏற்பட்டது.

கிடைத்த சம்பளத்தில் வாங்கிய பணத்திற்கு வட்டி கூட கட்ட முடியாமல் போனபோதுதான் நாங்கள் விழுந்திருக்கும் பயங்கர நிலைமை புரிய ஆரம்பித்தது.

இந்த சந்தர்ப்பத்தில் தான், சோன்டர்ஸ் வங்கியில் பல இலட்சங்களைத் திருடி விட்டு தலைமறைவாக இருந்த மகேந்திரனைக் கைது செய்யும் பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது! இதை சிறப்பாக நிறைவேற்றியதால் வங்கியிலிருந்து ஒரு தொகைப் பணம் எங்களுக்கு கிடைக்குமென்பதை நாங்கள் தெரிந்து கொண்டோம்!

நாங்கள் கடன் தொல்லையில் இருந்து மீள்வதற்கு இதுதான் ஒரே வழி என்பதைப் புரிந்து கொண்ட நாங்கள் மகேந்திரனைக் கண்டு பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டோம்.

ஒருநாள் நாங்கள் இருவரும் ஒரு ஓட்டலில் அமர்ந்து சாப்பிட்டுக் கொண்டிருந்த போது, எங்களிடம் இருந்த மகேந்திரனின் புகைப்படத்துச் சாயலில் இருந்த ஒருவன் ஓட்டலை விட்டு வெளியே போவதைப் பார்த்து விட்ட சொலமன்,

'செல்வா அங்கே பாருங்கள். அவனைப் பார்த்தால் மகேந்திரனைப் போலவே இருக்கிறான்!' என்றார்.

அவர் சொன்னது உண்மைதான். அவன் மகேந்திரனைப் போலவே இருந்தான். ஒரு தாடியும் கண்ணாடியும் தான் வித்தியாசமாக இருந்தது.



இருவரும் உடனே அவளைத் தொடர்ந்து சென்ற போது தான் பண்டாரவளையில் இருக்கும் துப்பாக்கி முனை பங்களாவை விலைக்கு வாங்கி அதில் அவன் தங்கியிருப்பது தெரியவந்தது. நாங்கள் மிகவும் சிரமப்பட்டு துப்பாக்கிமுனை பங்களாவுக்குள் சென்றபோது, மேசை மீதிருந்த பணக்கட்டுகளோடு மகேந்திரனைப் பார்க்க முடிந்தது.

எங்களைப் பார்த்ததும் மகேந்திரன் பரபரப்படைந்தான்

'உன்னை கைது செய்யப் போகிறோம் என்றேன்.

அடுத்து,

டுமீல்! துப்பாக்கி வெடித்தது.

தொடர்ந்து, மகேந்திரன் தொப்பென்று கீழே சாய்ந்தான்.

அவன் மண்டை ஓட்டின் வழியாக துப்பாக்கித் தோட்டா வெளியே பாய்ந்திருந்தது.

ஆமாம்!

மகேந்திரன் தற்கொலை செய்து கொண்டிருந்தான்!

இதன்பிறகு இவரது பிணத்தை எடுத்துச் சென்று ஸ்டோரூமில் போட்டு விட்டோம்.

பணத்தை எண்ணிப் பார்த்தோம்.

ஒரு கோடி ரூபாய் வரையில் இருந்தது!

அதை வங்கியிடம் ஒப்படைத்து எங்களுக்கு கிடைக்கும் பரிசுத் தொகையை பெற்றுக் கொள்வோம் என்று நான் சொன்னபோது சொலமன் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. மகேந்திரன் இங்கிருந்த விஷயமோ, பணம் இங்கிருந்த விஷயமோ எவருக்கும் தெரியாது. அதனால் அந்த பணத்தை நாமே பகிர்ந்து கொள்வோம் என்றார். நான் எவ்வளவோ மறுத்தாலும் இறுதியில் அவர்தான் ஜெயித்தார். திருடனைப் பிடிக்கச் சென்ற நாம் இறுதியில் திருடர்களாகி, பணத்தைப் பகிர்ந்து கொண்டு அங்கிருந்து வெளியேறினோம்.

மறுநாள்,

இரண்டு சாட்சிகளோடு மகேந்திரன் கள்ளத் தோணியில் இந்தியாவிற்கு தப்பி ஓடிவிட்டதாக கதையை பரப்பி விட்டோம்!' என்று டைரியை நிறைவு செய்தார் செல்வராகவன்.

'ஓ... அப்படியானால் துர்கா பார்த்த அந்த மண்டை ஓடு மகேந்திரனுடையது தானா' வியப்புடன் கேட்டான் சிந்துஜன்.

'ஆமாம்... இதுதான் துப்பாக்கி முனையில் இறுதியாக எஞ்சியிருந்த மர்மம். தனது மனசாட்சிப்படிதான் செல்வராகவன் நடந்து கொண்டார். இதனால்தான் சொலமனைக் கண்டு அவர் பயந்து போயிருந்தார்!' எது எப்படி இருந்தாலும் சிந்துஜனுக்கும் துர்காவிற்கும் தான் இந்த விஷயத்தில் நன்மை நடந்திருக்கிறது!' என்று சொல்லியபடியே இருவரையும் பார்த்தார் சிரஞ்சீவி.

சிந்துஜனும் துர்காவும் ஒருவரை ஒருவர் பார்த்து, கண்ணடித்துக் கொண்டார்கள்.

(முற்றும்...)

# சிறுவர் உலகம்

சுகந்தி

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 130

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 01 | 02 | 03 | 04 | | 05 |
| 06 | | 07 | | 08 | 09 |
| 10 | 11 | | 12 | 13 | |
| 14 | | 15 | | 16 | 17 |
| | 18 | 19 | 20 | | 21 |
| 22 | 23 | 24 | | 25 | 26 |

பெயர் ..................................................

வகுப்பு ..................................................

தொலைபேசி இல ..................................................

பாடசாலை பெயர் ..................................................

வதிவிட முகவரி ..................................................

..................................................

.............................. ..............................

மாணவரின் பெயர்

வகுப்பாசிரியர் பெற்றோர் கையொப்பம்

### இடமிருந்து வலம்

(1) உலகில் இடம்பெறுகின்ற மோசமான இயற்கை அனர்த்தங்களில் இதுவும் ஒன்று. இலங்கையில் இந்த அனர்த்தம் கிடையாது. நெருப்புக் குழம்பு ஆறு போல பெருக்கெடுத்தோடி பெரும் சேதங்களை ஏற்படுத்துவதுண்டு.
(8) அம்பு, பாணம், சரம் என்பதெல்லாம் இச்சொல்லின் ஒத்தபொருள் சொற்கள்.
(10) தன்மை, பன்மை பெயர்ச்சொல். (தலைகீழான சொல்)
(12) மலர்களில் சுரக்கும் அமுதம்.
(16) மலையில் ஊற்றெடுத்து, நிலங்களைப் பசுமையாக்கி, கடலுடன் சங்கமிக்கும் நீர்நிலை. (தலைகீழான சொல்)
(18) இது உறவுமுறைச் சொல். மாமாவின் மனைவியை இந்த உறவுமுறைச் சொல்லால் அழைக்கலாம். (தலைகீழான சொல்)
(22) தினம்தினம் புதிய இலக்கத்துடன் நாட்கள் மலர்கின்றன. ஒவ்வொரு தினத்துக்கும் உரிய இலக்கம் இது.
(25) வீதி, தெரு, சாலை என்றெல்லாம் இதனைக் கூறலாம்.

### மேலிருந்து கீழ்

(1) ஊர்ந்து செல்லும் சிறுபிராணி இது. ஆனால் சுறுசுப்பான வாழ்க்கைக்கு உவமையாகக் கூறப்படும் உயிரினம் இது.
(3) நாம் குடியிருக்கும் இல்லம்.
(5) நீர்த்தேக்கங்கள் மற்றும் குளங்களின் தடுப்புச்சுவர் இது.
(8) மாடு, மா, பலா போன்றவற்றின் இளமைப்பருவ மரபுச்சொல்.
(15) நாம் பல்வேறு தேவைகளுக்கும் பயன்படுத்துகின்ற கூரிய உபகரணம்.
(17) இரவில் உணவு தேடும் பறவை. இப்பறவையின் கண்களும், ஒலியும் அச்சம் தருவன.
(18) எழுத்தாளர்களின் படைப்பு இது. உங்களைப் போன்ற சிறார்களுக்கு இதனைப் படிப்பதும், கேட்பதும் மிகவும் பிடிக்கும். (தலைகீழான சொல்)

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 129

### விடைகள்

**இடமிருந்து வலம்**

01. அத்திவாரம் 08. சிறை 11. ஆனி
15. அம்புலி 19. மடல் 24. அச்சம்

**மேலிருந்து கீழ்**

01. அவனி 03. திறை 04. வாசிப்பு 06. அன்னம்
15. அல்லி 17, சனம் 19. மடல்

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 128

### பாராட்டு பெறுவோர்

**1. எம்.ஏ.எப். அலீனா**
தரம் 09B, க/பதியுத்தீன் மகளிர் கல்லூரி,
இல. 98/A, சுஜாதா லேன், மடிகே, கலகெதர.

**2. ஹம்தா மரியம் முஜாஹித்**
தரம் 03, தாருல் உலூம் மு.வித்தியாலயம்,
இல. 62/3, ஹுரி மலுவ மொஹிதீன் மாவத்தை,
ரம்புக்கண.

**3. டி. அபிஜித்**
தரம் 06, விபுலானந்த மத்திய கல்லூரி,
உடையார் வீதி, காரைதீவு - 02.

**4. எம். இர்பான் ஜெஹான்**
தரம் 05B, கைரியா பெண்கள் கல்லூரி,
இல. 155/32, மொஹிதீன் மஸ்ஜித் வீதி, மருதானை.
கொழும்பு 10.

**5. எம்.என். அப்லல் அஹமத்**
தரம் 06, நாங்கல்ல மு.ம. வித்தியாலயம்,
இல. 337, மங்கெதர துல்ஹிரிய.

**6. எம்.எம்.எப். மிஹ்ரா**
தம் 01C, கமு/சது/அல் அர்ஷத் மகா வித்தியாலயம்
இல. 60C, அல் அர்ஷத் வீதி, மலையடி கிராமம் 03,
சம்மாந்துறை.

**7. தன்யஸ்ரீ திருஷ்தனா**
தரம் 09E, ஹைலன்ஸ் கல்லூரி,
இல. 29/11, நர்சிங் ஹோம் விதி, ஹற்றன்.

குறுக்கெழுத்துப் போட்டி இல. 130
**சிறுவர் உலகம்**
தினகரன் வாரமஞ்சரி
த.பெ.இல : 834 கொழும்பு.

தொடர்புகளுக்கு : 0112429294
மின்னஞ்சல் : editor.vm@lakehouse.lk



**அருளுடைமை: நல்லாற்றான் நாடி யருளாள்க
பல்லாற்றால் தேரினும் அஃதே துணை**

*தெளிவுரை :*
நல்ல வழியால் ஆராய்ந்து அருளுடையவர்களாக விளங்க வேண்டும்; பலவழிகளால் ஆராய்ந்து கண்டாலும் அருளே வாழ்க்கைக்குத் துணையாக இருக்கும்.

## சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி...

ஒரு ஊரில் கண்ணுசாமி என்பவன் இருந்தான். அவன் பல வீடுகளில் பிச்சை எடுத்து வாழ்க்கை நடத்தி வந்தான். அவனிடம் சங்கு ஒன்று இருந்தது. ஓய்வு கிடைக்கும் போதெல்லாம் அதை ஊதிக் கொண்டிருந்தான்.

அந்த ஊரை அடுத்து இருந்த மடத்தில் இரவு நேரத்தில் அவன் தூங்குவான். நள்ளிரவில் திருடர்கள் சிலர் அந்த மடத்திற்கு வருவது வழக்கம். அத் திருடர்களுக்கும், அவனுக்கும் பழக்கம் ஏற்பட்டது.

“இவர்கள் ஒருநாள் திருடுகிறார்கள். பல நாள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். நானோ நாள் தோறும் பிச்சை எடுத்து அலைகிறேன். மீந்து போன பழைய உணவே கிடைக்கிறது. உப்பு சப்பில்லாத அதைச் சாப்பிட்டு சாப்பிட்டுச் சலித்து விட்டது. இவர்களுடன் சேர்ந்து திருட வேண்டும். வளமாக வாழ வேண்டும்" என்று நினைத்தான் அவன்.

தன் எண்ணத்தை அவர்களிடம் சொன்னான். அதற்குத் திருடர் தலைவன், “திருடுவது எளிது அல்ல. அதற்குத் திறமை வேண்டும். நீ எங்களுடன் சேர்ந்து திருட வேண்டாம். உனக்கு என்ன வேண்டும் கேள் தருகிறோம்,” என்றான்.

“எதுவும் எனக்கு இனாமாக வேண்டாம். நீங்கள் திருடச் செல்லும் போது என்னையும் அழைத்துச் செல்லுங்கள். நீங்கள் என்ன சொல்கிறீர்களோ அதைச் செய்கிறேன். நானாக எதையும் செய்ய மாட்டேன்,” என்றான் அவன்.

“இன்றிரவு பண்ணையார் மந்தையில் ஆடுகளைத் திருடப் போகிறோம். நீயும் வா,” என்றான் திருடர் தலைவன். இரவு நேரம், திருடுவதற்கு அவர்கள் புறப்பட்டனர். இடுப்பில் சங்கை கட்டிக் கொண்டு அவனும் அவர்களுடன் சேர்ந்து கொண்டான். எங்கும் இருட்டாக இருந்தது. அவர்கள் அனைவரும் பண்ணையாரின் மந்தைக்குள் நுழைந்தனர்.

திருடர்கள் ஒவ்வொருவரும் ஒரு ஆட்டின் கழுத்தைப் பிடித்து தூக்கினர். அப்படித் தூக்கினால் ஆடு கத்தாது. திருடிப் பழக்கம் இல்லாத அவன் ஆட்டின் காலைப் பிடித்துத் தூக்கினான். அதனால் அந்த ஆடு கத்தியது. ஆட்டின் கத்தலைக் கேட்ட திருடர் தலைவன் அதன் கழுத்தைப் பிடித்துத் தூக்கு. அது கத்தாது என்று சொல்ல நினைத்தான். கழுத்தை “சங்கு’ என்று சொல்வது வழக்கம்.

“சங்கைப் பிடி! சங்கைப் பிடி,” என்று மெல்லியதாக குரல் கொடுத்தான். இதைக் கேட்ட பிச்சைக்காரன், சங்கை ஊதும்படி சொல்கிறான் திருடர் தலைவன். சங்கு ஊதும் திறமையை அவனுக்குக் காட்ட வேண்டும் என்று நினைத்தான்.

ஆட்டைக் கீழே விட்ட அவன் இடுப்பில் இருந்த சங்கை எடுத்தான். வலிமையாக ஊதினான்.

சங்கோசை எங்கும் கேட்டது. அங்கே காவல் இருந்தவர்கள் விழித்து கொண்டனர். பிறகு என்ன? பிச்சைக்காரனை கூட்டு சேர்த்த திருடர்கள் சிறைக்குச் சென்றனர்.

இதிலிருந்து வந்ததுதான் சும்மா கிடந்த சங்கை ஊதிக் கெடுத்தான் ஆண்டி என்ற பழமொழி.



அதிஷ்டன் தேவராஜா – ஜொனிடா பெர்னான்டோ





Puwaneshwaran Akshith Yadav Grade
Grade 09, Cambridge school of colombo

## புத்தகங்கள் பற்றிய அறிஞர்களின் கருத்து



தன்னைத் தூக்கிலிட அழைத்தபோது, தான் படித்துக் கொண்டிருக்கும் புத்தகத்தை முடித்து விட்டு வருகிறேன், என சாகும் தருவாயிலும் கூட புத்தகம் வாசித்தவர் **மாவீரன் பகவத்சிங்.**

மரண தண்டனை விதிக்கப்பட்டு, தனக்கு நஞ்சு கொடுக்கப்படும் வரை படித்துக் கொண்டே இருந்தாராம் கிரேக்க நாட்டு சிந்தனையாளர் **சாக்ரட்டீஸ்.**

வேறு எந்தச் சுதந்திரமும் வேண்டாம். சிறையில் புத்தக வாசிப்பை மட்டும் அனுமதிக்க வேண்டும் என்றாராம் **நெல்சன் மண்டேலா.**

ஒரு கோடி ரூபா கிடைத்தால் என்ன செய்வீர்கள் என்று கேட்டபோது, ஒரு நூலகம் கட்டுவேன் என்று சொன்னாராம் **காந்தியடிகள்.**

ஒவ்வொரு படமும் நடிக்க ஒப்புக் கொள்ளும் போது வரும் முன் பணத்தில் முதல் நூறு டொலர்களுக்கு புத்தகம் வாங்குவாராம் **சார்லி சாப்ளின்.**

ஒரு குழந்தைக்கு நீங்கள் வாங்கித் தரும் அதி சிறந்த பரிசு ஒரு புத்தகம் தான் என்றார் **வின்சன்ட் சேர்ச்சில்.**

தான் மறைந்த பிறகு தனது சடலத்தின் மீது மலர் மாலைகள் வைக்க வேண்டாம். புத்தகங்கள் வைக்க வேண்டும் என்றாராம் **ஜவஹர்லால் நேரு.**

புத்தகத்தின் சில பக்கங்கள் பாக்கி இருப்பதால் அதை முடிக்கும்வரை அறுவை சிகிச்சையை தள்ளி வைக்கச் சொன்னாராம் **அறிஞர் அண்ணா**

ஒரு நாளில் பன்னிரண்டு மணி நேரத்தை படிப்பதிலும், படித்ததைச் சிந்திப்பதிலும் செலவிட்டாராம் முன்னாள் குடியரசுத் தலைவர் **டாகடர் ராதாகிருஷ்ணன்.**

“கற்றனைத்தூறும் அறிவு“ என்றார் **திருவள்ளுவர்.**

ஒரு நூலகம் திறக்கப்படும்போது, 100 சிறைச்சாலைகள் மூடப்படுகின்றன என்றார் **விவேகானந்தர்.**

கைத்துப்பாக்கிகளை விட புத்தகங்களே பெரிய ஆயுதங்கள் என்றார் புரட்சியாளர் **லெனின்.**

## நம் நாடு

**இலங்கை நமது தாய் வீடு – இது
பாரெல்லாம் போற்றும் எழில் வீடு
வீரர்கள் தோன்றிய புகழோடு – பல
வெற்றிகள் கண்ட படை வீடு!**

**பொன்னுடன் வைரமும் முத்தோடு பல
நள்மணி நிறைந்த திருவீடு
மன்னரும் காணாச் சிறப்போடு – பெரும்
மாண்பினை வளர்த்த தவவீடு!**

**வேதங்கள் ஒலிக்கும் இறைவீடு – தனிக்
கருணையைத் தந்த நல்வீடு
மாந்தர்கள் யாவரும் பண்போடு – சன்
மார்க்கமும் கண்ட அருள் வீடு!**


அஸ்மா பாரிஸ் - மள்வானை...




## "பாபாப் மரம்"

தென்னாபிரிக்காவில் உள்ள பாபாப் மரம் 2,000 ஆண்டுகளாக வளர்ந்து நிலைத்திருக்கும் தன்மை கொண்டது. இந்த மரம்" வாழ்க்கை மரம்" என்று அழைக்கப்படுகிறது. இது ஆபிரிக்காவின் வறண்ட சவன்னா பகுதியில் செழித்து வளரக்கூடியது. மழைக் காலத்தில், பாபாப் மரம் தன்னுடைய தண்டுகளில் ஆயிரக்கணக்கான லீற்றர் தண்ணீரை சேமித்து வைக்கிறது. இது வறட்சிக் காலங்களில் மரம் உதிராமல் இருக்க உதவுகிறது.

இந்த மரம் 30 மீற்றர் உயரம் வரை வளரக்கூடியது மற்றும் 5,000 ஆண்டுகள் வரை உயிர்வாழக்கூடியது. பாபாப் மரங்கள் விலங்குகள் மற்றும் மனிதர்களுக்கு தங்குமிடம், உணவு மற்றும் தண்ணீரை வழங்கக்கூடியவை. அதன் பழங்கள் ஊட்டச்சத்துகள் மற்றும் ஒக்சிசனேற்றங்கள் நிறைந்தவை. அதேசமயம், இப் பழம் கிளையில் இயற்கையாக காய்ந்து 3 ஆண்டுகள் வரை நன்றாக இருக்கக்கூடியது.

மரத்தின் பட்டையிலிருந்து கயிறுகள் தயாரிக்கப்படுகின்றன. இலைகள் கால்நடைகளுக்கு உணவாகவும் அதன் எண்ணெய் அழகுசாதனப் பொருட்களாகவும் பயன்படுகின்றன. இதன் தனித்துவமான பண்புகளுக்காக அதன் தேவை அதிகரித்து வருகிறது.

## நியூசிலாந்தின் மறைந்த இராட்சதப் பறவைகள்!



நியூசிலாந்தில் ஆரம்பகாலத்தில் வாழ்ந்த பறக்க முடியாத மிகப்பெரிய பறவை இனமே Moa. இவை தற்போது அழிந்துவிட்டாலும், இவற்றின் வரலாறு மற்றும் முக்கிய தன்மைகள் நியூசிலாந்தின் வன உயிரின ஆவணங்களில் பதியப்பட்டுள்ளன.

Moa பறவைகளில் ஒன்பது வகைகள் இருந்துள்ளன. அவை பெருமளவில் அளவுகளில் மாறுபட்டவை. மிகப்பெரிய Moa Dinornis வகையானதாகும். ஆண் பறவையின் உயரம் சுமார் 12 அடியும் அதன் எடை 230 கிலோ வரையும் இருக்குமாம். இவை இராட்சத ஒஸ்ட்ரிச் மற்றும் எமு போன்ற பறவைகளுடன் ஒப்பிடும் அளவு கொண்டவை, ஆனால் Moa பறவைகளின் ஒரு சிறப்பான தன்மை அதனால் பறக்க முடியாது.

வரலாற்றில் மிக முக்கியமான ஒரு அத்தியாயமாக சுமார் 1315 ஆம் நூற்றாண்டில் மனிதர்கள் நியூசிலாந்துக்கு வருகை தந்த பிறகு, இப் பறவைகள் பெருமளவில் வேட்டையாடப்பட்டன.

இதனால் அவை முழுமையாக அழிந்து விட்டன. மனிதர்கள் மட்டுமன்றி, மனிதர்கள் கொண்டுவந்த ஒற்றை ஈன்றில் மிருகங்களும் Moa முட்டைகளை மற்றும் குட்டிகளை அழிக்கச் செய்தன. இதனால் Moa பறவைகள் விரைவில் அழிந்து விட்டன.

இவை நியூசிலாந்தின் ஒரு காலத்தில் நிலைத்திருந்த மர்மத்தையும் வனப்பையும் குறிக்கும் ஒரு உதாரணமாகும். இப்பறவைகள் அழிந்து விட்டாலும், இதன் அழிவடைந்த பாகங்கள் அகழ்வாராய்ச்சி மூலமாக, இவற்றின் வாழ்க்கை முறைகள் மற்றும் அவை நியூசிலாந்தின் பருவ நிலைகளுடன் எவ்வாறு ஒத்துப்போனது என்பதையும் அறிய முடிகிறது. இப் பறவைகள் 1500 ஆம் ஆண்டுகளில் வாழ்ந்ததாக குறிப்பிடப்படுகிறது.

அங்குள்ள மௌரி மக்களின் கூற்றுப்படி இந்த பறவைகள் பல வழிகளில் அழிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. 20ஆம் நூற்றாண்டின் போது ஆராய்ச்சியாளர்களால் இதன் காலின் ஒரு பகுதி கண்டறியப்பட்டது, அவர்கள் அந்த காலை பதப்படுத்தி இன்று வரை பாதுகாத்து வருகின்றனர்.




அமெரிக்காவின் அலாஸ்காவில் உள்ள உட்கியாவிக் (Utqiagvik), முன்னாள் பெயர் பரோ (Barrow) என அழைக்கப்படும் நகரில், நவம்பர் 19ஆம் தகிதி சூரியன் அஸ்தமனமாகி, ஜனவரி 22 ஆம் திகதி வரை சுமார் 60 நாட்கள் வரை மீண்டும் உதிக்காது.

இதற்கு காரணம், பூமி அதன் 23டிகிரி சாய்வில் சுழல்வதால் ஏற்படும் பாதிப்பு. இந்த சாய்வின் காரணமாக, குளிர்காலத்தில் பூமியின் வடக்கு மற்றும் தென் துருவப் பகுதிகளில் சூரியன் வட்டத்தின் விளிம்பு அடிவானத்திற்கு மேல் வருவதில்லை. இதை "துருவ இரவு" (Polar Night) என அழைக்கிறார்கள்.

சூரியன் 60 நாட்களுக்கும் காட்சியளிக்கவில்லை என்றாலும் இருளில் மூழ்கிய நிலை இருக்காது. சூரியன் உதிப்பதற்கு முன்பும், அஸ்தமனத்திற்கு முன்பும் வானம் எப்படி இருக்குமோ அதே சூழல் பகல் நேரத்தில் இருக்கும். மங்கலான வெளிச்சத்தோடு நகரம் காட்சியளிக்கும்.



# லோட்ஸில் கௌரவம் பெற்ற அசித்த

இங்கிலாந்து சென்றிருக்கும் இலங்கை அணி முதல் இரு டெஸ்ட்டை இழந்து தொடர் தோல்வியை சந்தித்து விட்டது. ஆனால் அணியில் சோபித்த ஒருசில வீரர்களில் 27 வயது வலது கை வேகப்பந்து வீச்சாளர் அசித்த பெர்னாண்டோ குறிப்பிடத்தக்கவர். அவர் முதல் இரு டெஸ்ட் போட்டிகளிலும் மொத்தமாக 14 விக்கெட்டுகளை வீழ்த்தினார். அதாவது தொடரில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தியவராகவும் இருந்தார்.

லோட்ஸில் நடந்த இரண்டாவது டெஸ்டில் எட்டு விக்கெட்டுகளை வீழ்த்திய அவர் ஓல்ட் டிரபர்ட்டில் இடம்பெற்ற இரண்டாவது டெஸ்டில் ஆறு விக்கெட்டுகளை பதம்பார்த்தார். குறிப்பாக கிரிக்கெட்டின் தயாகம் என்று அழைக்கப்படும் லோட்ஸில் இன்னிங்ஸ் ஒன்றில் ஐந்து விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

'எனது கனவு நினைவானது. லோட்ஸில் உள்ள கௌரவப் பலகையில் தமது பெயரைப் பதிப்பது அனைத்து பந்துவீச்சாளர்களின் எதிர்பார்ப்பாகும். எனக்கு லோட்ஸில் ஆட வாய்ப்புக் கிடைத்தால் அந்த கௌரவப் பலகையில் எனது பெயரை இடம்பெறச் செய்வது பற்றி, நான் எப்போது கனவு கண்டேன். எனக்கு மிகவும் திருப்தியாக உள்ளது' என்று அசித்த ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

'நான் இங்கு வந்தபோது கௌரவப் பலகையை பார்த்தேன் (இலங்கையின்) ருமேஷ் ரத்நாயக்கவின் பெயர் மாத்திரம் தான் இருந்தது. அதில் இரண்டாவது இலங்கையராக என் பெயரை இடம்பெறச் செய்வதற்கு அது எனக்கு ஊக்கம் தந்தது. பெரும்புள்ளிகளுடன் எனது பெயரையும் பதிக்க முடிந்தது எனக்கு பெரு மகிழ்ச்சி தருகிறது. எனக்கு வாழ்த்துத் தெரிவித்து ருமேஷ் குறுஞ்செய்தி ஒன்றை அனுப்பினார்' என்றும் அசித்த கூறினார்.

அசித்த பொதுவாக இலங்கை டெஸ்ட் அணிக்கே பயன்படுத்தப்பட்டு வருகிறார். என்றாலும் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட்டில் முக்கிய பந்து வீச்சாளர்கள் காயமடைந்த நிலையில் அண்மைக் காலமாக வெள்ளைப் பந்து கிரிக்கெட்டிலும் இடம்பெற்று வருகிறார். இங்கிலாந்தில் அவர் பந்து வீசுவதில் பெரும் ஆர்வத்தை வெளிப்படுத்தினார்.

'இங்கிலாந்தில் பந்துவீச்சுக்கு சாதகமான ஆடுகளங்கள் உள்ளன, எனவே பெரிதாக பிரயத்தனைகள் செய்ய வேண்டியதில்லை. இங்கே பந்து பலதையும் செய்யும், எனவே பந்தை சரியான இடத்திற்கு வீசினால் போதும். அதுவே நான் வெற்றிபெறக் காரணம்' என்கிறார் அசித்த.

முதல் இரு டெஸ்ட் போட்டியிலும் இங்கிலாந்து துடுப்பாட்ட வரிசைக்கு நெருக்கடி கொடுப்பதற்கு இலங்கை அணியால் முடிந்தபோதும் அதனை தக்கவைத்துக்கொள்ள தவறியது. லோட்ஸ் டெஸ்ட்டை பார்த்தால் இங்கிலாந்து அணி 216 ஓட்டங்களுக்கு ஆறு விக்கெட்டுகளை இழந்து தடுமாறியது. ஆனால் முதல் நாளின் தேநீர் இடைவேளைக்குப் பின்னர் இலங்கை பந்துவீச்சாளர்களால் ஆதிக்கம் செலுத்த முடியாமல்போனது.

'இரண்டு டெஸ்ட்களிலும் எமக்கு இப்படித் தான் நிகழ்ந்தது. எமது பந்துவீச்சை எப்படிச் செயற்படுத்துவது என்று நாம் பேசினோம். இரண்டாவது டெஸ்டில், பின்வரிசை வீரர்கள் இணைப்பாட்டத்தை கட்டியெழுப்பும்போது பௌன்சர் பந்துகளை வீசுவதற்கு நாம் திட்டமிட்டோம். அது வெற்றி தந்தது' என்றார்.

என்றாலும் இலங்கை துடுப்பாட்ட வீரர்கள் அதிலும் ஆரம்ப வரிசை வீரர்கள் சோபிக்காதது அணிக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியதோடு அது பந்துவீச்சாளர்களுக்கு மேலதிக சுமையாக மாறியது. '

இங்கிலாந்து அணியின் ஒரே சுழற்பந்து வீச்சாளரான ஷெவைப் பஷிர் இலங்கை துடுப்பாட்ட வீரர்களுக்கு பெரிய அச்சுறுத்தலாக இருக்காதபோது வேகப்பந்து வீச்சாளர்கள் இலங்கை வீரர்களுக்கு பெரும் நெருக்கடி கொடுத்தார்கள்.

'அது அவர்களின் சொந்த மைதானம் என்பதோடு ஆண்டு முழுவதும் டியுக் பந்தை பயன்படுத்துவார்கள். இங்கிலாந்துக்கு வந்தால் மாத்திரமே நாம் அதனுடன் ஆடுகிறோம். அந்தப் பந்தில் எப்படி வீசுவதென்பதை அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். அவர்கள் பந்து வீசும் இடம் மற்றும் எப்படி பந்தை நகர்த்துகிறார்கள் என்பதை நாம் கற்றுக்கொள்ள வேண்டும்.

கூகபூரா பந்தில் இருந்து டியுக் பந்து சுவிங் ஆவது மாறுபட்டிருக்கும். எம்மில் பலரும் இங்கிலாந்தில் டெஸ்ட் கிரிக்கெட் ஆடுவது இது முதல் முறையாக இருப்பதோடு போட்டிக்காக தம்மை சரிப்படுத்திக்கொள்ள கால அவகாசம் எடுக்கும். கூகபூரா பந்தில் இருந்து டியுக் பந்தின் தையல் மாறுபட்டிருக்கும். அது நல்ல கற்றல் அனுபவமாக இருந்தது' என்றும் அசித்த கூறினார்.

அசித்த பெர்னாண்டோ தனது திறமையை நாளுக்கு நாள் அதிகரித்துவருகிறார். இதுவரை 16 டெஸ்ட் போட்டிகளில் ஆடியிருக்கும் அவர் மொத்தமான 59 விக்கெட்டுகளை வீழ்த்தி இருக்கிறார்.

இலங்கை அணியின் பந்து வீச்சு பயிற்சியாளரான பாகிஸ்தானின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஆகிப் ஜாவிட்டும் அசித்த பெர்னாண்டோ தொடர்பில் நல்லபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார்.

'அசித்தவின் திறமை பற்றி பலருக்கும் தெரியாது. தனது மணிக்கட்டில் மாற்றம் செய்யாது அவரால் இரண்டு பக்கங்களுக்கு ஸ்விங் செய்ய முடியும். பாகிஸ்தானின் முஹமது ஆசிப்புக்குப் பின்னர் இந்த திறமையை நான் அவரிடமே பார்த்தேன்' என்றார் அவர்.

மைதானத்திற்கு வந்தால் எப்போதும் ஆர்வமாக இயங்கும் அசித்த பெர்னாண்டோ, பந்துவீசும்போது அவரிடம் ஒரு சுறுசுறுப்பை பார்க்க முடிகிறது. அவர் தனது கிரிக்கெட் வாழ்வை பெரிதாக அவதானத்தை பெறாது ஆரம்பித்தபோதும் நாளுக்கு நாள் அவரது திறமை அதிகரித்து வருகிறது. அதற்கு அவருக்கு இன்னும் போதுமான வாய்ப்பும், நம்பிக்கையும் அளிக்கப்பட வேண்டும்.



# விளையாட்டு



# புதிய பயிற்சியாளர் யார்?

இலங்கை கிரிக்கெட் அணிக்கு இடைக்கால பயிற்சியாளராக செயற்படும் சனத் ஜயசூரியவின் பொறுப்பு இங்கிலாந்து சுற்றுப்பயணத்துடன் முடிவடைகிறது. கிறிஸ் சில்வர்வுட்டுக்கு பதில் கடந்த இந்திய அணியின் இலங்கை சுற்றுப்பயணம் மற்றும் இலங்கை அணியின் இங்கிலாந்து சுற்றுப்பயணத்திற்கு மத்திரமே சனத் ஜனசூரிய நியமிக்கப்பட்டிருந்தார்.

இங்கிலாந்து செல்வதற்கு முன்னர் கூட, 'இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராக நான் பங்கேற்கும் கடைசி தொடர்' என்று ஜயசூரிய ஊடகங்களுக்கு உறுதிப்பட கூறியிருந்தார். எதிர்காலத்தில் பயிற்சியாளராகத் தொடரும் திட்டம் இப்போதைக்கு இல்லை என்றும் குறிப்பிட்டார்.

எனவே, இலங்கை அணிக்கு புதிய பயிற்சியாளர் ஒருவரை தேர்வு செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது. ஆனால் அது பற்றி பெரிதாக பேச்சு இல்லை. இத்தனைக்கும் இங்கிலாந்து சுற்றுப்பயணத்தை முடித்த பின்னர் இலங்கை வந்த விரைவிலேயே இலங்கை அணி நியூசிலாந்துக்கு எதிரான மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடப்போகிறது. இந்தத் தொடர் எதிர்வரும் செப்டெம்பர் 18 ஆம் திகதி ஆரம்பமாகும்.

இந்த குறுகிய இடைவெளிக்குள் புதிய தலைமை பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பது எந்த அளவு சாத்தியம் என்பது தெரியவில்லை. தலைமை பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பதற்கான தேர்வுகள் இடம்பெற்று வருவதாக இலங்கை கிரிக்கெட் சபை வட்டாரங்களின் மூலம் தெரியவருகிறது.

இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கு முன்னரே புதிய பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரி இலங்கை கிரிக்கெட் விளம்பரம் வெளியிட்டிருந்தது.





'எமது ஆடவர் தேசிய கிரிக்கெட் அணியை வழிநடத்துவதற்கு அதிக திறமை மற்றும் அனுபவம் பெற்ற தலைமை பயிற்சியாளர் ஒருவரை நாம் தேடுகிறோம். பொருத்தமான அபேட்சகர் பயிற்சியாளராக உயர் மட்டத்தில் நிரூபிக்கப்பட்ட களப் பதிவு, இந்த விளையாட்டுப் பற்றிய ஆழமான அறிவு மற்றும் உயர் மட்ட கிரிக்கெட் வீரர்களை கவர்தல் மற்றும் மேம்படுத்தும் திறனை பெற்றிருத்தல் வேண்டும்' என்று குறிப்பிட்ட அந்த விளம்பரத்தில் பதவிக்கான தகைமை மற்றும் பொறுப்புகள் பற்றிய உச்ச தேவைகள் கோரப்பட்டிருக்கிறன.

இதனையொட்டி இலங்கை கிரிக்கெட்டுக்கு ஏற்கனவே விண்ணப்பங்கள் கிடைத்திருப்பதாக இலங்கை கிரிக்கெட் வட்டாரத்தை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகி இருக்கிறது. அந்த விண்ணப்பங்கள் தற்போது மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் கிடைக்கப்பெற்ற விண்ணப்பங்களில் உள்நாடு அல்லது வெளிநாட்டைச் சேர்ந்த உயர் மட்ட முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் அல்லது பிரபலமான பயிற்சியாளர்கள் இருப்பது பற்றிய விபரம் எதுவும் வெளியாகவில்லை.

புதிய பயிற்சியாளர் நியமனத்தில் கடைப்பிடிக்கப்போகும் அளவுகோல்கள், திட்டங்கள் மற்றும் எதிர்பார்ப்புகள் பற்றி எதுவும் தெரியவில்லை. குறிப்பாக உள்நாட்டைச் சேர்ந்த பயிற்சியாளர் ஒருவரை நியமிப்பது அல்லது மீண்டும் வெளிநாட்டு பயிற்சியாளரை நாடுவது பற்றி இன்னும் உறுதியாகவில்லை.

எப்படி இருந்தாலும் கடந்த ஒருநாள் உலகக் கிண்ணம் மற்றும் டி20 உலகக் கிண்ணத்தில் தோற்ற பின்னர் அணியை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டி தருணம் ஏற்பட்டிருக்கும் சூழலிலேயே புதிய பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது.

எனவே, வெளியிடப்பட்ட விளம்பரத்தைப் பார்த்து கிடைத்த விண்ணப்பத்தை வைத்து பயிற்சியாளர் ஒருவரை தேர்வு செய்யும் நடைமுறை எவ்வளவுக்கு வெற்றி அளிக்கும் என்பது தெரியவில்லை. குறிப்பாக கிடைக்கும் விண்ணப்பங்களில் தேவைக்கு ஏற்ற ஒருவர் இருப்பார் என்று முழுமையாக எதிர்பார்க்க முடியாது. எனவே பயிற்சியாளர் தேர்வில் விண்ணப்பங்களுக்கு அப்பாலும் பொருத்தமான ஒருவரை தேட வாய்ப்பு இருக்கிறது.

கடைசியாக இலங்கை அணியின் நிரந்தர தலைமை பயிற்சியாளராக செயற்பட்ட இங்கிலாந்து முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் கிறிஸ் சில்வர்வுட் 2022 தொடக்கம் இரண்டு ஆண்டுகள் அணியை வழிநடத்தினார். அவரது பயிற்சிக் காலம் என்பது ஏற்றத்தாழ்வு மிக்கது. முதலில் அணியை கட்டியெழுப்ப வேண்டி பொறுப்பு அவருக்கு இருந்ததோடு அந்த முயற்சியும் முழுமை பெறாததற்கு அவர் மீது முழுமையாக குற்றம் சுமத்த முடியாது.

எப்படியோ, ஜூன் மாதத்தில் நடந்த டி20 உலகக் கிண்ணம் முடிய அதனுடன் தனது பதவிக் காலமும் முடிய தனிப்பட்ட காரணத்தைக் கூறி பதவி விலகிச் சென்றுவிட்டார்.

இலங்கை அணிக்கு உள்ளூர் பயிற்சியாளர் ஒருவரை நியமிக்க வேண்டும் என்ற குரல் ஆங்காங்கே எழுந்தபோதும் கடந்த காலத்தை பார்க்கும்போது அது முழுமையாக வெற்றி அளித்ததாக குறிப்பிட முடியாது.

கடைசியாக இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக நீண்ட காலம் பணியாற்றிய உள்நாட்டவர் சந்திக்க ஹத்துருசிங்க. 2017–19 காலப்பகுதியில் பயிற்சியாளராக செயற்பட்ட அவரது காலம் சர்ச்சை கொண்டது. பங்களாதேஷ் தலைமை பயிற்சியாளராக அவர் சிறப்பாக செயற்பட்டதை அடுத்தே அந்தப் பதவிக்கு அழைக்கப்பட்டார். ஆனால் ஒழுக்காற்று பிரச்சினைக்கு முகம்கொடுத்த அவர் பதவியில் இருந்து நீக்கப்பட அதற்கு எதிராக வழக்குக் கூட தொடுத்தார்.

முன்னாள் வீரர்களான ரோய் டயஸ், மார்வன் அத்தபத்து ஆகியோரும் இலங்கை அணியின் தலைமை பயிற்சியாளராக செயற்பட்டிருக்கிறார்கள். தற்போது இலங்கை மகளிர் அணியின் தலைமை பயிற்சியாளராக இருக்கும் ருமேஷ் ரத்னாயக்க கூட சில்வர்வுட்டுக்கு முன்னர் சிறிது காலம் ஆடவர் அணிக்கு இடைக்கால பயிற்சியாளராக இருந்தார்.

சனத் ஜயசூரிய இடைக்கால பயிற்சியாளராக பொறுப்பேற்ற பின்னர் அணியில் சாதகமான சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக இந்தியாவுக்கு எதிராக இலங்கை அணி 27 ஆண்டுகளின் பின்னர் ஒருநாள் தொடர் ஒன்றை வெல்ல முடிந்தது. அணியின் கட்டமைப்பில் மாற்றங்களை செய்ததோடு இலங்கை அணியில் அண்மைக் காலமாக குறைபாடு இருந்து வந்த ஒழுக்க விடயங்களிலும் அவர் அவதானம் செலுத்தினார். முடியை வெட்டிக் கொள்வது, நேரத்தியாக வருவது, ஆடை அணிவது போன்ற சின்னச் சின்ன விடயங்களிலும் அவர் அவதானம் செலுத்தினார்.

கடந்த காலத்தில் இலங்கை அணி உலக அரங்கில் சோபித்ததற்கு மைதானத்தில் அணி காட்டிய திறமைக்கு அப்பால் மைதானத்திற்கு வெளியில் அணியின் ஒழுக்கமும் முக்கியமாக இருந்திருக்கிறது. உள்ளூர் வீரர் மற்றும் இலங்கைக்கு பல வெற்றிகளைத் தேடித்தந்த வீரர் என்ற வகையில் சனத் ஜயசூரிய அதனை நன்றாக தெரிந்து வைத்திருக்கிறார்.

இந்த நிலையில் இலங்கை அணியின் அடுத்த பயிற்சியாளராக உள்ளூரைச் சேர்ந்த ஒருவரை நியமிப்பது என்றாலும் அதற்கான தேர்வாக யார் இருப்பார் என்பது முக்கிய கேள்வி. இப்போதைக்கு இலங்கையில் இருக்கும் சிறப்பான பயிற்சியாளர் என்று பார்த்தால் மஹேல ஜயவர்தனவை குறிப்பிடலாம்.

என்றாலும் அவர் இந்திய பிரீமியர் லீக் மற்றும் சர்வதேச அளவில் பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் நிலையில் இலங்கை பயிற்சியாளர் என்ற வட்டத்துக்குள் சிக்கிக் கொள்வார் என்று எதிர்பார்க்க முடியாது.

மற்றது முன்னாள் வீரர் குமார் சங்கக்காரவின் கதையும் இது தான். அவர் இலங்கையில் இருப்பதை விடவும் வெளிநாட்டில் அதுவும் இங்கிலாந்தில் அதிக காலத்தை செலவிடுவதோடு இங்கிலாந்து தலைமை பயிற்சியாளராகவும் முயற்சித்தார். எனவே, இலங்கை பயிற்சியாளர் பதவிக்கு விண்ணப்பிப்பார் என்று எதிர்பார்க்க முடியாது.

மார்வன் அத்தப்பத்து மற்றும் ரோய் டயஸ் போன்றவர்களின் காலம் கடந்து விட்டதாகவே கருதப்படுகிறது. சந்திக்க ஹத்துருசிங்க மீண்டும் பங்களாதேஷ் பயிற்சியாளராக செயற்பட்ட நிலையில் தற்போது அந்தப் பதவியில் இருந்தும் நீக்கப்பட்டிருக்கிறார். ஏற்கனவே பிரச்சினைப்பட்ட அவரை மீண்டும் பயிற்சியாளராக நியமிக்க வாய்ப்பு இல்லை.

எனவே, இலங்கை அளவில் தேசிய அணிக்கு பயிற்சியாளர் ஒருவரை தேர்வு செய்வதாக இருந்தால் அதற்கான தேர்வு என்பதும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே இருக்கிறது.

தற்போது இடைக்கால பயிற்சியாளராக இருக்கும் சனத் ஜயசூரியவே மேலும் சில காலத்திற்கு அந்தப் பொறுப்பில் நீடிப்பதற்கு கோரப்படவும் வாய்ப்புகள் இருக்கின்றன. ஏனென்றால் அடுத்து வரும் மாதங்கள் இலங்கை அணிக்கு போட்டிச் சுமை அதிகமாக உள்ளது.

அடுத்து நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஆடும் இலங்கை அணி ஒக்டோபரில் மேற்கிந்திய தீவுகளுக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடர்களிலும் நவம்பரில் நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் மற்றும் டி20 தொடர்களிலும் ஆடப்போகிறது.

இதனையடுத்து நவம்பர் மற்றும் டிசம்பரில் தென்னாபிரிக்கா சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் இலங்கை அணி அங்கு இரண்டு டெஸ்ட் போட்டிகளில் ஆடிவிட்டு டிசம்பர் மற்றும் ஜனவரியில் நியூசிலாந்து சென்று மூன்று ஒருநாள் மற்றும் மூன்று டி20 போட்டிகளில் ஆடும். இந்த பரபரப்புக்கு மத்தியிலேயே புதிய பயிற்சியாளர் ஒருவரை தேட வேண்டிய தேவையும் உள்ளது.

இலங்கை அணியை பொறுத்தவரை உள்நாட்டு பயிற்சியாளர்களை விடவும் வெளிநாட்டைச் சேர்ந்தவர்கள் கடந்த காலத்தில் நன்றாக செயற்பட்டிருக்கிறார்கள். 1996 ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை இலங்கை அணி வெல்வதற்கு எத்தனையோ அளுமைகள் பின்னணியில் இருந்தார்கள். அவர்களில் முக்கியமான ஒருவர் அணி பயிற்சியாளர் டேவ் வட்மோர். அதே போன்று அவுஸ்திரேலியாவின் டொம் மூடியும் பயிற்சியாளராக இலக்கைக்கு முக்கியமானவராக இருந்தார்.

இலங்கை விளையாட்டுத் துறையில் அதிக சம்பளம் பெறும் பதவிகளில் ஒன்றாக இலங்கை கிரிக்கெட் பயிற்சியாளரை குறிப்பிடலாம். முன்னர் பயிற்சியாளராக இருந்த கிறிஸ் சில்வர்வுட்டின் மாதாந்த சம்பளமாக 30,000 அமெரிக்க டொலர்களை பெற்றார். இதனை இலங்கை நாணயத்தில் மதிப்பிட்டுப்பார்த்தால் 9 மில்லியன் ரூபா இருக்கும்.

என்றாலும் சர்வதேச தரத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் குறைவுதான். இந்திய பிரிமியர் லீக் போன்ற சர்வதேச கிரிக்கெட் லீக்குகளில் பயிற்சியாளர்களாக செயற்பட்டு குறுகிய கால வேலைக்காக அதிக சம்பளத்தை பெற வாய்ப்பு இருக்கிறது. எனவே முன்னணி பயிற்சியாளர்கள் அது போன்று பணிகளுக்கு ஆர்வம் காட்டுவது அதிகரித்திருக்கிறது.

இதனைத் தாண்டி இலங்கை பயிற்சியாளர் பதவிக்கு பெரும்புள்ளிகள் விண்ணப்பிப்பதற்கான வாய்ப்புக் குறைவு. இந்த நெருக்கடிக்கு இடையிலேயே புதிய பயிற்சியாளரை தேர்வு செய்ய வேண்டிய நிலைக்கு இலங்கை கிரிக்கெட் தள்ளப்பட்டிருக்கிறது.

என்றாலும் நல்ல பயிற்சியாளர் ஒருவரை அணி ஒன்று பெற்றுவிட்டால் அந்த அணிக்கு பாதி வெற்றி. அணியை கட்டியெழுப்புவது, வழிநடத்துவதில் நல்ல பயிற்சியாளர் ஒருவரின் செல்வாக்கு அதிகம் இருக்கும். எனவே, பொருத்தமான ஒருவரை பயிற்சியாளராவது கட்டாயம் என்பதோடு அதற்கு அர்ஷ்டமும் கைகூட வேண்டும்.

எஸ்.பிர்தௌஸ்...

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

## தலாத்துஓயா கணேஷ்



தலாத்து ஓயா கணேஷ் எனப் பொதுவாகவும் கே. கணேஷ் என நண்பர்கள், உறவுகள் மத்தியிலும் அறியப்பட்ட இவர், மலையகத்தின் முன்னோடி இலக்கிய கர்த்தாக்களில் ஒருவர். அவரை மலையகம் எனச் சுருக்கிவிடவும் முடியாது. இலங்கைத் தமிழ் இலக்கியப் பரப்பின் முன்னோடியாகவும் இவரைக் கருதலாம். கண்டி அம்பிட்டியவில் 1920ஆம் ஆண்டு பிறந்த இவரின் இயற்பெயர் சித்திவிநாயகம். வீட்டில் செல்லமாக கணேசன் என்றே இவரை அழைத்ததால் அதுவே அவரது பெயராகி கே. கணேஷ் என்றாகியது.

கண்டியில் கல்வியை ஆரம்பித்தவர் பின்னர் மதுரை தமிழ் சங்கத்தில் கல்வி கற்றார். அது சுதந்திரப் போராட்ட காலமானதால் இந்திய சுகந்திரப் போராட்டத்தில் அவர் நாட்டம் திரும்பியதில் ஆச்சரியமில்லை. காங்கிரஸ் கட்சியால் அவர் ஈர்க்கப்பட்டிருந்தாலும் பின்னர் இந்தியாவிலும் குறிப்பாக தமிழகத்திலும் பரவிய கம்யூனிச முற்போக்குவாதம், அவருடைய இயல்புத் தன்மையோடு ஒத்துப்போனதாலோ என்னவோ முற்றுமுழுதாக சமவுடைமைக் கொள்கைகளில் அவர் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார்.

தன் இலக்கிய வாழ்வில் அவர் ஏழு சிறுகதைகளை எழுதினார். ஆனால் ஏராளமான மொழிபெயர்ப்புக்களில் அவர் ஈடுபட்டார். அவருடைய இரு சிறுகதைகள் மணிக்கொடியில் வெளிவந்தன.

வட இந்தியாவில் எழுத்தாளர் கே.ஏ. அப்பாஸ், புகழ்பூத்த எழுத்தாளர் முல்க்ராஜ் ஆனந்தின் UN TOUCHABLES என்ற நாவல், மொழிபெயர்ப்பு கவிதைகளென இவர் எழுதிக் குவித்தவை ஏராளம். உக்ரைன், சீனா, வியட்நாம், ரஷ்யா, பல்கேரியா என சமதர்ம நாடுகளைச் சேர்ந்த எழுத்தாளர்கள், கவிஞர்களின் நூல்களைத் தமிழுக்கு கொண்டுவந்த பாரிய பணியை இவர் செய்தார்.

இவரளவுக்கு மொழிபெயர்ப்பு இலக்கியத்தில் பெயர்போன ஒருவரை சமகாலத்தில் காணமுடியாது.

அவரது நூற்றாண்டு 2020 இல் கொண்டாடப்பட்டிருக்க வேண்டும்.

நான்குபேர் கூட்டம் கூட அனுமதியில்லாத கொவிட்கால முழு அடைப்பில் இந் நிகழ்வு வந்ததால் நூற்றாண்டு விழா மேற்கொள்ள முடியாத அவரது குடும்பத்தினர், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் அவ் விழாவை சிறப்பாக நடத்த முன்வந்துள்ளனர். இளைய தலைமுறையினருக்கு கே. கணேஷை அறிமுகம் செய்யும் வகையில் 1949ஆம் ஆண்டு அவர் எழுதிய சத்திய போதிமரம் என்ற அற்புதமான சிறுகதையை இங்கே ஒருசோறு பதமாக தருகிறோம்.

ஆணி, ஆடம்பரம், வர்ணனை என எதுவுமே இல்லாமல் மிக எளிமையாக, சாதாரண வாசகனும் படித்து இன்புறும் வகையில் அக்காலத்திலே அவரால் எழுத முடிந்திருப்பது கவனத்தில்கொள்ளப்பட வேண்டியதே.

# சத்திய போதிமரம்

அன்று திங்கட்கிழமை ஆனதால் பஸ்ஸில் அதிகமான நெருக்கடி. சந்தை நாளானபடியாலும் 'கோடு', கச்சேரி" என்று போனவர்கள் நிறைந்திருந்தபடியாலும் பஸ் நிறைய ஜனங்கள் இருந்தனர். சட்டப்படி முப்பத்திரண்டு பிரயாணிகள் ஏற்றப்படவேண்டிய பஸ்ஸில் எழுபத்திரண்டு பிரயாணிகளாவது ஏறியிருப்பார்கள். ஒரு ஆசனத்தில் இரண்டு பேர்தான் உட்கார வேண்டியது ஆனால் மூன்று பேரை அமர்த்தியிருந்தான் கண்டக்டர்.

என் பக்கத்தில் அமர்ந்திருந்த பால்கார கிரிபண்டாவோ இரட்டைநாடி ஆசாமி. மூன்றுபேர் அமர்ந்தும் என்பாடு சிரமமாகி விட்டது. நெருக்கிப் பிடித்துக்கொண்டு ஒரு வகையாக உட்காந்தோம். பஸ்சும் புறப்பட்டுச் சென்றது. பாதித்தூரத்துக்கு கிட்டத்தட்ட வந்திருக்கும். எவனோ. ஒருவன் சைக்கிளில் சென்றவன் சைகை காட்டிவிட்டுச் சென்றான். பொலிஸ்காரர்கள் இருக்கிறார்கள் என்பதுதான் அதன் பொருள்

ட்ரைவர் உடனே பஸ்ஸை நிறுத்தி பிரயாணிகள் எல்லாரையும் உட்காரவைக்கத் தொடங்கினான். இரண்டுபேர் உட்காரவேண்டிய இடத்தில் நான்குபேரை உட்காரவைக்கும் சிரமமான காரியத்தில் ஈடுபட்டான் கண்டக்டர். வெளிப் பார்வைக்கு "ஓவர் லோடா'கத் தோன்றாமலிருக்கும் என்பது அவன் எண்ணம். மீண்டும் பஸ் புறப்பட்டது.

வெளித் தோற்றத்தைக் கண்டு மயங்கிவிடுவது எங்கள் இலாகா அல்ல என்று நிலைநாட்டுவது போல ஒரு இன்ஸ்பெக்டரும், ஒரு சார்ஜனும் பஸ்ஸை நிறுத்தினார்கள். நிறுத்தியதும் கான்ஸ்டபிள் ஒருவன் பிரயாணிகள் தொகையை எண்ணினான். டிரைவர் இறங்கி வெளியே இன்ஸ்பெக்டரிடம் தலையைச் சொறிந்தவாறு பல்லைக் காட்டிக் கொண்டிருந்தான். பஸ் நின்ற இடத்திற்கு அருகில் அரசமரம் ஓங்கி வளர்ந்திருந்தது. வயதின் முதுமையைக் காட்டுவது போல் மரம் பரந்து விசாலமாக இருந்தது. அதனைப் பொதுவாக "தியுரும் போதி" (சத்திய அரச மரம் என அழைப்பார்கள்). அவ்வூரின் சுற்று வட்டாரங்களிலிருந்தும் இன்னும் தொலை தூரங்களிலிருந்தும் சத்தியம் செய்வதற்கு அங்கு தான் வருவார்கள். அங்கு சத்தியம் செய்துவிட்டால் அவர்களின் சர்ச்சைகளும், பூசல்களும் அத்துடன் நின்றுவிடும். பொய்ச் சத்தியம் செய்தவன் அழிந்தே விடுவான் என்பது அவர்களது நம்பிக்கை. அந்த அரசமரத்தின் கீழுள்ள பௌத்த ஆலயந்தான் அத்தகைய சக்தி வாய்ந்ததாம். அதிலே அன்று ஆள் நடமாட்டம் அதிகமாக இருந்தது. கிராம உத்தியோகத் தேவதைகள் அங்குமிங்குமாக நடமாடின.

பொலிஸ்காரர்கள், பஸ் டிரைவரிடமும் கண்டக்டரிடமும் வாக்குமூலம் வாங்கிக் கொண்டு அந்தக் கோவிலுக்குள்ளேயே சென்றனர். பஸ் டிரைவரும், கண்டக்டரும் "டிஸ்ட்ரிட் கோர்ட்" நீதிபதியே கோவிலுக்கு ஒரு வழக்கு விஷயமாக வந்திருக்கிறாராம். அதற்குக் காவலாகப் பொலிஸ்காரர்கள் வந்திருக்கிறார்கள். அவர் வருவது முன்னமே தெரியாது போய்விட்டது என்று வருத்தப்பட்டுக் கொண்டார்கள். மீண்டும் பஸ் புறப்பட்டுவிட்டது.



"ஆமாம் நானும் மறந்துவிட்டேன் அந்த ரேஸ் ரிக்கட் வழக்கு தீர்ப்பல்லவா இன்றைக்கு. நான் கூட அந்த இரண்டு பேரை அங்கே கண்டேன். என்றான் ஆசனத்தில் நகர்ந்து கொண்டே கிரி பண்டா.

"அது என்ன ரேஸ் டிக்கட் வழக்கு?" என்று ஏக காலத்தில் பல குரல்கள் கேட்டன.

தோட்டத்தில் வேலை செய்யும் ஒரு தொழிலாளி, கடைக்காரன் ஒருவனிடம் இரண்டு ரூபா கொடுத்து கண்டிக்கு போகும் பொழுது ரேஸ் டிக்கட் ஒன்று எழுதிவிட்டு வரச் சொன்னான். கடைக்காரன் தன் பெயருக்கே எழுதிவிட்டான்.

தற்செயலாகப் பரிசும் கிடைத்துவிட்டது. தொழிலாளி அதை அறிந்து பரிசைக் கேட்டான். கடைக்காரன் வேண்டுமென்றால் இரண்டு ரூபாயைத் திருப்பித் தருவதாகக்கூறினான். முடிவில் பலர் உதவியுடன் தொழிலாளி வழக்குத் தொடர்ந்தான். ஆதாரம் எல்லாம் கடைக்காரன் பக்கம் இருக்கவே தொழிலாளி "தியுரும் போதி" யில் சத்தியம் செய்தால் போதும் என்று கூறிவிட்டான். இதுதான் விஷயம்" என்று விஷயம் அறிந்தவனது கம்பீரத்தில் தனது! புஷ்கோட்டை முட்டிக்கொண்டு தொந்தி தெரிவதை அறிந்து கோட்டை இழுத்து விட்டுவிட்டுக் குடுமியை முடிந்தான் பண்டா.

"ஒருலட்சம் ரூபாய் கிடைக்கும்பொழுது தாராளமாய் எவனும் பொய்ச் சத்தியம் செய்வான். சத்தியத்திலெல்லாம் என்ன இருக்கிறது?" என்றேன்."அப்படிச் சொல்லாதீர்கள்.

மற்ற இடத்தில் சத்தியம் செய்வதைப் பற்றி எனக்குத் தெரியாது. இந்த அரச மரத்தில் சக்தி இருக்கத்தான் செய்கிறது" என்றார் எனக்கு எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்த கடைக்காரர் ஒருவர்.

"அதர்மம் செய்பவர்கள் அழிந்துவிடுவதாக கூறுதெல்லாம் சுத்தப்பொய். உண்மையில் பார்க்கப்போனால் அயோக்கியனுக்கும் தில்லுமுல்லுக்காரர்களுக்குந்தான் நல்ல காலமாகத் தெரிகிறது.

பண்டைக் காலத்தில் ஏன் இன்றைக்குந்தான் என்ன?, மக்களின் வயிற்றிலடித்துக் கொழுத்த கடைக்காரர்களுக்கும் தண்ணீரில் பாலை ஊற்றி பணம் பெருத்தவர்களுக்கும் என்ன வந்துவிட்டது? அவரெல்லாம் நன்றாய் சௌகரியமாய்த் தான் இருக்கிறார்கள். வீடு, வயல், தேயிலைத் தோட்டம் என்று வாங்கி கொழுத்துத்தான் இருக்கிறார்கள்" என்றேன்.

பக்கத்திலமர்ந்திருந்த பண்டாவும் எதிரில் அமர்ந்திருந்த கடைக்காரரும் தங்களையே கூறியதாக நினைத்துக்கொண்டார்களென்பதை அவர்கள் முகம் காட்டியது.

"தம்பீ, நன்மையான காரியம் செய்தால் நன்மை சம்பவிக்கும். தீமை செய்தால் தீமை கிட்டும். எதை நாம் செய்கிறோமோ அது நமது வாழ்க்கையில் பிரதிபலிக்கும். நமது பௌத்த மதத் தத்துவம் இது என்றும் பொய்யானதில்லை" என்று அடுத்து அமர்ந்த ஆப்பக்கடை ஆச்சி கூறினாள்.

"என்னவோ என் அனுபவத்தில் நன்மை செய்தவர்கள் நன்மை அடைவதையும், தீமை செய்தவர் தீமை அடைவதையும் கண்டதில்லை. நடைமுறையில் எதிராகத்தான் நடக்கிறது" என்றேன்.

"உனக்கு என்ன வயது வந்துவிட்டது. மகா அனுபவஸ்தன் மாதிரிப் பேசுகிறாய். என் ஐம்பத்தைந்து வருட அனுபவத்தில் எத்தனையெத்தனையோ பார்த்திருக்கிறேன். இந்தத் தியுரும் போதியைப் பற்றிய ஒரு சம்பவம் உண்டு. அதைத் தெரிந்த பின் நீ நம்பிக்கை அடைவாய் என்று தாத்தா முறையான ஒருவர் என்னை நோக்கிக் கூறத் தொடங்கினார். அவர் மேல் பகுதியிலிருந்து வருகிறவர்.

"இது நடந்து இருபது முப்பது வருஷம் இருக்கும். சம்பந்தம்பிள்ளை என்பவர் பெரிய முதலாளி. நம்மூரில் முதல் முதல் கடை வைத்தவரும் அவர்தான். நல்ல தாராளமான மனசு. பலருக்கும் உதவி செய்தார். அவர்கள் தகப்பனார் தேடிய பூர்வ சொத்தான தோட்டம் இருந்தது. விலைவாசிகளும் அன்று நன்றாக இருந்தது. செலவு இன்றைக்குச் செலவழிவதில் பத்தில் ஒரு பங்கு கூட ஆகாது. இன்றைக்குத்தான் பஸ் என்றும் கார் என்றும் வந்துவிட்டது. பொசுக்கென்று எடுத்ததெற்கெல்லாம் கார். கொஞ்சத் தூரம் போகவேண்டுமென்றாலும் மணிக்கணக்காக கால்கடுக்க நிற்பார்களே ஒழிய நடக்க மாட்டார்கள்.

அப்பொழுதோ இந்தத் தூரமெல்லாம் நடந்து தீர்ப்போம்.இன்றைக்குத்தான் நன்றாக பளபளவென்ற கறுத்த ரோட்டில் 'லொறிகளில் சாமான்களைக் கொண்டுவருகிறார்கள். அப்பொழுதெல்லாம் பொதிமாட்டின் மேல்தான் கொண்டு வருவது வழக்கம். ஓ, மறந்து விட்டேனே எதையோ சொல்லிக் கொண்டு வருகிறேனே... வந்து... வந்து... சம்மந்தம்பிள்ளைக்குச் செலவு மிகக் குறைவு. ஆனால் வருமானம் நிறைய வந்தது. எனவே நல்ல மிச்சம். அவருக்கு ஒரு அண்ணன் இருந்தார்.

அவர் பெயர் சிங்காரம்பிள்ளை.இந்தியாவிலுள்ள சொத்துக்களைப் பார்த்துக்கொள்வார். பூர்விகச் சொத்துக்களின் வருமானத்தை இருவரும் பிரித்துக்கொள்வார்கள். இப்படியாகச் சிறிதுகாலம் நடைபெற்றது. உள்ளூர்க் கடையில் நல்ல லாபமென்றவுடன் மேலும் பணம் சம்பாதிக்க ஆசை ஏற்பட்டுவிட்டது. பணம் இருக்கிறதே அதுவும் கஞ்சா, அபின் போன்ற ஒரு போதைவஸ்துதான் மேலும் மேலும் சம்பாதிக்க ஆசை ஏற்படுகிறதே ஒழிய, போதும் என்று ஒரு எல்லை ஏற்படுவதில்லை.

'கொழும்பிலுள்ள எவனோ ஒரு சினேகிதன் பலசரக்கு மொத்த வியாபாரம் தொடங்கினால், நல்ல மிச்சம்' என்று கூறினான். தூத்துக்குடி மிளகாயை தூத்துக்குடியிலிருந்தும், பெல்லாரி வெங்காயத்தை பெல்லாரியிலிருந்தும், நேரே வரழைத்தால் கொள்ளை லாபம் கிடைக்கும் என்றும் எடுத்துக்காட்டினான்.

சம்பந்தம்பிள்ளையும் ஒரு கூட்டாளி ஆகி தொழிலை ஆரம்பித்தார். தொழில் கொஞ்சக் காலம் நன்றாகத்தான் நடந்தது. அதில் வேலை செய்த தெக்கித்திச் சீமைப்பயல் ஒருவன், பெருச்சாளி மாதிரி சுரண்ட ஆரம்பித்து விட்டான்.

பெரும் நஷ்டம். ஏற்படத் தொடங்கி விட்டது. கொழும்பு போய்வந்த சிலர், இதனை சம்பந்தம்பிள்ளையிடம் கூறி எச்சரித்து வைத்தார்கள். கிராமத்துக் கடையில் டா டூ என்று ஏதோ பொட்டை அதிகாரம் செய்ய முடியுமேயொழிய கொழும்பில் போய் இவரால் என்னசெய்ய முடியும்.

பொதுவாக அவர் கடை கொழும்பில் எந்த தெருவில் இருக்கிறது என்று அவரைக் கேட்டாலே சரியாகச் சொல்ல முடியாது. என்றைக்கோ எப்போதோ அங்கு போய்விட்டு புதுமை வீடு, துறைமுகம், மிருகக்காட்சிசாலை என்பவற்றை பார்த்ததோடு தன்னுடைய கடையையும் பார்த்து விட்டு வந்தார். அவளவு தான் கடையில் நஷ்டம் ஏற்பட்டால் கடைக்கு கடன் கொடுத்தவர்கள் எந்த பங்காளியிடமும் வசூலிக்கலாம் என்று சட்டம் இருக்கிறது என்று ஒருவன் கூறினான்.உடனே முன்னெச்சரிக்கையாக தனது பாகமாக.

இலங்கை இந்தியச் சொத்தை எல்லாம் சுத்தக் கிரயமாக அண்ணன் பேருக்கே எழுதிவைத்தார்.

"எதிர்பார்த்தபடி கொழும்புக் கடை நொடித்து விட்டது.

கடன் கொடுத்தவர்களும் சம்பந்தப்பிள்ளையின் சொத்தை ஜப்தி செய்ய முயன்றார்கள்.

அவர் பெயரில் சொத்து இல்லை என்றறிந்ததும் சும்மா இருந்துவிட்டார்கள். கடன்காரர்களிடமிருந்து சொத்து காப்பாற்றப்பட்டது. ஆனால் அண்ணனிடமிருந்து சொத்தை காப்பாற்ற முடியவில்லை.

சொத்தெல்லாம் தன் பெயருக்கிருக்கவும் சிங்காரம்பிள்ளை முழுவதும் தனக்குத்தான் சொந்தம் என்று உரிமைகொண்டாடி தம்பியையும்தம்பியின் மகனையும் விட்டை விட்டுத் துரத்திவிட்டார். சம்பந்தம்பிள்ளை வழக்குத் தொடர்ந்தார். ரு சு இல்லாதபோது வழக்கு என்ன செய்யும்! முடிவில் சத்திய போதியில் சத்தியம் செய்துவிட்டால் போதுமென்றார். அதன்படி அந்தப் படுபாவி சிங்காரமும் கூசாமல் சத்தியம் செய்தேவிட்டான். சம்பந்தம்பிள்ளை மனமுடைந்தவராய் இந்தியாவுக்குப் போய் மாமனார் வீட்டில் ஒட்டுக்குடித்தனம் நடத்தினார். அதே மனவருத்தத்தால் வியாதிவாய்ப்பட்டு விரைவில் மாண்டுவிட்டார். மகன் சுந்தரம் அநாதையாகி விட்டான். ஊரில் மாடு ஓட்டிக்கொண்டு வயிறு வளர்த்துவந்தான்.

பின்னர் சிலர் தயவால் இலங்கையில் ஒரு கடையில் பொடியனாக வேலை கிடைத்தது.

பணம் கிடைத்தால் பத்தும் கிடைக்கத் தான் செய்கிறது. பவிசும், பெருமையும் எங்கிருந்து தான் வருமோ?. சிங்காரப்பிள்ளையின் சொத்தும் மதிப்பும் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர ஆரம்பித்தது.சொல்லிவைத்தாற்போல் தேயிலைக் கூப்பன் உருவாக்கினார்கள். பணம் பணமாகக் காய்த்துத் தள்ளியது. சிங்காரம்பிள்ளை வெகுவிரைவில் லட்சாதிபதி ஆகிவிட்டார். யாரோ எவரோ என்றிருந்த சிங்காரம் பிள்ளையைத் தேடி பெரியமனிதர் என்று சொல்லப்பட்டவர்ளெல்லாம் சுற்றத் தொடங்கினார்கள்.

தொடர்ச்சி 18ஆம் பக்கம்

உங்கள் சிறுகதைகளை 1300 சொற்களுக்கு மேற்படா வண்ணம் எழுதி, sirukathaithinakaran@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவையுங்கள். மேற்குறிப்பிட்ட எண்ணிக்கையிலும் அதிகமான சொற்களைக் கொண்ட சிறுகதைகள் பிரசுரிக்கப்பட மாட்டாது. அதேபோல நூல் விமர்சனங்களை 600 சொற்களுக்கு மேற்படாமலும் எழுதி அனுப்பி வையுங்கள். _ஆர்_

## கட்டுப்பாடுகளைத் தளர்த்துங்கள்

அன்புள்ள ஐயா!

தினகரன் வாரவெளியீட்டில் வெளிவரும் சிறுகதைகளுக்கு தயவு செய்து கட்டுப்பாடுகளை, நிபந்தனைகளை விதிக்காதீர்கள். தங்களது நிபந்தனைகளை பிரபல எழுத்தாளர்கள் கூட ஏற்றுக் கொண்டதாகத் தெரியவில்லை. உதாரணம் மேமன் கவி.

நானும் தினகரன் அபிமானி. எனது சிறுகதைகளை அதிக அளவில் பிரசுரித்தது. தினகரன் வாரமஞ்சரியே. எனவே இந்தப் பத்திரிகைக்கு நான் நன்றி செலுத்த கடமைப்பட்டவன்.

உண்மையுள்ள

**இரா. மோசஸ்**

## கிரிஜாவின் 'காகிதச் சுவடி'

வணக்கம், வாரமஞ்சரியில் கிரிஜாவின் 'காகிதச் சுவடி' வாசிக்கக் கிடைத்தது. ஆழமான உணர்வலைகளைச் சேகரித்து, மனித சிந்தனைகளை தூசிதட்டி உயிர்ப்பித்திருக்கும் அச்சிறுகதை, சமகால மனிதர்களின் வாழ்வியல் கோலங்களையும், அதனால் வலுவிழந்துபோன மனிதநேயப் பண்புகளையும் உரத்துச் சொல்கிறது.

தங்களது இடமாற்றத்துக்காக முதியோர் இல்லத்துக்கு... எனத் தொடங்கும் இறுதிப் பந்தியின் சொல்லாடல்கள் மனதைத் தொட்டு ஈரமாக்குகிறது. நல்லதொரு சிறுகதையை வழங்கியிருந்தார் கிரிஜா. வாழ்த்துகளுடன்,அவரது சிந்தனை வீச்சின் பரிணாமத்தில் சமூக மேம்பாட்டுக்கான சிருஷ்டி இலக்கியம் மேலும் உயிர்ப்பிக்க பிரார்த்திக்கிறேன்.

**கலாபூசணம் அக்கரைப்பற்று நஜீமு**

## மஞ்சரி குறுக்கெழுத்து போட்டி இல:137



திரு/திருமதி.செல்வி ..........................................

(ஆங்கிலத்தில் எழுதுவது விரும்பத்தக்கது)

முகவரி ..........................................

திகதி ..................... கையொப்பம் .....................

மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி
போட்டி இல. 137
த.பெ.இல.834. கொழும்பு

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 137

### இடமிருந்துவலம்

1. ஐக்கிய உறவு
4. சிறு குழந்தைகளை இப்படியும் அழைப்பார்கள்
6. சான்று
8. பயத்தினால் ஏற்படும் மனக்கலக்கம் (திரும்பியுள்ளது)
10. வேடிக்கை அல்லது நூதனம் (குழம்பியுள்ளது)
12. வெட்கம் (குழம்பியுள்ளது)
14. நாட்டைப் பாதுகாக்கும் வீரர்களின் தொகுதி
16. காணியின் உரிமைச் சாசனம்
17. இந்தியா (குழம்பியுள்ளது)
19. உறுதியானது அல்லது கனமானது (குழம்பியுள்ளது)
21. அப்பட்டமாக பொய் சொல்பவன்.
23. வேவு
24. மனவலிமை, சக்தி (குழம்பியுள்ளது)
25. இறைவனால் முன்கூட்டியே வகுக்கப்பட்டதாகக் கருதப்படும் நியதி (குழம்பியுள்ளது)

### மேலிருந்து கீழ்

1. உடல் மெலிவாக இருப்பவரை இப்படிச் சொல்வர்
2. நீர் நிலை
3. விளையாடுவதற்குப் பயன்படும் இடம்
4. ஒரு விஷ ஜந்து
5. வழி
7. மன்மதனின் மனைவி
9. இதிலிருந்தும் நீர் எடுக்கலாம்
11. விற்பனைக்கு இதுவும் தேவை (குழம்பியுள்ளது)
13. கடவுள் இல்லையென்ற கொள்கை (குழம்பியுள்ளது)
15. மேற்செல்லாதபடி இடையூறு செய்தல் (தலைகீழ்)
16. கறிக்குச் சுவை சேர்ப்பது
17. அரைப்பங்கு
18. ரத்தம் (குழம்பியுள்ளது)
20. கூற்றுவன் குழம்பிவிட்டான்.
22. சுமை அல்லது கனம் (தலைகீழ் )

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல : 136

### விடைகள்

**இடமிருந்துவலம்**

1. ஜனாதிபதி
5. காது
7. கங்கை
8. வாய்
9. கப்பல்
11. புனிதம்
13. கீரி
16. துயர்
18. பசுமை
20. பாத்தி
21 மாரி
22. நித்திரை
23. தரிசு

**மேலிருந்து கீழ்**

1. ஜவாப்தாரி
2. திங்கள்
3. பகல்
4. திகைப்பு
5. காய்
6. துவாரம்
10. பனி
12. தராசு
14. கீர்த்தி
15. மது
17. நியதி
18. பரிசு
19. தனிமை
20. பாரை

## மஞ்சரி குறுக்கெழுத்துப் போட்டி இல :136

### பரிசு பெறுவோர் விபரம்

| முதலாம் பரிசு ரூ 500.00 | இரண்டாம் பரிசு ரூ 350.00 | மூன்றாம் பரிசு ரூ 150.00 |
|---|---|---|
| **மொஹம்மட் இர்ஷாட்,** இர்ஷாட் ஸ்டோர்ஸ், இல P/9 ஜசனா ஸ்டிரீட், கொழும்பு 11 | **என். சத்தியசீலன்,** 27, போஹில் ஜனபதய, கட்டபூலா நாவலப்பட்டிய | **அஹமட் முஜீப்,** இல 122/ஏ மீகஹமுல்ல, அட்டுலுகம, பண்டாரகம |

### பாராட்டு பெறுவோர்

1. **அஹமட் முஜீப்,** மடவள
2. **என்.கே. வேணி,** பலாங்கொடை
3. **எஸ். கனகரத்தினம்,** திருகோணமலை
4. **எம்.எம். ஷசாத்,** மருதமுனை
5. **பிரசாத் ஷேசாத்** மட்டக்களப்பு
6. **எஸ். தமிழ்மலர்,** பாண்டிருப்பு 1
7. **எஸ்.எம்.ஜிப்ரி,** மருதானை , கொழும்பு 10
8. **எம்.ஏ. நிஜிமுத்தீன்,** அக்கறைப்பற்று
9. **எம்.எம். ஆகில்** துல்ஹிரிய
10. **எம்.எச்.எம். பாஸி** ரஜவெல்ல

# ஆரம்ப பொது பங்கு வழங்கல் அறிவிப்புடன் கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் இணையும் LTL Holdings

40 வருட கால அனுபவத்தைக் கொண்ட, இலங்கையின் பன்முகப்படுத்தப்பட்ட, ஒன்றிணைக்கப்பட்ட வலுத்துறையில் முன்னணி நிறுவனமாகிய LTL Holdings Limited, ஆரம்ப பொது பங்கு வழங்கல் குறித்து அறிவித்துள்ளதுடன், கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பட்டியலிட்டுள்ளது.

மேலும், இப்பட்டியலிடலானது, கொழும்பு பங்குப்பரிவர்த்தனையில் முன்னெடுக்கப்படவுள்ள மாபெரும் ஆரம்ப பொது பங்கு வழங்கலாக அமைந்திருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக, பங்கொன்றுக்கு ரூ. 14.50 வீதம் 1,379,310,400 புதிய சாதாரண வாக்குரிமை பங்குகள் வெளியிடப்படவுள்ளதுடன், அதன் ஆரம்ப மொத்த மதிப்பு ரூ. 16 பில்லியனாக அமைந்திருக்கும். ஆரம்ப பொது பங்கு வழங்கலினூடாக இந்தப் பெறுமதியை ரூ. 20 பில்லியனாக உயர்த்துவதற்கும், பொது மக்களுக்கு LTL நிறுவனத்தின் 22.3% உரிமையாண்மையை பெற்றுக் கொடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த ஆரம்ப பொது பங்கு வழங்கல் 2024 இம்மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளதுடன், பங்கு கொள்முதலுக்கான விண்ணப்பங்கள் தற்போது ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ஆரம்ப பொது பங்கு வழங்கலிலிருந்து பெறப்பட்ட தொகையில், ரூ. 13.5 பில்லியன், கெரவலபிட்டிய பகுதியில் (சஹாஸ்தனாவி லிமிடெட்) 350 MW இணைந்த சுழற்சி வலுப் பிறப்பாக்கல் ஆலையை நிர்மாணிப்பதற்கான முதலீடாக பயன்படுத்தப்படும். இது, இலங்கையில் திரவ இயற்கை எரிவாயுவில் (LNG) இயங்கும் இரண்டாவது வலுப் பிறப்பாக்கல் நிலையமாக இது அமைந்திருக்கும். மேலும் மிகுதி தொகை ரூ. 6.0 பில்லியன், சியம்பலாண்டுவ சூரிய மின் வலுப் பிறப்பாக்கல் (ரிவிதனாவி பிரைவட் லிமிடெட்) திட்டத்தின் 50% பங்குகளில் முதலீடு செய்வதற்கு ஒதுக்கப்படும்.




# SLITAD மக்கள் அபிவிருத்தி விருதுகளில் தங்க விருதினை வென்றுள்ள NDB

NDB வங்கியானது SLITAD மக்கள் அபிவிருத்தி விருதுகள் 2023/2024 இல் தங்க விருதை வென்று சாதனை படைத்துள்ளமையை அறிவிப்பதில் பெருமையடைகின்றது. இந்த கௌரவமிக்க அங்கீகாரம் NDB க்கு ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிப்பதுடன் புதுமையான பயிற்சி முயற்சிகள் மூலம் அதன் குழுவை மேம்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டையும் வலுப்படுத்துகிறது.



இலங்கை பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (SLITAD) மக்கள் அபிவிருத்தியில் சிறந்து விளங்கும் நிறுவனங்களை அங்கீகரிப்பதற்காக 2023/2024 ஆம் ஆண்டிற்கான மதிப்புமிக்க மக்கள் அபிவிருத்தி விருதுகள் நிகழ்வினை 5வது தடவையாக நடத்தியது. இந்த விருதுகள் உலகளாவிய மற்றும் பிராந்தியத்தின் சிறந்த நடைமுறைகளுடன் தங்களை இணைத்துக் கொண்டு, முழுமையான மனித வள மேம்பாட்டு (HRD) முயற்சிகளில் மூலோபாய ரீதியாக முதலீடு செய்யும் நிறுவனங்களை முன்னிலைப்படுத்துகின்றன.

தங்க விருதைப் பெறுவதானது அதன் ஊழியர்களின் திறமைகள் மற்றும் திறன்களை மேம்படுத்துவதில் NDB மேற்கொண்டு வரும் அர்ப்பணிப்புமிக்க பணிக்கு ஒரு சான்றாகின்றது. NDB யைப் பொறுத்தமட்டில், மக்களில் முதலிடுவது என்பது எதிர்காலத்தின் மீது முதலீடுவது ஆகும். குழு உறுப்பினர்களின் மேம்பாடு மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிப்பதன் மூலம், வங்கி அவர்களின் தொழில்முறை வளர்ச்சியை மேம்படுத்துவதுடன் நிறுவனத்தின் ஒட்டுமொத்த வெற்றிக்கும் பங்களிப்பினை வழங்குகிறது. மனிதவள அபிவிருத்தி முயற்சிகள் தொடர்ச்சியான கற்றல் மற்றும் அபிவிருத்தி கலாசாரத்தை வளர்க்கின்றன.

# தேர்தல் உதவிக்குறிப்புகளை பகிர்ந்து கொள்ளும் TikTok

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரச்சாரங்களின் போது விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளை நிர்வகிக்கும் போது உள்ளடக்கத்தை உருவாக்குவது பற்றிய அறிவைப் பகிர்ந்து கொள்ளும் வேலைத் திட்டமொன்றை TikTok மேற்கொண்டுள்ளது. குறிப்பாக முக்கியமான நேரத்தில் பொறுப்பான மற்றும் நம்பகமான தகவல்களைப் பயன்படுத்துமாறு TikTok வலியுறுத்துகிறது.

TikTok இன் சமூகக் கோட்பாடுகளுக்கு அமைய பொய்யான மற்றும் தவறான தகவல், வன்முறை மற்றும் வெறுப்பூட்டும் பேச்சுக்கு எதிராக வலுவான நடவடிக்கை எடுக்க அனுமதியுள்ளது. வாக்காளர் பதிவு, வேட்பாளர் தகுதிகள், வாக்கு எண்ணிக்கை மற்றும் தேர்தல் முடிவுகள் உள்ளிட்ட மக்களை தவறாக வழிநடத்தும் தகவல்களை அகற்றும் பணியில் ஈடுபட்டுள்ள TikTok, வாக்காளர்களை அச்சுறுத்தும், வாக்களிப்பதை ஊக்கப்படுத்தும் மற்றும் வன்முறையைத் தூண்டும் உள்ளடக்கத்தையும் தடை செய்ய நடவடிக்கை எடுத்துள்ளது. இந்தச் சட்டங்களைச் செயல்படுத்த உலகளவில் மேம்பட்ட தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 40,000 க்கும் மேற்பட்டவர்களை வேலைக்கு அமர்த்துவதற்காக உளவுத்துறை நிறுவனங்கள், தொழில் கூட்டாளர்கள் மற்றும் சிவில் சமூக அமைப்புகளுடன் TikTok இணைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

தவறான தகவலை எதிர்த்துப் போராட உதவுவதற்காக, TikTok உள்ளூர் மற்றும் பிராந்திய உண்மை சரிபார்ப்பாளர்களுடன் இணைந்து செயல்பட்டு, தேர்தல் தவறான தகவலை நிலையான முறையில் துல்லியமாக அகற்ற உதவுகிறது. ஆய்வுக்கு உட்பட்ட அல்லது உறுதிப்படுத்தப்படாத உள்ளடக்கம் For You Feed பரிந்துரையிலிருந்து தடைசெய்யப்படுகிறது, மேலும் பார்வையாளர்களுக்கும் உள்ளடக்க படைப்பாளர்களுக்கும் அத்தகைய உள்ளடக்கத்தின் தவறான தன்மையைப் பற்றி எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

# நல்லூர் திருவிழாவில் பக்தர்களுக்கு நடமாடும் வங்கிச் சேவையை வழங்கிய கொமர்ஷல் வங்கி

அண்மையில் நடைபெற்று முடிந்த புகழ்பெற்ற நல்லூர் கந்த சுவாமி ஆலய வருடாந்த திருவிழாவில் கொமர்ஷல் வங்கியும் பங்கேற்றது. இதற்கிணங்க இங்கு கொமர்ஷல் வங்கியானது நிலையாண்மையை ஊக்குவித்தல், பக்தர்களுக்கு நடமாடும் வங்கி சேவைகளை வழங்குதல் மற்றும் வங்கியின் கார்ட்களுக்கு விலைக்கழிவுகளை வழங்குதல் போன்ற செயற்பாடுகளை மேற்கொண்டது.

யாழ்ப்பாணம், நெல்லியடி, சுன்னாகம், மருதனார் மடம், அச்சுவேலி, திருநெல்வேலி, பருத்தித்துறை, தெல்லிப்பளை, மானிப்பாய் மற்றும் சங்கானை போன்ற பிரதேசங்களில் வங்கி ஊழியர்கள் மக்களின் வீடுகளை நாடி ஊக்குவிப்பு செயற்பாடுகளில் ஈடுபட்டதுடன், நிலைபெறுதகு எதிர்காலத்தை உருவாக்குவதற்கான உறுதிப்பாட்டின் ஒரு பகுதியாக 1,500 பயன்தரு மரக்கன்றுகளையும் மக்களுக்கு வழங்கினர்.

வங்கியானது அதிர்ஷ்ட சீட்டிழுப்பு போட்டியினை நடாத்தியதுடன், வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு பயன்தரு மரக்கன்றுகள் உட்பட பெறுமதியான பரிசில்களையும் வழங்கியது. செப்டெம்பர் 1ஆம் திகதி நல்லூர் திருவிழா நிகழ்ச்சியின் சிறப்பம்சங்களில் ஒன்றான தேர் திருவிழா நிறைவடைந்ததையடுத்து வடக்கு பிராந்தியத்தில் உள்ள வங்கிக் கிளைகளின் ஊழியர்கள் சுற்றுச்சூழலினை சமூகத்துடன் இணைக்கும் வகையில். நல்லூர் கோவிலுக்குச் செல்லும் நான்கு வீதிகளையும் தூய்மைப்படுத்தும் பணியை மேற்கொண்டு தமது அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர்.



திருவிழாக் காலத்தில் நல்லூரில் தனது 'பேங்க் ஒன் வீல்ஸ்' நடமாடும் வங்கிச்சேவையின் ஊடாக, பக்தர்கள் மற்றும் பார்வையாளர்களுக்கு பணத்தினை மீளப்பெறும் வசதியையும் வங்கி வழங்கியது.

# உலக அல்சைமர் மாத நடைப் பயணம்




அல்சைமர் நோய் மற்றும் ஏனைய வடிவிலான டிமென்ஷியா என்பன வயது முதிர்ச்சியுடன் பரவலாக அதிகரித்து வருகின்றன. பிராந்தியத்தில் வேகமாக அதிகரித்துவரும் வயதுமுதிர்ந்தவர்களின் எண்ணிக்கையை எதிர்கொண்ட நாடுகளில் ஒன்றாக இலங்கை காணப்படுவதுடன், 2025ஆம் ஆண்டாகும் போது அரை மில்லியனுக்கும் அதிகமானவர்கள் டிமொன்ஷியாவுடன் வாழ்வார்கள் என எதிர்வுகூறப்பட்டுள்ளது.

உலக அல்சைமர் மாதமாக செப்டெபர் மாதமும், உலக அல்சைமர் தினமாக செப்டெம்பர் 21ஆம் திகதியும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், அல்சைமர் நோய் சர்வதேச அமைப்பின் உறுப்பினரான லங்கா அல்சைமர் மன்றம் தொடர் நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.ஒரு மாத கால விழிப்புணர்வு பிரசாரத்தின் ஆரம்பத்தைக் குறிக்கும் வகையில், நினைவாற்றல் இழப்பு மற்றும் ஆற்றல் குறைவு போன்ற அறிகுறிகளைக் கொண்ட ஒரு வகை டிமென்ஷியாவான அல்சைமர் நோய் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த கொழும்பின் அடையாளமாக விளங்கும் தாமரைக் கோபுரக் கட்டடம் செப்டெம்பர் 1ஆம் திகதி சிவப்பு நிறத்தில் ஒளிர்ந்தது.

லங்கா அல்சைமர் மன்றத்தின் முக்கிய சேவைகள் பெரும்பாலும் தன்னார்வத் தொண்டர்கள் மற்றும் நன்கொடைகளால் ஆதரிக்கப்படுகின்றன.

# மொத்த எரிசக்தி தீர்வு பங்குதாரராக Tiles, கண்ணாடி துறையை பலப்படுத்தும் லிற்ரோ



இலங்கையின் முன்னணி LP எரிவாயு வழங்குனரான Litro Gas Lanka Ltd., கொழும்பு கிங்ஸ்பரியில் அண்மையில் நடைபெற்ற இலங்கை மட்பாண்டங்கள் மற்றும் கண்ணாடி கவுன்சிலின் (SLCGC) 18ஆவது வருடாந்த பொதுக் கூட்டத்தின் தொழில்நுட்ப அமர்வின் போது நாட்டின் Tiles மற்றும் கண்ணாடி தொழிற்சாலைகளுக்கு ஆற்றலளிப்பதில் அதன் முக்கிய பங்கை வெளிப்படுத்தியது.

லிற்ரோ கேஸ் அனுசரணை வழங்கிய தொழில்நுட்ப அமர்வு, இந்த முக்கிய துறைகளுக்குள் ஆற்றல் திறன், நிலைத்தன்மை மற்றும் புதுமை ஆகிய தலைப்புகளில் கவனம் செலுத்தியது. Litro இன் கூட்டு அணுகுமுறையானது, தடையில்லா ஆற்றல் வழங்கலை உறுதிசெய்வதற்கும் மற்றும் ஆற்றல் மிகுந்த தொழில்களின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கும், குறிப்பாக பொருளாதார மற்றும் ஏற்பாட்டியல் சவால் காலங்களில் அதன் நீண்ட கால உறுதிப்பாட்டையும் அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

அனுபவமும் தொலைநோக்கும் கொண்ட அரவிந்த பெரேரா 2024/2025 தவணைக்கான ஜனாதிபதியாக இப்பொதுக் கூட்டத்தில் நியமிக்கப்பட்டார்/.

ஜெய்சிங் சம்பத் தலைவர் புனே கேஸ், இந்தியா & லங்கா கேஸ்டெக், தொழில்துறையில் முதல் தலைமுறை தொழில்முனைவோர், எதிர்கால போட்டித்தன்மையை பராமரிக்க ஆற்றல் சேமிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். LP கேஸ் பயன்பாட்டில் உள்ள போக்குகளை அவர் எடுத்துரைத்தார்,

நீண்ட கால தொழில்துறை வெற்றியை மேலும் வளர்ப்பதற்கு நிலையான ஆற்றல் நடைமுறைகளை நோக்கிய மாற்றத்தை வலியுறுத்தினார்.

# உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ள யூனியன் அஷ்யூரன்ஸ்




இலங்கையின் முன்னணி ஆயுள் காப்புறுதி சேவைகள் வழங்குநரான யூனியன் அஷ்யூரன்ஸ், 2024 முதல் அரையாண்டு காலப்பகுதியில் உறுதியான நிதிப் பெறுபேறுகளை பதிவு செய்துள்ளதாக அறிவித்துள்ளது. பிரதான அளவுகோல்களில் உறுதியான வளர்ச்சி மற்றும் வினைத்திறனை பதிவு செய்துள்ளது.2024 ஆம் ஆண்டில் யூனியன் அஷ்யூரன்ஸ் தேறிய கட்டுப்பண வழங்கல் ரூ. 9.8 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 16% வளர்ச்சி என்பது குறிப்பிடத்தக்கது. அனைத்து இலங்கையர்களின் ஆயுளை பாதுகாப்பது மற்றும் நலனுக்கு வளமூட்டுவது எனும் தனது நோக்கத்தின் பிரகாரம், ரூ. 3.3 பில்லியனை உரிமைகோரல்களாக பதிவு செய்து காப்புறுதிதாரர்களுக்கான தமது அர்ப்பணிப்பை நிறுவனம் மீளுறுதி செய்திருந்தது.

ஆண்டில் ரூ. 5.7 பில்லியனை தேறிய முதலீட்டு வருமானமாக நிறுவனம் பதிவு செய்திருந்தது. 2023 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 11% வளர்ச்சியை பதிவு செய்திருந்தது. யூனியன் அஷ்யூரன்ஸின் வினைத்திறனான சொத்துகள் ஒதுக்கீடு மூலோபாயம், குறைந்த வட்டி வீதத்துடனான சூழல் ஆகியவற்றில் இது பிரதிபலித்திருந்தது.

2024ஆம் ஆண்டின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் நிறுவனத்தின் நிர்வாகத்தின் கீழான சொத்துகள் ரூ. 86.6 பில்லியனாக பதிவாகியிருந்தது. மேலும், மூலதன போதுமை விகிதம் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாட்டை விட உயர்ந்த மட்டத்தில் பேணப்பட்டிருந்தது.

# மதிப்புமிக்க இரண்டு விருதுகளை வென்ற சுரேன் குக் ஏஜென்சீஸ்



இலங்கையின் முன்னணி பூச்சி மேலாண்மை நிறுவனமான Suren Cooke Agencies (Pvt) Ltd, இந்தியாவின் மும்பையில் நடைபெற்ற FAOPMA மாநாடு 2024 இல் இரண்டு மதிப்புமிக்க விருதுகளை வென்றதன் மூலம் ஒரு சிறந்த மைல்கல்லை எட்டியுள்ளது. BASF ஆல் நிதியுதவி செய்யப்பட்ட ஆண்டின் சிறந்த பூச்சி மேலாளர் விருது மற்றும் Ensystex ஆல் நிதியுதவி அளிக்கப்பட்ட நிலைத்தன்மை விருது ஆகியவற்றுடன் நிறுவனம் கௌரவிக்கப்பட்டது, சிறப்பு மற்றும் நிலைத்தன்மை ஆகிய இரண்டிற்கும் உறுதியளிக்கப்பட்ட தொழில்துறை முன்னோடி என்பதை மீண்டும் உறுதிசெய்துள்ளது.

FAOPMA மாநாடு உலகளாவிய பூச்சி மேலாண்மை துறையில் மிக முக்கியமான நிகழ்வுகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது ஆசியா மற்றும் ஓசியானியா முழுவதும் உள்ள வல்லுநர்கள், கண்டுபிடிப்பாளர்கள் மற்றும் கட்டுப்பாட்டாளர்களை ஒன்றிணைக்கிறது. சிறந்த நடைமுறைகளைப் பகிர்ந்துகொள்வதற்கும், வளர்ந்து வரும் போக்குகளைப் பற்றி விவாதிப்பதற்கும், புதிய தொழில் தரநிலைகளை அமைப்பதற்கும் இந்த மாநாடு ஒரு தளத்தை வழங்குகிறது. சுரேன் குக் ஏஜென்சிகளுக்கு, இந்த நிகழ்வில் அங்கீகாரம் வழங்கப்படுவது, சர்வதேச அளவில் பூச்சி மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கான அவர்களின் அர்ப்பணிப்பை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இந்த ஆண்டின் பூச்சி மேலாளர் விருது என்பது சுரேன் குக் ஏஜென்சிகளின் தொழில்முறை, புத்தாக்கம் மற்றும் வாடிக்கையாளர் சேவைக்கான அர்ப்பணிப்பு ஆகியவற்றை உயர்த்திக் காட்டும் ஒரு மதிப்புமிக்க பாராட்டு ஆகும்.




# மலையகத்தை தமிழ் நாவலுக்கான களமாக்கிய முதல்வர் நந்தி



நந்தி என்ற புனைபெயர் கொண்ட எழுத்தாளர், பேராசிரியர், மருத்து வ ர் எஸ். சிவஞானசுந் த ரம் பற்றி, கலாநிதி நா. சுப்பிரமணியன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

"ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத்துறையில் அடியெடுத்து வைத்துக் குறிப்பிடத்தக்க படைப்புகளைத் தந்த முதலாவது மருத்துவ அறிவியலாளர் என்ற வகையிலும் மலையகப் பிரதேசத்தைத் தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர் என்ற வகையிலும் நந்திக்கு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றில் நிரந்தர இடமுண்டு. (நந்தி மணிவிழா மலர் பக்:138)

நந்தி, தமிழ்க் கலை இலக்கியத் துறைகளில் நாற்பது ஆண்டுகளுக்குமேல் தொடர்பு கொண்டவர். புனைகதை, நாடகம், மருத்துவ அறிவியல் துறைகளில் எழுத்தாளராகத் திகழ்ந்த இவர், நடிப்பு, நாடகத் தயாரிப்பு ஆகிய துறைகளிலும் அவ்வப்போது கவனஞ் செலுத்தி வந்துள்ளார். இலங்கை முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் யாழ்ப்பாணக் கிளைத் தலைவராகத் திகழ்ந்து எழுத்தாளர், கலைஞர், திறனாய்வாளர் ஆகிய பல நிலையினரையும் செயலூக்கத்திற்குத் தூண்டிநின்றவர்.

நல்லூர் வி. செல்லத்துரைக்கும் செல்லம்மாவுக்கும் 30.03. 1928இல் பிறந்த நந்தியினது இயற்பெயர் சிவஞானசுந்தரம். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தில் வைத்தியப் படிப்பை நிறைவு செய்து மேற்படிப்பினை லண்டன் பல்கலைக்கழத்தில் பெற்றவர். இவருக்கு 'நந்தி' என்ற புனைபெயரை வழங்கி ஆசீர்வதித்தவர் தமிழக மூதறிஞரான ராஜாஜி.

இவரது முதலாவது சிறுகதை 'சஞ்சலமும் சந்தோஷமும்' 1947இல் வீரகேசரியில் வெளியானது. 1960இல் மலையகத்தில் நந்தி சுகாதார அதிகாரியாக இருந்த காலத்தில் மலையகத்தைப் பின்புலமாகக் கொண்ட 'மலைக்கொழுந்து' என்ற நாவலை எழுதினார். இவரது முதல் நாவலான மலைக்கொழுந்து 1962இல் தினகரன் இதழிலே தொடராக வெளிவந்து பின்னர் 1964இல் நூல்வடிவம் பெற்றது. மலையத் தோட்டத் தொழிலாளர் சமூகத்தின் பிரச்சினைகளை சித்தரித்த முதலாவது நாவல் என்ற பெருமை இதற்குரியது. தொழிற்சங்கங்களுக்கிடையே நிலவிய போட்டியும் தனிமனித முரண்பாடுகளும் தொழிலாளர் வாழ்க்கையை எவ்வாறு பாதிக்கின்றன என்பது இந்நாவல் மூலம் எடுத்துக் காட்டப்படுகிறது.

"தொழிலாளியான மலையப்பன் முத்து வீராயியைக் காதலிக்கிறான். தோட்டத்தின் தொழிற்சங்கங்களுக்கு இடையேயிருந்த போட்டி இருவரும் இணைவதற்குத் தடையாகிறது. தோட்டத்து டிஸ்பென்ஸர் 'பதி' தீவினை சூழ்வோனாகி முத்துவீராயியின் தந்தைக்கும் மலையப்பனுக்கு மிடையில் பகை மூட்டுகிறான். சின்னத்துரையான மகராஜன் முத்து வீராயியை மணம் புரியத் திட்டமிடுகிறான். மலையப்பனை வீழ்த்துவதற்காக திட்டமிட்ட கலகம் அவனது தங்கை போன்ற வள்ளியை உயிர்ப்பலி கொள்கிறது. மகராஜனை மணக்க மறுத்து முத்துவீராயி மலையிலிருந்து வீழ்ந்து உயிர் துறக்கிறாள். இக்கதையம்சத்திற்குத் துணையாக மலையக மக்களின் வாழ்க்கை முறை பற்றிய விவரணங்கள் அமைகின்றன. மருத்துவ நிபுணரான ஆசிரியர் தமது தொழில்முறை அனுபவங்களை நாவலில் புகுத்தியுள்ளார். மலையகத் தொழிலாளரது வாழ்க்கையை அனுதாபத்துடன் நோக்கும் யாழ்ப்பாணத்து நடுத்தர வர்க்கத்தவர் ஒருவரின் கண்ணோட்டத்தில் எழுதப்பட்டது இந்நாவல்" (ஈழத்து தமிழ்நாவல் இலக்கியம் என்ற நூலில் நா. சுப்பிரமணியன்)

தனது 13 ஆவது வயதிலே எழுதத் தொடங்கி தமிழிலும் ஆங்கிலத்திலும் மிக ஆர்வமுள்ள எழுத்தாளராக விளங்கியவர் நந்தி.

இவரது நாவல்களான 'மலைக்கொழுந்து', 'தங்கச்சியம்மா', 'நம்பிக்கைகள்' என்பனவும் சிறுகதைத் தொகுதிகளான 'ஊர்நம்புமா?', 'கண்களுக்கு அப்பால்', 'நந்தியின் கதைகள்', 'தரிசனம்', 'நந்தியின் சிறந்த சிறுகதைகள்' ஆகியனவும் 'குரங்குகள்' என்ற நாடகப் பிரதியும்; படைப்பிலக்கிய நூல்களாக வெளிவந்துள்ளன.

இவர் ஆங்கிலத்தில் எழுதிய கூடுதலான புத்தகங்கள் மருத்துவத்துடன் தொடர்புடையவை. இவர் எழுதிய 'ஆராய்ச்சிகள்' என்ற நூல் இரு பகுதிகளைக் கொண்டது. இந்நூல் இலங்கையின் எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் உபயோகிக்கப்படுவதுடன், ஆராய்ச்சிக்கல்வி பயிலும் மாணவர்களாலும் பாவிக்கப்படுகின்றது. அத்துடன் மட்டுமல்லாது மருத்துவம் சம்பந்தமாகவும் மக்களின் உடல்நலம் சம்பந்தமாகவும் 50க்கும் மேற்பட்ட நூல்களை வெளியிட்டார். 16 நூல்களை தமிழிலும், 4 நூல்களை பாமர மக்களிற்கான மருத்துவ நூல்களாகவும், 2 நூல்களை சிறுவர்களுக்காகவும், மேலும் 2 நூல்களை ஆன்மிகத்திற்குரிய நூல்களாகவும், ஆசிரியர்களுக்காக 'மனிதனின் உயர்வு' என்ற ஒரு சத்தியசாயி கல்வி நூலையும் வெளியிட்டுள்ளார்.







நந்தி எழுதிய சுகாதார அறிவியல் நூல்கள் பற்றி டாக்டர் எம். கே. முருகானந்தன் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்:

'குழந்தை வளர்ப்பு பற்றி அவர் எழுதிய கட்டுரைத் தொடர்கள் மிகவும் பிரபல்யமானவை. இதை அவர் வெறும் கட்டுரைகளாக எழுதவில்லை. ஒரு டொக்டர் அண்ணன் தனது அன்புத் தங்கைக்கு எழுதிய பாசமுள்ள கடித வடிவிலே இதை அமைத்திருந்தார்.

குழந்தை வளர்ப்பு பற்றிய விடயங்களை மக்களிடையே பரப்ப இந்த இலக்கிய வடிவத்தை அவர் எடுத்தாண்ட செயல் மிகவும் மதிநுட்பம் வாய்ந்தது. ஏனெனில் கட்டுரையாக எழுதினால் அது வெறும் விபரக் கொத்தாக கவர்ச்சி அற்றுவிடும். ஆனால் கடிதமாக எழுதும்போது அது ஒருவருடன் மற்றவர் தனிப்பட்ட முறையில் தொடர்பு கொள்கின்ற விதத்தில் எழுதப்படுவதால் ஆசிரியருக்கும் வாசகனுக்குமிடையே ஒரு அந்நியோன்னிய உணர்வை ஏற்படுத்தி வாசகனை அதனோடு நெருங்கிவரச் செய்து சொல்லப்படும் விஷயங்களையும் இலகுவாகப் புரிந்துகொள்ளச் செய்கிறது. சுகாதாரக் கல்விக்கு இலக்கிய வடிவம் கொடுத்து அதைக் கவர்ச்சிகரமாக்கினார். எனவே அவரை சுகாதார இலக்கியத்தின் முன்னோடி என்று சொல்லலாம்"

'அன்புள்ள நந்தினி', 'நந்தினி உன்பிள்ளை', 'உங்களைப்பற்றி' ஆகியன இவ்வகைமை சார்ந்த நந்தி எழுதிய சுகாதார இலக்கிய நூல்களிற் சிலவாகும்.

நந்தி அரசாங்க சுகாதார சேவையின் பல்வேறு பிரிவுகளில் பல்வேறு மட்டங்களில் 1966ஆம் ஆண்டுவரை கடமையாற்றினார். 1967ஆம் ஆண்டு ஆவணி மாதம் பேராதனை பல்கலைக்கழகத்தின் சமூகநல மருத்துவ பிரிவில் இணைந்து துணைப் பேராசிரியராக உயர்ந்தார். அத்துடன் மருத்துவ விஞ்ஞானப்பிரிவின் தலைமை நிர்வாகியாகவும் மேற்படிப்பிற்கான சமூகநல மருத்துவப் பீடத்தின் தலைமை அதிகாரியாகவும் விளங்கினார். 1978ஆம் ஆண்டு யாழ். மருத்துவ பீடம் ஆரம்பிக்கப்பட்ட பொழுது சமூகநல மருத்துவ பீடத்தின் முதல் பேராசிரியராக பதவியேற்றது முதல், தனது கடைசி மூச்சுவரை அப்பதவியிலேயே பணியாற்றினார். 1984ஆம் ஆண்டிலிருந்து 1988ஆம் ஆண்டுவரை மருத்துவ பீடத்தின் தலைவராக திகழ்ந்ததுடன் 1979ஆம் ஆண்டிலிருந்து 1993ஆம் ஆண்டுவரை யாழ். பல்கலைக்கழகத்தின் ஆலோசனைச் சபையின் அங்கத்தினராகவும் கடமையாற்றினார்.

உலக சுகாதார நிறுவனத்திற்காக 1985ஆம் ஆண்டிலிருந்து 1999ஆம் ஆண்டுவரை மலேசியா, பங்களாதேஷ், மொங்கோலியா, இந்தியா, மியன்மார், சிம்பாப்வே, வட கொரியா ஆகிய நாடுகளில் சுகாதார ஆராய்ச்சிக் கூடங்களில் சர்வதேச அறிவுரையாளராகப் பணி புரிந்தார்.

நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டவராக விளங்கிய நந்தி மாணவப் பருவத்திலேயே ஷேக்ஸ்பியரின் ஆங்கில நாடகங்களில் பல முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்துப் பாராட்டுக்களையும் பரிசில்களையும் பெற்றவர். ஐம்பதுக்கும் மேற்பட்ட மேடை நாடகங்களில் நடித்துள்ளார்.

நந்தியால் 1949இல் 'விசித்திர மூக்குக் கண்ணாடி' என்ற தலைப்பில் சிறுகதையாக எழுதப்பட்டு பின்னர் வானொலி நாடகமாக 1957லும் 'புதும கண்ணாடிய' என சிங்கள வானொலியிலும் வெளிவந்த ஆக்கம், 1975இல் 'குரங்குகள்' என்ற தலைப்பில் மேடை நாடகமாகப் பவனி வரத்தொடங்கியது. பேராதனைப் பல்கலைக் கழக அரங்கு உட்பட பத்துக்கும் மேற்பட்ட அரங்குகளில் மேடையேற்றப்பட்டது. நந்தியின் சிருஷ்டியாக விளங்கிய இந்த நாடகம் அவரது நடிப்புடனும் நெறியாள்கையுடனும் சேர்ந்த புதிய வார்ப்பு. சமூகத்தின் பொட்டுக்கேடுகளைப் பிட்டுக்காட்டும் வகையில் புதிய உத்திகள் பாய்ச்சப்பட்ட மேடை நாடகம்.

நந்தி இருபத்தைந்துக்கும் மேற்பட்ட வானொலி நாடகங்களில் நடித்து வானொலி நேயர்களின் பாராட்டைப் பெற்றவர். அத்தோடு இலக்கியம், மருத்துவம் சம்பந்தமான இவரது வானொலிப் பேச்சுகள் இலங்கை வானொலியில் மட்டுமல்லாது லண்டன் பி. பி. ஸி, சிங்கப்பூர் வானொலி ஆகியவற்றிலும் தொடராக இடம்பெற்றன.

ஈழத்தில் திரைப்படத்துறையில் பரீட்சார்த்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோது நந்தியும் தனது பங்களிப்பைச் செய்யத் தவறவில்லை. 'பொன்மணி' என்ற திரைப்படத்தில், பல பிள்ளைகளின் தந்தையாக மத்தியதர மனிதனாய்த் தோன்றி நடித்தார்.

ஈழத்தின் நவீன தமிழ் இலக்கியத் துறையில் அடியெடுத்து வைத்த முதலாவது மருத்துவர், மலையகப் பிரதேசத்தினைத் தமிழ் நாவலுக்குக் களமாக்கிய முதல்வர், சுகாதார இலக்கியத்தின் முன்னோடி ஆகிய பெருமைகளைக்கொண்ட நந்தி 27. 05.2005 அன்று அமரரானார்.

## நூலறிமுகம்

# தமிழ் பேசும் உலகுக்கு பயன்மிக்க நூல்




'இறை விசுவாசம் என்பது வெறுமனே கோட்பாடு சார்ந்த சிந்தனை அல்ல. அது ஒரு மனிதனின் மன நிறைவான வாழ்வு. அந்த வாழ்வு எப்பொழுதும் இறை விசுவாசத்தின் பல்வேறு பரிமாணங்களை உள்வாங்கிய இடையறாத செயல் வாதத்துடன் பிணைந்தே இருக்கும். அதனை நிதர்சனப்படுத்த மனிதன் தனது எல்லா செயற்பாடுகளிலும் முயற்சி எடுப்பான். உயர்வும் கண்ணியமும் மிக்க அல்லாஹ்வின் திருப்தியை அதில் தேடுவான். நாம் உயர்ந்த இறைவனின் படைப்புக்கள். வீணாக அன்றி தெய்வீக இலக்கொன்றுக்காக படைக்கப்பட்டு இருக்கின்றோம்'.

இவ்வாறு இந்நூலுக்கு வழங்கியுள்ள பீடிகையில் முஹம்மத் அஹ்மத் தோதொன்ஜி குறிப்பிட்டிருக்கிறார். அதுதான் உண்மையும் கூட. மனிதன் வீணாகப் படைக்கப்படவில்லை. அவன் இலக்கொன்றுக்காகப் படைக்கப்பட்டிருக்கிறான். அதனை அல் குர்ஆனும் நபிமொழிகளும் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

அந்த வகையில் தனது பயண அனுபவங்களை நூலாசிரியர் இந்நூலில் பகிர்ந்து கொண்டிருக்கிறார். 1941இல் வட ஈராக்கிலுள்ள எர்பில் நகரில் பிறந்த நூலாசிரியர் பிரித்தானிய பர்மிங்காம் பல்கலைக்கழகத்தில் பெற்றோலிய கனிய வள பொறியியல் துறையில் இளமாணிப் பட்டத்தையும் அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலப் பல்கலைக்கழகத்தில் பெற்றோலிய அகழ்வுப் பொறியியலையும் சிறப்பு கற்கையாகவும் மேற்கொண்டு முதுமாணி மற்றும் கலாநிதி பட்டங்களையும் பெற்றுள்ளார். ஒரு சிந்தனையாளராகவும் உலகளாவிய அழைப்பு மற்றும் நலன்புரி பணிகளின் முன்னோடிகளில் ஒருவராகவும் திகழுகிறார் நூலாசிரியர்.

அறபு மொழியில் எழுதப்பட்டுள்ள இந்நூல், உள்ளடக்கியுள்ள அறிவு மற்றும் அனுபவப்பகிர்வு தமிழ் பேசும் உலகுக்கும் பயன் மிக்கதாக அமையக் கூடியது. இதனைக் கருத்தில் கொண்டு தர்கா நகர் புஷின் டெக்ஸ் உரிமையாளர் ஏ.ஜே.எம். ஸனீரின் ஏற்பாட்டில் கலாநிதி பி.எம்.எம். இர்பானினால் தமிழ் மொழிக்கு மொழி பெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது.

அதனை அரும்பு சஞ்சிகையின் ஆசிரியர் ஹாபிஸ் இஸ்ஸதீன் செம்மைப்படுத்தி சிறப்பான முறையில் அட்டைப் படத்தை வடிவமைத்துள்ளார். 'மிலேனியம் கிராபிக்ஸ்' உயர் தரத்தில் இந்நூலை அச்சிட்டுள்ளது. 12 அத்தியாயங்களைக் கொண்டதாக 410 பக்கங்களில் அமைந்துள்ள இந்நூல் எவரும் படித்து விளங்கக்கூடிய இலகு மொழி நடையைக் கொண்டுள்ளது.

இந்நூலின் இறுதியில் நூலாசிரியர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார், 'நம்மால் முடிந்த உழைப்பை வழங்குவோம். எஞ்சியதை தூய்மையும் உயர்வும் மிக்க இறைவனிடம் ஒப்படைத்து விடுவோம். இப்போதைய இந்த நொடி நம்மிடமிருந்து களவாடப்பட நாம் அனுமதிக்கக்கூடாது. இந்த நொடி என்பதால் நான் குறிப்பது நம் ஆத்மா அதன் படைப்பாளனிடம் மீளக் கொண்டு செல்லப்பட முன்னரான காலத் துண்டைத்தான். இது பொறுமை, விடாமுயற்சி, பிரச்சினைகளைத் தீர்த்தல் என்பவற்றின் பயணமாகும். வேட்கையும் ஏகத்துவமும் உள்ளுறையாக அமைந்த இறையன்பே அப்பயணத்தின் பாகங்களை இணைத்திருந்தது. இப்பயணத்தில் நான் எப்படி வாழ்ந்தேனோ, எப்படி புரிந்து கொண்டேனோ, அப்படியே நேர்மையுடன் சித்தரிப்பதற்கு இந்நூலில் முயன்றிருக்கிறேன். படிக்கும் அனைவருக்கும் இந்நூல் அகத் தூண்டலுக்கும் செயலூக்கத்துக்குமான ஊற்றாக அமைய வேண்டுமென இறைவனைப் பிரார்த்திக்கிறேன்' என்றுள்ளார்.

தமிழ் பேசும் உலகில் நீண்ட காலம் நிலவி வந்த இவ்வாறான நூலொன்றின் தேவையை நிறைவு செய்யக்கூடிய வகையில் வெளியாகியுள்ள இந்நூல் எந்த வயது மட்டத்தினருக்கும் பயன் அளிக்கக்கூடிய வகையில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**மர்லின் மரிக்கார்**

நூலின் பெயர்: கிழக்கிற்கும் மேற்கிற்கும் இடையில் அறுபது வருடங்கள்
நூலாசிரியர்: அஹ்மது தோதொன்ஜி
தமிழ் மொழிபெயரப்பு: கலாநிதி பீ.எம்.எம். இர்பான்
வெளியீடு: புஷின் டெக்ஸ் , 23/3, மார்க்கெட் வீதி, தர்காநகர் . 077 –1007007




# தேர்தலுக்கு தயாராகும் தமிழகக் கட்சிகள்

தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் 2026ஆம் ஆண்டு வரவிருப்பதால், தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் அனைத்தும் இப்போதே தயாராகி வருகின்றன. இந்தமுறை தேர்தலில் ஐந்து முனை போட்டிகள் இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தி.மு.க, அ.தி. மு.க, பா.ஜ.க ஆகிய மூன்று கட்சிகளின் தலைமையில் மூன்று கூட்டணியும், சீமானின் நாம் தமிழர், நடிகர் விஜய் தொடங்கியுள்ள வெற்றிக்கழகம் எனும் இரண்டு கட்சிகளும் தனித் தனியாக போட்டியிடலாம்

எப்போதும் இல்லாத வகையில் இந்தத் தேர்தல் அதிக எதிர்பார்ப்பையும் உண்டாக்கும், கடுமையான போட்டிகளும் இருக்கும், தற்போது ஆட்சியில் இருக்கும் தி.மு.க தலைமையிலான ஆட்சியே மீண்டும் அமையுமா? அல்லது ஆட்சி மாற்றம் வருமா? என்ற எதிர்பார்ப்பும் கூடியிருக்கிறது.



பல்வேறு நலத்திட்டங்கள் மூலம் தி.மு.க மக்களை தன்வயப்படுத்தி வைத்திருந்தாலும், மக்களவைத் தேர்தலில் 40க்கு 40 என்ற வெற்றி சட்டமன்றத் தேர்தலில் கிடைக்குமா? என்பது சந்தேகமே.

தி.மு.க தலைமையிலான கூட்டணிக்கு வெற்றி வாய்ப்பு கூடுதலாக இருக்கலாம் என்பதற்கு கடந்த மூன்றாண்டுகளில் முன்னெடுக்கப்பட்ட திட்டங்களைக் காரணமாகக் கூறலாம். முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம், புதுமைப்பெண் திட்டம், மகளிர் உரிமைத்தொகை திட்டம், போன்றவை மக்களிடம் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளன. குறிப்பாக, மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் மூலம் 1 கோடியே 46 இலட்சம் பெண்கள், மாதந்தோறும் ரூ 1000 பெறுகின்றனர், இது பெண்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இத்திட்டம் தேர்தலில் வாக்காளர்களுக்கு பணம் கொடுப்பது போன்றது என்ற குற்றச்சாட்டு இருந்தாலும், அரசின் திட்டமாக வழங்கப்படுவதாலும், பெண்களுக்கு பயனுள்ளதாகவும் இருப்பதாலும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதேபோல அரசு பேருந்துகளில் பெண்கள் இலவசமாக பயணிக்கலாம் என்ற திட்டமும் பெண்களுக்கு பயனுள்ளதாக இருக்கிறது.

இவ்வாறு பெண்களுக்கான பயனுள்ள திட்டங்களின் மூலம் பெண்களின் வாக்குகளை தி.மு.க தக்க வைத்திருக்கிறது. தேர்தலில் பெண்களே அதிகமாக வாக்களிக்க வருகிறார்கள் என்பதாலும் தி.மு.கவுக்கு வெற்றி வாய்ப்பு கூடுதலாக இருப்பதாக நம்பலாம்.

அ.தி.மு.கவில் உட்கட்சிப் பூசல் இன்னும் நீடித்து வருகிறது. கட்சியை மீட்டெடுத்து மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும் என்பதற்காக, கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பல்வேறு முயற்சிகள் எடுத்து விடுகிறார், ஆனால் கட்சியில் முக்கிய பொறுப்பில் இருப்பவர்களிடமும், கட்சித் தொண்டர்களிடமும் ஒருமித்த கருத்து இல்லை என்பதையும் அவதானிக்க வேண்டியுள்ளது. அ.தி. மு.கவிலிருந் து நீக்கப்பட்ட சசிகலாவையும், ஓ.பன்னீர் செல்வத்தையும் மீண்டும் கட்சியில் சேர்க்க வேண்டும் என் ற கோரிக்கையை, தொண்டர்கள் முன்வைத்தாலும் எடப்பாடி பழனிச்சாமி அதற்கு உடன்படாமல் இருந்து வருகிறார்.

அ.தி.மு.கவில் எடப்பாடி பழனிச்சாமி தன்னைமட்டுமே முன்னிலைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று நினைப்பதாலேயே அங்கே ஒருவிதமான சறுக்கல் இருப்பதாகத் தெரிகிறது. கட்சியில் தனித்துவமான ஆளுமை யாரும் இல்லை. இதுவும் கட்சியின் தொய்வுக்கு ஒரு காரணம் என்றும் சொல்லலாம், தி.மு.க., பா.ஜ.க கட்சிகளிடம் முரண்பாடு கொண்ட கட்சிகள் அ.தி.மு.க கூட்டணியில் இருந்தாலும் வெற்றிவாய்ப்பு குறைவாகவே இருக்கும்.

மக்களவைத் தேர்தலைப் போல அ.தி.மு.க படுதோல்வியை சந்திக்கும் என்றும் சொல்ல முடியாது. ஏனென்றால் அ.தி.மு.கவுக்கு என்று ஒரு சில தொகுதிகளில் இன்னும் வாக்குகள் குறையாமல் இருப்பதும், உண்மையே. சட்டமன்றத்தேர்தலில் அவர்களின் கூட்டணி சரியாக அமையுமானால், வெற்றியின் அருகில் எட்டிப் பார்க்கலாம், ஆனால் தி.மு.க கூட்டணி வலுவாக இருப்பதால் அ.தி.மு.க கூட்டணி வெற்றிக்காக நிறையப் போராட வேண்டும்.

பா.ஜ.கவுக்கு தமிழ்நாட்டில் எப்போதும் போல வெற்றி என்பது கேள்விக்குறிதான், இது அவர்களுக்கே தெரியும். என்றாலும் தமிழ்நாட்டில் பா.ஜ.க காலூன்ற வேண்டும் என்ற முயற்சியை கைவிட மாட்டார்கள். தமிழ்நாட்டில் பா.ஜ.கவுக்கு வாக்கு சதவிகிதம் பெரியளவில் இல்லை என்றாலும் இந்தியாவின் ஆட்சியதிகாரத்தில் அவர்கள் இருப்பதால் தமிழ்நாட்டிலும் பா.ஜ.க ஆட்சி அமைந்தால், இன்னும் கூடுதலான முன்னேற்றம் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் என்ற பரப்புரையில் அவர்கள் ஈடுபடலாம், ஆனால் இதை தமிழ்நாட்டு மக்கள் எந்தளவு நம்புவார்கள் என்பதே முந்தைய காலத்தின் வரலாறு. எனவே பா.ஜ.க தமிழக சட்டமன்ற தேர்தலில் ஒன்று அல்லது இரண்டு இடங்களில் வெற்றி பெறக்கூட நிறைய போராட வேண்டும்.

சீமான் தலைமையிலான நாம் தமிழர் கட்சி தேர்தலில் வெற்றி பெறும் வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. பிற கட்சிகளின் தவறுகளை சுட்டிக்காட்டி கடுமையாகச் சாடிவரும் சீமானின் பேச்சில் நியாயம் இருந்தாலும், அவரிடம் கொள்கைப் பிடிப்பு இல்லை. நிறைய முரண்பாடுகளுடன், அடிக்கடி கொள்கையை மாற்றிக்கொள்வதாலும் மக்கள் மத்தியில் அவருக்கான வரவேற்பு குறைவாகவே இருக்கிறது. சீமானின் வீரமான பேச்சால் ஈர்க்கப்பட்டு இளைஞர்கள் அவர் பின்னால் நின்றாலும், பொது மக்களின் ஆதரவு இல்லாமல் வெற்றி பெறுவது முடியாத காரியம்.

2026 தேர்தல் பரப்பான எதிர்பார்ப்பை உண்டாக்கும் கட்சியாக நடிகர் விஜயின் வெற்றிக் கழகம் கட்சி மக்கள் மத்தியிலும் ஊடகங்களிலும் பேசுபொருளாக இருக்கும். ஆனால் எந்தளவுவெற்றி வாய்ப்பு இருக்கும் என்று சொல்ல முடியாது. நடிகர் கட்சி தொடங்கி வெற்றி பெற்றது, எம்ஜிஆரைத் தவிர வேறுயாருமில்லை என்பது தான் வரலாறு. ரசிகர்களை மட்டுமே நம்பி வெற்றிபெற முடியாது. விஜயகாந்த் கட்சி தொடங்கிய போது, அடுத்த முதலமைச்சர் அவர் தான் என்ற எதிர்பார்ப்பு எழுந்தது, ஆனால், என்ன நடந்தது? இதுவரையில் அந்தக்கட்சியால் பெரிய அளவில் கால் ஊன்ற முடியவில்லை.

எம்ஜிஆர் வெற்றி பெற்றார் என்றால், அவருக்கு நடிகராக இருக்கும்போதே கட்சியில் பணியாற்றிய அனுபவம் இருந்தது. அவர் தி.மு.கவில் இருந்து வெளியேறி கட்சி தொடங்கிய போது, முக்கிய தலைவர்களும் அவருடன் வெளியேறி வந்து எம்ஜிஆரின் கட்சிக்கு வழிகாட்டியாக இருந்தனர். இந்த வழிகாட்டலும் எம்ஜிஆரின் சினிமா கவர்ச்சியும், அவருக்கு எளிதாக வெற்றியைத் தந்தது. அவருக்குப் பிறகு கட்சி தொடங்கிய நடிகர்கள் எஸ். எஸ். ஆர், சிவாஜி கணேசன், பாக்கியராஜ், டி. ராஜேந்தர், கார்த்திக், சரத்குமார், கருணாஸ், கமல்ஹாசன், போன்றவர்களால் அரசியலில் பெரியளவில் வெற்றிபெற முடியவில்லை.

இவர்கள் வரிசையில் தற்போது விஜய் வருவது எந்தளவுக்கு பலன் தரும் என்று உறுதியாக சொல்ல முடியாது. வெற்றிக்கழகம் கட்சியின் முதல் மாநாட்டை செப்டெம்பர் கடைசி வாரத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை விஜய் செய்துவருகிறார். இது அரசியலில் மாற்றத்தை கொண்டு வருமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம். தமிழ்நாட்டில் 2026 சட்டமன்றத் தேர்தலில் போட்டிகள் கடுமையாக இருந்தாலும் தி.மு.க. தலைமையிலான கூட்டணிக்கே மீண்டும் ஆட்சியமைக்கும் வாய்ப்பு அதிகமாக இருக்கிறது.




# எல்லாம் மாயை!



வா...
கனவுக்குள்
நிஜத்தைத்
தேடுவோம் !

நாம்
இணைந்தே
கானலுக்குள்
மீன்
பிடிப்போம் !

சிறு குழந்தையைப்
போல்
காகிதக்
கப்பல்
செய்து
அக்கரைசேர்வோம் !

நிரந்தரமாய்
வாழ்ந்திடவே,
மரணமில்லாத்
தேசம் சென்று
வாழ்ந்து
பார்ப்போம்
வா...........!

ஏரூர் கவிமாமணி
**எம்.ரி.எம்.அன்ஸார்**
ஏறாவூர்

# ஹைக்கூ / சென்ரியு

அடித்தக் கல்
முளைக்கத் தொடங்குகிறது
உதிர்ந்த விதை

மலர்வு உதிர்வு
எழுதி வைப்பதில்லை
பூவில் வண்டு

சிறகடிக்கும் வண்டு
எழுதாமல் வாசிக்கிறது
பூவிதழில் கவிதை

திணறும் ஈ
எதிர்பாராமல் உதிர்கிறது
பனித்துளி

வட்டமிடும் தேனீ
தேனெடுக்க விரும்பவில்லை
பறித்தப் பூ

சுட்டிக் குழந்தை
காலைத் தொட்டு
விளையாடுகிறது
கடல் அலை

புதிய பறவை
சிறகடிக்கப் பழகுகிறது
பழைய வானம்

**மெய்யன் நடராஜ்**

# தனிமை



அருமை மிக்க நண்பனே
கவிதை ஒன்று சொல்கிறேன்.
கவனமாக கேட்டிடுவாய்
அதில் படிப்பினையும் பெற்றிடுவாய்

நட்பு என்ற பெயரிலே
நஞ்சு வைத்த சிலர்
போலியாகப் பழகினர்.
பின்பு சாட்டுப் போக்கும் கூறினர்.

பசுமை நிறைந்திருந்த என் வாழ்வு
போலியான நட்புக்களால் ஏற்பட்டது
மனத் தாழ்வு

ஒரு நாள் பையில் பணமும் தீர்ந்தது
மறுநாள் சேர்ந்திருந்த நட்புகளால்
ஏற்பட்டது மனத்தாழ்வு

புரிதல் இல்லாத நண்பர்களால்
தனிமையே பரிசாக கிடைத்தது.
புரிய வைக்கவும் முடியாமல்
பிரிந்திருக்கவும் முடியாமல்
தலை குனிந்து நிற்கிறேன்
மிகப் பெரும் தனிமையில் தவிக்கிறேன்

**எம்.ஆர்.எம். பிலால்**
அல்ஹக்கானிய்யா அரபுக் கல்லூரி

# அறமில்லாப் புறம் !

எந்தவொரு விடயத்தை
எத்தி வைப்பதற்கும்
ஒருவரைமுறை இருக்கிறது !

அது "யாரால் யாருக்கு" என்பதிலும்
ஒரு வினாவிருக்கிறது !

"விடயம் ஒத்திசைவா
அல்லது வேற்றிசைவா" என்பது
எத்திவைப்பவரின் தன்மையிலும்
தரத்திலும் தங்கியிருக்கிறது !

"புறங்கூறல்" என்பதல்ல
அதன் பொருள் !

புறத்துக்கு அறம் கிடையாது !

"அவர்கள் புறங்கூறினர்" என்றால்
அவர்களைத் தள்ளி நகர்வதே
சார்ந்தோரின் உணர்வுக்குச்
சிறப்பளிக்கும் !

காவியக் கவியரசு
**எம்.எஸ்.அப்துல் ஹை**

# அன்பில் தொடங்கி...

இருளில் தொடங்கி
ஒளியில் முடியும்
நிலவின் பயணம்

கண்களில் தொடங்கி
கண்ணீரிலோ கைகோர்ப்பிலோ
முடியும் காதல்

முயற்சியில் தொடங்கி
வெற்றியில் முடியும்
முன்னேற்றத்தின் இரகசியம்

கருவறைக்கும்
கல்லறைக்கும் பொதுவில்
பூலோக சுழற்சி

அழுகையில் தொடங்கி
அழுகையில் முடியும்
மனித வாழ்வு

அன்பில் தொடங்கி
அன்பில் மட்டுமே முடியும்
அம்மாக்களின் கரிசனம்

**Dr ஜலீலா முஸம்மில்**
ஏறாவூர்



# வலிகள் பேசும் வாழ்க்கை...



எங்கு
பார்த்தாலும்
சுயநலம் நிறைந்து
காணப்படுகிறது இதோ
எனக்கு மட்டும்
சுயநலம் பிடித்து
ஆடுகிறேன் என்று
கூறிக் கடந்து
போகிறது இந்த
காலம்.

பரிதாபம் கொள்ள
யாருமில்லை பாவம்
அவன் ஏழை
எனக் கூறாது
பணம் நிறைந்து
கிடக்கிறதா என
பார்த்து போகிறார்கள்
நயவஞ்சகமா மானிட
நடிகர்கள்.

நமது சூழ்நிலைகளை
மற்றவர்கள் அறியாத
வரை அவனுக்கு
ஏமாற்றுக்காரனென பெயர்
சூட்டி பார்க்கும்
இந்த சமூகம்.

இருந்தும் எனக்கான
வழிகளை நானே
தயார் செய்து
தயக்கத்தோடு கடந்து
கொண்டிருக்கிறேன் என்னோடு
யாராவது வருவார்களா
என்று.

நாம் துன்புறுவதை
பார்த்து இன்புற்றுக் கிடக்கும்
சமூகத்திற்கு தெரியாது
பல இன்னல்கள்
மத்தியில் வாழ்ந்து
கொண்டிருக்கிறோம்
என்று.

**அஜ்மல்கான்**
பொத்துவில்

# மலை!

சூரியனை மறைக்க
மேகங்கள் முயலலாம்.
மேகங்கள் நிலையற்றது
காற்று வந்ததும்
கைகோர்த்துச் சென்று விடும்.



மனிதனின் கர்வம்
நொருங்கும் இடம்.

மரம்!
தன் வாய்ப்பை
நோக்கி மேலே வளரும்.
மனிதன் மரத்திடம்
கற்க வேண்டிய குணம்.

அருவி!
பிறப்பது மலையானாலும்
கரைவது கடல் தான்.
மனிதா! நீ
பிறப்பது மாளிகையானாலும்
கரைவது மண்ணில் தான்.

மனிதா! உன்
மன வலிமையை
துன்பமேகங்கள் மறைக்க முயலும்,

நம்பிக்கையும் தைரியமும்
உன்னிடம் கைக் கோர்த்ததும்
சூரியனைப் போல்
நீயும் பிரகாசிப்பாய்.

இயற்கை!
நாம் கற்றுக் கொள்ளக் கிடைத்த
பணம் வாங்காத
பள்ளிக் கூடம்.

**மீ. வேலு சுந்தர்**



# சாதனை நாயகனே!

சளைக்காத நடை நடந்து
சரித்திரம் படைத்த சாகசப் புதல்வனே!
ஷஹ்மி ஷஹித் எனும் என்
உடன் பிறவா சகோதரனே!
பேருவகை மண்ணின் வெற்றி வீரனே!
பேருவளை ஈன்ற புகழ் பூத்த மைந்தனே!
உன் வழிநிறைந்த கால்களுக்கு
ஒத்தடம் தர என் வரிகள் ஈடாகாது.
உன் வழிந்தோடிய வியர்வைகள் துடைக்க
என் வார்த்தைகள் போதாது!

கொட்டும் மழையிலும்
சுட்டுப் பொசுக்கிய வெயிலிலும்
இலட்சியத்தை நெஞ்சில் ஏந்தி
தாயகக் கொடியை உன் கையில் ஏந்தி
சளைக்காத உன் நடை கண்டேன்.
என் நெஞ்சம் நெகிழ்ந்தேன்
என் கண்கள் கசிந்தது
என் கரங்கள் உனக்காய் உயர்ந்தன.
வாட்டும் வெயிலிலும் வாடாத உன் புன்னகை
ஓட்ட நடையிலும் ஓயாத உன் நற்போதனை
உன் வேதனைகளை
எல்லாம் எரிபொருளாக்கி
சாமர்த்தியமாய் சகலரின் இதயத்திலும்
ஒளி விளக்காய் எரிந்து இடம் பிடித்தாய்.
உறங்காத இலட்சியங்களின்
அணையாத வெளிச்சம் நீ!
இவ் இரத்தின தீபத்தின்
இலட்சிய தீபம் நீ!

தாகிக்க தாகிக்க நடந்து
தாயகத்தையே சுற்றி வந்தாய்
தளராத உன் நடையால்
தடைகளை உடைத்து எறிந்தாய்
உன் வீர நடை இந்நாட்டின் புகழ் உரைத்தது.
அதன் தரம் உயர்த்தியது.
உன் எளிமை தான் உன்னை
வலிமையாக்கியது.

உன் பொறுமை தான் உனக்குப்
பெருமை சேர்த்தது.
தேசத்தை கட்டி எழுப்ப

உன் தேகத்தால் நீ உழைத்தாய்
அந்த தியாகத்தின் முன்னே!
உன் நெஞ்சுறுதியின் முன்னே!
எந்தச் செல்வமும் சொகுசும் துச்சம் தான்!
துச்சம் தான்!
நல்ல கனவுகளும் கற்பனைகளும் தான்
ஞானத்தின் ஊற்று.
அந்த கனவுகளை நனவாக்க உன்
வாழ்க்கைப் பாதையை நீமாற்று.
என்ற வாசகத்தின் முன்னுதாரணம் ஆனாய்!

உனது பாதத்தால் நீ செய்த சேவைக்குப்
பின்னே பேருவளை மண்ணின் பண்பாடு
அது எமக்குத் தென்பட்டது.
நீ செல்லும் வழி எல்லாம்
நீ சிந்தியது வியர்வை அல்ல.
ஊரோ, உலகமோ முன்னேற
ஒற்றுமையே வழி என்று உரம் தெளித்தாய்.
வேற்றுமைக்குள் ஒற்றுமை காண
நீ பயணித்தாய் பாத யாத்திரையால்
புனித பாதம் பதிந்த தேசத்தின்
பண்பாட்டை உலகுக்கே
உரத்து மொழிந்தாய்.

வாழ்க சௌமி! வளர்க சௌமி!
என்றென்றும் நலமும் வளமும் பெற்று
வெற்றி நாயகனாய்
பார் போற்ற உயர்க சௌமி!
வல்ல நாயன் துணை என்றும் உனக்கு!

**எம்.ஜே.எப். சஸ்னா**
ஆசிரியர் சம்சுதீன் வித்தியாலயம். பேருவளை

# கவிஞன்



ஒரு கவிஞன் தனக்காக மட்டும்
யோசிப்பதில்லை
சக இதயத்தின் குமுறல்களுக்கும்
நிறைவேறா ஆசைகளுக்கும்
தன் கவிதை தீனியாகிப் போகட்டும்
என்பதற்கும் சேர்த்து தான்
யோசிக்கிறான்..
சில சமயம் அவனுக்காகவும்
வாழ்ந்தும் போகிறான்
இருப்பினும் அவன் ஒருமையிலே
விமர்சிக்கப்படுகிறான்
ஒருமையிலே ஆரதிக்கப்படுகிறான்
ஒருமையில் சில நேரம் நசுக்கவும் படுகிறான்

**செ.இராமதனவந்தினி**

# தோற்றது நேற்றது



தோற்றுப்போன காதல்
நேற்றின் தாக்கம்
தருகிறது

இரவுகள் வருவது தூங்கிட தானே
விழிப்புகள் வரம்பு மீறிக்கிடப்பதோ
நினைவாலே தானே

காற்றை உள்வாங்கி இசை மீட்டும்
மரங்களைப்போல
நேற்றை உள்வாங்கி
நினைவை சுமக்கிறது உணர்வு

பிடிப்பட்டவை எல்லாம்
ஒத்திகை பார்க்க தான் போகிறது
விடுதலை இல்லாத
நினைவை தந்து
செல்ல போவதிலே
தான்
எல்லாமே தொக்கி நிற்கிறது ..

அன்றை மறக்க முனைந்தால்
இன்றில் அல்லவா
செழிப்புடன் மிளிர்கிறது ..
நினைவே தூரமாகிடு

நினைப்பவை நீங்காததால்
துரிதமாக்கு நினைப்பதை நிறுத்த

வருத்தி எடுக்கும் வெறுமை கிழிக்க
வழி தேடி சலித்துக் கொள்கிறது
செழிப்பாகிடும் தனிமை
தந்த வெறுமை

வெளுத்துக் கட்டி விடத்தான் பார்க்கிறது
ஒவ்வாமையாக்கி உறவுகளகற்றி
தனிப்பதில் ஜோதியாய்
தெரிகிறது தனிமை

தனிமைக்கெதற்கு தனித்துவம்
தெறித்தோட
தனிமைக்கு
கொடுக்காதீர் இனிமை

பொறுமையோடு கையாண்டு
பொறுத்திடுவீர்
பொறுமையாளன் தருவான்
தனித்துவமாய் வாய்ப்பொன்று

**கவித்தாரகை**
கற்பிட்டி

Senthooram
# செந்தூரம்

2024 செப்டெம்பர் 8 ஞாயிற்றுக்கிழமை



துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும்
பணிப்பாளருமான ஜே.எம் பாஸித்






# சிதைந்து வரும் டைட்டானிக்

அட்லாண்டிக் கடலின் ஆழத்தில் இருளில் கடந்த 100 ஆண்டுகளுக்கு மேலாக மூழ்கிக் கிடக்கும் டைட்டானிக் கப்பல் சிதைந்து வருவது அண்மையில் எடுக்கப்பட்ட படங்கள் தெளிவாகக் காட்டுகின்றன.

கப்பலை சுற்றி இருக்கும் கம்பி வேலியின் ஒரு பகுதியும் அகன்றிருக்கிறது. கப்பலின் முன்பகுதியில் இருக்கும் இந்த கம்பி வேலி தான் டைட்டானிக்கிற்கே பிரத்தியேகமானது. அந்த கப்பலை ஒட்டி எடுக்கப்பட்ட திரைப்படத்தில் ஜக் மற்றும் ரோஸ் என்ற கதாபாத்திரங்கள் இந்த கம்பி வேலியில் நின்றபடி இருக்கும் பாடலை யாரும் மறக்கவில்லை.



கப்பலின் இந்த கம்பி வேலியின் 14.7 நீளமான பகுதி கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அகன்றுவிட்டது என்று அதனை புதிதாகக் காணச்சென்ற ஆய்வாளர்கள் கூறுகிறார்கள்.







அதாவது 2022 ஆம் ஆண்டு இந்தக் கப்பலை படம்பிடித்து ஆவணப் படம் தயாரித்த மகெல்ல நிறுவனம் அங்கு சென்றபோது கூட இந்த கம்பி வேலி இருந்தது.

3,800 மீற்றர் ஆழத்தில் மூழ்கி இருக்கும் இந்தக் கப்பலில் இது மாத்திரம் காணாமல்போகவில்லை.

முன்னர் டைட்டானிக்கை காணச் சென்றபோது அதன் சில பகுதிகள் உடைந்து வருவது தெரிந்தது. 2019 இல் பார்த்தபோது கப்பலின் அதிகாரிகள் தங்குமிடப் பகுதி உடைந்து காணப்பட்டது. ஆனால் இப்போது அது மேலும் அழிவைச் சந்தித்திருக்கிறது.

டைட்டானிக் கப்பலில் ஆய்வுகளை நடத்தும் ஆர்.எம்.எஸ். டைட்டானிக் இன்க் என்ற நிறுவனம் கடந்த ஜூலை மற்றும் ஒகஸ்ட் மாதங்களில் கப்பலுக்கு சென்று படங்களை பிடித்து வந்திருக்கிறது. இதன்போது இரு தானியக்க வாகனங்களை அனுப்பி கப்பலின் சிதைவுகளை படம்பிடித்தது. அந்த வாகனங்கள் 24 மணி நேரத்தில் இரண்டு மில்லியனுக்கும் அதிகமான படங்களை பிடித்து வந்திருக்கிறது.



இதில் கப்பலில் புதிதாக பல இடங்களில் உடைந்து காணப்படுவதும் அதன் சிதைவுகள் கப்பலைச் சுற்றி விழுந்திருப்பதும் தெரிகிறது. இதில் நீண்ட காலமாகக் காணாமல்போய் இருந்த ஒரு வெண்கலச் சிலை மீண்டும் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

'டயானா ஒப் வெர்சைலஸ்' என்று அழைக்கப்பட்ட அந்த சிலை கடைசியாக 1986 ஆம் ஆண்டு அவதானிக்கப்பட்ட நிலையில் அது தொடக்கம் காணாமல்போயிருந்து. 60 சென்டிமீற்றர் உயரமான இந்த சிலை மணலுக்குள் புதையுண்ட நிலையில் இருப்பது படமெடுக்கப்பட்டிருக்கிறது.

இந்த சிலை கப்பலின் முதல் வகுப்பு பயணிகளுக்களின் காட்சிக்காக வைக்கப்பட்டிருந்தது.

'முதல் வகுப்பு ஓய்வறை மிக அழகானது என்பதோடு கப்பலில் அதிகம் அலங்கரிக்கப்பட்ட அறையாக இருந்தது. அந்த அறையின் நடுவே டயானா ஒப் வெர்சைலஸ் சிலை வைக்கப்பட்டிருந்தது' என்று விபரிக்கிறார் டைட்டானிக் ஆய்வாளர் ஜேம்ஸ் பென்கா.

'துரதிருஷ்டவசமாக டைட்டானிக் மூழ்கும்போது கப்பல் இரண்டாக உடைந்தது, அந்த ஓய்வறை கிழிக்கப்பட்டது. இதனால் டயானா வெளியே வீசப்பட்டு கப்பல்களின் குப்பைகள் குவிந்த பகுதியில் இருளுக்கு மத்தியில் காணாமல்போய்விட்டது' என்றும் அவர் கூறினார்.



பனிப்பாறை ஒன்றில் மோதியே டைட்டானிக் கப்பல் 1912 ஆம் ஆண்டு மூழ்கியது. 1500 பேர் வரை உயிரிழந்தார்கள். நுண்ணுயிரிகளால் கப்பலின் உலோகங்கள் சிதைந்து வருகின்றன.

ஆர்.எம். எஸ். டைட்டானிக் இன்க் நிறுவனமே டைட்டானிக் கப்பலின் காப்பு உரிமையை பெற்றிருக்கிறது. அதனால் மாத்திரமே கப்பலின் பாகங்களை அகற்ற சட்ட உரிமை உள்ளது.

கப்பலின் குப்பைகள் குவிந்திருக்கும் பகுதியில் இருந்து கடந்த பல ஆண்டுகளில் பல பொருட்களையும் அது மீட்டு வந்திருக்கிறது. அவ்வாறு எடுத்து வரப்பட்ட பொருட்கள் உலகின் பல பகுதிகளிலும் காட்சிக்கு வைக்கப்படும்.

அடுத்த ஆண்டு கப்பலில் இருந்து மேலும் பல பொருட்களை மீட்டு வர அந்த நிறுவனம் திட்டமிட்டிருக்கிறது. இதில் டயானா சிலையை மீட்டு வருவதில் அது அதிக ஆர்வம் காட்டுகிறது.

## நாஜிக்களும் அமெரிக்கப் படையும் ஒன்றிணைந்த கதை

பூகோள சஞ்சாரம்

பிர்தௌஸ்

இரண்டாம் உலகப் போரில் ஜெர்மனியின் நாஜிப் படையும், அமெரிக்கப் படையும் ஒன்றாக தோளோடு தோள் கொடுத்து சண்டைபோட்டது பெரிதாக யாருக்கும் தெரியாது. ஆனால் இந்த எதிரிப்படைகள் ஒன்றிணைந்து போர் புரிந்தது உண்மையிலும் உண்மை.

இரண்டாம் உலகப் போரின் கடைசி காலம், ஆஸ்திரியாவின் ஆல்ப்ஸில் இருக்கும் மத்திய காலத்து சிறிய கோட்டை ஒன்று ஜெர்மனியின் நாஜிப்படை வசமிருந்தது. அந்தக் கோட்டையை அவர்கள் சிறைச்சாலையாக மாற்றி இருந்தார்கள். அங்கு பிரபல பிரான்ஸ் டென்னிஸ் நட்சத்திரம் ஒருவர் மற்றும் பிரான்ஸ் இராணுவ அதிகாரி சார்ல்ஸ் டி கவுல்லேவின் சகோதரி போன்ற மிக முக்கியமானவர்கள் தான் சிறை வைக்கப்பட்டிருந்தார்கள்.

1945 மே 4 ஆம் திகதி அந்த சிறைக் கோட்டையில் இருந்து நாஜிப்படை தப்பிச் சென்றது. அங்கே இருந்த 14 சிறைக் கைதிகளையும் விட்டுவிட்டே தப்பிச் சென்றது. எவ்வாறாயினும் அந்தப் பகுதி தொடர்ந்து நாஜிக்களின் வசமே இருந்தது. கோட்டையை சுற்றி அந்தப் படை உலவித் திரிந்தது. இப்படி உலவிக் கொண்டிருந்த நாஜிக்களின் ஒரு படைப்பிரிவு கோட்டையில் இருக்கும் கைதிகளை கொன்றுவிட முடிவெடுத்து அந்தக் கோட்டையை நோக்கி முன்னேற ஆரம்பித்தது.



ஆனால் ஜெர்மனிப் படையின் முக்கிய அதிகாரி ஒருவரான ஜோசெக் கான்கிலுக்கு இது பிடிக்கவில்லை. ஏற்கனவே அவர் நாஜி சித்தாந்தத்தில் நம்பிக்கை இழந்திருந்தார். கடைசியில் அவர் அந்தக் கைதிகளை காப்பாற்றுவதற்கு அருகில் நிலைகொண்டிருந்த அமெரிக்கப் படையை உதவிக்கு அழைத்தார். அமெரிக்கப் படையும் உதவிக்கு வர ஜெர்மனி மற்றும் அமெரிக்கப் படைகள் ஒன்றாக நின்று சண்டை பிடித்தன.

சூடா டீ போட்டுத்தரவா?
வேண்டம்மா
ஏன்
டீ குடிச்சிட்டு படின்னு மிரட்டுவ அதனால் தான்!





அவன்: எங்க அம்மா அப்பவே சொல்லுச்சு.. நான் தான் கேக்கல..
இவன்: என்ன சொன்னாங்க
அவன்: நான் தான் கேக்கலையே!



ஆசிரியர்: ஏன் டா கொப்பில பால் கணக்கு, சாமான் கணக்கு எல்லாம் எழுதி வச்சிருக்க?
மாணவன்: நீங்க தான சார் வீட்டு கணக்கு எழுதிட்டு வரச் சொன் னீங்க!

நபர் 1: ஆப்பரேஷன் தியேட்டரில்ல இருந்து ஏன் ஓடி வந்தீங்க?
நபர் 2: ஆப்பரேஷன் ஸ்டார்ட் பண்ணுனதும், நர்ஸ் வந்து பதட்டப்படாதீங்க, உணர்ச்சி வசப்படாதீங்க, தைரியமா இருங்க, இது சின்ன ஆப்பரேஷன் தான்னு சொன்னாங்க
நபர் 1:அதுக்கு எதுக்கு ஓடி னீங்க, நல்லா தானே சொல் லிருக்காங்க..
நபர் 2: நர்ஸ் என்ட்ட சொல்லல, டாக்டர்ட சொல் லிட்டு இருந்தாங்க



மனைவி : தூக்கத்தில ஏன் சிரிக்கிறீங்க?
கணவன் : கனவுல அனுஷ்கா வந்தா
மனைவி : அப்புறம் ஏன் கத்தினீங்க
கணவன் : நடுவுல நீ வந்திட்ட





மனைவி: இந்த காக்கா கத்துறதா பாத்தா உங்க அம்மா வரப்போறது மாறி தெரியுது..
கணவர்: எப்புடி சொல்ற நீ..?
மனைவி: எவ்வளவு துரத்துனாலும் போகாமல் கத் திக்கிட்டே இருக்குல அதா வச்சு தான் சொல்ற.
கணவர்: ??????



சேர்: இந்த பீரியடு முழுக்க வெளியே நில்லு, அப்பதான் உனக்கு அறிவு வரும்
ஸ்டூடண்ட்: அப்பொ நீங்க பாடம் எடுத்தா, அறிவு வராதா சேர்

மனைவி: நா எல்லாம் காலேஜ் படிக்கும் போது மாறுவேட போட்டிக்காக அரக்கி வேஷம் போட் டதுக்கு 2nd பிரைஸ் கொடுத்தாங்க தெரியுமா..?
கணவர்: அட ஏண்டி சும்மா போயிருந்தாலே 1st பிரைஸ் கொடுத்து இருப்பாங்க..!





கணவன் : இன்னிக்கி என்ன டிபன்
மனைவி : ஒரு கப் விஷம்
கணவன் : ஓ கே டியர் இன் னிக்கி நான் வர லேட்டா கும் நீ சாப்பிட்டு தூங்கு



அடுத்த வீட்டுக்காரன்: காய்ச் சல்னு சொன்னாங்கன்னு பக்கத்து வீட்டுக்காரன நலம் விசாரிக்க போனேன்.. ஏன் ஒடம்பு இப்படி கொதிக்குதுன்னு கேட்டேன்...
அதுக்கு அவன் நெருப்புடா... கபாலிடா...ங்கறான்...
சாவுடான்னு சொல்லிட்டு வந்துட் டேன்...



அப்பா: ஏன் சார் என் பையனை அடிச்சீங்க?
ஆசிரியர்: ட்ராக்ல ரெண்டு தண்டவா ளம் இருக்கே எதுக் குன்னு கேட்டா.. ஒண்ணு ஊருக்கு போக, இன் னொன்னு திரும்பி வரன்னு சொல் றான்ங்க

மனைவி : என்னங்க நான் மாசமா இருக்கேன்...
கணவன் : உங்க அப்பா அம்மாகிட்ட சொன்னியா?
மனைவி : போங்க நான் காலேஜ் படிக்கும்போது சொன்னதுக்கே அடிச்சாங்க. இப்ப எப்படி சொல்றதாம்...!



# மனநலத்தின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது முக்கியம்

## இளம் தொழிலதிபர், உளவியல் விரிவுரையாளர் ஹகாஷ் கனகரத்னம்

**நேர்காணலின் ஆரம்பமாக உங்களைப்பற்றிய அறிமுகத்தை தாருங்கள்?**

எனது பெயர் ஹகாஷ் கனகரத்னம். எனக்கு க்ளினிக்கல் சைக்காலஜியில் பட்டப்படிப்பு மற்றும் டுபாயில் இருந்து ஸ்ட்ராட்டஜிக் மேலாண்மை துறையில் முதுநிலை பட்டம் கிடைத்துள்ளது. இதற்கு கூடுதலாக, எனக்கு ஆசிரியர் பயிற்சியில் மேம்பட்ட டிப்ளோமாவும் உள்ளது. நான்



ஒரு இளம் தொழிலதிபர், உளவியல் விரிவுரையாளர், மற்றும் பிரபலமான ஆசிரியர். என் பள்ளி படிப்பை மேற்கொள்வதற்காக நான் இந்தியாவின் தமிழ்நாட்டில் உள்ள வேலம்மாள் சர்வதேச பள்ளியிலும், RMK தங்கியிருக்கும் பள்ளியிலும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வை முடித்தேன். கல்வி மற்றும் தொழில் முனைவுத்திறன் ஆகிய இரண்டிலும் எனக்கு ஆழ்ந்த ஆர்வம் உள்ளது, மேலும் என பங்களிப்பை வலுப்படுத்துவதற்காக உழைக்கிறேன்.

**கல்வித் துறையில் நீங்கள் மிகுந்த ஈடுபாடு கொண்ட நிலையில் ஒரு சிறந்த தொழில் முனைவராகவும் இனங்காட்டியுள்ளீர்கள். இது தொடர்பாக கூறுங்கள்?**

உளவியல் துறையில் எனது பின்னணி மற்றும் கல்வி அனுபவங்களை மேம்படுத்தும் நோக்கத்தில் எனது தொழில்முனைவு ஆர்வம் உருவாகியது. இதன் மூலம் நான் கல்வித் துறையை கற்றல் முறையில் மட்டுமல்லாமல், அதன் அமைப்பு மற்றும் மூலோபாயம் மூலம் அணுக முடிகிறது. என் நிறுவனங்களான HK Knowledge Park (பிரைவெட்) லிமிடெட் மற்றும் அதன் துணை நிறுவனமான HK International College மூலம், தரமான கல்வி மற்றும் பயிற்சிகளை வழங்குவதே எனது



நோக்கம். மாணவர்களுக்கு அவர்களின் துறைகளில் வெற்றிபெறுவதற்கான திறன்கள் மற்றும் அறிவினை வழங்குவதில் உறுதியாக உள்ளேன். மேலும், உளவியல் விரிவுரையாளராக, மனநலத்தின் முக்கியத்துவம் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்துவது முக்கியமானது.

**இளம் வயதிலேயே நீங்கள் ஒரு தொழில் அதிபராக உங்களை ஈடுபடுத்தி நீங்கள் நிலைநாட்டிய சாதனைகள் மற்றும் வெற்றிகள் குறித்து பகிர்ந்து கொள்ளுங்கள்?**

எனது முக்கிய சாதனைகளில் ஒன்றாக *HK Knowledge Park* (பிரைவெட்) லிமிடெட் என்ற நிறுவனம் அமைவதே ஆகும், இது கல்வி மற்றும் அறிவை முன்னேற்றம் செய்ய உருவாக்கப்பட்டது. மேலும், *HK International College* எனும் துணை நிறுவனத்தையும் அமைத்து, நாங்கள் கல்வி மற்றும் பயிற்சிகளை பல்வேறு துறைகளில் விரிவுபடுத்துகிறோம். எனது கல்வி காலத்தில் நான் பட்டதாரி குழுவின் சிறந்த மாணவராக அறியப்பட்டேன், மேலும் சமூக சேவைக்கு ரோட்டரி கிளப் வழங்கிய சிறந்த மாணவர் விருதை பெற்றேன். இந்த அங்கீகாரங்கள் எனது அர்ப்பணிப்பின் சான்றாக இருந்து, எனது தொழில் முயற்சிகளில் மேலும் வெற்றியை நோக்கி முயற்சிக்க ஊக்கமளித்தன.

**இன்றைய இளைஞர்களை பொருத்தவரையில், அவர்கள் தொழில் முயற்சியாளராக உருவாவதற்கு நீங்கள் கூறக் கூடிய ஆலோசனைகள் எவை?**

இளம் தொழில் முனைவோருக்கு எனது ஆலோசனை அவர்களின் இலக்குகள் மீது உறுதியான வருணை மற்றும் ஆர்வம் கொண்டிருக்க வேண்டும். கல்வி என்பது அடிப்படை ஆகும், எனவே நீங்கள் தேர்ந்தெடுத்த துறையில் அறிவைப் பெற்றுக் கொள்ளுங்கள் தொழில் முயற்சி என்பது வெறும் லாபத்தைப் பற்றியது மட்டுமல்ல; அது மதிப்பை உருவாக்குவது மற்றும் மாற்றத்தை ஏற்படுத்துவது பற்றியது. உங்களின் சிந்தனைகளை புதுமையாக உருவாக்க ஊக்கமளிக்கும் மென்டர்கள் மற்றும் ஆதரவு வலையமைப்புடன் உங்களை சுற்றியிருக்கவும். கடைசியாக, அடிக்கடி கால் நிலை சரிவாக இருக்கவும், சமுதாயத்திற்கு திரும்ப கொடுக்கும் முக்கியத்துவத்தை மறக்காதீர்கள்.

**உங்களது இந்த முயற்சி, உழைப்பு பின்னணியில் உங்களுக்கு ஒத்தாசை வழங்கியவர்கள் பற்றி கூற முடியுமா?**

எனது பயணம் எனது குடும்பம், நண்பர்கள் மற்றும் எனது கனவிற்கு நம்பிக்கை கொண்ட, எனது கனவுகள் மற்றும் முயற்சிகளை ஊக்குவித்தவர்களின் தெளிவான ஆதரவால் வடிவமைக்கப்பட்டுள்ளது. அவர்கள் எனது திறமைகளில் வைத்திருந்த நம்பிக்கை கடினமான நேரங்களில் எனக்கு ஊக்கம் வழங்கியது. மேலும், எனது கல்வி மற்றும் தொழில்முறையில் என் ஆசிரியர்கள் மற்றும் சக ஊழியர்கள் அளித்த வழிகாட்டுதல் மகத்தானதாக இருந்தது. அவர்களது கருத்துகள் மற்றும் ஆலோசனைகள் எனது இலக்குகள் மற்றும் மூலோபாயங்களை நுட்பமாக்க உதவின.

**இலங்கையைப் பொருத்தவரையில் பெரும்பாலான இளைஞர்கள் தங்களது கல்வியை நிறைவு செய்த பின்னர், வெளிநாட்டு தொழில் வாய்ப்புகளை நாடிச் செல்கின்றனர். இவ்வாறானவர்கள் வெளிநாட்டு வாய்ப்பு ஆசையை விடுத்து இலங்கையிலேயே சுயதொழிலை முன்னெடுப்பது குறித்தான உங்களது கருத்தென்ன?**

வெளிநாட்டு வாய்ப்புகள் அனுபவம் மற்றும் அனுபவத்தை வழங்கினாலும், இலங்கையில் இளம் தொழில் முனைவோருக்கு அளவுக்கதிகமான வாய்ப்புகள் உள்ளன என்று நம்புகிறேன். இளம் நபர்கள் தங்களின் திறன்களை உள்ளூரில் முதலீடு செய்வதைத் தேர்ந்தெடுப்பதன் மூலம், நாட்டின் பொருளாதார வளர்ச்சியிலும் புதுமையிலும் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கலாம். இங்கு அவர்களின் தேவைகளையும் சவால்களையும் அணுகி, அவர்கள் சமூகங்களில் பொருத்தமான தாக்கத்தை உருவாக்கலாம். இளம் நபர்கள் இந்த சாத்தியங்களை ஆராய்ந்து, வெளிநாட்டு வாய்ப்புகளை விட உள்ளூர் பொருளாதாரத்தை உருவாக்குவதில் அவர்கள் எப்படி பங்களிக்க முடியும் என்பதைக் கருதி பார்க்க வேண்டும் என நான் ஊக்குவிக்கிறேன்.

**ஒரு மனநல நிபுணர் என்னென்ன சிறப்பு பயிற்சிகளை பெற்றிருக்க வேண்டும்?**

ஒரு மனநல நிபுணர் உளவியல் மற்றும் மனநலக் கொள்கைகளில் உறுதிப்படுத்தப்பட்ட அடித்தளத்தைக் கொண்டிருக்க வேண்டும். ஆலோசனைத் தொழில்நுட்பங்கள், சிகிச்சை முறைகள் மற்றும் மனநலக் குறைபாடுகளை மேம்படுத்துவதில் மேம்பட்ட பயிற்சி முக்கியம். குறிப்பிட்ட மக்களுடன் தொடர்புடைய சிறப்பு பயிற்சிகள், அதாவது குழந்தைகள், பாலினம் அல்லது ஆற்றல் மீள்நிலை உள்ளவர்கள் போன்றோருக்கு பயிற்சி பெறுவது பயனளிக்கக்கூடியதாக இருக்கும். மேலும், தொடர் தொழில்முறை மேம்பாடு வேலைக்குக் கூடுதல் பயிற்சிகள், சான்றிதழ்கள், மற்றும் சமீபத்திய ஆய்வுகள் மற்றும் மனநல நடைமுறைகளை மேம்படுத்துவது அவசியம்.



**ஒருவருடைய பிரச்சினைகள் குறைபாடுகளை அணுகும் முறையில் மனநல சிகிச்சைக்கும் உளவியல் ஆலோசனை (Counseling) இதற்கும் வேறுபாடுகள் உண்டா?**

ஆம், வேறுபாடுகள் உள்ளன. மனநல சிகிச்சை பெரும்பாலும் ஒரு மருத்துவ முறையில் முறைப்படுத்தல் கொண்டது. இதன் பொருள், நோயின் அடையாளம், மருந்தளி மற்றும் சிகிச்சை திட்டங்களை உருவாக்குவது. உளவியல் ஆலோசனை, ஆனால், பெரும்பாலும் நெருக்கமான மற்றும் திறம்பட உதவுவதற்கான அணுகுமுறையாக உள்ளது. நெருக்கமான முறையில் எதிர்கொள்ள ஒரு நபரின் பிரச்சினைகள், மனநிலை அடிப்படையில் ஆலோசனைகளை அளிக்கும். மனநல சிகிச்சை பெரும்பாலும் மருத்துவ மற்றும் மருத்துவமான நிபுணத்துவத்தை உட்படுத்தும், அதே சமயம் உளவியல் ஆலோசனை மிகுந்த திறம்பட செயல்படுவது.



**உங்களது உளவியலின் அடிப்படை ஆய்வு எதனுடன் சம்பந்தப்படுகிறது?**

எனது உளவியல் படிப்புகள் முதன்மையாக மனித நடத்தை, மன செயல்முறைகள் மற்றும் உளவியல் நல்வாழ்வை பாதிக்கும் பல்வேறு காரணிகளைப் புரிந்து கொள்வதில் கவனம் செலுத்துகின்றன. உளவியல் கொள்கைகளை கல்வி மற்றும் வணிகத்தில் பயன்படுத்துவதில் எனக்கு குறிப்பாக ஆர்வம் உள்ளது. இதன் மூலம், மனநலம் மற்றும் மூலோபாய மேலாண்மை ஆகியவை வெற்றிகரமாக படைப்பாற்றலை மேம்படுத்த உதவுகின்றன.

**உளவியலில் எந்தவகையான கல்வி நடத்தை அறிவியலுக்குள் அடங்குகிறது?**

உளவியல் என்பது சமூக அறிவியல் பிரிவிற்குட்பட்டது. அது அறிவியல் முறைகள் மற்றும் கோட்பாட்டு அணுகுமுறைகளை பொருத்துகிறது, மைண்ட், நடத்தை மற்றும் ஆளுமைகளின் தொடர்புகளை ஆராய்கிறது.

(07 பக்கம் பார்க்க)



✍ பாத்திமா நளீரா

# ஸ்கை விருது விழாவை சர்வதேச பரிமாணத்திற்கு கொண்டு செல்ல முக்கிய பங்காற்றுவது தினகரன்

**ஸ்கை தமிழ் விருது விழா 2024 பற்றிய ஸ்கை தமிழ் மற்றும் துணிந்தெழு சஞ்சிகையின் ஸ்தாபகரும் பணிப்பாளருமான ஜே.எம் பாஸித் உடனான நேர்காணல்!**

**கே: ஸ்கை தமிழ் விருது விழா என்றால் என்ன? அவ்வாறு உங்கள் ஊடகத்தின் ஊடாக விருது வழங்கப்பட வேண்டும் என்ற எண்ணம் எவ்வாறு தோன்றியது?**

கட்டாரில் இயங்கி வரும் முதன்மையான தமிழ் ஊடகமாக திகழும் எமது ஸ்கை தமிழ் ஊடகத்தின் 4 வருடப்பூர்த்தியை முன்னிட்டு இந்நிகழ்வு நடைபெற இருக்கிறது. ஸ்கை தமிழ் விருது விழா என்பது உலகளாவிய தமிழ் பேசும் மக்களின் திறமைகளை அவர்களின் சாதனைகளை கௌரவிக்கும் ஒரு முக்கிய நிகழ்வாகும். தமிழ் பேசும் மக்களின் ஆற்றல்களையும் அவர்களின் திறன்களையும் உலகறிய செய்யும் முயற்சியாக, நாங்கள் இந்த விருது விழாவை ஏற்பாடு செய்துள்ளோம். அவ்வாறு சமூகத்தில் மறைந்துள்ள ஆற்றல் மிகுந்தவர்களின் திறமைகளை வெளிக்கொணர்வதே இந்த விழாவின் முக்கிய நோக்கமாகும்.

**கே: இதற்கு முன்னர் இவ்வாறான விருது விழாவை ஏற்பாடு செய்து உள்ளீர்களா?**

ஆம், 2022ல் இலங்கையில் உள்ள குறிப்பிட்ட ஆளுமைகளை இனம் கண்டு துணிந்தெழு விருது வழங்கி வைத்தோம். அதன் பின்னர் கடந்த வருடம் இலங்கை மற்றும் இந்தியா கத்தார் வாழ் ஆளுமைகளை கௌரவிக்கும் முகமாக ஸ்கை தமிழ் விருது விழா கட்டாரில் மிக பிரம்மாண்டமாக நடைபெற்றதுடன் விருதுகள் வழங்கி வைக்கப்பட்டன.

இவ்விருது விழாவில் பிரதம அதிதியாக கட்டார் நாட்டுக்கான இலங்கை தூதுவர் மபாஸ் மொஹிதீன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டதுடன் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் ஆலோசகர் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரும், இலங்கை தேசிய பத்திரிகை தினகரன் வார மஞ்சரியின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவரும் இன்னும் பல தலைவர்களுக்கும் கலந்து சிறப்பித்தனர். கல்வி, கலை,விளையாட்டு, வணிகம், சமூக செயற்பாடு, ஊடகத்துறை, எழுத்து துறை மற்றும் இலக்கியத்துறை போன்ற துறைகளில் 15 இலங்கையர், 15 இந்தியர் என்ற அடிப்படையில் தெரிவு செய்து விருது வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

அதனைத் தொடர்ந்து இந்த வருடம் இலங்கையில் நடைபெற உள்ள விருது விழாவில் இலங்கை ஆளுமைகள் கௌரவிக்கப்பட உள்ளனர்.

**கே: முக்கியமாக எத்துறை சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கபட இருக்கிறது?**

இதில் இலக்கியம் மற்றும் கலாச்சாரம், கல்வி, வர்த்தகம், சமூக சேவை, விளையாட்டு, நவீன தொழில்நுட்பம், ஊடகம் உள்ளிட்ட பல துறைகளில் சிறந்து விளங்குபவர்களுக்கு விருதுகள் வழங்கப்பட உள்ளன. இதில் பத்து பிரிவில் 30க்கும் மேற்பட்டவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட இருக்கிறது. இதில் முக்கியமாக தேசிய ரீதியில் ஆளுமைகள் தெரிவு செய்யப்படுவார்கள்.




**கே: பல விதமான ஆற்றல்களுடன் பணியாற்றிக் கொண்டிருக்கும் பலருக்கு மத்தியில் பொருத்தமான நபர்களுக்கு விருது வழங்குவதற்கான முக்கிய நிபந்தனைகள் ஏதும் உண்டா?**

ஆம், சரியான நபர்களுக்கு விருதுகளை வழங்குவதற்காக நாங்கள் சில முக்கிய நிபந்தனைகளை வகுத்துள்ளோம்.



விருதுகள் வழங்கப்படும் நபர்களின் சாதனைகள், அவர்களது துறையில் ஆக்கபூர்வமாக செயற்பட்டு வந்ததற்கான ஆதார பூர்வமான தகவல்கள்,

இது அவர்களின் தொழில்முறைகள், சமூக சேவை, அல்லது துறையின் மேம்பாட்டிற்கு அவர்கள் செய்த பங்களிப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும். விருதுகள் வழங்கப்படும் நபர்கள், குறித்த துறையில் நீண்ட காலமாக தொடர்ந்து பங்களித்து வந்தவராக இருக்க வேண்டும்.

விருதுகளை வழங்குவதற்கான முடிவுகளை சிறந்த நிபுணர்களைக் கொண்ட தெரிவுக்குழுவினரால் (Jury Panel) பரிசீலிக்கப்பட்டு தெரிவு செய்யப்படுவர்கள்.

**கே: இலங்கையில் நடைபெறவிருக்கும் இவ் விருது விழா பற்றிய தெளிவான விடயங்களை சற்று வாசகர்களுக்காக விபரிக்க முடியுமா?**

இலங்கையில் நடைபெறவிருக்கும் ஸ்கை தமிழ் விருது விழா 2024, இலங்கை ஆளுமைகளை கௌரவிக்கும் ஒரு மேடை ஆகும். இந்த நிகழ்வில் தமிழ் சமூகத்தின் பெருமையை உயர்த்தும் விதமாக, பல துறைகளில் சிறந்து விளங்கும் ஆளுமைகளுக்கு விருதுகள் வழங்கப்படும். இது தமிழ் பேசக்கூடிய சமூகத்தின் ஒற்றுமையை வெளிப்படுத்தும் ஒரு முக்கிய நிகழ்வாகவும் இருக்கும்.

இவ்விழாவின் மற்றொரு சிறப்பம்சமாக, உலகின் பல பகுதிகளில் வாழும் தமிழர்கள், குறிப்பாக இந்தியா, கட்டார், கனடா, ஐரோப்பா போன்ற நாடுகளில் வாழும் தமிழர்கள் இந்த விழாவில் கலந்து கொள்ளவுள்ளனர்.

ஆகஸ்ட் 31ஆம் திகதி விண்ணப்பம் முடிவடைந்தது. இம்மாத இறுதிப் பகுதியில் இந்த விருது விழா நடைபெற உள்ளது.

நடைபெறும் இடம், திகதி என்பவை பின்னர் அறிவிக்கப்படும். எமது இணையதளம் மற்றும் சமூக வலைதளத்தை பின் தொடர்வதின் ஊடாக இது பற்றிய தகவல்களை பெற்றுக் கொள்ள முடியும்.

**கே: உங்களது எதிர்கால திட்டங்கள் பற்றி குறிப்பிடுங்கள்?**

இறைவனுடைய உதவியை கொண்டு அடுத்த வருடம் இந்தியா மற்றும் மலேசியா நாடுகளில் தமிழ் பேசும் ஆளுமைகளை கௌரவிக்கும் வகையில் நாங்கள் விருது விழாவினை ஏற்பாடு செய்ய திட்டமிட்டுள்ளோம்.

**கே: இறுதியாக, தினகரன் பத்திரிகை, வாரமஞ்சரியின் அனுசரணை பற்றி குறிப்பிடுங்கள்?**

தமிழ் சமூகத்தின் தலைசிறந்த ஊடகங்களில் ஒன்றாகிய தினகரன் பத்திரிகை பெருமை மிகு அனுசரணை நிறுவனமாக கை கொடுக்கின்றது.

தமிழ் மக்களிடம் விரைவாகவும் விரிவாகவும் செய்திகள் சென்றடைந்துள்ளன.

தினகரன் பத்திரிகை வழங்கும் இந்த ஊடக அனுசரணையானது விழாவை மேலும் சிறப்பிக்கவும், அதனை ஒரு சர்வதேச பரிமாணத்திற்கு கொண்டு செல்லவும் முக்கிய பங்காற்றும்.

நேர்காணல்:
*முனீரா அப்துல் வாஹித்*

# மவராசியே" அம்மா பாடல்







இந்த உலகில் தாயை விட சிறந்ததொரு சக்தி இல்லை.."
மவராசியே" அம்மா பாடல்
நம் நாட்டு கலைஞர்களின் தரமான படைப்பு..
பாடலாசிரியர் டினுஷா காயத்திரியின் கவிவரிகளிலும்,
ஒருங்கிணைப்பிலும் "மவராசியே" அம்மா பாடல்.
*Music Isaikabi Vimal*
*Lyrics & Coordination Dinusha Rajan*
*Singer Harikaran Sineka*
*Mixing & Mastering M.Baki*
*Dop & Edit Sk kobi*
*Title & Poster Designer SkSharu*
*Flute KT Vishnu*
*ProducerKulasekar Menalakshan*
*Son of Astalakshmi*
*Studio Isaikabi kalaiyagam*
பாடலை முழுமையாக பார்வையிட்ட
*https://youtu.be/Muev2X_xpOo*

# சவால்களை சாதூரியமாக முறியடித்து முன்னேறி வரும் குருத்தலாவை றிஸ்வானா

## ஊவா சமூக வானொலி அறிவிப்பாளர், சிரேஷ்ட நிகழ்ச்சி தயாரிப்பாளர்






**உங்களைப் பற்றிய சிறு அறிமுகம்**

நான் பாத்திமா றிஸ்வானா . ஊவா மாகாணத்தில் வெளிமடை தேர்தல் தொகுதியில் முஸ்லிம்கள் செறிந்து வாழ்கின்ற பகுதியான குருத்தலாவையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவள். என்னுடைய தந்தை மொஹமட் பாருக். அவர் மரணித்து ஏழு வருடங்களாகின்றன. எனது தாய் சுவைரா பீவி. எனக்கு திருமணமாகி இரண்டு ஆண் பிள்ளைகள் இருக்கின்றார்கள்.

நான் குருத்தலாவை முஸ்லிம் தேசிய கல்லூரியில் ஆரம்ப கல்வி தொடக்கம் உயர் கல்வி வரை கற்றேன். பின்னர் ஊடகத்துறையில் எனது பயணம் ஆரம்பமானது. இப்போது நான் ஊவா சமூக வானொலியில் சிரேஷ்ட நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும், அறிவிப்பாளராகவும், ஊடகக் கற்கை நெறியின் விரிவுரையாளராகவும் வெளிநாடுகளில் உள்ள பல காணொளி வலைத்தளங்களுக்கு செய்தி வாசிப்பாளராகவும் கடமையாற்றிக் கொண்டிருக்கின்றேன்.

**ஊடகப்பயணத்தில் எப்படி ஆர்வம் ஏற்பட்டது?**

பாடசாலைக் காலத்தில் அதிக வெட்கம், தயக்கம் , அச்சம் போன்றன என்னோடு இருந்தது. ஊடகத்தில் பயணிப்பதற்கான எண்ணம் எனக்கு இருந்ததில்லை. எனது கனவெல்லாம் கல்வியற் கல்லூரிக்கு செல்ல வேண்டுமென்பது தான். .தமிழ்ப்பாட ஆசிரியையாக வர வேண்டுமென்றுதான் ஆசைப்பட்டேன். பத்திரிகையில் வானொலி அறிவிப்பாளருக்கான விண்ணப்பம் கோரப்பட்டிருந்தது. அப்போது மஹத்தன்னை அல் இல்மா பாடசாலையின் அதிபராக இருந்த ஜே.எம். ஜெளபர் எனது மாமாதான் என்னை விண்ணப்பிக்குமாறு கூறினார். தயக்கத்தோடு விண்ணப்பித்தேன். ஒரு விபத்து போல தான் ஊடகத்துறைக்கு வந்தேன். ஆனால் இன்று எனக்கு பொருத்தமான ஒரு துறையை தெரிவு செய்ததையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**இப்பயணத்தின் உங்களது ஆரம்ப காலம் தற்போதைய நிலை பற்றிக் கூறுங்களேன்?**



ஊவா வானொலி ஆரம்பிக்கும் முன்னர் ஆட்சேர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில் முதலாவதாக ஐம்பது பேரை நேர்முகத்தேர்வில் தெரிவு செய்தார்கள். அந்த ஐம்பது பேரில் முப்பது பேர் சிங்கள மொழிக்கும் இருபது பேர் தமிழ் மொழிக்கும். ஐம்பது பேரில் இருபது பேரைத் தான் தெரிவு செய்வதாக கூறினார்கள். இந்த ஐம்பது பேரிற்கும் ஏழு நாட்கள் வதிவிட பயிற்சி கொடுக்கப்பட்டது. இதில் அரைமணித்தியால ஒலிப்பதிவு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றினை தயாரித்து வழங்க வேண்டும் என்று சொன்னார்கள் . இப்போதெல்லாம் நிகழ்ச்சி ஒன்றினை தயாரித்து வழங்குவது மிக இலகு. 2000ஆம் ஆண்டு காலப்பகுதியில் இது மிகவும் கடினம். அப்போது நாங்கள் எங்களுடைய வானொலிப் பெட்டியில் ஒலிப்பதிவு நாடா (கெசட் )இதை வைத்துத்தான் ஒலிப்பதிவு செய்ய வேண்டும். சிறு பிழை ஏற்பட்டாலும் மீண்டும் திருத்த முடியாது. ஆனால் இப்போதெல்லாம் அப்படியல்ல . நான் நிகழ்ச்சி ஒன்றினை தயாரித்து ஒலிப்பதிவு செய்து ஊவா மாகாண கல்வி அமைச்சிடம் ஒப்படைத்தேன் . அதன் பிறகு இருபது பேரில் ஏழு பேர் தெரிவு செய்யப்பட்டார்கள். அதில் நானும் தெரிவு செய்யப்பட்டேன். இது மிகவும் சந்தோசமாக இருந்தது. ஆரம்பத்தில் எங்களை சமூக தொடர்பாட்டாளர்கள் என்றுதான் தெரிவு செய்தார்கள். முதல் நியமனம் அவ்வாறுதான் கொடுக்கப்பட்டது. ஊவா சமூக வானொலி 2002ஆம் ஆண்டுதான் ஆரம்பிக்கப்பட்டது. இந்த வானொலி ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம் ஊவா மாகாணத்தில் கல்வி, சுகாதாரம் , வறுமை இந்த விடயங்களுக்காக குரலற்ற மக்களுக்காக குரல் கொடுக்கும் வானொலியாக ஊவா சமூக வானொலி ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறுதான் எனது ஊடகப்பயணம் ஆரம்பமனது.

**பல ஆளுமைகளை நேர்காணல் செய்துள்ளீர்கள்...இதன் அனுபவம் பற்றி கூறுங்களேன்.**

நான் ஊவா சமூக வானொலியில் நெஞ்சம் மறப்பதில்லை நிகழ்ச்சியில் பல ஆளுமைகளை, வளர்ந்து வருகின்றவர்களை, பல்துறை சாதனையாளர்களை நேர்காணல் செய்கின்றேன். வியாழக்கிழமை இரவு 9.15 மணிக்கு இந்த நிகழ்ச்சி ஒலிபரப்பாகி வருகின்றது.கிட்டத்தட்ட 500 க்கும் மேற்பட்டோரை நேர் கண்டிருக்கின்றேன். இந்த நேர்காணலில் நான் பெற்ற அனுபவத்தால் எனக்கு சிறந்த உயரிய விருதும் கிடைத்தது. நேர்காணல் மூலமாக புதிய நபர்கள் அறிமுகமாகியுள்ளார்கள். புதிதாக பல விடயங்களை அறிந்து கொண்டேன்.



நான் நேர்காணல் செய்த 50பேரை தெரிவு செய்து நூலுருவாக்கம் செய்ய வேண்டுமென்ற எண்ணமுள்ளது. நேரகாலமின்மையால் தாமதமாகின்றது. விரைவில் நூலுருப்படுத்த இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

**பெண்ணாக நீங்கள் இத்துறையில் சந்தித்த சவால்கள் இருப்பின் கூறமுடியுமா?**

ஊடகத்துறையில் பெண்கள் பயணிப்பதே சவால்தான். அந்த சவால்களை சாதூரியமாக முறியடித்து முன்னே செல்ல வேண்டும். முடியாது என்ற சொல்லை முடியும் என்றே முயற்சித்து வெற்றியடைந்திருக்கின்றேன். எனக்கு வரும் சவால்களை சந்தோசமாக ஏதிர் கொள்கிறேன். ஏனென்றால் சவால்கள் எங்களது பாதையில் வருகின்றதென்றால் சரியாக பயணித்துக் கொண்டிருக்கின்றோம் என்று அர்த்தம்.

**ஊடகப்பயணத்தில் உங்கள் அனுபவம் பற்றிக் கூறுங்கள்?**

யாருக்கும் கிடைக்காத பலரும் கனவோடு இருக்கும் துறை எனக்கு கிடைத்துள்ளது என பலரும் கூறினார்கள். எனது தந்தையும் தாயும் தான் என் வெற்றி தோல்விகளில் துணை நின்றவர்கள். எனக்கு பக்கபலமாக சகோதர சகோதரிகள், எனது பிள்ளைகளும் அத்தோடு ஊடகத்தில் பணியாற்றும் பலரும் என்னை ஊக்குவித்தார்கள் . எந்த கன வுமில்லாமல் இத்துறையில் வந்தேன். பல சுவர்ஸ்யமான நினைவுகளையும் விருதுகளையும் பெற்றுக் கொண்டேன். இது எனக்கு திருப்திகரமானதாக இருக்கிறது.**ஊடகத்துறை மட்டுமன்றி வேறு துறைகளிலும் ஈடுபாடு உண்டா?**

ஊடகத்துறையில் என்னுடைய சேவையை செய்வதைப் போலவே காணொளி வலைத்தளங்களுக்கும் குரல் கொடுப்பதால் எனக்கு நேர சிக்கல்கள் அதிகமாக உள்ளன. இதனால் வேறு துறைகளில் ஈடுபடுவதற்கான சந்தர்ப்பம் மிகக் குறைவு . சமூகத்திற்காக சமூக சேவைகள் செய்ய வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றது. சிறியளவில் உதவி செய்து வருகிறேன். அதற்கும் இந்த ஊடகத்துறைதான் கைகொடுக்கின்றது. கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களில்தான் அதிகமாக நான் அக்கறை செலுத்துகின்றேன். கல்விக்காக எங்களுடைய சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும் கல்வி மூலம்தான் சமூகத்தில் மாற்றங்கள் ஏற்படுத்த முடியும். எனவே கல்வி சம்பந்தப்பட்ட விடயங்களில் தனிப்பட்ட ரீதியில் நான் பல சேவைகள் செய்ய வேண்டும் என்ற எண்ணம் உள்ளது.

(தொடர் 07ஆம் பக்கம்)

**நேர்காணல் :**
**மஜினா உமறுலெவ்வை**
**மாவடிப்பள்ளி.**

# ஹாஷிம் உமர் பௌண்டேசனின் மடி கணனி வழங்கல்


















ஹாஷிம் உமர் பவுண்டேசனினால் மாணவர்களுக்கு மடி கணனி வழங்கும் வேலைத்திட்டத்தின் 04ஆம் கட்ட விநியோகம் (31) சனிக்கிழமை கொழும்பிலுள்ள ஹாஷிம் உமர் பவுண்டேசன் தலைமையகத்தில் இடம்பெற்றது. இதன்போது செல்வி கசினி உமாயா(பொரலஸ்கமுவ), பாத்திமா ஹிப்லா (புத்தளம்), எம்.அஜ்மல் (கொழும்பு), எம்.எல்.றிப்னாஸ் (நற்பிட்டிமுனை), எம்.ஏ.அஹமட் (கண்டி) ஆகியோர் புரவலர் ஹாஷிம் உமரிடமிருந்து மடி கணினிகளைப் பெற்றுக் கொண்டனர்.

## சவால்களை சாதுரியமாக... (6 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**அறிவிப்பாளராக வரவேண்டுமென்ற கனவோடு உள்ளவர்கள் எப்படியான திறமைகளை தங்களுக்குள் வளர்த்துக்கொள்ள வேண்டுமென நினைக்கின்றீர்கள்?**

அறிவிப்பாளராக வர வேண்டுமென்ற கனவு இப்போதெல்லாம் உடனே நிஜமாகின்றது. ஏனென்றால் எல்லோருமே இப்போது சமூக வலைத்தளங்களில் அறிவிப்பாளராகத்தான் இருக்கின்றார்கள் . ஆனால் அறிவிப்பாளர்கள் தங்களை வளர்த்துக் கொள்வதற்காக தங்களுக்கென்றொரு அடையாளத்தை பதித்துக் கொள்வதற்காக சில வழிமுறைகளை கையாள வேண்டும். இதில் மிக முக்கியமானது மொழி. இப்போது மொழியை நாம் முறையாக பேசுகின்றோமா என்பது கேள்விக்குறியாகத்தான் உள்ளது.

ஆரம்ப காலத்தில் இலங்கை தமிழுக்கென்றே ஒரு சிறப்பான தனி இடம் இருந்தது. இன்றும் தமிழ் நாட்டில் இலங்கை தமிழுக்கு சிறப்பான வரவேற்புள்ளது. அன்றைய இலங்கை வானொலி அறிவிப்பாளர்கள் நட்சத்திரங்களாக திகழ்ந்திருக்கின்றார்கள். ஆனால் இப்போது அரிது. காலமாற்றத்தின் காரணமாக மாற்றங்களும் தேவைப்படுகின்றது. அந்த மாற்றத்திற்கமைய பல ஊடகங்கள் இவ்வாறு செயற்படுகின்றது. எனவே இதனையும் குறை சொல்வதா..? என்ற கேள்வி இருக்கத்தான் செய்கிறது .

தங்களை வளர்த்துக் கொள்ள தாய்மொழியான தமிழை நேசிக்க வேண்டும்.தேடல் உள்ளவர்களாக நாம் மாற வேண்டும். இன்னுமொருவரை நாங்கள் பின்பற்ற கூடாது. தங்களுக்கென்று தனித்துவத்தை உருவாக்க வேண்டும். இல்லையென்றால் இன்னொருவரைப்போல..என்ற பெயர் நம்மோடு வந்து விடும்.

**இன்றைய சமூகம் ஊடகத்தில் பெண்கள் பயணிப்பதை எவ்வாறு பார்க்கின்றது ?**

பெண்களுக்கென்று சில தொழில்களை ஆரம்ப காலத்தில் வரையறுத்திருந்தார்கள். இத்துறையில் பயணிக்கும் பெண்கள் மீது ஒரு சிலரின் பார்வை வித்தியாசமாகத்தான் இருக்கின்றது. ஊடகத்துறையில் பயணிக்கும் பெண்கள் மீது சமூகத்தில் உள்ளவர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் . ஏனென்றால் ஊடகத்தில் பயணிக்கும் பெண்களும் இந்த சமூகத்திற்காகத்தான் நேரம் காலம் பாராது சேவை செய்கின்றார்கள்.இப்படி இருக்கையில்... இந்தப் பெண் இப்படி செய்கின்றாளே...!இப்படிப்பட்டவளாக இருப்பாளோ ...! என்று பெண்கள் மீது சிலர் அவநம்பிக்கை வைத்துள்ளனர். சமூகத்தின் பார்வை இப்படியாக இருக்கும் போது இத்துறையில் அவள் பயணிப்பதற்கு இது தடையாக அமைகின்றது.ஒரு சில பெண்கள் தவறாக நடப்பதால்தான் ஏனைய பெண்கள் மீதும் பழி வந்து விழுகிறது. எனவே சமூகத்தின் பார்வையில் மாற்றம் வர வேண்டும்.

இப்போது பெண்கள் குடும்பத்தினரின் ஒத்துழைப்புடன் தன்னம்பிக்கையோடு , துணிச்சலோடு பயணிக்கிறார்கள். சில பெண்கள் ஊடகத்துறையில் சத்தமே இல்லாமல் கடமையாற்றுகிறார்கள்.

**முன்னேற வேண்டுமென்ற ஆர்வத்தோடு வழிகாட்டலின்றி இருப்பவர்களுக்கு நீங்கள் கூற விரும்புவது?**

உதாரணத்திற்கு என்னையே நான் கூறலாம். ஊடகத்துறையில் நான் ஜெயித்து விட்டேன். சாதனை படைத்து விட்டேன் என்று குறிப்பிடவில்லை. ஆனால் என்னுடைய ஆரம்ப காலத்திலிருந்து இதுவரை ஊடகத்துறை சம்பந்தமாக எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல் எதுவித குடும்ப பிண்ணனியுமின்றி நான் இந்த நிலைக்கு வந்துள்ளேன் .

இன்று எல்லாமே மிக வேகமாக நமக்கு பக்கத்திலேயே கிடைக்கப்பெறுகிறது. இணையத்தளம் மிக இலகுவான வழிகளை அமைத்துக் கொடுத்திருக்கின்றது.

எனவே சந்தர்ப்பங்கள் நிறைய இருக்கின்றன. வாய்ப்புகள் வரட்டுமே என்று காத்திருக்க வேண்டாம். சந்தர்ப்பத்தை நாங்கள்தான் உருவாக்க வேண்டும் கிடைக்கும் சந்தர்ப்பங்களை முறையாக பயன்படுத்திக் கொள்ளுங்கள். வாய்ப்புக்களை தேடி வெளியில் சென்றால் பலர் ஆலோசனை சொல்வார்கள். தட்டிக் கொடுப்பார்கள் ஏனென்றால், எனது அனுபவத்தில் அப்படித்தான் நிகழ்ந்தது.

இப்போது இருக்கும் தொழில்நுட்ப வசதிகளை பயன்படுத்திக்கொண்டே நீங்கள் முன்னேறலாம்.

**விருதுகள் கிடைத்திருப்பின் கூறுங்களேன்...**

ஆம்... இத்துறையில் எனக்கு விருதுகளும் கிடைத்துள்ளது. குறிப்பிட்டு சொல்லக்கூடிய விருதில் மிக முக்கியமானது 2019இல் ஜனாதிபதி ஊடக விருது விழாவில் எனது நேர்காணல் நிகழ்ச்சிக்காக சிறந்த கல்வி நிகழ்ச்சிக்கு விருது கிடைக்கப்பெற்றது. இந்த விருது எனது ஊடகப் பயணத்தில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது.

யார் இந்த ரிஸ்வானா? என என்னை பற்றிய தேடல் ஆரம்பித்தது. எனக்கும் பல நல்ல வாய்ப்புக்கள் சர்வதேச மட்டத்திலும் கூட கிடைத்தது.

இந்தியாவில் மகளிர் தினத்தை முன்னிட்டு 2020ஆம் ஆண்டு "நந்தவனம் பவுண்டேசன்" நிறுவனம் சாதனைப்பெண்களை கௌரவித்து விருது வழங்கியது. இந்தியா சென்று நானும் விருதினை பெற்றுக்கொண்டேன்.

**இறுதியாக ஏதும் கூற விரும்புகின்றீர்களா?**

ஊடகத்துறை என்பது ஒரு சிறப்பான துறை. ஏனைய துறையை விட இந்தத்துறையில் கடமையாற்றும் போதுதான் எங்களை இணங்கண்டு கொள்ள முடியுமானதாகவும் சமூகத்திற்கு பாரிய சேவை செய்யக்கூடியதாகவும் இருக்கின்றது . எனவே ஊடகத்துறைக்கு பெண்களுடைய பங்களிப்பு மிக மிக அவசியமானதாக இருக்கின்றது. இத்துறையில் பெண்கள் பயணிப்பதென்றால் பலருடைய ஒத்துழைப்பும் ஆலோசனை வழிகாட்டலும் தேவைப்படுகிறது. அவற்றை இந்த சமூகம் கொடுக்க வேண்டும்.

ஊடகத்துறையில் தானும் பயணிக்க வேண்டும் என நினைக்கும் பெண்களுக்கு உண்மையிலேயே அவர்களுக்கன ஒத்துழைப்புக்களையும் வழிகாட்டல்களையும் வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன்.

வாய்ப்புக்கள் எங்களை வரவேற்க காத்திருக்கின்றன. எங்கு இருந்தால் என்ன நாங்கள் செய்கின்ற கடமைகள் தான் முக்கியம்.

இந்நேர்காணலில் என்னுடைய அனுபவங்கள் பலவற்றை பகிர்ந்து கொண்டேன்.

இந்த அனுபவங்கள் நிச்சயமாக ஒரு பெண்ணுக்கு பாடமாக அவர்களுடைய ஊடகத்துறை வாழ்க்கைக்கு வழிகாட்டியாக இருக்குமாக இருந்தால் அதைவிட சந்தோசம் வேறெதுவுமில்லை.இந்த நேர்காணல் பலருக்கும் ஊக்கமாக இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் பல விடயங்களை மனம் திறந்து என் அனுபவங்களை உங்களோடு பகிர்ந்து கொண்டேன்.

என்னை நேர்காணல் செய்த சகோதரி மஜினா உமறு லெவ்வைக்கும் தினகரன் பத்திரிகைக்கும் எனது மேலான நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

# 10 வருடங்களாக தொடரும் காதல்



இந்திய திரையுலகில் தனது இயற்கை அழகினாலும் நடிப்பாலும் ரசிகர்களின் மனதை வென்றவர் தான் நடிகை சாய் பல்லவி. இவர் செயற்கையான முகப்பூச்சுகள் இல்லாமலேயே இயற்கையான அழகில் மிளிரும் நடிகையாக காணப்படுகின்றார். இதன் காரணமாகவே அவர் நடிக்கும் திரைப்படங்கள் மிகக்ப் பெரிய கவனம் ஈர்த்து வருகின்றன.

மருத்துவராக வேண்டும் என்ற கனவோடு மருத்துவ பட்டம் பெற்ற சாய்பல்லவி, பிரேமம் படத்தின் மூலமாக சினிமாவில் நடிகையாக அறிமுகம் ஆனார். தொடர்ந்து தனது நடிப்பை வெளிப்படுத்தி வரும் இவர், தமிழில் மட்டும் இல்லாமல் மலையாளம், தெலுங்கு, கன்னடம் என பலமொழிகளிலும் நடித்து வருகின்றார்.

அத்துடன் மருத்துவராகவும் நடிகராகவும் காணப்படும் சாய்பல்லவி சிறந்த டான்ஸராகவும் காணப்படுகின்றார். தனுஷ் நடித்த மாரி 2 படத்தில் இவர் ரவுடி பேபி பாடலுக்கு ஆடிய ஆட்டம் தற்போது வரையில் பேமஸ் ஆகவே காணப்படுகின்றது.

தற்போது பாலிவூட் சினிமா உலகில் நுழைந்துள்ளார் சாய்பல்லவி. ரன்வீர் கபூர் ராமராக நடிக்கும் ராமாயண கதையில் நடிப்பதற்கு ஒப்பந்தம் ஆகியுள்ளார். இது தொடர்பான போஸ்டர்களும் சமீபத்தில் வெளியாகி ரசிகர்களுக்கு இன்ப அதிர்ச்சியை கொடுத்திருந்தது.

மேலும் தனக்கு கிடைக்கும் பட வாய்ப்புகளை கவனமாக தேர்ந்தெடுக்கும் சாய் பல்லவி அந்தப் படத்தின் கதை பிடிக்கவில்லை என்றால் நோ சொல்லவும் தயங்க மாட்டார். படத்தில் முத்தக் காட்சிகள் இருந்து விலகி இருக்கும் சாய் பல்லவி மகாபாரதம் தொடர்பில் அண்மையில் கூறிய கருத்துக்கள் வைரல் ஆகி வருகின்றன.

அதன்படி அவர் கூறுகையில், மகாபாரதம் மீது எனக்கு மிகுந்த மரியாதை உண்டு. அர்ஜுனனின் மகன் அபிமன்யுவை எனக்கு ரொம்ப பிடிக்கும். கடந்த பத்து வருடங்களாக அபிமன்யுவை பற்றி நிறைய படித்து அறிந்துள்ளேன். அதன் மூலம் அவரை கடந்த 10 ஆண்டுகளாக காதலித்து வருகின்றேன் என கூறியுள்ளார். அவரது காதல் வித்தியாசமானது என ரசிகர்கள் பலரும் தமது கருத்துக்களை தெரிவித்து வருகின்றார்கள்.



## மீண்டும் வில்லியாக திரிஷா

நடிகை திரிஷா தமிழ் மற்றும் தெலுங்கு சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வருபவர். இவருடைய அழகு மற்றும் நடிப்பு திறமை மூலம் பல ரசிகர்களை சம்பாதித்தார். நிறைய படங்களில் நடித்துள்ளார். இவரது நடிப்பில், விடாமுயற்சி, தக் லைஃப் போன்ற படங்கள் வரவிருக்கின்றன.

ஒருபக்கம் பல முன்னணி நடிகர்களுடன் ஜோடியாக நடித்த திரிஷா மறுபக்கம் ஹீரோயின் ஓரியண்ட்டட் படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். அந்த வகையில் சமீபத்தில், இவர் நடிப்பில் பிருந்தா என்ற வெப் சீரிஸ் வெளியாகி ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், திரிஷா நடிக்க போகும் அடுத்த படம் குறித்து அப்டேட் வெளியாகியுள்ளது.

அதன்படி, திரிஷா அனிமல் படத்தின் இயக்குனரான சந்தீப் ரெட்டி வங்காவுடன் இணைந்து நடிக்கப்போவதாகவும், அந்த படத்தில் அவர் வில்லி ரோலில் நடிக்க போவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. இதனை அறிந்த திரிஷாவின் ரசிகர்கள் சந்தீப் ரெட்டி இயக்கத்தில் அவர் நடிக்க வேண்டாம் என்றும், அது திரிஷாவின் சினிமா வாழ்க்கைக்கு பெரிய ரிஸ்க் எனவும் கமெண்ட் செய்து வருகின்றனர்.



## கூலி படத்தில் இணையும் கன்னட நடிகை!

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் நடிகர் ரஜினிகாந்த் நடிப்பில் உருவாகி வரும் திரைப்படம் 'கூலி' இந்த திரைப்படத்திற்கு அனிரூத் இசையமைக்கிறார். ஸ்ருதிஹாசன், சத்யராஜ் உள்ளிட்டோர் நடிக்கின்றனர். இதன் முதற்கட்ட படப்பிடிப்பு சென்னையில் முடிவடைந்தது. தொடர்ந்து தற்போது இரண்டாம் கட்ட படப்பிடிப்பு விஜயவாடா விசாகப்பட்டினம் ஆகிய ஊர்களில் நடைபெற்று வருகிறது. ரஜினியின் ஜெயிலர் படத்தில் சிறப்பு வேடத்தில் கன்னட நடிகர் சிவராஜ் குமார் நடித்திருந்தார். அதேப்போன்று இந்த படத்தில் கன்னட சினிமாவின் மற்றொரு பிரபல நடிகரான உபேந்தரா இணைந்துள்ளார். இவரை தொடர்ந்து தற்போது கன்னட நடிகை ரச்சிதா ராம் என்பவரும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளதாக தகவல் வெளியாகி இருக்கிறது.

## அசுரன் நாயகனுக்கு ஜோடியாகும் பிரபல நடிகை



யூடியூப்பில் ஆல்பம் பாடல்களின் மூலம் பிரபலமானவர் டிஜே அருணாசலம். கடந்த சில வருடங்களுக்கு முன்பு தனுஷின் 'அசுரன்' படத்தில் தனுஷூக்கு மகன் கதாபாத்திரத்தில் நடித்து இன்னும் மக்கள் மத்தியில் பிரபலமானார். இவருக்கென பல ரசிகர்கள் இருக்கிறார்கள்.இதன் பிறகு பத்து தல' படத்திலும் நடித்திருந்தார். இந்த நிலையில் தற்போது புதிதாக எஸ்கேப் ஆர்டிஸ்ட் மதன் தயாரிப்பில் அறிமுக இயக்குனர் அப்பாஸ் இயக்கவுள்ள படம் 'ப்ரீ லவ்' இதில் டிஜே அருணாசலத்திற்கு ஜோடியாக நடிகை மிருணாளி ரவி நடிக்கின்றார். இப்போது இதன் படப்பிடிப்பு நடைபெற்று வருகிறது. இது சோனி லிவ் ஒடிடி தளத்தில் வெளியாகும் என கூறப்படுகிறது.

# ஒரு படத்திற்கே 8 கோடி சம்பளம் வாங்கும் ராஸ்மிகாவின் சொத்துமதிப்பு



இந்தியத் திரைப்படநடிகைகளில் முன்னணியாக இருப்பவர் "ராஸ்மிகா மந்தனா" ஆவார். இவர் கன்னடம், தமிழ், தெலுங்கு என பல மொழித்திரைப் படங்களில் நடித்திருக்கிறார். இவர் நடித்த "கிரிக் பார்ட்டி' என்ற கன்னட திரைப்படத்தின் மூலம் சினிமாவில் புகழ் பெற்ற இவர்.

இந்திய அளவில் பிரபலமானது கீதா கோவிந்தம் திரைப்படத்தில் வரும் "இன்கம் காவலே' என்ற பாடலின் மூலம் ஆகும். இவர் இன்றய தினம் தனது பிறந்த தினத்தை கொண்டாடுகின்றார். முதல் படத்திலே பிரபலமான இவர் தமிழில் சுல்தான் மற்றும் வாரிசு போன்ற திரைப்படங்களில் நடித்துள்ளார். இவரது சொத்துமதிப்பு பற்றிய விபரம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி உள்ளது.

இவர் ஒவ்வொரு திரைப்படத்திற்கு ஒவ்வொரு எண்ணிக்கையில் சம்பளம் வாங்கி இருந்தாலும் இறுதியாக நடித்த அனிமல் திரைப்படத்திற்கு 8 கோடி ரூபாய் வரை சம்பளம் வாங்கி உள்ளார். இந்த நிலையில் இவரது சொத்து மதிப்பு விபரங்களை பார்க்கும் பொழுது 4500 லட்சங்கள் என தெரிய வந்துள்ளது. அதாவது 8 கோடி சம்பளம் வாங்கும் இவரது சொத்து மதிப்பு 45 கோடியாக காணப்படுகின்றது. பலரை இது ஆச்சரியபடுத்தி இருந்தாலும் தொடர்ந்து ரசிகர்களும் பிரபலங்களும் தங்களது பிறந்தநாள் வாழ்த்தை தெரிவித்து வருகின்றனர்.

# தமிழ் சினிமாவில் மலையாள அழகி!



மலையாள சினிமாவில் பிரபலமான நடிகை தான் சம்ரிதி தாரா. இவர் பல அழகிப் போட்டிகளில் கலந்து கொண்டு பல பட்டங்களை வென்றுள்ளார்.

இந்த நிலையில் தற்போது நடிகை சம்ரிதி தாரா 'மையல்' என்ற படத்தின் மூலம் தமிழ் சினிமாவில் முதன்முறையாக அறிமுகம் ஆக உள்ளார். தற்போது இது தொடர்பான அறிவிப்பு வெளியாகி ரசிகர்கள் மத்தியில் வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த படத்தினை ஏபிஜி ஏழுமலை இயக்கியுள்ளார். இப்படத்தில் நடிகை சம்ரிதி தாரா மைனா படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக நடித்த நடிகர் சேதுவிற்கு ஜோடியாக நடித்துள்ளார். இப்படம் சமூக பிரச்சனைகளை பற்றி எடுத்துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த படத்தில் பிஎல் தேனப்பன், சூப்பர் குட் சுப்பிரமணி ஆகியோர் முக்கிய கேரக்டரில் நடித்துள்ளார்கள். இந்த படத்தின் மொத்த படப்பிடிப்பு பணிகள் சுமார் 37 நாட்களில் நிறைவடைந்துள்ளதாக கூறப்படுகின்றது.

மேலும் இதன் படப்பிடிப்புகள் திருவண்ணாமலைக்கு அருகில் அமைந்துள்ள கல்வராயன் மலையின் அழகிய இடங்களிலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் படமாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# செய்தியாளர்களிடம் எகிறி சர்ச்சையில் சிக்கிய ஜீவா?

மலையாள திரை உலகில் ஹேமா கமிட்டி தொடர்பான அறிக்கை பெரும் புயலை கிளப்பியுள்ளது. அடுக்கடுக்கான நடிகைகளும் தங்களுக்கு ஏற்பட்ட கொடுமைகள் பற்றி புகார்களாக அளித்து வருகின்றார்கள்.

இந்த நிலையில், தேனியில் உள்ள ஒரு ஜவுளி கடை திறப்பு விழாவிற்கு வந்த நடிகர் ஜீவா அங்கு குறித்த கடையை திறந்து வைத்து விட்டு அங்குள்ள ரசிகர்களுடன் புகைப்படம் எடுத்துக் கொண்டார்.

இதன் போது அங்கு வந்த செய்தியாளர்கள் நடிகர் ஜீவாவிடம் கேரளாவில் பூதாகரமாகி உள்ள நடிகைகளின் புகார் தொடர்பாக கேள்வி எழுப்பினார்கள்.

அதற்கு 'அது எனக்கு தெரியாது' என்பதைப் போன்ற பதிலை ஜீவா சொல்லி உள்ளார்' எல்லா துறைகளிலுமே இது போன்ற புகார்கள் இருக்கின்றது என்றும் இதற்கு பதில் சொல்லவில்லை என்றும் பதில் அளித்துள்ளதாக கூறப்படுகிறது.ஆனாலும் நீங்கள் நடிகர் என்பதால் தான் ஹேமா கமிட்டி குறித்து ஒரு கேள்வியை கேட்டதாக செய்தியாளர் சொன்னதற்கு எழுந்து சென்ற ஜீவா மீண்டும் திரும்பி வந்து கேள்வி கேட்ட செய்தியாளர்களிடம் 'உனக்கு அறிவு இருக்கா?' என ஒருமையில் பேசியுள்ளார்.

இதன் காரணமாக அந்த இடத்தில் கொஞ்ச நேரம் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கிருந்தவர்கள் ஜீவாவை பத்திரமாக மீட்டு அங்கிருந்து அனுப்பி வைத்துள்ளார்கள். தற்போது இது தொடர்பான வீடியோக்கள் சமூக வலைத்தளத்தில் வைரல் ஆகி வருகின்றது.



# பழனி அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தினகரன் ராஜகனி வயலட்












அண்மையில் பழனியில் நடத்தப்பட்ட அனைத்துலக முத்தமிழ் முருகன் மாநாட்டில் தினகரன் ஆசிரியர் பீடத்தின் சார்பில் கலந்து கொண்ட திருமதி ராஜகனி வயலட் அங்கு நடைபெற்ற ஆய்வரங்கத்தில் கலந்து கொண்டு இலங்கையில் முருகன் வழிபாடு என்ற தொனிப் பொருளில் ஆய்வுக் கட்டுரையை சமர்ப்பித்து உரையாற்றினார். இவர் அண்மையில் ஆசிரியர் பீடத்தில் வைத்து பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படங்கள்.

படங்கள் : ருக்மல் கமகே




# நெருங்கிய உறவுகளுக்குள் விரிசல் ஏனோ!

**கொடுத்தலும் இன்சொலும் ஆற்றின் அடுக்கிய**
**சுற்றத்தால் சுற்றப் படும்.**

விளக்கம்:

கொடுப்பதும் இனிமையாய் பேசுவதும் நடைமுறைப் படுத்தினால் இருக்கும் உறவுகளுடன் மேலும் உறவுகள் வளரும்.

கூட்டுக் குடும்பமாய் வாழ்ந்தக் காலங்களில் கூட உறவுகளில் பிரச்சினைகள் குறைவாய் இருந்தது. இன்று தனிக்குடிதனம் இருந்தாலும் ஏதோ ஒரு நாள் உறவுகளுடன் விழாக்கள், பண்டிகைகளில் சேரும் போது ஒரு பிரச்சினையோடு முடிகிறது.

காரணம் உறவுகளுடன் ஒன்றித்துவாழ பலரும் விரும்புவதேயில்லை.

அன்றைய காதல் அதாவது செல்போன் வருகைக்கு முந்தைய காலத்தின் காதல் அழகானது. காதலை சொல்லவே ஆணுக்கும் பெண்ணுக்குமான தயக்கம், பயம் என நிறையக் காரணங்கள் இருக்கும்.

அதை சொல்ல வார்த்தை கோர்த்து கவியோ, கடிதமோ வடித்து அதை கொடுக்க தவித்து பார்வையாலேயே பல நாட்கள் ஓடும்.

சொல்லாதக் காதல் கதைகளும் உண்டு. பல தடைகளைத் தாண்டி சொல்லும் காதல் அதன் பிறகு ஒருவழியாக எப்படியோ வளர்ந்து அது கல்யாணத்தில் முடிந்தால் அவர்களுக்கு இடையிலான புரிதல் நிறைய இருக்கும். கூட்டுக் குடும்பமாக ஆட்கள் நிறைந்திருக்கும்.

அங்கே அந்த காதல் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் உடல் யாருக்கும் தெரியாமல் ஆயிரம் வார்த்தைகளை அபிநயம் புரிய இடையில் கண்களால் நடக்கும் உரையாடல். அதற்காக அந்த நாட்களில் தம்பதியருக்கு இடையிலோ குடும்ப உறவுகளுக்கு நடுவிலோ சண்டைகள் வராமல் இருந்தது இல்லை.

சண்டைகளைத் தாண்டிய அவர்களுக்குள் அன்புடன் அக்கறையுடன் பொறுப்பான புரிதல் இருந்தது.

**இன்று?**

பார்த்ததும் ஒரே நாளில் காதலைச் சொல்லி, இரண்டே நாட்களில் எல்லாம் பேசி முடித்து அவசர அவசரமாய் வாழ்க்கையில் நுழைய வாழ்க்கை என்பது அங்கே சலித்துவிடுகிறது. சீக்கிரத்தில் தொடங்கி சீக்கிரத்தில் முடிந்து



விடுகிறது. கணவன் மனைவி உறவு மட்டுமல்ல நட்பும் கூட அப்படித்தான்.பொதுவாகவே உறவுகளுக்குள்ளே விரிசல் வருகிறது. ஏன்! ஏன்!!!விரிசலை ஏற்படுத்த காரணங்கள் ஆயிரம் இருக்கிறது. எப்படி சுற்றி வளைத்துப் பார்த்தாலும் எல்லா காரணங்களும் பெரும்பாலும்கீழே சொல்லும் காரணங்களுக்குள் நிச்சயம் அடங்கிவிடும். அப்படியான காரணங்களை கொஞ்சம் அலசி ஆராய்வோம் பார்க்கலாம்.வாருங்கள்

**அகந்தை**

உறவுகளுக்குள் எட்டிப் பார்க்கக் கூடாத விஷயம் இந்த அகந்தை. அந்த அகந்தைக்குள்ளேயே எமது அகங்காரம் இருப்பதால் நிச்சயம் பிரச்சினை வரும். யாராவது ஒருவருக்கு உறவு வட்டத்தில் அது வந்துவிட்டால், நிம்மதியே கெட்டு விடும். நீ பெரியவனா? நான் பெரியவளா? என்று போட்டிப் போடும் விளையாட்டோ, அல்லது ஒரு போட்டியோ அல்ல குடும்ப வாழ்க்கை மற்றும் உறவுகள். ஒருவருக்கு தெரியாத விடயம் மற்றவருக்கு தெரிந்திருக்கலாம் புரிந்திருக்கலாம் எல்லோருக்கும் எல்லாமும் தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. அது முடியாத காரியமும் ஆகும்.

அதேப்போல் இன்னொரு பக்கம் வீடுகளில் மாமியாருக்கும் மருமகளுக்கும் கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் இந்த அகங்காரம் வந்துவிட்டால் குடும்பம் கோவிந்தா தான். அதனால் யார் பெரியவர் என்கிற அகந்தையைத் தவிர்த்து நம் குடும்பம், நம் உறவுகள் என்கிற உணர்வுடன் எல்லோரும் நடத்துக் கொள்ள உறவு சிறக்கும்.

**தாழ்வு மனப்பான்மை**

இந்த தாழ்வு மனப்பான்மையே பல பிரபல்யமானவர்களின் வாழ்வில் கூட விளையாடி உலகம் சிரிக்க வைத்துள்ளது.

கவிஞர் நடராஜா
தாமரைச் செல்வி...



# 'அக்ஷரா' இசை நிகழ்வுடன் கலைஞர்கள் ஒன்றுகூடல் நிகழ்வு





இலங்கை கலைஞர்கள் ஒன்றுகூடல் அக்ஷரா இசை நிகழ்வுடன் கடந்த ஞாயிற்றுக் கிழமை கொள்ளுப்பிட்டி சசகவா ஹோட்டலில் தினகரன் பத்திரிகை பிரதம ஆசிரியர் கலைக் காவலர் செந்தில் வேலவர் தலைமையில் மங்கல விளக்கேற்றவுடன் மங்கலகரமாக நடைபெற்றது. இதன் போது அண்மையில் காலமாகிய சிரேஷ்ட கலைஞர் ஆர் ராஜசேகரனுக்கு ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப் பட்டது. இந்நிகழ்வில் இலங்கை பொன்மனச் செம்மல் கலைத் தங்கம் கலாபூஷணம் எம்.எஸ். தாஜ்மஹான் பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதியாக அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவர் அதி வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்ணான்டோ கலந்து நிகழ்வினை அலங்கரித்தார். கவிஞர் கலைமணி பிரேம்ராஜ் ராஜ் முன்னிலையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், மக்கள் நலன் விரும்பி சம்மேளனத்தின் தவிசாளரும்,சமூக சேவையாளருமான அஸீஸ் லக்கான மற்றும் கலைஞர் தில்லைநாதன் ஆகியோர் சிறப்பதிதிகளாகக் கலந்து சிறப்பித்தனர். விஷேட அம்சமாக கலந்து கொண்ட நூறு கலைஞர்களில் மூன்று கலைஞர்கள் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டு அதிதிகளால் பெறுமதி வாய்ந்த GIFT வழங்கி கௌரவிக்கப் பட்டனர். இதன் போது தலைமையுரை நிகழ்த்திய தினகரன் தினகரன் வார மஞ்சரி பிரதம ஆசிரியர் அமரத்துவம் பெற்ற கலைஞர்களான ஸ்ரீதர் பிச்சையப்பா, மோகன்குமார், போன்ற பல கலைஞர்களையும் நினைவு கூர்ந்து கண் கலங்கினார்.









பிரதம அதிதி இலங்கை பொன்மனச் செம்மல் தனது உரையிலே தன் உயிர் நண்பர் அமரர் DIG அரசரட்ணம் அவர்களை நினைவு கூர்ந்து பேசியதோடு, சில கலைஞர்கள் அவர் வந்தால் நான் வரமாட்டேன், இவர் வந்தால் நான் வரமாட்டேன் என்று பிரிந்திருக்கின்றனர்.

அப்படி கலைஞர்கள் பிரிந்திருந்தால் கலையை வளர்க்க முடியாது. கலைஞர்கள் ஒன்று சேர்ந்தால்தான் கலையை வளர்க்க முடியும் என தனது ஆதங்கத்தைக் வெளிப்படுத்தினார்.

மற்றும் இது போன்ற இசை நிகழ்வுகளை நடாத்துவதற்கு இசைக் குழுவினர்களான கவிக் கமல், தேனும் பாலும் தலைவர் பாஸில் போன்றவர்கள் மிகவும் கஷ்டப்பட்டுத்தான் இந்நிகழ்வினை நடத்தி வருகின்றனர். இவர்களுக்கு கலையை விரும்பும் வசதி படைத்தவர்கள் தனவந்தர்கள் கைகொடுக்க வேண்டும்.

இது போன்ற கலை நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் எங்களது படங்களை இன, மத பேதமின்றி தினகரன், தினகரன் வார மஞ்சரியிலே பிரசுரித்து வெளிக்கொணரச் செய்து வரும் நண்பர் செந்தில் வேலவருக்கு தனது நன்றிகளைத் தெரிவித்தார்.

மற்றும் அக் ஷரா இசைக் குழுவினரின் இசையில் சக பாடகர்கள், காதுக்கு இனிமையாகவும், சிந்தனைக்கு விருந்தாகவும் பாடல்களை வழங்கி நிகழ்வினை அற்புதமாக நடாத்தி கலந்து கொண்டவர்கள் அனைவரையும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கச் செய்தனர். இறுதியாக இராப் போஷண உணவுடன் நிகழ்வு இனிதே நிறைவு பெற்றது கண் கொள்ளாக் காட்சியாக அமைந்தது.

**கவியமுதன் –**

தினகரன் வாரமஞ்சரி THINAKARAN VAARAMANJARI
தினகரன் THINAKARAN
SHANGKAVI FILMS

தினகரன், தினகரன் வாரமஞ்சரி, சங்கவி பிலிம்ஸ் நிறுவனம், அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் இணைந்து நடத்தும்ஆட்டம் பாட்டம் கொண்டாட்டம் நிறைந்த கலைஞர்களின் ஒன்றுகூடல் கொழும்பில் வெகு விரைவில் இந்த ஒன்றுகூடலில் கலந்து கொள்ள விரும்புகின்ற கலைஞர்கள் உடனடியாக வட்ஸ்அப் மூலம் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

தமிழ் கலைஞர்களின் ஒன்றுகூடல்

கொழும்பில் விரைவில்

தமிழ் கலைஞர்களின் ஒன்றுகூடல்

மேலதிக விபரங்களுக்கு வட்ஸ்அப்: 0773124543



# தமிழ் சினிமா பேசமறந்த பக்கம்; கமராவுக்கு பின்னாலிருந்து பணியாற்றிய பெண் கலைஞர்கள்...

அசையும் காட்சியுருக்களான திரைப்படங்களை இலங்கை மண்ணில் எம்மவர்களின் கைவண்ணத்தினால் ஒரு குறிப்பிட்ட கதையை மையமாக கொண்டு தயாரிக்கும் போது அது ஈழத்தின் தமிழ் முழுநீள திரைப்படம் எனப் பொருள்படுகின்றது. இலங்கையில் தமிழ் திரைப்படங்களை தயாரிக்க வேண்டும் என்ற எண்ணம் 1950க்கு முன்பே தோன்றிவிட்டது. இந்த எண்ணம் முதலில் மலையகத்திலேயே ஆரம்பமானது. 1951இல் இலங்கை கலைஞர்களான எம்.வீ ராமன், ஏ.அருணன், வீ.தங்கவேலு, ஹென்றி சந்திரவன்ச ஆகியோர் ஒன்றுகூடி இலங்கையில் தமிழ் திரைப்படம் ஒன்றை உருவாக்க வேண்டுமென்ற தீர்மானம் எடுத்துக் கொண்டார்கள். இவர்கள் ஒன்று சேர்ந்து “சினிமா கலா நிலையம்” என்ற மன்றத்தை உருவாக் இம்மன்றத்தின் ஆதரவில் தமிழ் திரைப்படமொன்றை தயாரிக்கும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. மன்றத்தில் அனைவரது கூட்டு முயற்சியோடு முதலில் கறுப்பு வெள்ளை நிறத்தில்; ‘சமுதாயம்’ எனும் முதல் திரைப்படம் தயாரிக்கும் முயற்சி ஆரம்பமாகியது. அதன் பின்னர் பாசநிலா, கலிகாலம், நான்கு லட்சம், யார் அவன், சுமதி எங்கே, ஒரு தலை காதல், இரு மலர்கள், இருவரும் பெண் போன்ற படங்கள் சிங்களத்திலிருந்து தமிழுக்கு மொழிப்பெயர்ப்பு செய்யப்பட்டன. இவ்வாறான பின்புலத்திலேயே இலங்கையில் தமிழ் மொழியிலான முழுநீளத் திரைப்படங்களின் தயாரிப்புக்கள் உதயமாகின.

இவ்வாறு தமிழ்மொழியிலான நீள்திரைப்படங்களின் உருவாக்கம் ஆரம்பமானபோதிலும் திரைப்படங்களின் காட்சிகளில் தோன்றியவர்களே மக்கள் மனதில் இடம்பிடித்துக்கொண்டார்கள். அவர்களைத்தவிர திரைப்படம் சார்ந்து புகழ்பெற்ற ஆண் கலைஞர்களுக்கு கிடைத்த வரவேற்பு போன்று பெண் கலைஞர்களுக்கும் கிடைத்திருக்கவில்லை. அதிலும் குறிப்பாக திரைக்குப் பின்னாலிருந்து பணியாற்றும் பெண் கலைஞர்களுக்கான அங்கீகாரத்தினை பெரும்பாலான இடங்களில் தர மறுத்த களமாகவே ஈழத்தின் தமிழ் சினிமா இருந்திருக்கிறது.



திரைக்குப் பின்னாலிருந்து பணியாற்றும் பெண் கலைஞர்கள் எனும்போது இயக்குனர்கள், தயாரிப்பாளர்கள், உதவி இயக்குனர்கள், ஆடை வடிவமைப்பாளர்கள், ஒப்பனைக் கலைஞர்கள், பாடலாசிரியர்கள், திரைக்கதை எழுத்தாளர்கள், பின்னணிக் குரல் வழங்குனர்கள், செம்மையாக்குனர்கள், தயாரிப்பு உதவியாளர்கள், பாடகிகள் என திரைப்படமொன்றின் அத்தனை தொகுதிகளிலும் பணியாற்றிய பெண் கலைஞர்கள் அடங்குகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் திரைப்படமொன்றின் உருவாக்கத்திற்கு இன்றியமையாத பணிகளையாற்றுகின்றனர்.

திரைப்படமொன்றினைத் தயாரிக்கும் பணிப்பொறுப்பானது முன் தயாரிப்பு பணி (PreProduction) தயாரிப்பு பணி (Production) பின் தயாரிப்பு பணி (Post production) என்றவாறு நோக்கப்படுகின்றது.

முன் தயாரிப்புப் பணிகள் என்பன ஒரு திரைப்படத்தை தயாரிப்பதற்கு முன் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளான திரைக்கதையை உருவாக்குதல், வசனம் அமைத்தல், திரைச்சுவடி அமைத்தல், திரைப்படக் கலைஞர்களை தெரிவுச் செய்தல், திரைக்கதை கலந்துரையாடல், திரைக் கதைக்கான வரைப்படங்களை உருவாக்குதல், கலைஞர்களுக்கான திகதிகளை ஒழுங்கமைத்தல், கலைஞர்களுக்கான ஆடை அணிகலன்களை நிர்ணயித்தல், தயாரிப்புக்கான செலவீனங்களை தயாரித்தல், ஒளிப்பதிவுக்கான இடங்களை தீர்மானித்தல் போன்ற அனைத்து பணிகளுமாகும். ஒருசில சந்தர்ப்பங்களில் திரைப்படத்துக்கான பாடல்களும் முன் தயாரிப்பின் போதே பதிவு செய்யப்படும். இந்தப் பணிப் பொறுப்புக்கள் யாவற்றையும் நேர்த்தியாக செய்து முடிப்பதற்காக தயாரிப்பு நிர்வாக உறுப்பினர்கள் அடங்கிய குழு தயாரிப்பு நிறுவனத்தின்கீழ் இயங்கும். இக்குழுவினர் குறிப்பிட்ட கால வரையறைக்குள் தமது பணிகளை பூர்த்தி செய்தால் மட்டுமே திரைப்படத்தின் தயாரிப்பு பணிகளை மேற்கொள்ளலாம்.

அதனையடுத்து மேற்கொள்ளப்படுவதே திரைப்பட தயாரிப்பு பணிகளாகும். திரைப்படத்தை ஒளிப்பதிவு செய்யும் கட்டத்திற்கு முன் நகர்த்துவதே இந்த தயாரிப்பு பணியாகும். தயாரிப்பு பணிகளுக்குள் மிகப் பிரதானமாக அமைவது ஒளிப்பதிவு, தயாரிப்புக்கான இடங்களை ஒழுங்கமைத்தல், ஒளிப்பதிவு கமராக்களை தயார்ப்படுத்தல், ஒளி கட்டுப்பாட்டுக்காக மின்குமிழ்களை ஒழுங்கமைத்தல், கலைஞர்களுக்கான ஆடை அணிகலன்களை விநியோகித்தல், சிகை அலங்கார வேலைகள், பணிபுரியும் கலைஞர்களுக்கான உணவு ஏற்பாடுகள் மற்றும் போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்தல், தயாரிப்புக்கான செலவீனங்களை கணக்கிடல், “ஸ்டண்ட்” வேலைப்பாடுகளை கண்காணித்தல், திரைப்படத் தயாரிப்புக்கான இட அமைவை ஏற்படுத்திக் கொள்ளல், மக்கள் தொடர்புகளை பின்பற்றல் போன்றவை தயாரிப்பு பணிகளுக்குள் மிகப் பிரதானமாக மேற்கொள்ளப்படுபவையாகும். திரைப்படத் தயாரிப்புப் பணிகள் முறையாக மேற்கொள்ளப்படாவிட்டால் மீள் ஒளிப்பதிவிற்கான தேவை ஏற்படக்கூடும்.

இவை அனைத்தின் இறுதியில் ஒரு திரைப்படம் முழுமையாக திரைமொழியை பெறுவது பின் தயாரிப்பின் போதாகும். காட்சிகளாக மட்டுமே ஒளிப்பதிவு செய்யப்பட்டவைகளை தொகுத்து முறையாக கதைக்கேற்ற பாணியில் திரைப்படமாக அமைக்கும் பணிகள் இந்த பின் தயாரிப்புப் பணிகளில் உள்ளடங்குகிறது. செம்மையாக்கம், பின்னணிக் குரல், பின்னணி இசை, பின்னணி சத்தங்களை சேர்த்தல், தலைப்பிடல், துணை வசனங்களை இடல், வர்ணப்பயன்பாடுகள், பாடல் வெளியீடு, சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்தல், ஊடக சந்திப்பை ஏற்படுத்தல், வெளியீடு செய்தல், போன்ற பணிகள் பின் தயாரிப்புப் பணிகளுக்குள் உள்ளடங்குகிறது. பின் தயாரிப்புப் பணிகள் செம்மையாக இடம்பெறாவிட்டால் திரைப்படம் பேச எத்தனிக்கும் விடயம் மாறுபடும். மேலும் அது தரும் சுவாரஸ்யம் இல்லாமல் போய்விடும். இவ்வாறான அத்தனை தயாரிப்புக் கட்டங்களிலும் ஈழ சினிமாவில் பெண் கலைஞர்கள் திரைக்குப் பின்னால் தமது உழைப்பினை வெளிப்படுத்தியுள்ளனர். குறிப்பாக யாழ்ப்பாணம், திருகோணமலை, கொழும்பு, மலையகம், மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலுள்ள பெண் கலைஞர்களாகிய லிப்சியா, ஈழவாணி, ஜெயவாணி ஜெகநாதன், யாழரசி, முருகையா சிவசஜந்தி, இபுர்சனா, நந்தகுமார் ரிலக்சனா, தர்சிப்பிரியா, சுவர்ணா, பார்வதி, கில்மிஷா, தரங்கனி ரகுநாதன், சங்கீர்த்தனா, மடோனா, சத்யப் பிரியா, நவயுகா குகராஜா, சூரிய கலா, சஞ்ஜீவனி இம்புல்தெனிய, கலாவதி சின்னச்சாமி, லீலா நாராயனண், சுமதி சிவமோகன், பவநீதா லோகநாதன், நிரன்ஜனி சன்முகராஜா, ரஜித்தா, தர்சினி, யோகராணி, சிபோ சிவகுமாரன் போன்ற பல பெண் கலைஞர்களின் கமராவுக்கு பின்னாலிருந்தான பங்களிப்பு தற்காலத்தில் ஈழத்தின் தமிழ் திரையுலகில் புதிய பரிணாமங்களை ஸ்தாபித்திருக்கிறது.



பெண் கலைஞர்கள் கமராவிற்கு பின்னாலிருந்து பணியாற்றுவதற்கான காரணங்கள்.

தங்களுடைய திறமை என்ன?, தாம்; எந்த பாதையை தெரிவு செய்ய வேண்டும்? என்ற குழப்பத்தில் இருந்த காலக்கட்டத்தில் கிடைத்த சிறந்த வாய்ப்பாக கலைஞர்கள் சினிமாத்துறையைக் கருதுகின்றனர். அதனால் இத்துறையில் விரும்பி பணியாற்றத் தலைப்படுகின்றனர். தம்மிடம் காணப்படுகின்ற மாறுபட்ட திறமைகளுக்கான அங்கீகாரம் கமெராவுக்கு பின்னாலுள்ள தொழிற்துறைகளிலேயே தங்கியிருப்பதனால் அத்துறைகளை தாம் தெரிவுசெய்து கொண்டு தம்மை அடையாளப்படுத்தும் நோக்கிலே இப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொள்ள முனைகின்றனர்.

பணியிடம் சார்ந்து எதிர்நோக்கும் சவால்கள்.

பெண் திரைப்பட இயக்குனரகளுக்கு திரைப்படம் ஒன்றை முழுமையாக தயாரித்து முடிப்பதற்கான பணத்தொகையை பெற்றுக் கொள்வதென்பது மிகப்பெரிய போராட்டமாக காணப்படுகின்றது. “பெண் தானே என்ன பெரிதாக செய்து விடுவாள்” என்ற எண்ணம் பொதுவாக பல தயாரிப்பாளர்கள் தரப்பிலும் பல கலைஞர்களின் மத்தியிலும் காணப்படுகிறது. மேலும் புதிதாக சினிமாத்துறைக்குள் வரும் கலைஞர்களுக்கு வழிகாட்டல் மற்றும் அவர்களை தான்சார்ந்த படைப்பாக்கத்திற்கு உள்வாங்குதல் மிகவும் சவாலான விடயமாக இருப்பதோடு, பெண் கலைஞர்களுக்கு சக கலைஞர்களிடமிருந்து கிடைக்கும் ஆதரவும் மிகவும் குறைந்து செல்கிறது. இவற்றோடு பெண்ணின் படைப்பு என்பதை வேடிக்கையாக பார்க்கும் வகையான பல சம்பாஷனைகள் காதுக்கு கேட்கும் வகையிலும் பேசப்பட்டுகின்றன.

உதவி இயக்குனர்களாக பணியாற்றும் பெண் கலைஞர்கள் திரைப்படத் தயாரிப்பில் நேர காலம் பார்த்து உழைப்பது மிகவும் கடினமாகும். ஒளிப்பதிவுக்கான நேரம் எப்போது சரியாக அமைகின்றதோ அப்போதே ஒளிப்பதிவுகளை மேற்கொள்ள வேண்டி நேரிடும் இதனால் திரைப்பட கலைஞர்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு படப்பிடிப்பு இடம்பெறும் இடங்களுக்கு வராமல் தாமதப்படுத்துவதால் சிகை அலங்காரம் சார்ந்த வேலைகளை சரியான நேரத்துக்குள் முடிப்பதற்கு சிரமமாகின்றது. இவ்வாறான சந்தர்ப்பங்களில் இயக்குனர் உள்ளிட்ட தயாரிப்பு நிர்வாகம் அது சார்ந்து பணியாற்றும் கலைஞர்களையும், அவர்களின் வேலைகளையும் குறை கூறுகின்றனர். இந்திய திரைப்படத்துறையில் ஒப்பனை அலங்கார வேலைகளுக்காக பயன்படுத்தப்படும் கேரவன் வகை வாகனங்கள் பெருமளவில் ஈழத்துத் தமிழ்த் திரைப்படத்துறையில் பயன்படுத்தப்படாதது சிகை அலங்கார கலைஞர்களுக்கும் மிகப் பெரிய சவாலாக காணப்படுகின்றது.

குடும்பம் சார்ந்து எதிர்கொள்ளும் சவால்கள்.சினிமாவை பொறுத்த மட்டில் நேரகாலம் பார்த்து உழைப்பது கடினம். இதனால் பகல் இரவு பாராமல் வெளியிடங்களுக்கு படப்பிடிப்புக்காக செல்ல வேண்டியேற்படுகின்றது. இதனால் கலைஞர்கள் தமது குடும்பத்தோடு செலவிடும் நேரம் குறைவடைகின்றது. இரவு நேரங்களில் தாமதமாகி வீடு திரும்பும் நாட்களில் பெற்றோருடனும் மனமுறிவு ஏற்படும் சம்பவங்கள் இடம் பெறுகின்றன. இவற்றோடு கணவன் மனைவிக்கிடையேயும் தேவையற்ற வாக்குவாதங்களும் இடம் பெறுகின்றது. இதனால் குடும்பத்துடனான புரிந்துணர்வு அற்றுப்போகும் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படுகின்றது. பல கலைஞர்கள் சினிமா துறையில் பணிபுரிவதால் ஒழுக்க ரீதியான சந்தேகங்களுக்கு முகம் கொடுத்த சந்தர்ப்பங்களும் நேர்ந்துள்ளன. பலரது குடும்பத்தினர் திரைப்படத்துறை சார்ந்து பணிபுரிய அனுமதியளித்தாலும் சமூகத்தினரிடையே எழும் கேள்விகளுக்கு பயந்து கலைஞர்களை குடும்பத்தினர் கட்டுப்படுத்தும் போக்கே இலங்கையில் அதிகம் காணப்படுகிறது.

கமராவிற்கு பின்னாலிருந்து பணியாற்றும் பெண்களுக்கான ஊதியம்.



கிரிஜா அருள்பிரகாசம்
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

# கடித இலக்கியம் கனதியானது



கடிதம் என்கிற தொடர்பாடல் கருவி பழமையானது மாத்திரமல்ல;கெழுதகமையானது;உயிர்ப்பு மிக்கது.

கடிதம் மனிதர்களை இணைக்கும் ஒரு மகத்தான சாதனமும் தான். கடந்த நூற்றாண்டில் கடிதம் என்கிற கருவி பெற்றிருந்த பெறுமானம் அடர்த்தியானது.

கடிதத்தில் அடங்கும் விடயம் அல்லது பொருள் அல்லது மொழி வேறிடத்தில் இருப்பதைக் காட்டிலும் கடிதத்தில் அமைந்துவிட்டால் அதன் உயிர்மை மேலுமாகிறது.

அதனால் தான் கடிதம் இலக்கிய வகையிலாகி'கடித இலக்காயமென' பெயர் பெறுகிறது.

இலக்கியகாரர் தமக்குள் பரிமாறிய செய்திகள்,கருத்துக்கள்,விவாதங்கள் என்பதெல்லாம் கடித இலக்கியத்தில் சேர்கின்றன.

அத்தகைய அலாதியானதும் அர்த்தம் மிக்கதும் புனைவு வகையாகக்கொள்ளத்தக்கதுமான கடிதங்களை நமது வரலாறு நெடுகிலும் காண்கிறோம்.

தமிழில் மட்டுமல்லாது பிறமொழிகளிலும் கடித இலக்கியங்கள் தோன்றின.

பல கடித இலக்கியங்கள் பனுவல்களாகி காலத்தால் நின்றிலங்குகின்றன.

செப்டம்பர் 01 உலக கடித தினம் ஆக அமைகிறது.இது கடிதவியலின் முக்கியத்தையும் சுட்டுகிறது. இந்நூற்றாண்டின் இத்தசாப்தத்தில் கையெழுத்தில் எழுதும் கடிதம் தேய்ந்துவிட்டது என்னுமளவு மின்எழுத்து யுகத்தின் ஆதிக்கம் மேலோங்கிவிட்டது.சொந்தக்கையெழுத்தில் கருத்துப் பரிமாறும் கடித உயிர்ப்புடன் உணர்வும் வற்றிவிட்டதெனலாம். எனவே 'கையால் கடிதம் எழுதும் முறைமையை' பாராட்டும் வகையில் இந்த நாள் நினைவு கொள்ளப்படுகிறது. ஆஸ்திரேலிய புகைப்படக் கலைஞர் ரிச்சர்ட் சிம்ப்கினால் பத்தாண்டுகளுக்கு முன் அறிமுகப்படுத்தப்பட்டது.

உண்மையில் சொந்தக்கையெழுத்தில் வரும் கடிதத்தை முகர்ந்து கொள்ளும் உறவுகளின் உணர்வின் உயிரோட்டம் இன்றைய இலத்திரனியல் கடிதங்களுக்குண்டா?

என்கிற கேள்வியே கையால் எழுதும் கடிதத்தின் மகத்துவத்தை உணர்த்தும்.

பேரறிஞர்கள்,எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள்,சாதனையாளர்களின் கையெழுத்தில் எத்தனையோ ஆயிரம் கடித இலக்கியங்கள் வரலாற்றிலும் உண்டு.

# இலங்கை முஸ்லிம்களின் நாட்டு நலன் பங்களிப்புக் குறித்த நூல்

இலங்கை தேசத்து முஸ்லிம்களின் வரலாறு மற்றும் தேசநலன் பங்களிப்புக் குறித்த எழுத்தின் அவசியம் தேவைப்படும் காலத்தில் வெளிவந்திருக்கிறது சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். அபுல் கலாம் எழுதிய 'நாட்டு நலனில் முஸ்லிம்களின் பங்களிப்புகள்'என்ற வரலாற்றாய்வு நூல் .

245 பக்கங்களில் 56 தலைப்புகளில் கட்டுரைகள் இயங்குகின்றன.

2024இல் முதல் பதிப்புக்காணும் இந்நூலில் மர்ஹூம் எஸ். எச்.எம்.ஜெமீல் அவர்கள் 2011 இல் எழுதிய அணிந்துரை நூலுக்கான ஏற்பாடு நிகழ்ந்த காலத்தைச் சுட்டுகிறது. இந்த முயற்சி குறித்து நூலாசிரியர் என்னுரையில் பேசியுள்ளார்.

திறனாய்வுரையை ஏ.பி.எம்இத்ரீஸ் 2012இல் எழுதியுள்ளார்.

'இலங்கை முஸ்லிம்கள் நாட்டைக் கூறு போடுகிறவர்களோ, குறுகிய இனவாதம் கொண்டவர்களோ அல்லர் என்பது இவ் ஆய்வின் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது.அவர்கள் வரலாறு நெடுகிலும் சகஜீவனப் பண்புடனேயே வாழ்ந்து வருகின்றனர் என்பதை நம்மவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இந்நூல் எடுத்துரைக்கிறது'என்கிறார் இத்ரீஸ்.



எம். எஸ். அபுல்கலாமின் சமூக நோக்குக் கொண்ட இப்பனுவல் எண்பதுகளில் அவர் வானொலியில் ஆற்றிய தொடருரைகளின் தொகுப்பெனலாம்.இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனத்தின் முன்னாள் முஸ்லிம்சேவைப் பணிப்பாளர் மர்ஹூம் வி.ஏ.அப்துல் கபூர் அவர்களின் ஆலோசனையில் 'நாட்டு நலனில் நம்மவரின் பங்களிப்பு' குறித்து நூலாசிரியர் ஆற்றிய ஒலி வடிவத்தின் பனுவல் வடிவம் இது.

பொருளடக்கத்தை நோக்கும் போது நூலாசிரியரின் நோக்கும், உள்ளடக்கத்தேடலும்,ஆய்வுணர்வும், அர்ப்பணிப்பும் பாத்திரமான நூலொன்றைத் தருவதற்கான நீண்ட முயற்சியையும் உணர முடிகிறது.



குறிப்பாக இலங்கை முஸ்லிகளின் தோற்றம்,வரலாறு, பணிகள், இடமைவைவு, அயலக முஸ்லிம்களின் பங்களிப்பு, முஸ்லிம்களின் பரவல், கலாசாரம், பண்பாடு, பழக்கவழக்கம் மற்றும் சட்டத்துறை, கல்வி, மருத்துவம், கைத்தொழில்,இரத்தினக்கல் வாணிபம், உள்ளக வெளியக வர்த்தகம், என சகல துறைகளையும் வரலாற்றுணர்வோடு அபுல்கலாம் ஆதாரபூர்வமாக எழுதுகிறார்.

இத்துறைகளில் பங்காற்றிய முஸ்லிம்கள் குறித்த தகவல்கள் முக்கியமானவை.

அந்நிய செல்வாக்கு காலத்தில் முஸ்லிம்கள் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் இப்பனுவலில் முக்கியம் பெறுகின்றன. இந்த வகையில் தேச விடுதலைக்கு முஸ்லிம்களின் பங்களிப்பு என்கிற 49வது கட்டுரையும் முக்கியமானது.

தொகுத்து நோக்கும் போது சிரேஷ்ட சட்டத்தரணி எம்.எம். அபுல் கலாமின்'நாட்டுநலனில் முஸ்லிம்களின் பங்களிப்பு'என்கின்ற இந்நூல் நாட்டுநலனைக் கருத்திலெடுத்து வெளியிடப்பட்டுள்ளமை அவதானிப்புக்குரியது. நூலாசிரியருக்கு வாழ்த்துக்கள் அவரது ஆய்வெழுத்துக்கள் தொடரவேண்டும். வாசகரின் வாசிப்பும் விரிய வேண்டும்.

# மாற்று மொழிக் கவிதை

கவிதை எளிமையான சொற்களில் அதிர்வான,ஆழமான பொருண்மையை உணர்வு கலந்து வெளிப்படுத்தும் போது அது தரும் அனுபவம் அல்லது ரசனையென்பது நம் இலக்கியப்புலத்தில் கனதியானது.

குறிப்பாக மாற்றுமொழிக் கவிதைகள் தமிழில் ஏற்படுத்தும் இத்தகைய தன்மைக்கு நீண்ட வரலாறிருக்கிறது.

பேராசிரியர் எம்.ஏ.நுஃமான் மொழிபெயர்க்கும் 'ஒப்புமை' எளிய சொற்களின் வலியபொருள் எனலாம்.



ஃபடி ஜவ்தா என்கிற பலஸ்தீன அமெரிக்க கவி. மொழிபெயர்ப்பாளர், மருத்துவர்.அலைந்துழல்வின் அனுபவிப்பாளர். நான்கு கவிதைத் தொகுப்புகள் வெளியிட்டிருக்கிறார் ஃபடி ஜவ்தா.

ஒப்புமை:

தன் மிதி வண்டியின்
கை பிடிகளுக்கிடையே
வலை பின்னியிருந்த
ஒரு சிலந்தியைக்
கலைக்க விரும்பவில்லை
என் மகள்
இரண்டு வாரங்கள்
காத்திருந்தாள்
அது தானாகவே
போய்விடும் வரை
அந்த வலையை நீ
பிய்த்திருந்தால்
அதற்குத் தெரிந்திருக்கும்
வீடு கட்டுவதற்கு உரிய இடம்
இது அல்ல என்று
நீயும் மிதிவண்டியில்
போயிருக்கலாம்
என்று நான் சொன்னேன்
அவளிடம்
இப்படித்தான் மற்றவர்கள்
அகதியாகிறார்கள்
இல்லையா
அன்றாள் அவள்

கவிதை மனமென்பது அவளது உள்ளுணர்வில் துடிக்கிறது. சிலந்தியின் இருப்பின் மீதான ஈர்ப்பு என்பது உயிர் வாழ்தலின் கரிசனையல்லவா.

தன்னிடத்தில் அதன் இருப்பை உறுதிப்படுத்தல் எத்தனை அவசியமானது. மனிதரிடத்தில் இன்றுகளில் இந்தப் பண்பைத் தேட வேண்டி உள்ளது.

கவிதையின் கடைசி வரி எழுப்பும் கேள்விஅழுத்தம் மிகுந்த உணர்வு பூர்வமானது;நெஞ்சில் ஓங்கியடிக்கிறது'இப்படித்தான் மற்றவர்கள் அகதியாகிறார்கள் இல்லையா

# ரூமியின் வைரங்கள்



(எ)
உள்ளும் வெளியும்

பரவசத்தில் இயங்கும் பிரபஞ்சம் நீ
துயரமே எனது
ஆனந்தப் பொழுது
போதை கொண்ட என் மனதின் சிதலங்களில் இருந்து முழுமையாய் ஒரு நகரம் எழுந்து வரும் போது
பூமியைப் போல் நான்
மௌனமாய் அசைவற்று இருக்கும் போது என் கர்ஜனையின் முழக்கம் கேட்கிறது
பிரபஞ்ச வெளி எங்கும்
ஒளியை விட்டுப் பிரியும் நிழலை யாரேனும் பார்த்ததுண்டா?
நின் தந்திரம் விற்றுப் பேரின்பம் வாங்கு
ஒவ்வொரு கணத்திலும் உள்ளது
இறைவனிடம் இருந்து சேதிகள் நூறு
இறைவா! என்னும்
ஒவ்வொரு கேவலுக்கும் பதில்
சொல்கிறான்
நூறு முறை;
இதோ இருக்கிறேன்
ஒரு. பயணியாய் வாராயோ
காதலின் பாதையில் நீ?
முதல் நிபந்தனை கேள்:
புழுதி போல் சாம்பல் போல்
பணிவு கொள்ள வேண்டும் நீ
வைகறை வெளிச்சமிடும் போது
மெழுகு வர்த்தியைஅணைத்து
விடு இதோ உன் கண்களில் வைகறை
இப்போது!
இன்னமும் அறியாமலோ நீ?
உன்னொளிதான்
உலகை வெளிச்சமாக்குகிறது
வார்த்தைகளை
நிறுத்தி வை இப்போது
நெஞ்சின் நடுவில்
ஜன்னலைத் திற
உள்ளும் வெளியும்
உயிர்கள் பறந்து திரியட்டும்
ஏமாற்றத்தின் பிறகு
பல நம்பிக்கைகள் செழிக்கின்றன
(வைரங்கள் சுடரும்

# கறுப்பு காந்தி
# நெல்சன் மண்டேலா



மண்டேலா தேசிய ஆபிரிக்க காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து அங்குள்ள புதிய நண்பர்களோடு இணைந்து அரசியலில் ஈடுபட்டான். அக்கட்சியிலும் பல கருத்து முரண்பாடுகள் இருந்து கொண்டே இருந்தன. கட்சியிலுள்ள மண்டேலாவின் நண்பர்கள் சிலரே கட்சியின் நடவடிக்கைகளில் தவறு இருப்பதாக சுட்டிக்காட்டி விமர்சனம் செய்தனர். தேசிய ஆபிரிக்க காங்கிரஸ் கட்சியின் தலைமையகம் கண்டிப்புடன் இயங்கவில்லை, இளைஞர்களை போதியளவு ஈர்க்கவில்லை, வெள்ளையர்களுடன் எம் கட்சித் தலைவர் அனுசரித்துப் போகிறார் என்று பல வாதங்களை சமர்ப்பித்து கட்சிக்குள்ளேயே முரண்பாடுகளை முன்வைத்து அதற்கு தீர்வாக இளைஞர் அணி என்ற ஒரு குழுவை உருவாக்கிக் கொண்டார்கள். மண்டேலாவும் இளைஞர் அணியில் இடம்பிடித்துக் கொண்டான்.

தேசிய ஆபிரிக்க காங்கிரஸ் கட்சியின் தலைவரான டாக்டர் ஜுமா செல்வாக்குள்ள ஒரு மருத்துவராகவும் பொறுப்புள்ள தலைவராகவும் செயற்பட்டார். பல பெரும்புள்ளிகளோடு அவருக்குத் தொடர்புகள் இருப்பதால் கட்சிக்கு சாதகமான பல விடயங்கள் இடம்பெற்ற போதிலும் சில பாதகமான விடயங்களும் தலைதூக்கின.

வெள்ளையர்களுடன் அவருக்கு நெருக்கமான உறவுகள் இருந்தமையால் கட்சிக்குள்ளேயே முரண்பாடுகள் ஏற்பட்டு இளைஞர் அணி என்ற ஓர் அணி முளைத்தெழுந்தது.

மண்டேலாவும் நண்பர்களும் சேர்ந்து தலைவர் ஜுமாவை சந்தித்து பிரச்சினையை பேசித் தீர்க்க முடிவெடுத்தனர். மண்டேலா லெம்பெடே, கோர், சிசுலு உட்பட கட்சியில் பல அங்கத்தவர்களும் கைகோர்த்தபடி இளைஞர் அணி என்ற பெயருடன் ஒரு குழுவாக சென்று ஜுமாவை சந்தித்து தங்களது வாதங்களை முன்வைத்தனர். ஜுமாவோ இவர்களது கோரிக்கைகளை நிராகரித்தார். அவரோ மண்டேலாவை முறைத்துப் பார்த்துவிட்டு 'கட்சியில் மழைக்கு முளைத்த காளான்களை போலுள்ளவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு ஆடாதீர்கள். இளைஞர் அணி என்ற குழு எம் கட்சிக்குள் தேவையில்லை. இப்போதிருக்கும் அணுகுமுறையே சரி. இதுவே நமக்கு சுதந்திரத்தை பெற்றுத்தரும். மூர்க்கத்தனமான இளைஞர்களை கொண்டு போராட்டம் நடத்துவதில் எனக்கு விருப்பமில்லை. இளைஞர் அணி , போராட்டம், புரட்சி என்று நம் கட்சி உறுப்பினர்கள் திசை மாறிவிட்டால் பிறகு கட்சியை மீட்கவே முடியாது. ஜாக்கிரதை' என்று ஒரு குட்டிப் பிரசங்கத்தையே நடாத்தி முடித்தார். அத்துடன் ஆபிரிக்கர்களால் ஒரு ஒழுங்கான அணியை உருவாக்க முடியாதென்றும் அந்தளவிற்கு அவர்கள் இன்னும் பக்குவப்படவில்லை என்றும் கிண்டலுடன் குறிப்பிட்டார்.

ஜுமாவின் கருத்தை கேட்ட மண்டேலாவுக்கு இரத்தம் கொதித்தது. ஜுமாவுக்கு தன்னை பிடிக்கவில்லை என்று தெரிந்து கொண்டான். தன் நண்பர்களுடன் சேர்ந்து இளைஞர் அணியை எவ்வளவு கஷ்டப்பட்டாவது உருவாக்கியே தீர வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு அலைந்தான். அதற்காக கட்சியில் பல முயற்சிகளை மேற்கொண்டான். இறுதியில் மண்டேலாவின் ஆசை நிறைவேறியது.

பல எதிர்ப்புகளுக்கும் இடைஞ்சல்களுக்கும் மத்தியில் இன்னல்களை மின்னலாக கடந்து 1944 ஆம் ஆண்டு இளைஞர் அணி உருவாக்கப்பட்டது. வில்லியம் கோனா அதன் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஹரே கோட்டையிலிருந்தும் பிரிட்டோரியாவிலிருந்தும் மாணவர்கள் திரண்டனர். லெம்பெடே மண்டேலா, கோர், சிசுலு அனைவரும் ஒன்று சேர்ந்து உணர்ச்சியூட்டும் பிரசாரங்களை மேற்கொண்டனர்.



கலாபூஷணம்
பரீட் இக்பால்...
யாழ்ப்பாணம்

# "நீல வான ஓடையில் நிலவையே நீந்த வைத்த நவரசக் கலைஞன்

கவிதையைக் கொடுத்து, இசையைத் தொடுத்து, நாடகம் நடித்து பல்வேறு உணர்வுகளை பரிதவித்த பொழுதெல்லாம் பசி நிறைந்த பிள்ளைக்கு பசி மறக்கச் செய்த தமிழ் முத்தமிழ். அந்த முத்தமிழை ரசிக்க பற்பல வழி இருந்தாலும் 90களின் முற்பகுதியில் பிறந்தவர்களுக்கு சினிமா கற்றுக்கொடுத்த பாடம் அதிகம்.

தேடல் இனிது, மனம் நாடியதைத் தேடி அடைதல் இனிதினும் இனிது, நாடியதை பிறரிடம் ரசித்து உணர்தலின் பொழுது அலாதி இன்பம்.

1966 ஆம் ஆண்டு சினிமாவில் ஒரு புதிய இசை ஒலித்தது. அதே வருடம், கன்னட சினிமாவும் அவரை வரவேற்று வாய்ப்பளித்தது. பின்பே, வந்தோரை வாழவைக்கும் சென்னை அவர் கரத்தைபிடித்து அரவணைத்தது. தன் முதல் பாடல், தமிழில் பாடி வெளிவராமலே சென்றது, இத்தனைக்கும் அது மெல்லிசை மன்னரின் இசையில்.

பின் ஒருவன் இசையில் மக்கள் திலகத்திற்கும் எம்.எஸ்.வி இசையில் காதல் மன்னனுக்கும் ஆக, "ஆயிரம் நிலவே வா" மற்றும் "இயற்கை என்னும் இளைய கன்னி" என்று 1969 ஆம் ஆண்டில் தமிழில் எஸ்.பி.பி சிப்பிக்குள் இருந்து முத்துக்களாய் வெளிவந்தார்.



கமலின் திரையுலக வரலாற்றிலேயே அவருக்கு தமிழில் பின்னணி குரல் கொடுத்தது இந்த இசைச்சிற்பி தான். ஆம், கமலுக்கு சிப்பிக்குள் முத்து படத்தில் எஸ்.பி.பி. பின்னணி குரலாக ஒலித்தார்.

"நிலவே என்னிடம் நெருங்காதே" என்ற பி.பி.ஸ்ரீனிவாஸ் பாடலை பாடி வாய்ப்பு கேட்டு பின் "ஆயிரம் நிலவே வா" என்று முதலில் ஒலித்து "வான் நிலா நிலா அல்ல" என்று மீண்டும் இணைந்து எம்எஸ்வி எஸ்பிபி கூட்டணி நிலவை வர்ணித்தது.

அந்த நிலவை எஸ்பிபியும் விடவில்லை, நிலவும் எஸ்பிபி ஐயும் விடவில்லை. பின் இணைந்த இளையராஜா கூட்டணி நிலவை வர்ணிக்க ஒன்றா, இரண்டா? பல பாடல்கள். "இளைய நிலா" பொழிகிறதே என்று இசைஞானியின் இசையோடு முதலில் இசைந்து, பின் "நீல வான ஓடையில் நீந்துகின்ற வெண்ணிலா" என நிலவையும் சொக்க வைத்து, பின் "வா வெண்ணிலா என வெண்ணிலவையும் மயக்கி காதல் நிலவையும் மயக்கினார். "நிலாவே வா" என மனைவியின் பிரிவையும், மன தடிசலனமும் வெளிப்படுத்தினார். "நிலவு தூங்கும் நேரம்" நிலவையும் நம் மனதையும் எத்தனை கவலைகள் இருந்தாலும் ஒரு முற்றுப்புள்ளி வைக்க வழிவகுத்தது. இப்படி நிலவுக்கும் தனக்கும் இருந்த பந்தத்தை "வண்ணம் கொண்ட வெண்ணிலவே" என்ற பாடலின் மூலம் அவர் இசையில் அழகாக இசைந்தார் இசைத்தார்.'பாடும் நிலா' எஸ்.பி.பி

இசைஞானி இந்த நவரச கலைஞனை பற்பல சூழலுக்கு பாடவைத்தார். ஒன்றா, இரண்டா? எஸ்பிபி ஆறு தேசிய விருது வாங்கினார், அதில் சாகர சங்கமம், ருத்ர வீணை போன்ற இளையராஜாவின் இசையில் அமைந்த படங்கள் உண்டு. ஒரு கலைஞனுக்கு இத்தனை முகங்களா என வியக்கும் வண்ணம் இருக்கும் எஸ் பி பி யின் பல பாடல்கள்.

"காதலின் தீபமொன்று", காதல் அறியாதவன், புரியாதவன் கூட ஒருமுறை பாடலைக் கேட்டால் காதலின் மயக்கம் கொண்டு, காதல் தீபம் ஒன்று நெஞ்சிலே ஏற்றி வைப்பான். அத்தகைய தன்மை கொண்டது. எண்பதுகளில் வாழ்ந்த காதல் மன்னர்களின் தேசிய கீதமாக கூட இருந்திருக்கும் இந்தப் பாடல். கொடுத்த மயக்கத்திலும், காதல் தந்த இணக்கத்திலும் தன்னை மறந்தவர் பலர்.

காதல் இனிது, காதலில் தேடல் இனிது. கடைசி வரை காதலில் ஒரு தேடலை நம் மனதில் கொண்டு செல்லும் பாடல், "கூட்டத்திலே கோவில் புறா யாரை இங்கு தேடுதம்மா" என்ற பாடல். மைக் மோகனின் வளர்ச்சியில், மிக முக்கியமான மூவரில், எஸ்பிபி ஒருவர் மற்ற இருவர் இளையராஜா, சுரேந்தர்.

மிக எதார்த்த வரிகள் கொண்டு பாடல் செல்கையில், மிக அழகான கர்நாடக சங்கீதத்தை நுழைத்திடுவர் இந்த கூட்டணி. கேட்கையிலே ஏதோ கோவில் திருவிழாவில் இசை கச்சேரி கேட்பது போல இருக்கும்.

கிராமத்துக்கு அப்படி ஒரு பாடல், புதுமையான நகரத்திற்கு எப்படி கொடுப்பது? இருக்கிறது, இந்த கூட்டணியின் இசைச்சரம், "சங்கீத மேகம்". இன்று அவர் நம்மோடு இல்லாவிட்டாலும், அப்பாடலின் வரிகள் போல, "இந்த தேகம் மறைந்தாலும் இசையாய் மலர்வேன்"என்று மலர்ந்து கொண்டிருக்கிறது. உண்மையில் இவர் மூச்சும் இவர் பாட்டும் அணையா விளக்கு தான். எஸ்.பி.பி



எஸ்.கனேசன் ஆச்சாரி சதீஷ்...
கம்பளை

# பஹ்ரைனில் தமிழக சமூக ஆர்வலருக்கு விருது











பஹ்ரைன் நாட்டில் சிறப்புற சமூக சேவையாற்றி வரும் லைட்ஸ் ஆஃப் கைன்ட்னெஸ் நிறுவனர் சையத் ஹனீஃப் பஹ்ரைன் மீடியா சிட்டியின் (பிஎம்சி) உயர் விருது பெற்றார்.

பஹ்ரைன் மீடியா சிட்டியின் (பிஎம்சி) உயர் விருதினை தன்னலமற்ற சமூக சேவைக்காக, செகயாவில் உள்ள பி எம் சி ஆடிட்டோரியத்தில் நடந்த ஓணம் பண்டிகையின் ஒரு மாத கால தொடர் நிகழ்ச்சிகளின் துவக்க விழாவில் பெற்றுக்கொண்டார். பஹ்ரைன் நாடாளுமன்ற நீண்ட கால உறுப்பினர் டாக்டர். ஹசன் ஈத் புஹம்மாஸ், பிரான்சிஸ் கைதாரத் சிஎம்டிஐஎம்ஏசி குரூப் ஆஃப் கம்பெனிகள், இந்திய பள்ளி நிர்வாகக் குழுவின் தலைவர் பினு மன்னில், மற்றும் விருது பெற்றவர்கள், ஓணம் பண்டிகை விழாக் குழுவினர் மற்றும் அழைப்பாளர்களும் இந்த பிரமாண்டமான நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## மனநலத்தின் முக்கியத்துவம்... (4 ஆம் பக்கத் தொடர்ச்சி)

**11. மனநல நிபுணரை சந்திக்க வரும் ஒருவர் மனதளவில் எந்த கட்டத்தில் இருக்கிறார் என்பதை பார்த்தவுடன் அறிந்திட முடியுமா? உங்களது உரையாடலை எந்த வகையில் அமைத்துக் கொள்வீர்கள்?**

மனநல நிபுணர் ஒருவரை சந்திக்கும் போது, முதல் பார்வையில் அவர்களுடைய மனநிலையை முழுமையாக அறிய முடியாது. இருப்பினும், சில நடத்தைக் குறிப்புகள், உடல் மொழி, மற்றும் உணர்ச்சி வெளிப்பாடுகள் மூலம் ஆரம்பகட்ட கருத்துக்களைப் பெற முடியும். உரையாடலைச் strukture செய்யும் போது, தனிநபர் தன்னை மிகவும் பாதுகாப்பாகவும் சுகமாகவும் உணர வேண்டிய சூழலை உருவாக்குவேன், இது திறந்த மனதுடன் பேசலுக்கு ஊக்குவிக்கும். அவர்களின் பின்னணி, நடப்பு கவலைகள் மற்றும் உணர்ச்சி நிலையைப் புரிந்துகொள்வதற்காக திறந்த கேள்விகளுடன் ஆரம்பிப்பேன். உணர்ச்சிவசப்படுத்தும் கருத்துக்களும், செவிமடுக்கும் முறையும் மிகவும் முக்கியமானவை. குறைகூறாத சூழலை உருவாக்குவதே என் நோக்கம், இதன் மூலம் அந்த நபர் கேட்கப்பட்டதும், ஆதரவு அளிக்கப்பட்டதுமான உணர்வுடன் திறந்த மனதுடன் பேச முடியும்.

**விளையாட்டுத் துறையிலும் நீங்கள் ஆர்வம் கொண்டவராக இருக்கிறீர்கள். இத்துறையில் என்னென்ன பிரிவுகளில் ஆர்வம் உள்ளவராக இருக்கிறீர்கள்?**

ஆம், எனக்கு விளையாட்டுகளில் மிகுந்த ஆர்வம் உள்ளது, குறிப்பாக நீச்சலில் நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். இந்தியாவில் CBSE க்ளஸ்டர்ஸ் போட்டியில் பிராந்திய மட்டத்தில் வெற்றி பெற்றுள்ளேன். நீச்சல் என்னை எப்போதும் ஆர்வமூட்டியுள்ளது, மேலும் இது கட்டுப்பாடு, கவனம் மற்றும் பொறுமையை கற்றுக்கொடுக்கிறது. நீச்சலுக்கு அப்பால், உடல் ஆரோக்கியத்தையும் மனநிலையையும் மேம்படுத்தும் பல்வேறு உடல் பயிற்சிகளில் ஈடுபட விரும்புகிறேன். அவை எனது உடல் மற்றும் மனநிலையை சமநிலைப்படுத்தவும், நேர்மறையான மனோபாவத்தை கடைப்பிடிக்கவும் உதவுகின்றன.

**மேலும் உங்களது சிறப்பு தகைமைகள், நீங்கள் முன்னெடுக்கும் சமூகப் பணிகள், உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறுங்கள்?**

நான் பல திறமைகள் மற்றும் ஆர்வங்களை வளர்த்துள்ளேன். எனக்கு நீச்சலில் மிகுந்த ஆர்வம் உள்ளது, இதில் இந்தியாவில் CBSE க்ளஸ்டர்ஸ் போட்டியில் வெற்றி பெற்றுள்ளேன். மேலும், நான் திறமையான ட்ரம்ஸ் வாத்தியக்காரராகவும், சிறந்த ட்ரம்ஸ் வாசிப்பாளராகவும் பாராட்டப்பட்டுள்ளேன். சமூகப் பணிகளில் என் பங்கு முக்கியமானது, நான் ரோட்டரி கிளப்பில் கலாச்சார செயலாளராக பணியாற்றியுள்ளேன்.

சமூக நலனுக்காக எனது பங்களிப்பை மதித்து சிறந்த இடைக்கால விருது எனக்கு வழங்கப்பட்டது. இவையெல்லாம் எனது தனிப்பட்ட மற்றும் தொழில்முறை வளர்ச்சிக்கு பெரிதும் உதவியுள்ளன, உதவும் உணர்வை வளர்த்துள்ளன.

# கிராமிய கலைகள் ஒன்றிய எஸ். பி. பாலாவின் பாமாலை இசை நிகழ்ச்சி

அகில இலங்கை கிராமிய கலைகள் ஒன்றியம் வருடாந்தம் நடத்தும் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் பாமாலை என்னும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 2024.09.29ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு 11, செட்டியார் தெரு, கலயாண மண்டபத்தில் நடைபெறவுள்ளது. பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியத்தின் நான்காம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இந்நிகழ்ச்சி நடத்தப்படவுள்ளது. இதில் பிரபல பாடகர் எஸ். பி. பாலசுப்பிரமணியம் பாடிய பாடல்களை கெரோக்கியில் பாடக்கூடிய பாடகர்கள் இருந்தால் இந்நிகழ்வில் பாடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதில் பாட விரும்புகிறவர்கள் என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. இதற்கான அனுசரணையை ரகு கனகநாதன் வழங்குகிறார்.



# CYCLONE MUSICAL SOLUTIONனின் புதிய களம்




CYCLONE MUSICAL SOLUTION மற்றும் கண்ணகி கலாலயம் பெருமையுடன் இணைந்து வழங்கும். இதோ... உங்களுக்கான ஒரு புதிய களம். உங்களுக்கான அடையாளத்தினை நீங்களே உருவாக்குங்கள்.

5 வருடங்களுக்கு மேல் நீங்கள் சமூக வலைத்தளங்களில் பிரகாசிப்பவர் என்றால்.. உங்களுக்கான அங்கீகாரத்தை கௌரவத்துடன் வழங்கி நாம் உங்களை எங்களில் ஒருவராக ஊக்குவிக்க உள்ளோம். உங்களின் எண்ணங்களுக்கான விண்ணப்பங்களை ஆவணங்களுடன் எமது வட்சப் இலக்கமான A.M.J.C. ரோஹான் 0788597577 மற்றும் A.K.இளங்கோ 0767111752 தொடர்பு கொண்டு அனுப்பி வைப்பதுடன் மேலதிக விடயங்களை அறிந்து கொள்ளவும் முடியும். இதற்காக உங்கள் விண்ணப்பங்களை நவம்பர் 31ம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கலாம். இந்நிகழ்வுக்கான விருது வழங்கல் நிகழ்வன்று இலங்கையின் முன்னணி இசைக்குழுவில் ஒன்றான கருப்பையா பிள்ளை பிரபாகரனின் LEGENDS LIVE MUSICAL BAND, இன் இசையில் RATHNAKALAA MEGA MUSICAL NIGHT எங்களின் முன்னணிக் கலைஞர்களுடன் உங்களை மகிழ்விக்க காத்திருக்கிறது என A.K.இளங்கோ தெரிவித்துள்ளார்.

# 50க்கும் மேற்பட்ட தமிழ், சிங்கள கலைஞர்கள் கௌரவிப்பு

















Cyclone Musical Solution in ஏற்பாட்டில் கொழும்பு Sri Lanka Foundation இல் 50க்கும் மேற்பட்ட வானொலி, வாஹினி கலைஞர்கள் மற்றும் நாடக நடிகர்கள் விருதுகள் வழங்கி கௌரவிக்கப் பட்டார்கள். இலங்கையின் முன்னணி கலைஞர்கள் என்கின்ற வரிசையில் தமிழ் மற்றும் சிங்கள மூத்த கலைஞர்கள் இளம் தலைமுறை கலைஞர்கள் என 50 க்கும் மேற்பட்டவர்களுக்கு ஞாபகார்த்த விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இந் நிகழ்ச்சி ரொஹனின் பாரியாரும் Cyclone Musical Solution in பிரதி பணிப்பாளருமான Sureka Clamence in ஒருங்கமைப்பில் நடாத்தப் பட்டது. பிரபல பாடகர் கலாபூஷணம் அமரர் A. M. Jesuratnam அவர்கள் பாடிய பாடல்களைக் கொண்டு ஸ்வரங்கள் இசை தொகுப்பு என்ற பெயரில் CD ஒன்று தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது. அமரர் A. M. Jesuratnam அவர்களின் புதல்வன் Cyclone Musical Solution in பணிப்பாளரும், cyclone இசைக்குழுவின் தலைவரும், இசையமைப்பாளருமான A. M. J. C. Rohan in இசையமைப்பில் இது உருவாக்கப்பட்டுள்ளது. இதன் வெளியீட்டு விழாவும் அன்று இடம்பெற்றது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 8ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.